# කෘෂිකර්ම, පශු සම්පත්, ඉඩම් හා වාරිමාර්ග අමාත්‍යාංශය
## *கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு*
# Ministry of Agriculture, Livestock, Land and Irrigation

**කෘෂිකර්ම සහ පශු සම්පත් අංශ**

***கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு***

**Agriculture and Livestock Divisions**

# 2025

# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

වෙළුම - I

*தொகுதி - I*

**Volume - I**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2025

## செலவுத் தலைப்பு - 118

## கமத்தொழில், கால்நடை வளங்கள் , காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

**கமத்தொழில், கால்நடை வளங்கள் பிரிவு**

*இல. 80/5, கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல*

# *வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2025*

## *செலவுத் தலைப்பு - 118*

***கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு (2024.11.25 தேதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2412/08 எண் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்)***

1. *கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் - கௌரவ. கே.டீ லால் காந்த*

2. *பிரதி அமைச்சர்கள்*
   - *கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் - கௌரவ நாமல் கருணாரத்ன*
   - *காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் - கௌரவ அரவிந்த செனரத் விதாரன*

3. *அமைச்சின் செயலாளர் - திரு. டி.பி. விக்கிரமசிங்க*



| | |
|---|---|
| *தொலைபேசி* | *011-2034300* |
| *தொலைநகல்* | *011-2868910* |
| *மின்னஞ்சல் முகவரி* | *info@agrimin.gov.lk* |
| *இணையத்தளம்* | *www.agrimin.gov.lk* |

| உள்ளடக்கம் | | பக்க எண் |
|---|---|---|

**கமத்தொழில், கால்நடை வளங்கள் பிரிவு**


| | | |
|---|---|---|
| *அத்தியாயம் 01* | நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு | *09 - 10* |
| *அத்தியாயம் 02* | முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு, விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் | *11 – 132* |
| *அத்தியாயம் 03* | வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை | *132 – 166* |
| *அத்தியாயம் 04* | செயலாற்றுகை குறிகாட்டிகள் | *167 – 168* |
| *அத்தியாயம் 05* | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை | *169 – 172* |
| *அத்தியாயம் 06* | மனிதவள விபரம் | *173 – 185* |
| *அத்தியாயம் 07* | இணக்கப்பாட்டு அறிக்கை | *186 – 194* |

## அறிமுகம்

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, 2024 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2412/08 இலக்கத்தையுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. செயற்படுத்தல் / சேவை வழங்கலின் எளிதாக்கத்திற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசனம் எனும் நான்கு துறைகளின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.*

*இவ்வறிக்கையின் உட்பகுதியில் கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் ஆகிய பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் 2025.12.31 ஆம் திகதிவரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மட்டுமே உட்படுத்தப்பட்டுள்ளது.*

- **விவசாயம் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவுகளுடன் தொடர்பான கடமைகளும் பணிகளும் (2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்குரிய 2412/08 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமாணி அறிவித்தலுக்கு அமைவாக )**

1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட கமத்தொழில் மற்றும் நீர்ப்பாசனம் பற்றிய விடயத்துடனும் மற்றும் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுடனும் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரித்தலும், நடைமுறைப்படுத்தலும், தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்
2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்
3. ஊழலும், வீண்விரயமும் இல்லாதொழிக்கப்படுகின்ற அதேவேளை, அமைச்சின் பணிகள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தி, நவீன முகாமைத்துவ நுணுக்கங்களையும் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி அனைத்து முறைமைகளையும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.
4. நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உணவு உற்பத்தி செய்தல்.
5. தரமான விவசாய உற்பத்திகள் மூலம் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவு வழங்குதலை உறுதி செய்தல்.
6. உள்நாட்டில் பயனுள்ளவாறு பயிரிட முடியுமான உணவு உற்பத்தியை ஊக்குவித்தல்.
7. இறக்குமதி செய்யப்படும் பயிர்களுக்குப் பொருத்தமான பதிலீட்டுப் பயிர்களை உள்நாட்டில் உற்பத்தி செய்தலை ஊக்குவித்தல்.
8. ஏற்றுமதி விவசாய கிராமங்களை மேம்படுத்தல்.
9. நிகழ்நேர விவசாய தரவு முறைமையை நடைமுறைப்படுத்தல்.
10. இருப்பைக் கையாளுவதற்கும் மற்றும் வழங்கல் நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்
11. பயிர் பல்வகைப் படுத்துகையின் அடிப்படையிலான கமத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்
12. உள்நாட்டு கமத்தொழில் உற்பத்திகளின் தரத்தை நுகர்வோருக்கு உறுதிப்படுத்து வதற்குரிய திறமுறைகளைத் தயாரித்தல்.
13. பாரம்பரிய விவசாயிகளை, இளைஞர்களை மற்றும் மாணவர்களை நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய விவசாய கற்கைகளுக்காக வழிப்படுத்துதல்.
14. இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்.
15. இரசாயனக் பீடைநாசினிகள் மற்றும் ஏனைய இரசாயனக் கலவைகள் குறித்த தரத்துடன் பயன்படுத்துவதற்கு ஒழுங்குறுத்தல்.
16. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு பயிர்ச் செய்கை காப்புறுதி முறைமை மற்றும் விவசாய ஓய்வூதியத் திட்டங்களை விஸ்தரித்தல்.
17. விநியோகச் சங்கிலிகளை வலுவூட்டுவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திகளுக்கு நியாயமான விலையை உறுதிப்படுத்தல்.
18. காலநிலை மாற்றங்கள் மற்றும் வான்நிலை தொடர்பான நாளாந்த தகவல்களை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளுதல்.
19. தரமான விதைகள், கன்றுகள் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்.

20. நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப நீர் வழங்கல் முகாமைத்துவம் .
21. விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாயக் கிராமங்கள், விவசாயி நிருவகிக்கின்ற கூட்டுறவு சங்கங்கள் மற்றும் விவசாய கம்பனிகள் *(farmer-administered co-operatives and farmer companies)* போன்றவற்றை பிரபல்யப்படுத்துதல்.
22. சிறிய அளவிலான விவசாயத் தொழில் முயற்சிகள் மற்றும் அமைப்புகளை எழுச்சிபெறச் செய்வதற்கும், மேம்படுத்துவதற்குமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
23. சேதனப் பசளைப் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி தொடர்பில் அதிகளவில் ஈடுபாடு கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை விஸ்தரித்தலும் ஊக்குவித்தலும்.
24. தரமான உர இறக்குமதி, விநியோகம் என்பவற்றை அரச நிவாரண கொள்கைத் திட்டத்திற்கமையச் செயல்திறனுடன் நடைமுறைப்படுத்துதல்
25. சிறந்த தரத்திலான இரசாயனப் பசளைகள் மற்றும் சூழலுக்குச் சாதகமான சேதனப் பசளைகளை உரிய நேரத்தில் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல்
26. உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்துக்கமைவான சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவித்தல்.
27. உள்நாட்டு விவசாயிகள் மற்றும் நுகர்வோர் திருப்தியடையும் வகையில நியாயமான விலைகளுக்கான கொள்கையொன்றையும் பயிர்ச் செய்கைக்கான பல்லினத்தன்மை நிகழ்ச்சித் திட்டமொன்றையும் நடைமுறைப் படுத்துதல்.
28. மேலதிக உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துதல்
29. விவசாய உற்பத்திகளைப் பெறுமதிசேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.
30. சர்வதேச மட்டத்திலான தரமான விதை உற்பத்திகளுக்காக உள்நாட்டு விதைக் கொள்கைத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்
31. தரமான விதைகள் மற்றும் பயிர்ச் செய்கைக்கான உற்பத்திகளுக்காக தனியார்துறையினரை ஊக்குவித்தல்.
32. அரச விவசாயப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்
33. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பயிர்களை இறக்குமதி செய்தலைக் குறைத்தல்
34. கால்நடைவளப் பிரிவின் உற்பத்திகளை அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளைச் வழங்குதல்.
35. கால்நடை நலன்புரி மற்றும் அவை தொடர்பான செயற்பாடுகள்
36. தரமான உற்பத்தியினைப் போதுமான அளவில் மேற்கொள்வதற்கு இட்டுச்செல்கின்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கால்நடை வளம் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவினை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கையை நடைமுறைப்படுத்துதல்.
37. கால்நடைகளின் இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்காக விஞ்ஞானரீதியில் இனவிருத்தி முறைகளை பிரபல்யப்படுத்தலும் மற்றும் அத்தகைய கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாப்பது மற்றும் தனிமைப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள்
38. பல்வேறு வகையான பூகோளத் தேவைகளுக்கமைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணை அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
39. கால்நடைவளத் துறையைச் சேர்ந்த உற்பத்திகளை மேம்படுத்தலும் அவற்றை ஏற்றுமதிக்காக ஊக்குவிததலும்
40. நடுத்தர மற்றும் பாரிய அளவிலான கால்நடைப் பண்ணைகளை நிருமாணிப்பதற்குத் தேவையான காணிகளையும் முதலீட்டு வசதிகளையும் வழங்குதல்.
41. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை மேம்படுத்துவதன்மூலம் உள்நாட்டு உற்பத்திகளையும் நுகர்வுக்கான வாய்ப்புகளையும் அதிகரித்தல்.
42. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரச் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமைத்துவமும்.
43. விலங்கு உணவு உள்ளடங்கலாக உள்நாட்டுக்குத் தேவையான சோளத்தை நாட்டிற்குள் பயிரிடுவதற்கு வசதியேற்படுத்துதல்.
44. இலங்கை கமத்தொழில் சேவையின் நிருவாகமும் ஆளணி முகாமையும்
45. நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுடன் தொடர்பான நடவடிக்கைகள்
46. அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.

- **கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்**

1. விவசாயத் திணைக்களம்
2. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
3. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
4. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்
5. கறுவா அபிவிருத்தித் திணைக்களம்
6. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்
7. கமத்தொழில் மற்றும் கமநல சேவைகள் காப்புறுதிச் சபை
8. நெல் சந்தைப்படுத்தல் சபை
9. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்
10. இலங்கை கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான மன்றம்
11. தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்து மற்றும் குடியேற்ற அதிகாரசபை (ஹதபிம அதிகாரசபை)
12. தேசிய உரச் செயலகம்
13. ஸ்டேட் பர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டெட்
14. இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை (தேசிய உணவு மேம்பாட்டுச் சபை)
15. தேசிய கால்நடைவளங்கள் அபிவிருத்திச் சபையும் இணைக் கம்பனிகளும்
16. மில்கோ (பிறைவேட்) லிமிட்டெட்
17. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி

- **கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்**

1. 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டம்
2. 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்
3. 1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கிராமோதய சபைச் சட்டம்
4. 1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மரங்களை வெட்டிச் சாய்த்தல் (கட்டுப்பாட்டுச்) சட்டம்
5. 2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதை நெல் சட்டம்
6. 1996 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க மண்வளம் பேணல் சட்டம்
7. 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம்
8. 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கமத்தொழில் அலுவல்கள் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனச் சட்டம்
9. 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை மன்றச் சட்டம்
10. 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டம்
11. 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்படுத்தல் சட்டம்
12. 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்
13. 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குபடுத்தற் சட்டம்
14. 1973 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபை சட்டம்
15. 1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்ச் சட்டம்
16. 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்கு தீனிச் சட்டம்
17. 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டம்
18. 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்கு மருத்துவ தொழில்துறைச் சட்டம்
19. 1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டம்
20. வேறு அமைச்சரொருவரின் கீழ் குறிப்பாக ஒதுக்கப்படாத விடயங்களுடன் தொடர்பான ஏனைய அனைத்து நியதிச் சட்டங்களும்

# கமத்தொழில் பிரிவு மற்றும் கால்நடை வளங்கள் பிரிவு

## *i.)* தொலைநோக்கு

*"உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறை"*

## *ii.)* செயற்பணி

*"இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோல ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்"*

## நோக்கங்கள்

1. உணவு மற்றும் அவை சார்ந்த விவசாயப் பயிர்த்துறைக்கு கொள்கை ஒத்துழைப்பை வழங்குதல்.
2. உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
3. விவசாய உற்பத்திகளுக்கான தளம்பலற்ற விலையை முன்னெடுத்துச் செல்லல்.
4. நெல் இருப்புக்களை கொள்வனவு செய்தலும் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறன் மிக்க வகையில் முகாமை செய்தலும்.
5. செயற்திட்டங்களை உரிய வேளையில் அமுல் செய்தல்.
6. தெரிவு செய்யப்பட்ட பயிர் வகைகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
7. துரித உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தை வினைத்திறன் மிக்க வகையிலும், விளைவுப் பெருக்கமுள்ளதாகவும் அமுல் செய்தல்.
8. வெளிநாட்டு நிதி அமைப்புக்களை வினைத்திறன் மிக்க வகையிலும் விளைவுப்பெருக்கமுள்ளதாகவும் ஈடுபடுத்தல்.
9. சேவை வழங்குணர்களுக்கு நட்புறவுடனான மற்றும் சிறந்த பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட நிருவாக முறையொன்றை அமுல் செய்தல்.
10. முழு அரச சேவையிலும் விளைவுப் பெருக்கமுள்ள முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

## • அமைச்சினால் நடைமுறைப்படுத்த வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

1. இலக்கு 2 – பட்டினியை ஒழிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.
2. இலக்கு 5 - பாலின சமத்துவத்தை அடைவது மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டல்.
3. இலக்கு 12 – நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.

## பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் - சுருக்கம்

*செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரிவுகளின் நிதிசார் முன்னேற்றம்*

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 1. | மூலதன செலவு | 101,780.00 | 102,877.31 | 65,919.12 | 64 |
| 2 | மீண்டுவரும் செலவு | 51,639.00 | 53,473.00 | 52,585.81 | 98 |
| | **மொத்த வரவுசெலவு** | **153,419.00** | **156,350.31** | **118,504.93** | **76** |

**விவசாயப் பிரிவு - பிரதான அபிவிருத்தித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்**

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில்.ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| | **மீண்டுவரும் செலவுகள்** | | | | |
| 1 | உர மானிய நிகழ்ச்சித் திட்டம் | 35,000.00 | 36,840.00 | 36,815.17 | 100 |
| 2 | உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காலமுறையான கடன் (கடனுக்கான வட்டிக் கொடுப்பனவுகள்) | 2,005.00 | 1,685.00 | 1,443.21 | 86 |
| | **மூலதன செலவுகள்** | | | | |
| 1. | உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு விஷேட நிகழ்ச்சித் திட்டம் | 550.00 | 550.00 | 370.14 | 67 |
| 2. | மேலதிக பயிர் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் | 150.00 | 150.00 | 96.91 | 65 |
| 3. | பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாயக் கொள்கையை தயாரித்தல் | 56.00 | 56.00 | 43.78 | 78 |
| 4. | பயிர் காப்பீட்டிற்கான அரசின் பங்களிப்பு | 1,500.00 | 1,500.00 | 626.00 | 42 |
| 5. | பாதுகாப்பான நெல் இருப்பைப் பராமரித்தல் | 6,000.00 | 8,000.00 | 6,202.87 | 78 |
| 6. | விவசாயம் மற்றும் கைத்தொழிற்துறைகளில் இளம் தொழில்முனைவோரை விருத்தி செய்தல் (பக்க இலக்கம் 14 ஐப் பார்க்க) | 500.00 | 379.33 | 113.19 | 30 |
| 7. | உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காலமுறையான கடன் (கடனுக்கான மூலதனக் கொடுப்பனவுகள்) | 8,664.00 | 8,784.67 | 8,784.28 | 100 |
| | **உப கூட்டுத்தொகை - i** | **17,420.00** | **19,420.00** | **16,237.17** | **84** |
| | **வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்** | | | | |
| 1. | காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயச் செயற்திட்டம் (CSIAP) - உலக வங்கிக் கடன் | 8,775.00 | 8,765.00 | 5,439.08 | 62 |
| 2. | சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) – IFAD | 3,470.00 | 3,470.00 | 2,500.22 | 72 |
| 3. | விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP) - இலங்கை அரசு/ உலக வங்கிக் கடன் | 1,250.00 | 3,042.30 | 2,867.08 | 94 |
| 4. | சிறிய அளவிலான விவசாய வியாபார மீண்டெழல் செயற்திட்டம் (SARP) | 5,947.00 | 2,546.00 | 1,198.49 | 47 |
| 5. | ஒருங்கிணைந்த கிராம-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலை தாங்குதிறன் தொடர்பான செயற்திட்டம் | 30.00 | 40.00 | 20.70 | 52 |
| 6. | தேசிய தாவர தனிமைப்படுத்தல் நிலையத்தின் பரிசோதனை வசதிகளை விருத்தி செய்தல் | - | 6.24 | 2.63 | 42 |
| 7. | ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய | | 90.07 | 90.07 | 100 |

| தொடர்/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில்.ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| | அமைப்பினால் நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற நான்கு (04) விதைத் தயாரிப்பு இயந்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரிகளைச் செலுத்துவதற்காக மேலதிக நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளல் | | | | |
| **உப கூட்டுத்தொகை - ii** | | **19,472.00** | **17,959.61** | **12,118.27** | **67** |
| | **அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் உள்ள நிறுவனங்கள்** | | | | |
| 1. | ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் | 38.00 | 38.00 | 23.86 | 63 |
| 2. | அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் | 33.00 | 33.00 | 19.50 | 59 |
| 3. | இலங்கை ஹதபிம அதிகாரசபை | 338.00 | 338.00 | 268.00 | 79 |
| 4. | இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை | 75.00 | 75.00 | 48.18 | 64 |
| **உப கூட்டுத்தொகை - iii** | | **484.00** | **484.00** | **359.54** | **74** |
| **மொத்த கூட்டுத்தொகை - (i+ii+iii)** | | **37,376.00** | **37,863.61** | **28,714.98** | **76** |

**கால்நடை வளங்கள் பிரிவு – பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் முன்னேற்றம்**

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1. | விலங்கு இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி | 69.00 | 51.95 | 75 |
| 2. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 150.00 | 83.80 | 56 |
| 3. | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (அபிவிருத்தி உதவிகள்) | 100.00 | 83.99 | 84 |
| 4. | ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (அபிவிருத்தி உதவிகள்) | 91.85 | 69.92 | 75 |
| 5 | ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (அபிவிருத்தி உதவி - உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) | 108.15 | 18.87 | 17 |
| **மொத்த கூட்டுத்தொகை** | | **519.00** | **308.53** | **59** |

## *அத்தியாயம் 01 - நிறுவன விபரம் - நிறைவேற்றுப் பொழிப்பு*

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சானது, 2030ஆம் ஆண்டுக்கான நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க, தேசிய உணவு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் உலகளாவிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைதல் என்பவற்றுடன் தொடர்பான அபிவிருத்தி நோக்கங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.*

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் விவசாயப் பிரிவிற்கு 2025 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 118 ஆம் இலக்கச் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை 40,549.61 மில்லியன் ரூபாய் ஆகும். கால்நடைப் பிரிவிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகை 519.00 மில்லியன் ரூபாய் ஆகும். அத்துடன், மீண்டெழும் நிகழ்ச்சித் திட்டமான உர மானிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2025 ஆம் ஆண்டிற்காக 36,840.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.*

*அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் விவசாயப் பிரிவின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுள் உணவுப் பாதுகாப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டத்திற்காக 640.00 மில்லியன் ரூபாய் நிதியும், மேலதிக பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்காக 150.00 மில்லியன் ரூபாய் நிதியும், பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 56.00 மில்லியன் ரூபாய் நிதியும், பயிர் காப்புறுதிக்கான அரசாங்கத்தின் பங்களிப்பாக 1,500.00 மில்லியன் ரூபாய் நிதியும், பாதுகாக்கப்பட்ட நெல் கையிருப்பினைப் பேணுவதற்காக 8,000.00 மில்லியன் ரூபாய் நிதியும், விவசாயம் மற்றும் தொழிற்றுறைப் பிரிவுகளின் இளைய தொழில்முயற்சியாளர்களின் அபிவிருத்திக்காக 379.33 மில்லியன் ரூபாய் நிதியும், உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் காலமுறை கடன்களைச் செலுத்துவதற்காக 8,784.67 மில்லியன் ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு 17,959.61 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் விவசாயப் பிரிவுடன் இணைந்த நிறுவனங்களான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்காக 38.00 மில்லியன் ரூபாய் நிதியும், தேசிய அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ நிறுவனத்திற்காக 33.00 மில்லியன் ரூபாய் நிதியும், இலங்கை ஹதபிம அதிகார சபையிற்கு 338.00 மில்லியன் ரூபாய் நிதியும், இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையிற்கு 75.00 மில்லியன் ரூபாய் நிதியும் மூலதனச் செலவுகளாக ஒதுக்கப்பட்டுள்ளன.*

*இதற்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உர மானியம் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் நெற் செய்கைக்குத் தேவையான உர வகைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கும் ஏனைய பயிர்களுக்குத் தேவையான உர வகைகளை மானிய விலையில் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*கால்நடை வளத் துறையின் முன்னேற்றத்திற்காக கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதில் முதன்மையான அங்கமாகச் செயற்படும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு, உள்நாட்டுப் பசுமையான பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் இலக்கை முன்னிறுத்தி, உள்நாட்டுப் பால் உற்பத்தியாளர்களை வலுப்படுத்துவதன் மூலம் உள்நாட்டுப் பால் உற்பத்தித் துறையை வலுப்படுத்துதல், ஆடு, கோழி, பன்றி போன்ற ஏனைய துணைப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் தரத்தில் சிறந்த கால்நடை உற்பத்திகளை ஊக்குவித்தல் மற்றும் சூழல் நட்பு முறைகளின் அடிப்படையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவித்தல் என்பவற்றுக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் கால்நடை இனவிருத்தி மற்றும் பண்ணை அபிவிருத்திக்காக 69.00 மில்லியன் ரூபாய் நிதியும், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 250.00 மில்லியன் ரூபாய் நிதியும், ஆடு வளர்ப்பின் ஊடாக வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக 200.00 மில்லியன் ரூபாய் நிதியும், ஆடு வளர்ப்பின் மூலம் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 200.00 மில்லியன் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.*

## நிறுவனக் கட்டமைப்பு – விவசாயப் பிரிவு



## *அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு, விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்*

***செலவுத் தலைப்பு இலக்கம் 118 இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி அபிபிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்***

- ***உணவுப் பாதுகாப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தொழில்நுட்பம் செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-020-2202***

*உணவுப் பாதுகாப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 550.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அதில் 370.14 மில்லியன் ரூபாய் செலவாகப் பதிவாகியுள்ளது.*

*i.) உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு.*
*ii.) விவசாயக் கட்டமைப்புகளில் உயர் உற்பத்தி மற்றும் பயனுறுதித் தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துதல்.*
*iii.) விவசாய தொழில்முனைவோர் மற்றும் நிலையான சந்தை மேம்பாடு.*
*iv.) சிறந்த நில முகாமைத்துவத்திற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.*
*v.) விவசாய நடைமுறைகளை முறையாக நிர்வகிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.*
*vi.) விவசாயம் சார்ந்த செயல்பாடுகளைச் சூழல் நட்பு ரீதியில் முன்னெடுப்பதற்கு வசதிகளை ஏற்படுத்தல்.*
*vii.) தொழில்முனைவு மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றுக்காக பயனாளிகளான விவசாயிகளை வலுவூட்டுத்தல்.*
*viii.) விவசாய ஆராய்ச்சி மற்றும் அறிவு முகாமைத்துவத்திற்கு உதவி வழங்குதல்.*

*இந்த நோக்கங்களை அடைவதற்காக அடையாளம் காணப்பட்ட விசேட பயிர்களின் (களப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள்) உற்பத்தித் திறனை அதிகரித்தல், விவசாயத்தில் நவீன தொழில்நுட்பப் பயன்பாட்டை ஊக்குவித்தல், விவசாயம் சார்ந்த கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு, நீர் முகாமைத்துவம், காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கான பயிர் பாதுகாப்புத் திட்டங்கள், விவசாய விரிவாக்க நடவடிக்கைகள், விவசாய புத்தாக்கம் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் போன்ற துறைகளின் கீழ் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*இந்தச் செயற்திட்டங்கள் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு (விவசாயப் பிரிவு), மாவட்ட செயலகங்கள், விவசாயத் திணைக்களம், தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம், நெல் சந்தைப்படுத்தல் சபை, விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை, இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை, தேசிய விவசாயப் பன்முகப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகார சபை (ஹதபிம அதிகார சபை) மற்றும் ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன. குறித்த செயற்திட்டங்களின் முன்னேற்றக் கண்காணிப்பு நடவடிக்கைகள் அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்டன.*

| தொ / இல | செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனம் | செயற் திட்டங் களின் எண்ணி க்கை | திருத்தப்ப ட்ட ஒதுக்கீடு (மில். ரூபா) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி (மில். ரூபா) | பௌதீக (%) |
| *1* | *கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு (விவசாயப் பிரிவு)* | *10* | *550.00* | *370.14* | *94* |
| *2* | *மாவட்ட விவசாய பணிப்பாளர் அலுவலகங்கள் (14 அலுவலகங்கள் மூலம்)* | *56* | | | |

| தொ / இல | செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனம் | செயற் திட்டங் களின் எண்ணி க்கை | திருத்தப்ப ட்ட ஒதுக்கீடு (மில். ரூபா) | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | நிதி (மில். ரூபா) | பௌதீக (%) |
| 3 | விவசாயத் திணைக்களம் | 60 | | | |
| 4 | தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் | 07 | | | |
| 5 | நெல் சந்தைப்படுத்தல் சபை | 02 | | | |
| 6 | விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை | 01 | | | |
| 7 | இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை | 01 | | | |
| 8 | தேசிய கமத்தொழில் பல்வகைப்படுத்து மற்றும் குடியேற்ற அதிகாரசபை (ஹதபிம அதிகாரசபை) | 01 | | | |
| 9 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 06 | | | |
| 10 | விவசாய மற்றும் கைத்தொழில் துறை இளைஞர் தொழில்முனைவோர் மேம்பாட்டு கடன் திட்டம் | 01 | | | |

*(புகைப்பட இலக்கம்: 01 - 02)*

- **மேலதிகப் பயிர் வகைகளைப் பயிரிடுவது தொடர்பான நிகழ்ச்சித் திட்டம்**
  **செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-071-2202**

உற்பத்திக் காரணிகளில் பிரதானமான நிலப் பற்றாக்குறை காரணமாக, பயிரிடப்பட்ட விளைச்சலின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கில் மேலதிக பயிர் வகைகளைப் பயிரிடும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். அத்துடன் பிரதேச ரீதியான சாத்தியக்கூறுகளுக்கு அமைய விரிந்துள்ள மேலதிக பயிர்ச் செய்கைகளை அடையாளம் கண்டு, தேசிய உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்குப் பங்களிப்பு வழங்க விவசாயிகளை ஊக்குவிப்பதும் இதன் மற்றொரு நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 150.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் மூலம் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, நிலக்கடலை ஆகிய மேலதிக பயிர் வகைகளின் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் விதை மானியம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் பயிர்ச் செய்கை சாத்தியக்கூறுகளுக்கு அமைய நாட்டின் 11 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக 125.87 மில்லியன் ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டதுடன், நிதி முன்னேற்றம் 96.91 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 01 - 02

| பயிர் வகை | நடைமுறைப்படுத்தப்பட்ட மாவட்டம் | விநியோகம் செய்யப்பட்ட விதைகளின் அளவு (கிலோ. கிராம்) | பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|
| உளுந்து | கிளிநொச்சி | 692.50 | 69.25 |
| உளுந்து | யாழ்ப்பாணம் | 2,810.00 | 281 |
| மொத்தம் | | 3,502.50 | 350.25 |
| பாசிப்பயறு | கிளிநொச்சி | 845.00 | 84.50 |
| பாசிப்பயறு | யாழ்ப்பாணம் | 1,000.00 | 100 |
| பாசிப்பயறு | குருநாகல் | 3,248.00 | 324.8 |
| பாசிப்பயறு | பொலன்னறுவை | 1,324.75 | 266.25 |
| பாசிப்பயறு | மொனராகலை | 4,085.00 | 408.5 |
| பாசிப்பயறு | முல்லைத்தீவு | 2,113.75 | 422.75 |
| பாசிப்பயறு | மட்டக்களப்பு | 5,332.50 | 533.25 |
| பாசிப்பயறு | அம்பாறை | 1,972.00 | 209.8 |

| பயிர் வகை | நடைமுறைப்படுத்தப்பட்ட மாவட்டம் | விநியோகம் செய்யப்பட்ட விதைகளின் அளவு (கிலோ. கிராம்) | பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|
| பாசிப்பயறு | ஹம்பாந்தோட்டை | *49,917.00* | *9566* |
| பாசிப்பயறு | திருகோணமலை | *2,676.50* | *267* |
| மொத்தம் | | *72,514.50* | *12182.85* |
| நிலக்கடலை | புத்தளம் | *6,551.00* | *163.78* |
| நிலக்கடலை | மட்டக்களப்பு | *3,550.00* | *133.75* |
| மொத்தம் | | *10,101.00* | *297.53* |
| கவ்பி | மட்டக்களப்பு | *5,277.00* | *527.75* |
| **மொத்தம்** | | ***5,277.00*** | ***527.75*** |

உளுந்து பயிர்ச் செய்கை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், விநியோகிக்கப்பட்ட விதைகளின் அளவு *3,502.50* கிலோ கிராம் ஆகும். இதன் மூலம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு *350.25* ஏக்கர் ஆகும்.

பாசிப்பயறு பயிர்ச் செய்கை *10* மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், விநியோகிக்கப்பட்ட விதைகளின் அளவு *72,514.50* கிலோ கிராம் ஆகும். இதன் மூலம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு *12,182.85* ஏக்கர் ஆகும்.

நிலக்கடலை பயிர்ச் செய்கை புத்தளம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், விநியோகிக்கப்பட்ட விதைகளின் அளவு *10,101.00* கிலோ கிராம் ஆகும். இதன் மூலம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு *297.53* ஏக்கர் ஆகும்.

கவ்பிப் பயிர்ச் செய்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், விநியோகிக்கப்பட்ட விதைகளின் அளவு *5,277.00* கிலோ கிராம் ஆகும். இதன் மூலம் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு *527.75* ஏக்கர் ஆகும்.

புகைப்பட இலக்கம் *03*

- **பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.**
  **செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-026-2507***

நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது (பக்க எண்கள் 83).

- **பயிர் காப்புறுதிக்கான அரசாங்கத்தின் பங்களிப்பு.**
  **செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-043-2202***

நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது (பக்க எண்கள் ).

- **பாதுகாப்பான நெல் இருப்பைப் பேணுதல்.**
  **செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-094-2509***

அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் *2025* ஆம் ஆண்டிற்காக *2025.02.17* அன்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக, நெல் சந்தைப்படுத்தல் சபையினால் போதுமான பாதுகாப்பு நெல் இருப்பைப் பேணுவதற்காக *6,000.00* மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, *2025* ஆம் ஆண்டிற்குள் மேலும் *2,000.00* மில்லியன் ரூபாய் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக, இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த திருத்தப்பட்ட ஒதுக்கீடு *8,000.00* மில்லியன் ரூபாயாகும்.

நெல் விலையில் தொடர்ச்சியாகக் காணப்படும் நிலையற்ற தன்மையிலிருந்து விடுபடுவதற்காகவும், சந்தையில் அரிசி கேள்வி மற்றும் வழங்கலைக் கட்டுப்படுத்தும் போது அதற்குத் தாக்குப்பிடிக்கும் ஒரு நடவடிக்கையாகவும் 2024/2025 பெரும் போகத்திலிருந்து போதுமான பாதுகாப்பு இருப்பைப் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, சந்தையில் நெல் மற்றும் அரிசி இருப்புகளைச் சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்துதலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு ஒழுங்குமுறை கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2025.12.31 திகதி வரை மேற்கொள்ளப்பட்ட செலவு 6,202.88 மில்லியன் ரூபாய் ஆகும். இது சதவீத அடிப்படையில் 78% ஆகும்.

- **விவசாயம் மற்றும் தொழில் துறைகளில் இளம் தொழில்முனைவோரை ஊக்குவித்தல்**
  செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-095-2202

விவசாயம் மற்றும் கால்நடை வளத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட வர்த்தகங்களைத் ஆரம்பித்தல் மற்றும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான இளம் தொழில்முனைவோரை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் மூலம் 500.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தின்படி, விவசாயத் துறையில் முன்னுரிமை அளிக்கப்படும் 50,000 இளம் தொழில்முனைவோரை உருவாக்கும் ஒரு வழிமுறைக்கு இந்த நிகழ்ச்சித் திட்டம் நேரடிப் பங்களிப்பை வழங்குகிறது.

**நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள்**

i. 2025 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 100 விவசாயத் தொழில்முனைவோரை உருவாக்குவதற்காக, அதிகபட்சம் 5.00 மில்லியன் ரூபாய் வரை வருடாந்தம் 4% வட்டியுடன் கூடிய நிதி வசதிகளை வழங்குதல்.
ii. பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் புதிய விவசாய மற்றும் கால்நடை வள உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் விவசாயத் தயாரிப்புகளின் ஏற்றுமதி அளவை அதிகரித்தல்.
iii. செயற்திட்டத்தின் நேரடிப் பயனாளிகளின் வருமான மட்டத்தை அதிகரித்தல்.

விவசாயப் பயிர்கள் மற்றும் தானிய வகைகள் தொடர்பான பயிர்ச் செய்கை, பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட ஏனைய விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், உள்நாட்டு விவசாயத் தயாரிப்புகளை அடிப்படையாகக் கொண்ட உணவு பதப்படுத்தும் தொழிற் துறைகள், ஏற்றுமதியை மையமாகக் கொண்ட சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாயச் செயற்திட்டங்கள், விவசாயம் சார்ந்த பெறுமதி சேர்க்கும் செயற்திட்டங்கள் மற்றும் கால்நடை வளங்கள் சார்ந்த செயற்திட்டங்கள் என்பவற்றுக்கு இதன் கீழ் நிதியளிக்கப்படும்.

இந்தச் சலுகைக் கடன் திட்டம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

**முன்னேற்றம்**

2025.12.31 ஆம் திகதி வரை 41 பயனாளிகளுக்கு 113.19 மில்லியன் ரூபாய் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

# செலவுத் தலைப்பு இலக்கம் 118
# மீண்டுவரும் செலவுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்.

*1. உர மானிய நிகழ்ச்சித் திட்டம்*

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| **உர மானிய நிகழ்ச்சித் திட்டம்** | *36,840.00* | *36,815.17* | *100* |

| விபரம் | 2025 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | | செலவு செய்த தொகை (ரூ.) | நிதி முன்னேற்றம் (%) | நிலப்பரப்பு (ஹெக்) | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **2024/25 பெரும் போகம்** | *10,000.00* | | *9,233.95* | *92.34* | *271,188.57* | *528,644* |
| **2025 சிறு போகம்** | *13,523.00* | நெல் | *13,288.17* | *99.84* | *531,956.08* | *884,816* |
| | | ஏனைய களப்பயிர்கள் | *212.71* | | *14,180.63* | *48,870* |
| **2025/26 பெரும் போகம்** | *13,266.00* | | *13,218.22* | *99.64* | *676,580.24* | *1,024,132* |
| **மொத்தக் கூட்டுத்தொகை** | ***36,789.00*** | | ***35,953.04*** | ***97.73*** | ***1,493,905.53*** | ***2,486,462*** |

ஆதாரம் - கமநல அபிவிருத்தித் திணைக்களம்

## *2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற் திட்டங்களின் முன்னேற்றம்*

### *01. விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் (ASMP)*

#### *1.1. அறிமுகம்*

இந்தச் செயற்திட்டம் நிறைவடைந்துள்ளதுடன், இந்த வருட வரவுசெலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடான 3,042.30 மில்லியன் ரூபாய் ஆனது, தீர்க்கப்படாத விலைப் பட்டியல்களைச் செலுத்துவதற்கும் செயற்திட்டத்தை நிறைவு செய்யும் பணிகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2025.12.31 ஆம் திகதிக்கான நிதி முன்னேற்றம் 3,042.30 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 02

### *02. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP)*

#### *2.1. அறிமுகம்*

இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட காலநிலை இடர்நேர்வுகள் ஏற்படக்கூடிய பிரதான வலயங்களிலுள்ள சிறிய அளவிலான காணி உடமையாளர் சமூகத்தின் காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல் மற்றும் நீர்ப்பாசன விவசாய உற்பத்தித் திறனை விருத்தி செய்யும் பிரதான நோக்கத்துடன், விவசாய அமைச்சினால் உலக வங்கியின் நிதி உதவியுடன் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் 2019 ஜூன் மாதம் முதல் செயற்படுத்தப்படுகின்றது. காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய விவசாய முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தித் திறனை விருத்தி செய்தல் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட சிறு விவசாய உற்பத்தி சமூகத்தினருக்கான சந்தை வாய்ப்பினை மேம்படுத்துவதன் ஊடாக இந்த நோக்கம் எய்தப்படும். இந்தச் செயற்திட்டம் செயற்படுத்தப்படும் காலப்பகுதி 2025.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

#### *2.2. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு (மில். ரூபாய்) - 37,014.00 மில். ரூபாய் (அமெ. டொலர் 1 = 300.00 ரூபாய்)*

| # | செயற்திட்டக் கூறு | மில். ரூபாய் |
|---|---|---|
| 1 | விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் | 7,800.00 |
| 2 | விவசாயத்திற்கான நீர் | 21,900.00 |
| 3 | செயற்திட்ட முகாமைத்துவம் | 1,800.00 |
| 4 | அவசர தேவைகளுக்கு எதிர்வினையாற்றுதல் | 4,014.00 |
| சமூக பங்களிப்பு இல்லாமல் மதிப்பீடு | | 35,514.00 |
| சமூக பங்களிப்பு | | 1,500.00 |
| **மொத்த செயற்திட்ட மதிப்பீடு** | | **37,014.00** |

#### *2.3. நடைமுறைப்படுத்திய பிரதேசங்கள்:*

இலங்கையின் வட மாகாணம் (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு), கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை), வடமத்திய மாகாணம் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை), வடமேல் மாகாணம் (குருணாகல் மற்றும் புத்தளம்), தென் மாகாணம் (ஹம்பாந்தோட்டை) மற்றும் ஊவா. மாகாணம் (மொனராகலை) ஆகிய 6 மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 11 நிர்வாக மாவட்டங்களில் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் இந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தப்பட்டது.

### *2.4. நிதி முன்னேற்றம்*

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை *(மில். ரூபாய்)* | திருத்தப்பட்ட ஒதுக்கீடு | செலவு செய்த தொகை *(மில். ரூபாய்)* | நிதி முன்னேற்றம் *(%)* |
|---|---|---|---|---|
| *மூலதன* | *8,775.00* | *8,765.00* | *5,439.08* | *62* |

### *2.5.* பௌதீக முன்னேற்றம்

*செயற்திட்ட திட்டமிடலுக்கு அமைவாக 93% பௌதீக முன்னேற்றத்தை எய்தி, செயற்திட்டம் 2025.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.*

| கூறு | நோக்கம் | செயற்பாடு | *2025 ஆம் ஆண்டில் முன்னேற்றம்* |
|---|---|---|---|
| *1.* **விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்** | *காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளை பின்பற்றுதல் மற்றும் பண்ணை நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்வதன் மூலம் விவசாய உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் பயிர் பல்வகைப்படுத்தல்* | ***1: 1 விவசாய உற்பத்திகள்:*** <br> *- காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இடைப்போகம் – 1 இல் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம்* <br><br> *- காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் சிறு போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம்* <br><br> *- காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இடைப்போகம் – 2 இல் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம்* | *- 2025 ஆம் ஆண்டின் முதலாம் இடைக்காலப் போகத்தில் 579 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் மூலம் 556 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது. இதில் பிரதானமாக பாசிப்பயறு, கவ்பி மற்றும் தர்பூசணி ஆகிய பயிர்ச் செய்கைகளில் கவனம் செலுத்தப்பட்டதுடன், முறையே 168, 112 மற்றும் 125 மெற்றிக் தொன் உற்பத்தி கிடைத்துள்ளது. இடைக்காலப் போகப் பயிர்ச் செய்கையானது மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொடுப்பதுடன், நுகர்வுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய உதவுவதால் விவசாயிகள் இதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.* <br><br> *- 2025 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் 1860 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு 5572 மெற்றிக் தொன் அறுவடை பெறப்பட்டுள்ளது. இதில் பிரதானமாக 114 ஹெக்டேர் நெற் பயிர்ச் செய்கையிலிருந்து 646 மெற்றிக் தொன், 500 ஹெக்டேர் சோளப் பயிர்ச் செய்கையிலிருந்து 2224 மெற்றிக் தொன், 400 ஹெக்டேர் பாசிப்பயறு பயிர்ச் செய்கையிலிருந்து 454 மெற்றிக் தொன், 229 ஹெக்டேர் கவ்பி பயிர்ச் செய்கையிலிருந்து 223 மெற்றிக் தொன் மற்றும் 267 ஹெக்டேர் நிலக்கடலை பயிர்ச் செய்கையிலிருந்து 439 மெற்றிக் தொன் என குறித்த அறுவடைகள் பெறப்பட்டுள்ளன.* <br><br> *- 2025 இரண்டாம் இடைக்காலப் போகத்தில் 1,236 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் மூலம் 638 மெற்றிக் தொன் உற்பத்தி பெறப்பட்டுள்ளது. இதன்போது, விவசாயிகள் பிரதானமாக பாசிப்பயறு மற்றும் கவ்பி பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டனர். 1,108 ஹெக்டேர் பாசிப்பயறு பயிர்ச் செய்கையிலிருந்து 401 மெற்றிக் தொன் உற்பத்தியும் 112 ஹெக்டேர் கவ்பி பயிர்ச் செய்கையிலிருந்து 112 மெற்றிக் தொன் உற்பத்தியும் பெறப்பட்டுள்ளன. இடைக்காலப் போகப் பயிர்ச் செய்கை மூலம் கிடைக்கும் மேலதிக வருமானமும் நுகர்வுத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதும் விவசாயிகள் இதில் அதிக ஆர்வம் காட்டுவதற்குக் காரணமாக அமைந்துள்ளன.* |

| கூறு | நோக்கம் | செயற்பாடு | 2025 ஆம் ஆண்டில் முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | - காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் 2024/25 பெரும் போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் திட்டம் | - *2025/2026 பெரும் போகத்தில் 1,502 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பிரதானமாக 548 ஹெக்டேர் நெல், 242 ஹெக்டேர் சோளம், 234 ஹெக்டேர் பாசிப்பயறு, 112 ஹெக்டேர் கவ்பி, 203 ஹெக்டேர் நிலக்கடலை மற்றும் 129 ஹெக்டேர் உளுந்து என்பன பயிரிடப்பட்டுள்ளன.* |
| | | - அனுராதபுர திறப்பனை பண்ணை பயிற்சிக் கல்லூரியை நிறுவுதல் காலநிலைக்கு சீரமைவான விவசாயப் பண்ணைக் கல்லூரியின் ஊடாக மேற்கொள்ளப்படும் பயிற்சி நடவடிக்கைகள் | - *2025 ஆம் ஆண்டில் காலநிலைக்கு சீரமைவான விவசாயப் பயிற்சி அமர்வுகளின் கீழ் திட்டமிடப்பட்ட 44 பயிற்சி அமர்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் ஊடாக பயிற்சி பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 954 ஆகும். கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியாக வழங்கப்பட்ட இப்பயிற்சிகளின் ஊடாகப் பெற்றுக்கொண்ட அறிவை அண்டை விவசாய சமூகத்தினரிடையே பரப்புவது இதன் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. செயற்திட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இப்பயிற்சி நிலையம் வடமத்திய மாகாண கமநல திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன்போது, பயிற்சி பெறுபவர்களுக்காக வதிவிட கட்டடம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.* |
| | | - தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் விவசாய தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் | - தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் *விவசாயிகளுக்கான 422 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 11,209 ஆகும். காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பன இங்கு வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சி அமர்வுகள், பயிற்சி பெற்ற விவசாய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் விவசாய ஆலோசகர்களால் நடத்தப்படுகின்றன.* |
| | | - கொம்போஸ்ட் உர உற்பத்தி | - *2025 ஆண்டில் இதற்காக நிதி ஒதுக்கப்படவில்லை. எனினும், கொம்போஸ்ட் உர உற்பத்திக்காக விவசாய சமூகத்தை ஈடுபடுத்தி தேவையான உள்ளீடுகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டதன் விளைவாக, விவசாய சமூகத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட உரத்தின் அளவு 3,410 மெற்றிக் தொன் ஆகும். இவ்வுரம் வீட்டுத்தோட்ட செய்கைக்காக பயன்படுத்தப்படுகிறது.* |
| | | - காலநிலைக்கு சீரமைவான வணிக ரீதியான வீட்டுத்தோட்டச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | - *2025 ஆம் ஆண்டில் வர்த்தக ரீதியான வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 வீட்டுத் தோட்டங்கள் (1000 பயனாளி விவசாயிகள்) அடையாளம் காணப்பட்டு தேவையான பயிற்சிகள் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டுத் தோட்டச் செய்கையின் மூலம் வர்த்தக ரீதியான பயன்களைப்* |

| கூறு | நோக்கம் | செயற்பாடு | 2025 ஆம் ஆண்டில் முன்னேற்றம் |
| --- | --- | --- | --- |
| | | | பெறுவது இதன் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. |
| | | - காலநிலைக்கு சீரமைவான மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டம் | - 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 30 கிராமங்களுக்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டு 241 பயிர்ச் செய்கை மாதிரிகள் நிறுவப்பட்டுள்ளன. இப்பயனாளிகளுக்காக 42 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இவற்றின் மூலம் 441 பேர் பயனடைந்துள்ளனர். |
| | | -விவசாயக் கிணறுகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | - 2025 ஆம் ஆண்டில் 198 விவசாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளன. அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளப்பெருக்கினால் புனரமைப்பு பணிகளில் தாமதம் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான நீர்த் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| | | -சூரிய சக்திகொண்டு இயங்கும் பயிர்ப் பாதுகாப்பு வேலிகளை நிறுவுதல் | - பயிர்ச் செய்கைப் பருவங்களில் பயன்படுத்தக்கூடிய சூரிய சக்தியால் இயங்கும் சுமார் 1000 கி.மீ அளவிலான விவசாய நிலங்களை உள்ளடக்கும் பாதுகாப்பு வேலிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பயிர்கள் பாதுகாக்கப்படுவதுடன் விளைச்சல் அதிகரித்தல் மற்றும் உற்பத்தி வருமானம் உயர்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. |
| | | -காலநிலைக்கு சீரமைவான விவசாய அலகொன்றை அமைச்சு வளாகத்தில் நிறுவுதல் | - காலநிலைக்கு சீரமைவான விவசாய அலகு தேவையான அலுவலக உபகரணங்களுடன் அமைச்சு வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. |
| | | **1.2: விவசாய சந்தைப்படுத்தல்** | |
| | | - உற்பத்திக் கழகங்கள் மற்றும் உற்பத்தி சங்கங்கள் என்பவற்றை நிறுவி அவற்றின் திறன்களை விருத்தி செய்தல். | - நிறுவப்பட்டுள்ள 544 விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் 45 உற்பத்தி நிறுவனங்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிற்குள் 78 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. |
| | | - உற்பத்திக் கழகங்கள் மற்றும் உற்பத்தி சங்கங்கள் என்பவற்றை சந்தையுடன் இணைத்தல் | - உற்பத்தியாளர் சங்கங்களை சந்தையுடன் இணைக்கும் நடவடிக்கையின் கீழ் கீல்ஸ், கார்கில்ஸ், கோல்டன் ஃபுட், மாலிபன், பிரிமா போன்ற பிரதான வர்த்தக நிறுவனங்களுக்கு விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வது ஊக்குவிக்கப்பட்டுள்ளது. |
| | | - விவசாய வியாபார பயிற்சிக் கல்லூரித் | - விவசாய தொழில் பயிற்சி கல்லூரியின் ஊடாக 12 தொகுதிகளைக் கொண்ட பயிற்சி அமர்வுகளை நடத்துவதற்காக பயிற்சி பெற்ற பயிற்றுவிப்பாளர்கள் மூலம் இந்த ஆண்டில் 4800 |

| கூறு | நோக்கம் | செயற்பாடு | 2025 ஆம் ஆண்டில் முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | திட்டம்<br><br>- அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல்<br><br>- நடுத்தர அளவிலான தானிய களஞ்சியசாலை ஒன்றை முல்லைத்தீவு மாவட்டத்தில் உருவாக்குதல்<br><br>- உற்பத்தி சங்கங்களுக்கு தார்பாய் தாள்களை *(Tarpaulin Sheets)* வழங்குதல். | *பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.*<br><br>- *அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.*<br><br>- *முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நடுத்தர அளவிலான களஞ்சியசாலை (1000 மெற்றிக் தொன்) அமைக்கப்பட்டதன் மூலம் விவசாயிகளின் அறுவடைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.*<br><br>- *விவசாயிகள் தமது விளைச்சலை உலர்த்திக் கொள்வதை எளிதாக்கும் பொருட்டு, உற்பத்தி நிறுவனங்களுக்கு தார்பாய்கள் (Tarpaulin Sheets) இந்த செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை 2800 Tarpaulin Sheets செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.* |
| *2.* **விவசாயத் துறைக் கான நீர்** | - காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுவதற்கு உதவுதல்.<br><br>- நிர்மாணிக்கப்பட் | *2.1* ***நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைத்தல்:***<br>- இரண்டாம் கட்டத்தில் மறுசீரமைக்கப்பட வேண்டிய நீர்ப்பாசன அமைப்புகளை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றின் ஆரம்பகட்ட பணிகளைத் தொடங்குதல்.<br>- பாசனக் கால்வாய்களின் மறுசீரமைக்கும் பணிகள்<br><br>- விவசாயப் பாதைகளை மறுசீரமைக்கும் பணிகள்<br><br>***2.2 நீர்ப்பாசனத் தொகுதிகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு:*** | - *2025 ஆம் ஆண்டில், இரண்டாம் கட்டப் புனரமைப்புக்காக 177 நீர்ப்பாசனக் கட்டமைப்புகள் இனங்காணப்பட்டதுடன், இந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் 105 கட்டமைப்புகளின் புனரமைப்புப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.*<br>- *மேலும் 29 தொகுதிகளின் பணிகள் 95 வீதத்திற்கும் அதிகமாக நிறைவடைந்துள்ளதுடன், எஞ்சிய 43 தொகுதிகளின் பணிகள் 75 வீதத்திற்கும் அதிகமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.*<br><br>- *2025 ஆம் ஆண்டில் புனரமைப்பு செய்வதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 145 நீர்ப்பாசனக் கால்வாய்களில் 94 கால்வாய்கள் ஆண்டின் இறுதியில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய கால்வாய்கள் நிறைவடையும் தருவாயில் காணப்பட்டன.*<br>- *55 விவசாயப் பாதைகள் புனரமைப்புக்காக இனங்காணப்பட்டு, அவற்றுள் 42 வீதிகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.* |

| கூறு | நோக்கம் | செயற்பாடு | 2025 ஆம் ஆண்டில் முன்னேற்றம் |
|---|---|---|---|
| | ட உள்கட்டமைப்பு வசதிகளை உரிய அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச மக்களுடன் இணைந்து கூட்டாகப் பராமரிப்பதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் உதவுதல். | - செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு மற்றும் நீர் முகாமைத்துவம் குறித்த பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல். | - செயற்திட்ட மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்த ஆண்டில் 469 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. |
| | | - விவசாய நிறுவனங்களுக்கு உரிய கையேடுகள் மற்றும் தரவுப் பதிவுப் புத்தகங்களை வழங்குதல். | - விவசாயிகளுக்கு 5,200 கையேடுகள்/ அறிக்கை பதிவுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| | | - விவசாய அமைப்புகளின் திறன் விருத்தி | - விவசாய அமைப்புகளுக்கு 150 நீர் முகாமைத்துவப் பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. |
| | | - தெரிவு செய்யப்பட்ட வலயங்ககளில் 61 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவ குழுக்களை நிறுவுதல். | - 61 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. |
| | | - 61 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றில் அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளை துணைச் செயற்திட்டங்களாக செயற்படுத்துதல். | - நீர் பிடிப்புப் பகுதிகளில் தாவரங்களைப் பாதுகாப்பதற்கும், மண் அரிப்பு மற்றும் குளங்களில் வண்டல் படிவதைத் தடுப்பதற்கும் குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவக் குழுக்களினூடாக உப-செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக 59 குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்திட்டங்களிலுள்ள, தெரிவு செய்யப்பட்ட குறுகிய கால செயற்திட்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. |
| | | - மிகவும் பயனுறுதிமிக்க நீர் முகாமைத்துவத்துக்காக லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெல் வயல்களை ஒரே சமநிலைக்கு பண்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல். | - லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வயல் நிலங்களை மட்டப்படுத்துவது குறித்த விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு, அம்முறையைப் பயன்படுத்தி 26.5 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. |
| | | - லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு உபகரண தொகுதியை கொள்வனவு | - லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் 2 உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டு, அவை வட மற்றும் வடமேல் மாகாண விவசாயத் திணைக்களங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. |

| கூறு | நோக்கம் | செயற்பாடு | 2025 ஆம் ஆண்டில் முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | செய்தல்.<br>- ஈர மற்றும் உலர் முறைகளை மாறி மாறிப் பயன்படுத்தும் (AWD) வினைத்திறன்மிக்க நீர் முகாமைத்துவம்<br>- மழை வீழ்ச்சி அளவீட்டுக் கருவிகளை நிறுவுதல்<br>- நீர் விநியோகத்தை அளவிடும் அளவீட்டு கருவிகளை நிறுவுதல்<br>- அணைக்கட்டுகள் அருகே 5 மீட்டர் நீளமுள்ள கொன்கிரீட் அடித்தளம் மற்றும் தேவையான கட்டுப்பாட்டுத் தொகுதிகள் என்பவற்றைக் கொண்டு நீர் முகாமைத்துவம் | - ஈர மற்றும் உலர் முறைகளை மாறி மாறிப் பயன்படுத்தும் (AWD) வினைத்திறன்மிக்க நீர் முகாமைத்துவ முறை குறித்து விவசாயிகளுக்குக் விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், அதனுடன் தொடர்புடைய 11,900 உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.<br>- மழை வீழ்ச்சி அளவீட்டுக் கருவிகள் மற்றும் நீர் வழங்கல் அளவீட்டு கருவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.<br>- வினைத்திறனான நீர் முகாமைத்துவத்துக்காக கால்வாய்களின் அருகே 5 மீட்டர் நீளத்தில் கான்கிரீட் அடித்தளத்தை அமைத்துத் தேவையான கட்டுப்பாட்டுத் தொகுதியை நிறுவுதல்.<br>- செயற்திட்டத்தின் நீர் பயன்பாட்டு வினைத்திறனை (Water Use Efficiency - WUE) 30% வரை அதிகரிப்பதற்கான அளவீடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் போக ரீதியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 2023 சிறு போகம், 2023/24 பெரும் போகம், 2024 சிறு போகம், 2024/25 பெரும் போகம் மற்றும் 2025 சிறு போகம் ஆகியவற்றில் முறையே 26, 25, 48, 50 மற்றும் 50 வீதமான விவசாய நிலங்களில் முன்னோடி செயற்திட்ட அடிப்படையில் WUE அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், நீர் பயன்பாட்டு வினைத்திறனின் சராசரி பெறுமதி முறையே 23%, 22%, 21%, 36% மற்றும் 38% எனும் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. |
| **3. செயற்திட்ட முகாமைத்துவம்:** | தேசிய மற்றும் மாகாண அளவிலான செயற்திட்ட நடவடிக்கைகளை வினைத்திறனாக ஒருங்கிணைப்பதன் மூலம் ஒட்டுமொத்த செயற்திட்ட முகாமைத்துவத்தின் தரத்தை உறுதி செய்தல். | - தகவல், கல்வி மற்றும் தொலைத்தொடர்பு நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக நடத்துதல்<br>- செயற்திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்<br>- தேசிய மற்றும் மாகாண அளவில் முன்னேற்றம் பற்றிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை | - தகவல், கல்வி மற்றும் தகவல்தொடர்பு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இதுவரை 195 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.<br>- மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் கீழ் மேற்பார்வை விஜயங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் மூலம் அடையாளம் காணப்பட்ட வெற்றிகரமான நிகழ்வுகள் பதிவு செய்யப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் திட்டமிட்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br>- உரிய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. |

| கூறு | நோக்கம் | செயற்பாடு | 2025 ஆம் ஆண்டில் முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | நடத்துதல்<br>- முகாமைத்துவ தரவு முறைமையொன்றை உருவாக்குதல். | - முகாமைத்துவ தரவு முறைமை உருவாக்கப்பட்டு அதன் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது தரவுகளை உள்ளிடும் பணி நடைபெற்று வருகிறது. 90% தரவுகள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. |

புகைப்பட இலக்கம் 04 - 05

## 03. சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

### 3.1. அறிமுகம்

சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) மொத்தமாக 105.00 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆறு வருடச் செயற்திட்டமாக 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், கொவிட் பெருந்தொற்று மற்றும் சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு, இந்த செயற்திட்டத்திற்கு மேலும் இரண்டு வருட கால நீடிப்பு வழங்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் (GOSL), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD), தனியார் துறை (விவசாய வணிக நிறுவனங்கள்), சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பங்களிப்பு நிதி நிறுவனங்கள் (PFIs) இணைந்து முன்னெடுக்கும் இந்தச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம், 57,500 சிறு அளவிலான விவசாயத் தொழில்முனைவோரைச் சந்தையுடன் இணைப்பதன் மூலம் அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதும், அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதும் ஆகும். இந்த நோக்கங்களை அடைவதற்காக, அரச மற்றும் தனியார் துறைகளின் இணைப்பின் மூலம் விவசாயத் தொழில்முனைவோருக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான பயிற்சியூடாக விவசாய இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்கி, சிறந்த சந்தை வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவதற்கு சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) பிரதானமாகக் கவனம் செலுத்தியுள்ளது.

### 3.2. நிதி முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| அபிபிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 3,470.00 | 2,504.00 | 72 |

### 3.3. பௌதீக முன்னேற்றம்

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே, தனியார் விவசாய வணிக நிறுவனங்கள் மற்றும் விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் பால் உற்பத்தி, வாசனைத் திரவியங்கள், தானியங்கள் மற்றும் அவரைக் குடும்பப் பயிர் வகைகள், தேயிலை, மலர் வளர்ப்பு மற்றும் காய்கறிகள் போன்ற பிரதான விவசாயத் துறைகளை உள்ளடக்கி, 39 4P (அரசு, தனியார் மற்றும் உற்பத்தியாளர் பங்களிப்பு) செயற்திட்டங்களை நிறுவுவதில் இத்திட்டம் வெற்றியடைந்துள்ளது.

சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP) 2025 ஆம் ஆண்டில் 3,499 புதிய பயனாளிகளைத் தனது பயனாளிகள் பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ளதுடன், அதன் பிரகாரம் 2025 திசம்பர் 31 ஆம் தேதி வரை 50,526 பயனாளிகள் ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். இது 57,500 விவசாய தொழில்முனைவோரைக் கொண்ட ஒட்டுமொத்த செயற்திட்ட இலக்கின் 87.87 சதவீதமாகும்.

அத்தொகையில், 4P பெறுமதிச் சங்கிலி மாதிரியின் கீழ் தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ள 43,000 பயனாளிகளில் 39,462 பேரும் (91.8%), இளம் விவசாய தொழில்முனைவோரை மேம்படுத்தும் (YED) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலக்கு வைக்கப்பட்டுள்ள 2,500 பயனாளிகளில் 3,850 SAPP இளம் பயனாளிகளும் (154%), வருமான உற்பத்தி (IG) கடன் திட்டத்தின் ஊடாக 7,214 பயனாளிகளும் பயன் பெற்றுள்ளனர்.

மேலும், சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை (SAPP) செயற்திட்டமானது தொடர்புடைய நிறுவனங்களின் உதவியுடன் கால்வாய் மற்றும் விவசாய வீதிகள் புனரமைப்பு போன்ற பண்ணைக்கு வெளியிலான விவசாய உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளுக்காகத் திட்டமிடப்பட்டுள்ள 98 திட்டங்களில், 2025 டிசம்பர் வரை 87 திட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. தற்போது இக்கட்டுமானப் பணிகளுக்காக 268.00 மில்லியன் ரூபாய் அரச முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, விவசாய உற்பத்தியாளர் அமைப்புகளை மிகவும் நிலையான வணிக நிறுவனங்களாக மாற்றுவதற்காக இந்த செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் (IS) சேவைகளின் கீழ், தற்போது 11 செயற்பாடுகளுக்குத் தேவையான வெளியீடுகளுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அத்தகைய மேலும் 11 IS சேவைகளின் பணிகள் 2026 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட உள்ளன. தற்போது இந்த செயற்திட்டக் கூறின் கீழ் 148.00 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்திற்கான IFAD நிதி ஒதுக்கீட்டு இலக்கான 54.40 மில்லியன் அமெரிக்க டொலரில் 44.40 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டு 82% நிதி முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. பயனாளிகள் மற்றும் ஊக்குவிப்பாளர்களிடமிருந்து நிகழ்ச்சித் திட்டத்திற்கான மேலதிக பங்களிப்பு 16.60 மில்லியன் ரூபாய் ஆகும் இலங்கை அரசாங்கம் (GoSL), IFAD மற்றும் இதர பங்களிப்புகளின் மொத்த இலக்கான 105.00 மில்லியன் அமெரிக்க டொலரில் 2025 டிசம்பர் வரை 79.53 மில்லியன் அமெரிக்க டொலர் (76%) முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

அனுராதபுர திறந்த கோழி வளர்ப்புச் செயற்திட்டப் பயனாளிகளுக்குச் செயற்திட்டத்தின் கடன்களைப் பெற்றுக்கொள்வது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், கடன் விண்ணப்பப் படிவங்களை வழங்குதல் ஆகியவை 2025.12.18 அன்று ரம்பேவ வஹமல்கொல்லேவ கிராமத்தில் நடைபெற்றது. வங்கி அதிகாரிகள் பயனாளிகளால் அமைக்கப்பட்ட கோழி வளர்ப்பு இல்லங்களைப் பார்வையிட்டனர். இதில் 40 பயனாளிகள் கலந்துகொண்டனர்.

மாத்தறை கம்புருபிட்டிய 'உத்சாஹய' கறுவாப் பயிர்ச் செய்கைச் சங்கத்தின் இரண்டாம் கட்டக் கடன் வழங்கல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 2025 டிசம்பர் மாதம் ஈரியதொட்ட சமூக நிலையம், எல்லேவெல அஸ்வத்தாராமய மற்றும் பிடவல்கமுவ நிக்ரோதாராமய ஆகிய இடங்களில் நடைபெற்றன. இந்நிகழ்வுகள் செயற்திட்டத்தின் பிரதிப் பணிப்பாளர், பெறுமதிச் சங்கிலிப் பிரதி முகாமையாளர், பெறுமதிச் சங்கிலி ஊக்குவிப்பாளர் மற்றும் ஹக்மன மற்றும் கம்புருபிட்டிய மக்கள் வங்கி அதிகாரிகள், பிரதேச அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் மற்றும் கறுவா மேம்பாட்டுத் திணைக்களத்தின் கள உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் நடைபெற்றன.

ஆனமடுவ மில்கோ பால் குளிரூட்டும் மையத்துடன் இணைந்த ஆனமடுவ மற்றும் ஆண்டிகம-பெரியமடுவ ஆகிய பகுதிகளில் மில்கோ குழு 01 மற்றும் 02 க்குச் சொந்தமான பால் பண்ணையாளர்களின் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாட்டுத் தொழுவங்கள், புற் செய்கை போன்ற செயல்பாடுகளைச் செயற்திட்டத்தின் பிரதான அலுவலகத்தின் நுண்கடன் ஆலோசகர் 2025.12.19 அன்று கண்காணித்தார். இதன்போது விவசாயிகளுக்குக் கருத்துகளையும் ஆலோசனைகளையும்

வழங்கியதுடன், இக்கண்காணிப்பு விஜயத்தில் ஆனமடுவ மில்கோ கள உத்தியோகத்தர் மற்றும் பெறுமதிச் சங்கிலி ஊக்குவிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவற்றுக்கு மேலதிகமாக,, சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்குப் பல பயிற்சி நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. அதன் கீழ் 2025 ஆம் ஆண்டில் பாலின சமத்துவம் குறித்த பயிற்சியின் கீழ் 2,591 பயனாளிகளுக்கும், சூழல் மற்றும் காலநிலை குறித்த பயிற்சியின் கீழ் 2,538 பயனாளிகளுக்கும், ஊட்டச்சத்துப் பயிற்சியின் கீழ் 1,878 பயனாளிகளுக்கும், நிதி அறிவு பயிற்சியின் கீழ் 2,637 பயனாளிகளுக்கும் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சியின் கீழ் 295 இளம் பயனாளிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 06 – 08

## 04. சிறிய அளவிலான விவசாய வியாபார மீண்டென்ழல் செயற்திட்டம் (SARP)

### 4.1. அறிமுகம்

இந்த செயற்திட்டம் இலங்கையின் புத்தளம், குருநாகல், மாத்தளை, அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய 6 உலர் வலய மாவட்டங்களையும், அந்த மாவட்டங்களுக்குச் சொந்தமான மல்வத்து ஓயா, தெதுரு ஓயா மற்றும் மீ ஓயா ஆகிய ஆறுகளின் நீரேந்து பகுதிகளில் அமைந்துள்ள குள அடுக்கைத் தொகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் பண்ணை வணிகமயமாக்கலை ஊக்குவிப்பதுடன், 40,000 சிறு விவசாயக் குடும்பங்கள் அல்லது 148,000 தனிநபர்களுக்குக் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் சவால்களுக்கு நிலையான தீர்வுகளை வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறனை மேம்படுத்தும் பொருட்டு சேவை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டப் பயனாளிகளின் திறன் விருத்தி மற்றும் தெரிவு செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளைப் புதிதாக அமைத்தல் மற்றும் விருத்தி செய்தல் ஆகியவற்றில் முதலீடு செய்வது இத்திட்டத்தின் பிரதான செயற்திட்டக் கூறாகக் காணப்படுகிறது. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றினால் நிதியளிக்கப்படும் இந்த செயற்திட்டம் 82.00 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன் இது 6 ஆண்டுகால செயற்திட்டமாக முன்னெடுக்கப்படுகிறது.

4.2. 2025.12.31 திகதி வரையிலான நிறுவன நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | திருத்தப்பட்ட ஒதுக்கீடு (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| **மூலதனம்** | 5,947.00 | 2,546.00 | 1,374.20 | 54 |

- *2025 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 5,947.00 மில்லியன் ரூபாயாக இருந்த போதிலும், பின்னர் செயற்திட்டத்தின் செயல்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின்படி அத்தொகை 2,546.00 மில்லியன் ரூபாயாக மாற்றப்பட்டது.*

### 4.3. பௌதீக முன்னேற்றம்

#### 4.3.1. குளங்களைப் புனரமைக்கும் பணிகள்

இந்த செயற்திட்டத்தின் மூலம் 260 குளங்களைப் புனரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல் கட்டமாக 171 குளங்களை புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முதல் கட்டத்தின் கீழ் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள 171 குளங்களில் 149 குளங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக

*கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை அவற்றில் 35 குளங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன.*

*புகைப்பட இலக்கம் 09*

**4.3.2. பெறுமதிச் சங்கிலிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு வழங்கல் வீதிகளை அமைத்தல்**

*அரசு, தனியார் மற்றும் உற்பத்தியாளர் கூட்டாண்மை வியாபார நடவடிக்கைகளுக்காகவும், அறுவடைகளைச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்காகவும் தேவையான உட்கட்டமைப்பு வசதியாக வழங்கல் வீதிகளை அமைக்கும் பணிகள் இந்த செயற்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 91.47 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் கீழ் 6 மாவட்டங்களை உள்ளடக்கிய 266 கிலோமீட்டர் நீளமான வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிர்மாணப் பணிகள் மாவட்டச் செயலாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.*

**4.3.3. நீரேந்து பகுதிகளில் மீண்டும் காடுகளை உருவாக்கல்**

*2025 ஆம் ஆண்டில் புனரமைக்கப்படும் குளங்களை அண்டிய நீரேந்து பகுதிகளில் (160 ஹெக்டேயர்) மீண்டும் காடுகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டது. அதன்படி இலுப்பை மரம், மருது, கருங்காலி மற்றும் கரந்தை ஆகிய மரங்களை நடுவதற்காக 28.95 மில்லியன் ரூபாய் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அத்திணைக்களம் அனுராதபுரம், குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் அடையாளம் காணப்பட்ட நீரேந்து பகுதிகளில் 562 ஹெக்டேயரில் 408 ஹெக்டேயர் மீண்டும் காடுகளை உருவாக்கும் பணிகளை நிறைவு செய்துள்ளது.*

*புகைப்பட இலக்கம் 10*

**4.3.4. நன்னீர் மீன் வளர்ப்பு**

*இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் உள்ள மக்களின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நன்னீர் மீன் வளர்ப்பு விரிவுபடுத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டம் 163 குளங்களை உள்ளடக்கிச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், நன்னீர் மீன் வளர்ப்பு ஆரம்பிக்கப்பட்ட 9 குளங்களில் அறுவடைப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இக்குளங்கள் வவுனியா, புத்தளம், குருநாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. இது தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகிறது.*

*புகைப்பட இலக்கம் 11*

**4.3.5. கேர்க்கின் (Gherkin) பயிர்ச் செய்கைத் திட்டம்**

*இது வெளிநாட்டுச் சந்தைக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட கேர்க்கின் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்காகத் தனியார் துறையுடன் இணைந்து அரசு, தனியார் மற்றும் உற்பத்தியாளர் பங்களிப்புத் திட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமாகும். இது ரட்செல் வோக்கர் எனும் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டத்தின் பெறுமதி 256.72 மில்லியன் ரூபாய் ஆகும். இந்தச் செயற்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தனியார் பங்காளர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் அனுராதபுரம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 1000 பயனாளிகளுக்காகச் செயல்படுத்தப்படுகிறது.*

**4.3.6. திறந்தமுறை கோழி வளர்ப்புச் செயற்திட்டம்**

*இந்தச் செயற்திட்டம் வவுனியா, புத்தளம், குருநாகல், அனுராதபுரம், மன்னார் மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டது. இதன் முதற்கட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 550 விவசாயக் குடும்பங்களுக்கும், இரண்டாம் கட்டத்தின் கீழ் மேலும் 550 குடும்பங்களுக்கும் கோழிக் குஞ்சுகள் மற்றும் கோழிக்கூடுகள் உட்படத் தேவையான பொருட்கள்*

வழங்கப்பட்டன. இந்தச் செயற்திட்டம் குறைந்த வருமானம் பெறும் பெண்களை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் குடும்பங்களின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அவர்களின் வருமானத்தை அதிகரிப்பது என்பன நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை 54.38 மில்லியன் ரூபாய் ஆகும்.

**4.3.7. இனிப்புச் சோள (Sweet Corn) செயற்திட்டம்**

இது சிறு அளவிலான விவசாய வணிகங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் அரச - தனியார் மற்றும் உற்பத்தியாளர் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு செயற்திட்டமாகும். இந்தச் செயற்திட்டம் 'ரிச்மார்க் ஹோல்டிங்ஸ்' எனும் நிறுவனத்தின் கூட்டாண்மையுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்நிறுவனத்தினால் பயனாளிகளுக்கு அவசியமான பயிற்சிகள் வழங்கல் மற்றும் அறுவடைகளைக் கொள்வனவு செய்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செயற்திட்டத்தின் மூலம் உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. செயற்திட்டத்தின் மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 300 ஆகும். அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 150 விவசாயிகளும் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 150 பயனாளிகளும் இந்தச் செயற்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தற்போது இந்தச் செயற்திட்டம் தொடர்பான ஆரம்ப விழிப்புணர்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காகச் செயற்திட்டத்தின் பங்களிப்பு 92.75 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 12

**4.3.8. கறவை மாடு வளர்ப்புத் திட்டம்**

அரசு, தனியார் மற்றும் உற்பத்தியாளர் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் இந்தச் செயற்திட்டம் பெல்வத்த பால் நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டத்திற்குத் தேவையான பயிற்சிகளை சிறிய அளவிலான விவசாய வியாபார மீண்டென்ழல் செயற்திட்டம் மற்றும் குறித்த தனியார் நிறுவனம் என்பன இணைந்து வழங்கப்படுகின்றன. செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 1000 ஆகும். தற்போது பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. குருநாகல், புத்தளம், அனுராதபுரம் மற்றும் மாத்தளை மாவட்டங்களில் இந்தச் செயற்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. செயற்திட்டத்தின் பெறுமதி 592.63 மில்லியன் ரூபாய் ஆகும்.

புகைப்பட இலக்கம் 13

## 05. ஒருங்கிணைந்த கிராம-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலைத் தாங்குதிறன் செயற்திட்டம் - (IRDCRP)

**செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-093-2509**

5.1. **அறிமுகம்**

ஒருங்கிணைந்த கிராம-நகர அபிவிருத்தி மற்றும் காலநிலைத் தாங்குதிறன் செயற்திட்டம் (IRDCRP) என்பது கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஒரு செயற்திட்டமாகும். இதற்காக இலங்கை அரசாங்கம் (3 மில்லியன் அமெரிக்க டொலர்), உலக வங்கி (100 மில்லியன் அமெரிக்க டொலர்) மற்றும் தனியார் துறை (17 மில்லியன் அமெரிக்க டொலர்) இணைந்து நிதி வழங்குகின்றன. மொத்தச் செயற்திட்டச் செலவு 120 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். பண்ணையிலிருந்து நுகர்வோர் வரையான பெறுமதிச் சங்கிலியில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விவசாயம், கால்நடை வளங்கள், மீன்பிடி மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் ஈடுபட்டுள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான விவசாய தொழில்முனைவோருக்கு உதவி வழங்கும் நோக்கில் இந்தச் செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்திட்டமானது விவசாயம், கால்நடை வளங்கள், மீன்பிடி மற்றும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை உப-துறைகளில் உள்ள சிறு மற்றும் நடுத்தர அளவிலான உரிமையாளர்களுக்கு உதவி வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், பண்ணையிலிருந்து நுகர்வோர் வரையான பெறுமதிச் சங்கிலியில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை (lapses) நிவர்த்தி செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தின் மற்றுமொரு நோக்கமானது அடுக்கைக் குளக்கட்டமைப்புகளின் நிறுவன முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல், நீர்ப் பயன்பாட்டு வினைத்திறன் மற்றும் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய விவசாய முறைகளைப் பிரபல்யப்படுத்துதல் மற்றும் விவசாய மற்றும் நீர்ப்பாசனத் துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை அதிகரித்தல் மற்றும் விவசாயத் துறையில் தீர்மானம் மேற்கொள்ளவதை மேம்படுத்துவதற்காகப் பொதுத் தரவுகளின் கிடைக்கும் நிலை மற்றும் தரத்தை அதிகரிப்பதாகும்.

காலநிலை அபாயங்கள் மற்றும் பொருளாதார உறுதியற்ற தன்மை காரணமாக 'அதி முக்கிய வலயங்கள்' (Hotspots) என இனங்காணப்பட்ட, காலநிலை மாற்றங்களுக்கு அதிக உணர்திறன் கொண்ட 12 மாவட்டங்களை இந்தச் செயற்திட்டம் இலக்கு வைக்கிறது. அந்த மாவட்டங்கள்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, அனுராதபுரம், பொலன்னறுவை, குருநாகல், புத்தளம், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் ஆகும். செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் வசிக்கும் விவசாய உணவு உற்பத்தியாளர்களின் உற்பத்தித் திறன், போட்டித்திறன் மற்றும் காலநிலைத் தாங்குதிறனை அதிகரிப்பதே இந்த ஐந்தாண்டுச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். செயற்திட்டக் காலம் 2025 செப்டம்பர் 08 முதல் 2030 ஜூன் 30 வரையாகும்.

### 5.2. நிதி முன்னேற்றம்

| தொடர் இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | 118-02-03-093-2509-(12) (செயல்பாட்டு நிதியளிப்பு) | 30.00 | 14.27 | 48% |
| 2 | 118-02-03-093-2509-(17) (மேலதிக வரவுசெலவுத் திட்டம்) | 10.00 | 06.43 | 64% |

### 5.3. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

- செயற்திட்டத் முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- விவசாய பெறுமதிச் சங்கிலி அபிவிருத்திக்கான வணிக முன்மொழிவுகளைக் கோருவதற்கான விருப்பம் தெரிவித்தல் (EOI) படிவம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- நடைமுறைப்படுத்துவதற்கான ஆதரவை வழங்கும் நிறுவனத்திற்காக (ISF) செயல்பாட்டு வரையறைகள் (TOR) நிறைவு செய்யப்பட்டு உலக வங்கியின் STEP அமைப்பில் பதிவேற்றப்பட்டுள்ளது.
- 2026 ஜனவரி மாதத்திற்குள் வணிக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு பங்குதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.
- குருநாகல் (3) மற்றும் திருகோணமலை (9) மாவட்டங்களில் உள்ள 12 நீர்த்தேக்கங்களுக்காக ESRs, EMPs, SSRs மற்றும் SMPs அறிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு, பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்டு இதன் நடைமுறைப்படுத்தல் 2026 ஆம் ஆண்டில் இடம்பெற உள்ளது.
- ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 3 நீர்த்தேக்கங்களுக்காக ESRs, EMPs, SSRs மற்றும் SMPs அறிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

புகைப்பட இலக்கம் 14

**06. கொழும்பு – கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA)**

சர்வதேச தாவரப் பாதுகாப்பு உடன்படிக்கையில் (International Plant Protection Convention – IPPC) இலங்கை கையொப்பமிட்டுள்ளதுடன், அந்த உடன்படிக்கைக்கு அமைய தாவரங்கள், தாவரப் பாகங்கள் மற்றும் விவசாய உற்பத்திகளை உரிய சர்வதேச தரங்களுக்கமைய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பது இலங்கையின் தாவர தனிமைப்படுத்தல் விடயப்பரப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப்பணியின் ஊடாக நாட்டுக்குள் தாவர நோய்கள் மற்றும் பூச்சிப் பீடைகளின் ஊடுருவலைத் தடுத்தல் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் விவசாய உற்பத்திகளின் நம்பகத்தன்மை மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல் என்பன நோக்கங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், விவசாயிகளின் வறுமையைக் குறைத்தல், விவசாய உற்பத்தி ஏற்றுமதி மூலம் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டலை அதிகரித்தல் மற்றும் சர்வதேச சந்தையுடன் வெற்றிகரமான ஒருங்கிணைப்பைப் பேணுதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில், தாவர தனிமைப்படுத்தல் பணிகளை மிகவும் துல்லியமாகவும், வினைத்திறனாகவும், தரநிலைகளுக்கு அமைவாகவும் நிறைவேற்ற வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளது.

இதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை சர்வதேச சந்தையுடன் ஒருங்கிணைக்கும் போது பொருட்களின் தரங்களை மிகவும் துல்லியமாக இனங்காணும் திறனை மேம்படுத்துவதற்காக, தாவர தனிமைப்படுத்தல் சேவையில் பயன்படுத்தப்படும் உபகரணங்களைப் புனரமைத்தல் மற்றும் மீளமைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, ஜப்பானிய அரசாங்கத்தினால் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JICA) ஊடாக 2017 ஆம் ஆண்டில் 259.60 மில்லியன் ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டு இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டில் நிறைவடையவிருந்ததுடன், அக்காலப்பகுதி வரை க்குள் இந்தச் செயற்திட்டத்திற்காக 253.36 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, மொத்த செயற்திட்டத் தொகையில் 6.24 மில்லியன் ரூபாய் மீதமாகியுள்ளதுடன், அந்த மீதித் தொகையிலிருந்து சுமார் 2.63 மில்லியன் ரூபாய் 2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சுமார் 3.31 மில்லியன் ரூபாய் 2026 ஆம் ஆண்டின் எஞ்சிய பணிகளுக்காகச் செலவிடப்படவுள்ளதுடன், அப்பணிகள் நிறைவடைந்த பின்னர் இந்தச் செயற்திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் * | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற் றம் (%) |
|---|---|---|---|---|
| 1. | கொழும்பு – கட்டுநாயக்க தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் மீள்நிறுவுதல். (JICA) | 6.24 | 2.63 | 42 |

7. **ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் நன்கொடையாகக் கிடைக்கப் பெற்றமை நான்கு (04) விதைத் தயாரிப்பு இயந்திரங்களுக்குச்** செலுத்தப்பட வேண்டிய வரிகளைச் செலுத்துவதற்காக 90.07 மில்லியன் ரூபாய் மேலதிக நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த முழுமையான நிதி ஒதுக்கீட்டுத் தொகையும் செலவிடப்பட்டுள்ளதுடன், அதன் நிதி முன்னேற்றம் 100% ஆகும்.

## *01. விவசாயத் திணைக்களம் (DOA)*

### *1.1.* தொலைநோக்கு

*"தேசிய சுபீட்சத்திற்காக விவசாயத்தில் மேன்மையினை அடைந்து கொள்ளல். "*

### *1.2.* செயற்பணி

*புதிய விருத்தியடைந்த விவசாய தொழில்நுட்பங்களை உருவாக்கி விரிவாக்கம் செய்தல் மற்றும் அது தொடர்பான சேவைகளை விவசாயிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து அனைத்து பங்காளர்களுக்கும் வழங்குவதன் மூலம் தேசத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்வதற்குப் பொருத்தமானதும் நிலைபேறானதுமான விவசாய அபிவிருத்தியினை எய்தல்.*

### *1.3.* நோக்கங்கள்

- *உணவுப் பயிர்ச் செய்கையின் உற்பத்தித் திறனை விருத்தி செய்தல்.*
- *நிலைபேறான விவசாயத்தைப் பாதுகாத்தல்.*
- *உழைப்பு மற்றும் காணி வினைத்திறனை விருத்தி செய்தல்.*
- *விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்காளர்களையும் வலுவூட்டுதல்.*
- *விவசாயத் துறையில் மனித வளத்தின் ஆற்றலை விருத்தி செய்தல்.*
- *பங்காளர்களுக்கு உயர்தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.*
- *காணி மற்றும் நீர் வளங்களை உகந்த அளவில் பயன்படுத்துதல்.*
- *திட்டமிடல், கொள்கை முடிவுகள் மற்றும் கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல்.*
- *விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் மட்டுமன்றி விவசாய உற்பத்திகளின் தர நியமங்களைப் பாதுகாத்தல்.*
- *தீங்கு விளைவிக்கும் வெளிநாட்டு இனங்களிலிருந்து உள்நாட்டுத் தாவர இனங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.*
- *விவசாய உற்பத்திகள் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிப்பதற்காக ஆரோக்கியமான தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு வசதிகளை வழங்குதல்.*
- *கிருமிநாசினிகளின் தீமைபயக்கும் விளைவுகளிலிருந்து பொதுமக்களையும் சூழலையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.*
- *தாவர மரபணு வளங்களை நிலைபேறான முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்தல்.*

### *1.4.* பணிகள்

- *ஆராய்ச்சிகள் மூலம் பொருத்தமான புதிய வர்க்கங்கள் மற்றும் விவசாய தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.*
- *புதிய மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பங்களை விவசாய சமூகத்தினரிடையே விரிவாக்குதல்.*
- *உயர் தரத்திலான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தலும் விநியோகித்தலும்.*
- *தாவர மரபணு வளங்களைப் பாதுகாத்தல்.*
- *விதைச் சட்டம், தாவரப் பாதுகாப்புச் சட்டம், கிருமிநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் மண் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல்.*
- *விவசாயக் கல்வியின் ஊடாக விவசாயம் தொடர்பான தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டம் 5 மற்றும் 6 இற்கான டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதல், விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் திறன் விருத்திக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.*

### *1.5.* நிறுவனத்தினால் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்*:*

*இலக்கு 2: வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டச்சத்து நிலையை உறுதி செய்தல், மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.*

*1.6. நிதிசார் முன்னேற்றம் (செலவுத் தலைப்பு இலக்கம் 285)*

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மூலதன | 4,669.53 | 3,323.39 | 71 |
| மீண்டுவரும் | 7,386.00 | 7,109.23 | 96 |

### 1.7. விவசாயத் திணைக்கள (285) செலவுத் தலைப்பின் கீழ் உள்ள விஷேட செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

**நெல்**

- மூன்று (03) புதிய நெல் வர்க்கங்களான AT 13-1532 (3 மாதங்கள், சிவப்பு இடைநடுத்தர-மத்திய மணி), AT 13-3791 (3½ மாதங்கள், சிவப்பு, நீண்ட மெல்லிய மணி) மற்றும் BG 16-2022 (3½ மாதங்கள், குட்டை-உருண்டை, வெள்ளை வித்துறை கொண்ட மணி) ஆகியன விவசாயத் திணைக்களத்தின் வர்க்க வெளியீட்டுக் குழுவிடம் சமர்ப்பிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டன.
- தேசிய நெல் வர்க்க ஒருங்கிணைப்புப் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தின் (NCRVT) கீழ், பல இடங்களிலான மதிப்பீடுகளின் பின்னர் BG 21-18, BG 21-21, BG 15-1027 மற்றும் AT 18-1322 ஆகிய நான்கு மேம்படுத்தப்பட்ட நெல் இனங்கள் வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகளுக்காகவும், கருஞ்சிவப்பு வித்துறை கொண்ட நெல் இனமான AT 21-1088 பாரிய அளவிலான வர்க்க இசைவாக்கப் பரிசோதனைகளுக்காகவும் தெரிவு செய்யப்பட்டன.
- AT 309, BG 381, BW 272-6b மற்றும் AT 21-1088 ஆகிய நெல் வகைகளிலிருந்து பெறப்பட்ட மாவை 30% வரை பயன்படுத்தி, சாதாரண யோகட்டிற்கு நிகரான புரதம் மற்றும் கொழுப்பு மட்டங்களைக் கொண்ட விசேட யோகட் உற்பத்தி செய்யப்பட்டது.
- கபில நிறத் தத்தி (Brown Plant Hopper) மற்றும் வெள்ளை நிறத் தத்திகளைக் கட்டுப்படுத்துவதற்கு 1% GR தினோட்டெபியூரான் (Dinotefuran) குறிப்பிடத்தக்களவு வினைத்திறனானது என இனங்காணப்பட்டது.
- நெற்செய்கையில் கரடுமுரடான புற்கள், அகலமான இலைகளைக் கொண்ட புற்கள் மற்றும் காட்டு நெல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வினைத்திறனான களைநாசினிகள் இனங்காணப்பட்டன.
- ஆறு களைநாசினிகளை முறைமாறி நனைத்தல் மற்றும் உலர்த்தும் (AWD) முறையுடன் ஒருங்கிணைத்துப் பயன்படுத்துவதானது Blyxa octandra (திய ஹவரிய/ நீர்மூலிகை) களைக் கட்டுப்பாட்டிற்கு வினைத்திறனானது என இனங்காணப்பட்டது.

**ஏனைய களப் பயிர்கள்**

- 40 முதல் 50 சென்டிமீட்டர் உயரத்தில் வெட்டப்பட்ட துவரைப் பருப்பின் (Pigeon pea) அறுவடை செய்வதற்கான காலம் மற்றும் உழைப்புத் தேவையின் அடிப்படையில், கையினால் அறுவடை செய்வது ஒப்பீட்டளவில் வினைத்திறனானது என இனங்காணப்பட்டது.
- பாசிப்பயற்றின் கடின விதை சதவீதத்தைக் குறைப்பதற்காக, சுடுநீர் சிகிச்சை (100°C வெப்பநிலையில் 2 நிமிடங்கள்) நுகர்வு மற்றும் நடுகை ஆகிய இரு நோக்கங்களுக்கும் வினைத்திறனான முறையாக இனங்காணப்பட்டது.
- நிலக்கடலைச் செய்கையில் அஸ்பெர்கிலஸ் (Aspergillus) தொற்று ஏற்படுவதற்கு அறுவடை முதல் களஞ்சியப்படுத்துதல் வரையான காலப்பகுதி மிகவும் தீர்மானமிக்கது என இனங்காணப்பட்டுள்ளது. ஆய்வுகூட மற்றும் கள நிலைமைகளின் கீழ் அஸ்பெர்கிலஸ் பாதிப்பிற்கு எதிராக 'லங்கா ஜம்போ' வர்க்கம் எதிர்ப்புத் திறனைக் காட்டியது.
- வெங்காயத்தில் ஏற்படும் ஊதா நிறப் புள்ளி நோய் மற்றும் மிளகாயில் ஏற்படும் அன்த்ராக்னோஸ் (Anthracnose) நோயைக் கட்டுப்படுத்துவதற்கான வினைத்திறனான பூஞ்சணநாசினிகள் இனங்காணப்பட்டன.

- *ஆய்வுகூட நிலைமைகளின் கீழ் தாவர பக்றீரியா நோய்க் காரணிகளைக் கட்டுப்படுத்துவதற்காக 'Ocimum sanctum' தாவரத்திலிருந்து பீனோலிக் (Phenolic) செறிவுமிக்க சாற்றைப் பெறுவதற்கு, மெதனோலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சொக்ஸ்லெட் (Soxhlet) முறையே மிகவும் வினைத்திறனான பிரித்தெடுப்பு முறையாக இனங்காணப்பட்டது.*
- *பெரிய விதைகளைக் கொண்ட நிலக்கடலைச் செய்கைக்கு, உயிரியல் நிலக்கரி (Biochar) அடிப்படையிலான நைதரசன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் கலந்த மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து வில்லைகள், விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட உரக்கலவைக்கு நிகரான பெறுபேறுகளை வழங்குவதாக இனங்காணப்பட்டது.*
- *விசேட உரப் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இருபத்தி நான்கு உர உற்பத்திகள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், சோளப் பயிர்ச் செய்கைக்காக "பயோசக்தி" உற்பத்தி பரிந்துரைக்கப்பட்டது.*
- *சோளப் பயிர்ச் செய்கையில் ட்ரோன் (Drone) தொழில்நுட்பத்தின் உதவியுடன் களைநாசினிகளை பிரயோகிப்பதற்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டன. பயிர் ஸ்தாபிக்கப்பட்டு 10-15 நாட்களின் பின்னர் ஹெக்டேருக்கு 1,250 மில்லி லீற்றர் என்ற விகிதத்தில் 'நிகோசல்ப்யூரான் 40 g/l OD' இடுவது பரிந்துரைக்கப்பட்டது.*
- *சோளப் பயிர்ச் செய்கையில் பிரதான பீடைகளை முகாமைத்துவம் செய்வதற்காக ட்ரோன் தொழில்நுட்பம் சார்ந்த பூச்சிக்கொல்லி விசிறல் வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டதுடன், வினைத்திறனான பூச்சிக்கொல்லிகளும் இனங்காணப்பட்டன.*

***பூங்கனியியல் பயிர்கள்***

***மரக்கறிகள்***

- *திறந்த மகரந்தச் சேர்க்கை மூலம் உருவாக்கப்பட்ட ஒரு வெண்டைக்காய் வர்க்கம், 3 துவரை வர்க்கங்கள், 3 சோயா போஞ்சி வர்க்கங்கள் மற்றும் காய்கள் மற்றும் இலைகள் ஆகிய இரண்டிற்கும் உகந்த 3 முருங்கை வர்க்கங்கள் என்பன உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், அவை பொதுவான பயிர்ச் செய்கைக்காக வெளியிடப்படுவதற்கு முன்னர் வர்க்க இசைவாக்கப் பரிசோதைனகளுக்கு உட்படுத்தப்பட்டு உள்ளன.*
- *வெண்டைக்காய் (MI5) உள்ளிட்ட சில மரக்கறி வகைகளின் இனவிருத்தி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன; பயறு (கன்னொருவ A9 - 19.05 kg; BS1 - 3 kg), முள்ளங்கி (பீரலு - 760 g), பாகற்காய் (மாத்தளை கிரீன் - 9 kg; திண்ணவேலி வெள்ளை - 4 kg), வெள்ளரி (HORDI Cu4 - 2 kg), போஞ்சி (கெகுலு - 114 kg) மற்றும் சிறகவரை (SLS 44 - 8.15 kg).*
- *வர்க்க இசைவாக்கப் பரிசோதைனகளுக்கு இரண்டு கொடிப் போஞ்சி வர்க்கங்கள் (PB 55 மற்றும் PB 177) பெயரிடப்பட்டன.*
- *பண்டாரவளை பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் புதிய பாதுகாக்கப்பட்ட விவசாய தொழில்நுட்பங்கள் குறித்த களத் தினம் நடாத்தப்பட்டது.*
- *தக்காளி, கறிமிளகாய் மற்றும் பீர்க்கங்காய் உள்ளிட்ட கலப்பின மரக்கறிப் பயிர்களுக்காக இலங்கையின் பல்வேறு விவசாய-சூழலியல் வலயங்களுக்கு ஏற்ப ஊட்டச்சத்து முகாமைத்துவப் பொதிகளும், வெண்டைக்காய், கத்தரிக்காய், பீர்க்கங்காய் மற்றும் கறிமிளகாய் ஆகியவற்றின் உர முறைமைகளுக்கான ஊட்டச்சத்து முகாமைத்துவப் பொதிகளும் தயாரிக்கப்பட்டன.*
- *கண்டி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது பாதுகாக்கப்பட்ட இல்லங்களில் வெள்ளை ஈக்கள், இலைத் தத்திகள், மைட்டுகள், அசுவிணிகள், இலைத் துளைப்பான்கள் மற்றும் மாவுப்பூச்சிகளை இலக்காகக் கொண்ட உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளைப் பயன்படுத்தி பாதுகாக்கப்பட்ட இல்லங்களுக்கான பீடை முகாமைத்துவப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டதுடன், விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க சுமார் 1,200 விவசாயிகளுக்கு உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் வழங்கப்பட்டன.*

- *குறைந்தளவில் பயன்படுத்தப்படும் மரக்கறிகள் மற்றும் கிழங்குப் பயிர்களில் புதிய நோய்கள் இனங்காணப்பட்டு, அவற்றுக்கான வினைத்திறனான கட்டுப்பாட்டு முறைகள் விருத்தி செய்யப்பட்டன.*
- *இலங்கையின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அயனமண்டலக் கிழங்குப் பயிர்களான வற்றாளை, உருளைக்கிழங்கு (Coleus rotundifollius), கொடிக்கிழங்கு வகைகள், சேம்புக் கிழங்கு வகைகள் மற்றும் மரவள்ளி ஆகியவற்றின் உற்பத்தியை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ்:*
    - *வல்பிட்ட, உல்பதகம, அம்பேபுஸ்ஸ மற்றும் தெலிஜ்ஜவில ஆகிய தெரிவு செய்யப்பட்ட அரசாங்க விதைப்பண்ணைகளில் கிழங்குப் பயிர்களுக்கான அடிப்படை நடுகைப் பொருள் உற்பத்தி அலகுகள் நிறுவப்பட்டு, வற்றாளை, மரவள்ளி, கொடிக்கிழங்கு, சேப்பங்கிழங்கு மற்றும் சிறுகிழங்கு ஆகியவற்றிற்கான நடுகைப் பொருட்களை பெருமளவில் உற்பத்தி செய்யும் நோக்குடன் கள நிலங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.*
    - *கிழங்குப் பயிர்களைப் பாதிக்கும் பிரதான பீடைகள் மற்றும் நோய்களை இனங்காண்பதற்கும் கட்டுப்பாட்டு உத்திகளை விருத்தி செய்வதற்கும் கள மற்றும் தாவர இல்லங்களுக்குள் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், 12 விவசாய களங்கள் கண்காணிக்கப்பட்டு பொருத்தமான கட்டுப்பாட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.*
    - *விவசாயக் கள மட்டத்தில் நடுகைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு ஆறு மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப் பிரதேசங்களில் 364 விவசாயிகள் நடுகைப் பொருள் உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு நடுகைப் பொருட்கள் அல்லது அதற்கான மானியங்கள் வழங்கப்பட்டன.*
    - *வனவிலங்குகளினால் ஏற்படும் சேதங்களைக் குறைத்து பயிர் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப் பிரதேசங்களிலுள்ள விவசாயிகளுக்கு 240 பாதுகாப்பு வேலிகளும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு 100 வேலிகளும் வழங்கப்பட்டன. அடிப்படை நடுகைப் பொருட்கள் வழங்கப்பட்டதன் மூலம் மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப் பிரதேசங்களில் கிழங்குப் பயிர்ச் செய்கை நிலப்பரப்பு 36 ஹெக்டேரினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.*
    - *வீட்டுத் தோட்ட மட்டத்தில் கிழங்குப் பயிர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக சபரகமுவ மாகாணத்தில் 221 வீடுகளுக்கு வற்றாளைத் தண்டுத் துண்டுகளும், ஹசலக, அனுராதபுரம் மற்றும் மொனராகலை பகுதிகளில் வீட்டுத் தோட்டங்களுக்குக் கொடிக்கிழங்கு நடுகைப் பொருட்களும் விநியோகிக்கப்பட்டன.*

***பழங்கள்***

- *உலர் வலயத்திற்குப் பொருத்தமான ஒரு ஆனைக்கொய்யா வர்க்கம் மற்றும் ஒரு விளாம்பழ வர்க்கம் என்பன வர்க்க வெளியீட்டுக் குழுவிற்குப் பரிந்துரைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டன.*
- *இரண்டு வெளிநாட்டுத் தர்பூசணி வர்க்கங்கள் (Nectar மற்றும் Avatar) பரீட்சிக்கப்பட்டு பொதுவான பயிர்ச் செய்கைக்காகப் பரிந்துரைக்கப்பட்டன.*
- *மா, டான்ஜரின், விளாம்பழம் மற்றும் பலா ஆகியவற்றின் வர்த்தக ரீதியான பழத் தோட்டங்கள் வெற்றிகரமாக ஸ்தாபிக்கப்பட்டதுடன், பழப் பல்லுயிர் பூங்காவொன்றை அமைப்பதற்காக 10 ஹெக்டேர் நிலப்பரப்பு விருத்தி செய்யப்பட்டது.*
- *ஒரு மல்பெரி/ முசுக்கொட்டை (Mulberry) வர்க்கம் மற்றும் ஒரு ஜபோடிகாபா (Jaboticaba) வர்க்கம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன.*

- *15 ஆனைக்கொய்யா சேகரிப்புகள் கள மட்ட மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றுள் நம்பிக்கையூட்டும் 3 சேகரிப்புகள் இனங்காணப்பட்டுள்ளன. இசைவாக்கப் பரிசோதனைகள் மற்றும் பல இடங்களிலான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.*
- *நம்பிக்கையூட்டும் நான்கு கலப்பின தூரியன் மற்றும் 3 எலுமிச்சை சேகரிப்புகள் இனங்காணப்பட்டு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்திற்காகத் (NCRVT) தெரிவு செய்யப்பட்டன.*
- *இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பாதிக்கப்பட்ட இலைகளை அகற்றுதல், 21 நாட்களுக்கு ஒருமுறை டெபுகொனசோல் (Tebuconazole 250 g/l EW அல்லது 1 ml/l) விசிறல் மற்றும் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மண்ணிற்கு கல்சியம் நைத்திரேற்று (ஒரு தாவரத்திற்கு 50 g) இடுதல் என்பன வாழைப்பழ மஞ்சள் சிகடோகா (Sigatoka) நோயைக் கட்டுப்படுத்துவதில் வினைத்திறனானது என கண்டறியப்பட்டது.*
- *கொடித்தோடை பழத்தின் (Passion Fruit) இரண்டு வைரஸ் நோய்களான கொடித்தோடை மரத்தன்மை வைரஸ் (PWV) மற்றும் இலங்கை கொடித்தோடை பழ பல்வண்ணத் திட்டுகள் வைரஸ் (PFMoV) என்பன அறிகுறிகளின் அடிப்படையில் உத்தேசமாக இனங்காணப்பட்டுள்ளன.*
- *டிராகன் பழத்தில் ஏற்படும் தண்டுப் புள்ளி மற்றும் தண்டுப் புற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஒரு ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவப் பொதி தயாரிக்கப்பட்டது.*
- *பாதிக்கப்பட்ட வாழைக் கன்றுகளை வெப்பச் சிகிச்சை (55°C இல் 30 நிமிடங்கள் மற்றும் 60°C இல் 15 நிமிடங்கள்) செய்வதன் மூலம் வாழை நுனி மொட்டு வைரஸ் (Bunchy Top Virus) அற்ற நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான நுண் பெருக்க நெறிமுறை (Micro-propagation protocol) ஒன்று தயாரிக்கப்பட்டது.*
- *நோயற்ற நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக இரண்டு நெறிமுறைகள் தயாரிக்கப்பட்டன: அவை ஆனைக்கொய்யா ('Pollock' வர்க்கம்) இலை நுனி நடுகை மூலம் மற்றும் திராட்சை விதை நடுகை மூலம் எனபனவாகும்.*
- *2% குவார் பிசின் (Guar gum) மற்றும் 6% தேன் மெழுகு அடங்கிய உண்ணக்கூடிய பூச்சொன்றைப் பயன்படுத்துவதன் மூலம் ஹொரண பப்பாசி கலப்பினத்தின் (Horana papaya hybrids) நுகர்வுக் காலத்தை (Shelf Life) 10 நாட்களால் அதிகரிக்க முடியும் எனக் கண்டறியப்பட்டது.*
- *ஜம்போ (Jumbo) மற்றும் ஹொரண கோல்ட் (Horana Gold) கொடித்தொடை (Passion fruit) வர்க்கங்களை அறுவடை செய்வதற்கு உகந்த நிலைகள், முறையே பூ பிடித்து (Fruit set) 100–110 நாட்கள் மற்றும் 85–90 நாட்கள் என அடையாளம் காணப்பட்டன.*
- *இரண்டு வரிசை வாழையுடன் மூன்று வரிசை அன்னாசியை நடுதன் (தாவர இடைவெளி 20 செ.மீ.) மூலம் நதீ வர்க்க புளி வாழையுடன் அன்னாசியை வெற்றிகரமாக ஒரு ஊடுபயிராகச் செய்கை பண்ண முடியும் என இனங்காணப்பட்டது.*
- *மொரிஷியஸ் மற்றும் MD 2 ஆகிய அன்னாசி வர்க்கங்களின் முடியைப் (Crown) பகுப்பதன் மூலம் ஒரு முடியிலிருந்து 12 கன்றுகள் வரை வெற்றிகரமாகப் பெற முடியும் எனக் இனங்காணப்பட்டதுடன், அவற்றின் வளர்ச்சி மற்றும் விளைச்சல் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது.*
- *ஈர வலயத்தில் ரம்புட்டான் பயிரில் பருவகாலத்திற்கு முன்னரான பூத்தலைத் தடுத்தல், நுனி கத்தரிப்பு மூலம் தாவர வளர்ச்சியைத் தூண்டுதல், இரண்டு உர அளவுகளை இடுதல் மற்றும் ஈரப்பலிப்பு அழுத்த நிலைமைகளை வழங்குதல் என்பன மூலம் பருவம் அல்லாத காலங்களில் பூத்தலைத் தூண்ட முடியும் எனக் கண்டறியப்பட்டது.*
- *கத்தரிக்கும் காலம், உரமிடுதல் மற்றும் தூண்டப்பட்ட பூத்தல் போன்ற மாற்றங்கள் ஊடாக ஆண்டு முழுவதும் மாம்பழ விளைச்சலை முகாமைத்துவம் செய்ய முடியும் என இனங்காணப்பட்டது.*

- *ஆரம்பக் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பல்லாண்டு பழ மர இனங்களுடன் 20 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ஒரு விவசாயக் காட்டுத் தொகுதி ஒன்று வெற்றிகரமாக உருவாக்கப்பட்டது.*

**இயற்கை வளங்கள் முகாமைத்துவம்**

- *C-SUCSeS (Consortium for Scaling up Climate Smart Agriculture in South East Asia) செயற்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.*
- *பயிர்களின் நீர்த்தேவைகள் (Crop Water Requirements) மற்றும் நீர் பயன்பாட்டு வினைத்திறன் (Water Use Efficiency) தொடர்பான கையேடுகள் வெளியிடப்பட்டன.*
- *2008 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்ட விசேட மண் பாதுகாப்புப் பிரதேசங்களுக்குள் உள்வாங்கப்படாத பகுதிகளில் மண் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் இனங்காணப்பட்டது.*
- *ஆசிய மண் கூட்டாண்மை மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) ஒத்துழைப்புடன் 'மண் முகாமைத்துவ ஆய்வு: இலங்கை' எனும் அறிக்கை வெளியிடப்பட்டது.*
- *GCF-நக்கிள்ஸ் செயற்திட்டத்தின் கீழ் நக்கிள்ஸ் வலயத்தின் பன்விலை, தன்கந்தை மற்றும் பிட்டவல ஆகிய பகுதிகளில் வெற்றிகரமான மண் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.*
- *பிரதம விவசாய விஞ்ஞானி (இயற்கை வள முகாமைத்துவம்) கலாநிதி எஸ்.எஸ். சேனநாயக்க அவர்கள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதினை வென்றெடுத்தார்.*

**சமூகப் பொருளாதார மற்றும் திட்டமிடல்**

- *ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) ஒத்துழைப்புடன் மையப்படுத்தப்பட்ட, இணைய அடிப்படையிலான விவசாயத் தரவுத் தளமாக CROPIX (Crop Resources Optimizing Operations through Precise Information Exchange System) உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது.*
- *2024 சிறு போகத்திற்கான பயிர்ச் செய்கைச் செலவு (Cost of Cultivation - COC) அறிக்கைகள் இணைய வழியில் வெளியிடப்பட்டதுடன், 2024/25 பெரும் போக அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது. 2025 சிறு போகத்திற்கான களத் தரவு சேகரிப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.*
- *ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 23 உணவுப் பாதுகாப்புக் கொள்கை ஒருங்கிணைப்பு கூட்டங்களுக்கு 30 க்கும் மேற்பட்ட குழு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், 'திட்வா' சூறாவளி உள்ளிட்ட காலநிலை அதிர்ச்சிகளின் போது உடனடி உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டன.*
- *பிரதான உணவுப் பயிர்களுக்கான சந்தைப் போக்குகள், விலைகள் மற்றும் சந்தைப்படுத்தல் இலாபங்கள் குறித்த காலத்துக்கேற்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பருவகால மாற்றங்கள், வர்த்தகப் போக்குகள் மற்றும் அனர்த்த பாதிப்புகள் உள்ளிட்ட விலை ஏற்றத்தாழ்வுகளுக்கான காரணிகள் இனங்காணப்பட்டன.*
- *AgStat தொகுதி XXII – 2025 மற்றும் காலாண்டு Crop Watch மற்றும் Vegi Watch அறிக்கைகள் வெளியிடப்பட்டன.*
- *பிரதான தரவு இடைவெளியை நிரப்பும் வகையில், களப் பயிர்களின் விளைச்சலைக் கணிப்பிடுவதற்காக நாடு முழுவதும் பயிர் விளைச்சல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *உலக வங்கியின் நிதி உதவியுடன் கூடிய IRDCRP செயற்திட்ட முன்மொழிவு ஒருங்கிணைக்கப்பட்டதுடன், செயற்திட்டத்தினை வினைத்திறனாகச் செயற்படுத்துவதற்கான விரிவான செயற்பாட்டு மற்றும் பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.*

***விவசாய விரிவாக்கம் மற்றும் பயிற்சி***

*பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், கீழே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

***i. மிளகாய்***

*மிளகாய் பயிரின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக MICHHY1 கலப்பின விதைகள் 67.265 கிலோகிராம் கொள்வனவு செய்யப்பட்டு மாகாணங்களுக்கிடையிலான பிரதேச விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டதுடன், வீட்டுத்தோட்ட மட்டத்தில் உலர்ந்த மிளகாய் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளுக்கு 250,000 செய்கைப் பைகள் இலவசமாக வழங்கப்பட்டன. உற்பத்திப் பயனுறுதிதன்மையை அதிகரிப்பதற்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்காக 50% விவசாய பங்களிப்பின் கீழ் 74 நீர் இறைக்கும் இயந்திரங்கள் மாகாணங்களுக்கிடையிலான பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மிளகாய் செய்கையில் உற்பத்திப் பயனுறுதிதன்மையை அதிகரிப்பதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே கொண்டு செல்வதற்காக 50 பயிற்சி அமர்வுகள், 4 களத் தினங்கள் மற்றும் 2 களச் சுற்றுப்பயணங்கள் மாகாணங்களுக்கிடையிலான பிரதேசங்களில் நடாத்தப்பட்டுள்ளதுடன் 13 அறுவடை மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

***ii. பெரிய வெங்காயம்***

***பெரிய வெங்காய உற்பத்திப் பயனுறுதிதன்மையை அதிகரித்தல்***

*அதிக விளைச்சலைத் தரும் தொழில்நுட்பப் பொதியை ஊக்குவிப்பதன் மூலம் உயர்தர பெரிய வெங்காய குமிழ்களை (Bulbs) உற்பத்தி செய்வதற்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளை வழங்க 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் 115 கால் ஏக்கர் துளிநீர்ப் பாசன அலகுகள் நிறுவப்பட்டன. அத்தொழில்நுட்பப் பொதியின் பிரதான அங்கமான சேதனப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக ஒரு அலகுக்கு 10,000 ரூபாய் வீதம் மானியம் வழங்கப்பட்டு 219 உற்பத்தி அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டன. அந்த அலகுகளுக்குத் தரமான விதைகளைக் கொள்வனவு செய்ய தலா 10,000 ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. உற்பத்திப் பயனுறுதிதன்மையை அதிகரிக்கும் பொருட்டு இயந்திரப் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக கலென்பிந்துணுவவ "சக்தி" மற்றும் "மொடர்ன் அக்ரோ" ஆகிய பெரிய வெங்காய உற்பத்தியாளர் சங்கங்களுக்குப் பாத்திகளை அமைப்பதற்கான 2 இயந்திரங்கள் வழங்கப்பட்டன.*

***சான்றுப்படுத்தப்பட்ட உண்மை விதைகளின் (True Seeds) உற்பத்தியை அதிகரித்தல்***

- *ஒப்பந்த விவசாயிகளாகத் தரமான தாய் வெங்காயக் குமிழ்களை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளைத் தூண்டுவதற்காக நிலப் பன்படுத்தலுக்கு 15,000 ரூபாயும், பயிரைப் பராமரிப்பதற்கு 10,000 ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டு 30 உற்பத்தி அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டன. சான்றுப்படுத்தப்பட்ட தாய் குமிழ்களைக் களஞ்சியப்படுத்தி உண்மை விதை உற்பத்திக்கு பயன்படுத்துவதற்காக 30,000 கிலோகிராம் தாய் குமிழ்களுக்கு ஒரு கிலோகிராமுக்கு 150 ரூபாய் வீதம் 600 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு உண்மை விதை உற்பத்திக்குத் தேவையான பொலித்தீன் மற்றும் மலர் ஆதார வலைகள் என்பன 300 உற்பத்தி அலகுகளுக்கு 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் வழங்கப்பட்டு உண்மை விதை உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது.*
- *பாதகமான காலநிலை நிலைமைகளின் கீழ் உண்மை விதைகளை உற்பத்தி செய்வதற்காக 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் 400 தற்காலிக மழைக்காப்புகளும் 105 சிறிய அளவிலான மழைக்காப்புகளும் நிர்மாணிக்கப்பட்டன. திறன் விருத்தியை நோக்காகக் கொண்டு விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக 10 பயிற்சி நிகழ்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டதுடன் 4 அறுவடை மதிப்பீடுகளும் நடாத்தப்பட்டன.*

*iii.* **சோளம்**

*உயர் அடர்த்தி நடுகை முறைமையின் (High Density) கீழ் உள்நாட்டுச் சோள வர்க்கங்களின் விதை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் பிரபல்யப்படுத்துதல்*

*விதை உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய அமைப்புகள் மற்றும் இராணுவ முகாம்களின் பண்ணைகளுக்கு பெற்றோர் வரிகள் (Parental lines) இலவசமாக வழங்கப்பட்டு 150 ஏக்கர் நிலப்பரப்பில் உள்நாட்டு கலப்பினச் சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் பக்மூன ஹரித விதை உற்பத்திச் சங்கம் மற்றும் அனுராதபுரம் விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிற்கு 4 ஈரப்பதன் அளக்கும் கருவிகள் வழங்கப்பட்டன.*

*உயர் அடர்த்தி நடுகை முறைமையின் கீழ் உள்நாட்டுச் சோள வர்க்கச் செய்கையை விவசாயிகளிடையே பிரபல்யப்படுத்துதல்*

*உள்நாட்டு கலப்பினச் சோள வர்க்கங்களைப் பிரபல்யப்படுத்துவதற்காக உயர் அடர்த்தி நடுகை முறையைப் பயன்படுத்தி 11,455 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை மாதிரி விளக்கங்கள் நடாத்தப்பட்டதுடன், அதற்கான விதைகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டன. 206 விவசாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், விழிப்புணர்வுக்காக 3,000 சுவரொட்டிகள் அச்சிடப்பட்டன. மேலும் 10 அறுவடை மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*iv.* **உருளைக்கிழங்கு**

*G0 உற்பத்தியை 9 மில்லியனாக அதிகரித்தல்*

*தற்போதுள்ள வலைக் கூடாரங்களின் கீழ் சிறிய கிழங்குகளை (Mini tubers) உற்பத்தி செய்வதற்காக அல்பர்ட் கரைசல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், 22 பசுமை இல்லங்களுக்குப் பனிமூட்டத் தொகுதிகளை (Fogging systems) நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.*

*விவசாய நிலங்களில் விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை 3,000 மெற்றிக் தொன்னிலிருந்து 10,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்தல்*

*விவசாயிகளின் சுய விதை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், 1,141,300 G0 விதைகளும் 25 மெற்றிக் தொன் அடிப்படை விதைகளும் 50% மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. விவசாயத் திணைக்களத்தின் சீதாஎலிய விதைப் பண்ணையில் விவசாயிகளுக்காக வாடகை அடிப்படையில் 50 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு விதைகளைச் சேமிக்கக் களஞ்சிய வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அக்களஞ்சியத்திற்காக 6,000 கூடைகள் (Crates) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.*

*உருளைக்கிழங்கு செய்கை நிலப்பரப்பை 7,000 ஹெக்டேர் வரை அதிகரித்தல்*

*யாழ்ப்பாணம் மற்றும் கண்டி மாவட்ட விவசாயிகளிடையே 1,746 கிலோகிராம் G1 விதைகளும், நுவரெலியா மற்றும் பதுளை மாவட்ட விவசாயிகளுக்கு 25 மெற்றிக் தொன் சான்றுப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கு விதைகளும் 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் வழங்கப்பட்டது. இதன் மூலம் புதிய பிரதேசங்களுக்குச் செய்கையை விரிவாக்குவது ஊக்குவிக்கப்பட்டது.*

*உற்பத்தித்திறனை ஹெக்டேருக்கு 18 மெற்றிக் தொன்னிலிருந்து 22 மெற்றிக் தொன்னாக அதிகரித்தல்*

*500 விவசாயிகளுக்கு 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் வழங்குவதற்காக 3,400 பயிர் பாதுகாப்பு நைலான் வலைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.*

***v.) பாசிப்பயறு***

- *சுய விதை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் 8,266.75 கிலோகிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் வழங்கப்பட்டு, 413 ஹெக்டேர் நிலப்பரப்பை*

உள்ளடக்கும் வகையில் கள மாதிரி விளக்கங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் இடைப்போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிலப்பரப்பை அதிகரிப்பதற்காக 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் 11,567 கிலோகிராம் விதைகள் வழங்கப்பட்டு, 462 ஹெக்டேர் நிலப்பரப்பை உள்ளடக்கும் வகையில் புதிய செய்கைப் பிரதேசங்களில் மாதிரி விளக்கங்கள் நடாத்தப்பட்டன.

- பாசிப்பயறின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கான மாதிரி விளக்கங்களுக்கு 2,448.05 கிலோகிராம் விதைகள் மற்றும் தேவையான விவசாய இரசாயனப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. களங்களை நிறுவுவதற்கு ஏற்படும் செலவைக் குறைக்கும் நோக்கில் 75 விதைப்பு இயந்திரங்கள் விரிவாக்கப் பயிற்சி நிலையத்திற்கும் விவசாய அமைப்புகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதுடன், விவசாயச் சங்கங்கள் மற்றும் விதை உற்பத்திச் சங்கங்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக 4 தோல் நீக்கும் இயந்திரங்கள் பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- வனவிலங்குச் சேதங்களைக் கட்டுப்படுத்துவதற்காக 50% மானிய அடிப்படையில் சூரிய சக்தியில் இயங்கும் 124 மின்சக்தி பிறப்பாக்கிகள் (Solar Electric Energizers) விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 50% மானிய அடிப்படையில் 2,850 மும்மடிப்புப் பைகள் (Triple layer bags) விநியோகிக்கப்பட்டுச் சிறந்த களஞ்சியப்படுத்தல் முறை ஊக்குவிக்கப்பட்டதுடன், பாசிப்பயறு சார்ந்த 3 பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் (mung bean temper, snack and meat) இனங்காணப்பட்டுள்ளன.

***vi.) உளுந்து***

சுய விதை உற்பத்தியின் மூலம் உளுந்து உற்பத்திப் பயனுறுதி தன்மையை விருத்தி செய்யும் நோக்கில் 12,522 கிலோகிராம் சான்றுப்படுத்தப்பட்ட/ பதிவு செய்யப்பட்ட உளுந்து விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு 500 ஹெக்டேரில் பயிர்ச் செய்கை ஸ்தாபிக்கப்பட்டது. வனவிலங்குச் சேதங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சூரிய சக்தியில் இயங்கும் 61 மின்சக்தி பிறப்பாக்கி அலகுகள் 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்பட்டதுடன், மாகாணங்களுக்கிடையிலான பொலன்னறுவை, ஹசலக மற்றும் அனுராதபுரம் பகுதிகளில் 15 விவசாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

***vii.) கௌப்பி***

கௌப்பி விதை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் ஹசலக, அம்பாறை, அனுராதபுரம், மொனராகலை மற்றும் பொலன்னறுவை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு 3,691 கிலோ கிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் இலவசமாக வழங்கப்பட்டதுடன், 147 ஹெக்டேர் பரப்பளவில் செய்கை ஸ்தாபிக்கப்பட்டது. விவசாய நிலங்களில் கௌப்பி உற்பத்தி தொழில்நுட்பப் பொதிக்கான 50 மாதிரி விளக்கங்களுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகளை வழங்க அல்கத்தீன் குழாய்களை 50% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் வழங்குவதற்காக அவை கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், தொழில்நுட்பப் பொதிக்கான 10 மாதிரி விளக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அனுராதபுரம், பொலன்னறுவை, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த 22 விவசாயப் பயிற்சிகளும் பெறுமதி சேர்த்தல் குறித்த 2 பயிற்சிகளும் நடாத்தப்பட்டன.

***viii.) நிலக்கடலை***

நிலக்கடலை 'ஜம்போ' வர்க்கத்தின் தரமான சான்றுப்படுத்தப்பட்ட விதை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 1.8 மெற்றிக் தொன் பதிவு செய்யப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இனவிருத்தி விதை உற்பத்திக்கான வசதிகளை வழங்குவதற்காக கரடியனாறு பிராந்திய ஆராய்ச்சி நிலையத்தில் குழாய்க் கிணறு மற்றும் மின்சார வேலி அமைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

***ix.) சோயா***

*சோயா விதை உற்பத்திக்காக 1,700 கிலோகிராம் விதைகள் கொள்வனவு செய்யப்பட்டு மகாவலி H வலய விவசாயிகளிடையே இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.*

***x.) குரக்கன்***

*விவசாயிகளுக்கு இலவசமாக சான்றுப்படுத்தப்பட்ட விதைகள் வழங்கப்பட்டு, மாகாணங்களுக்கிடையிலான மற்றும் மாகாண அதிகாரப் பிரதேசங்களுக்குள் பெரிய மற்றும் சிறிய நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் 340 ஹெக்டேர் புதிய வயல் மற்றும் மேட்டு நில நிலப்பரப்புகளில் குரக்கன் பயிர்ச் செய்கை விரிவாக்கம் செய்யப்பட்டதுடன், 40 ஹெக்டேரில் நாற்று நடுகை முறை பிரபல்யப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக 34 திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.*

***சின்ன வெங்காயம்***

*உண்மை விதை உற்பத்தி மற்றும் விதைக் குமிழ் உற்பத்தியைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் ஒரு அலகுக்கு 50,000 ரூபாய் பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டு, விவசாய நிலங்கள் மற்றும் விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான நிறுவனங்களில் 100 உண்மை விதை உற்பத்தி அலகுகள் மற்றும் 144 விதை வெங்காய உற்பத்தி அலகுகள் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. களஞ்சிய வசதிகளை விருத்தி செய்யும் நோக்கில் மொனராகலை மாகாணங்களுக்கிடையிலான அதிகாரப் பிரதேசத்தில் 25% விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் மூன்று சின்ன வெங்காயக் குமிழ்க் களஞ்சியக் கூடங்கள் வெற்றிகரமாக நிர்மாணிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டதுடன், அந்த அதிகாரப் பிரதேசத்திலுள்ள விவசாய நிலங்கள் மற்றும் விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான பயிற்சி நிலையங்களில் சின்ன வெங்காயச் செய்கைக்காக 10 தெளிப்பு நீர்ப்பாசனத் தொகுதிகள் (Sprinkler irrigation) நிறுவப்பட்டுள்ளன.*

***எள்***

- *புதிய விருத்தி செய்யப்பட்ட வர்க்கங்களின் உயர்தர விதைகள் தாராளமாகக் கிடைக்கும் தன்மையை அதிகரிக்கும் பொருட்டு 962.5 கிலோகிராம் பதிவு செய்யப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, சுய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் விளைச்சலின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் 50% மானிய அடிப்படையில் 265 விவசாயிகளுக்கு 265 கள விரிப்புகள் (Drying mats) வழங்கப்பட்டன.*
- *எள் எண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் எள் சார்ந்த இனிப்பு உற்பத்திகளுக்காக ஒரு எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம், 4 எள் உருண்டை தயாரிக்கும் இயந்திரங்கள், ஒரு மின்சார உலர்த்தும் இயந்திரம் மற்றும் 10 துருப்பிடிக்காத உலோகத் தட்டுகள் (Stainless steel trays) 50% மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு பெறுமதிச் சங்கிலி அபிவிருத்திக்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டதுடன் மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாகாணங்களுக்கிடையிலான பிரதேசங்களில் 436 விவசாயிகளின் பங்கேற்புடன் 10 பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.*

- *நெல் உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் 6 மாகாணங்களுக்கிடையிலான பிரதேச விவசாயிகளிடையே 9,685 கிலோகிராம் சான்றுப்படுத்தப்பட்ட நெல் விதைகளும் 626 கிலோகிராம் பதிவு செய்யப்பட்ட நெல் விதைகளும் விநியோகிக்கப்பட்டன. அத்துடன், நெற் செய்கைக்கான புதிய தொழில்நுட்பப் பொதியை ஊக்குவிக்கும் நோக்கில் 263 தேசிய நெல் உற்பத்தி வயல்வெளித் திட்டங்கள் (National Rice Production Yaya Programme) நடாத்தப்பட்டன.*
- *2025 ஆம் ஆண்டில், NVQ 6 தரத்திலான விவசாயக் கல்லூரிகளில் 522 மாணவர்கள் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா (HNDAPT) பாடநெறியையும், NVQ 5 தரத்திலான விவசாயக் கல்லூரிகளில் 311 மாணவர்கள் விவசாய உற்பத்தித் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா (NDAPT) பாடநெறியையும் பயின்று வருகின்றனர்.*

- *விவசாயக் கல்லூரிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 297 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மாணவர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கற்றல் சூழல் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*
- *2024 ஒக்டோபர் மாதம் நடைபெற்ற டிப்ளோமா பட்டமளிப்பு விழாவில், தேசிய/உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு 502 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*
- *2025 ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக 11,172 மனித நாட்கள் அளவிலான பயிற்சித் திட்டங்களும், ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக 1,275 மனித நாட்களும், விவசாயிகளுக்காக 7,550 மனித நாட்களும், உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளுக்காக இணைந்து 25,694 மனித நாட்களும் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.*
- *உற்பத்திகளின் தரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் சந்தை நியமங்களுக்கு இணங்குவதை மேம்படுத்தும் நோக்கில் 668 சிறந்த விவசாய நடைமுறை (SL-GAP) சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*
- *விவசாயத் துறையில் வர்த்தகத் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தியை ஊக்குவித்தல் என்பவற்றுக்காக ஏழு (07) விவசாய தொழில்முயற்சிப் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.*

**விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல்**

- *திணைக்களத்தின் பிரதான திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு விரிவான பிரச்சாரத்தை வழங்கவும் பொதுமக்களின் விழிப்புணர்வை விருத்தி செய்யும் நோக்கிலும் மத்திய மாகாண அரச மற்றும் தனியார் ஊடகவியலாளர்களுக்கான ஊடக சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.*
- *விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்காக தொலைக்காட்சி ஊடாக 97 நிகழ்ச்சிகளும், ITN வசந்தம் அலைவரிசையின் ஊடாக 50 தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்பட்டன.*
- *இலங்கையின் விவசாயத் துறையின் பிரதான பிரச்சினைகளை மையப்படுத்தி 40 விசேட காணொளி நிகழ்ச்சிகளும் 16 வர்த்தகக் குறுஞ்செய்திகளும் தயாரிக்கப்பட்டன.*
- *பயிர்ச் செய்கையாளர்களுக்கு உடனுக்குடன் அறிவிப்பதற்காக, 273 சுருக்கமான விவசாய எச்சரிக்கை செய்திகள் தயாரிக்கப்பட்டு YouTube தளத்தில் பதிவேற்றப்பட்டன.*
- *சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் 1,698 வானொலி நிகழ்ச்சிகளும் 862 குறுஞ்செய்திகளும் தயாரிக்கப்பட்டன. விவசாயத் துறையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் தகவல் சேவைகளை எளிதாக அணுகல் என்பவற்றுக்காக 'விவசாய இணைய வானொலி' (www.krushiradio.lk) நேரடி ஒளிபரப்புத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.*
- *இலத்திரனியல் ஊடகங்களை அணுக வசதியற்ற கிராமப்புற விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு விவசாய தொழில்நுட்பங்களைப் பரப்புவதற்காக 70,132 புத்தகங்கள் மற்றும் இதர வெளியீடுகள்; 363,600 துண்டுப் பிரசுரங்கள்; 25,100 சுவரொட்டிகள் மற்றும் 130,000 விதை அடையாள அட்டைப் பிரதிகள் என்பன வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டன.*
- *விவசாயத் திணைக்களத்தின் டிஜிட்டல் மாற்றத்திற்கு உதவி வழங்கும் வகையில், விருத்தி செய்யப்பட்ட அரச சேவை வழங்கல், செயல்பாடுகளைத் தானியக்கமாக்கல், டிஜிட்டல் உள்ளடக்க முகாமைத்துவம் மற்றும் தரவு அடிப்படையிலான முடிவெடுத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி உயர் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள் செயல்படுத்தப்பட்டன.*

- கன்னொருவ மற்றும் பட்டஅத்த விவசாயத் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு வருகை தந்த *106,866* உள்நாட்டுப் பார்வையாளர்கள் மற்றும் *1,361* வெளிநாட்டுப் பார்வையாளர்கள் ஊடாக *14,365,484.83* ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டது.
- மூன்று கண்காட்சிகள் நடாத்தப்பட்டதுடன், விவசாயத் தொழில்நுட்பங்களின் நேரடியான விளக்கங்களை பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்டு *04* விசேட செயல்முறை நிகழ்வுகளுடன் கூடிய *04* கண்காட்சி மையங்கள் வடிவமைக்கப்பட்டன.
- இலங்கை விவசாய சமூகத்தின் அன்றாட விவசாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக *'1920'* விவசாய ஆலோசனைச் சேவையின் ஊடாக பெற்ற *59,209* வினவல்களுக்கும், தபால் மூலம் கிடைத்த *88* வினவல்களுக்கும், மின்னஞ்சல் மூலம் பெற்ற *78* வினவல்களுக்கும் பதில்கள் வழங்கப்பட்டன.
- பல்வேறு ஊடகங்களில் (புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள், கட்டுரைத் தொகுப்புகள், காணொளிகள் போன்றவை) உள்ள பயிர் தகவல்களை உள்ளடக்கிய "விவசாய ஈ-நூலகம்" *(Krushi e-library)* தேடல் வசதியுடன் கூடிய இணையத் தளமாக விருத்தி செய்யப்பட்டுள்ளது.
- விவசாயத் தொடர்பாடலில் ஊடக ஒருங்கிணைப்பாளர்களின் பங்களிப்பை வலுப்படுத்தும் நோக்கில் இரண்டு நாள் செயல்முறைப் பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது. இதில் ஊடகப் பயன்பாட்டிற்கான காணொளி உள்ளடக்கங்கள் மற்றும் சிறிய வானொலிப் பிரதிகளை தயாரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.
- இலங்கையின் விவசாயிகள் மற்றும் கள உத்தியோகத்தர்களிடையே *'CABI PlantwisePlus'* டிஜிட்டல் கருவிகளைப் பிரபல்யப்படுத்துவதற்காக *CABI* நிறுவனத்துடன் இணைந்து ஒரு நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

**விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி**

- 'தித்வா' சூறாவளிக்குப் பின்னர் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் *245,210* வீட்டுத்தோட்டச் செய்கைக்கான மரக்கறி விதைப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.
- உரிய காலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதை உறுதி செய்யும் பொருட்டு 'தித்வா' வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களில் மீண்டும் நெல் விதைப்பதற்கான விதை நெல் வழங்கும் நடவடிகைகள் ஒருங்கிணைக்கப்பட்டன.
- ஒருங்கிணைந்த முயற்சிகளின் விளைவாக, தரச்சான்று பெற்ற விதை நெல் உற்பத்தி *18%* வரை அதிகரித்துள்ளது. இந்த அடைவை அடிப்படையாகக் கொண்டு, *2028* ஆம் ஆண்டு சிறு போக காலப்பகுதிக்குள் சான்றுப்படுத்தப்பட்ட விதை நெல் உற்பத்தியை *25%* வரை அதிகரிக்கும் நோக்கில் *2025/26* பெரும் போகத்திலிருந்து விசேட திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. *2025* ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த விதை நெல் உற்பத்தி *133,500* புசல்களாக அமைந்ததுடன், இது தேசியத் தேவையின் சுமார் *82%* ஐப் பூர்த்தி செய்கின்றது.
- தேசிய நெல் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக "புனருதயட்ட அருணலு க்ருஷி+" திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட 'யாய *500*' *(500* வயல் தொகுதி) வேலைத்திட்டத்திற்குத் தேவையான விதை நெல் வழங்கப்பட்டது.
- விவசாயத் திணைக்களம் மற்றும் மாகாண விவசாயத் திணைக்களங்கள் என்பன இணைந்து, சீதாஎலிய விதை களஞ்சியத் தொகுதியின் குளிரூட்டி வசதிகளைப் பயன்படுத்தி விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட *150* மெற்றிக் தொன் உருளைக் கிழங்கு விதைகளைக் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டன.

- *2025 ஆம் ஆண்டில், சீதாஎலிய பசுமை இல்லத் தொகுதியில் 3.49 மில்லியன் $G_0$ விதை உருளைக் கிழங்குகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன், இது அதன் அதிகப்பட்ச உற்பத்தியாகப் பதிவாகியுள்ளது.*
- *KOPIA செயற்திட்டத்தின் கீழ், கலப்பின மிளகாய் உற்பத்திக்காக 20 பொலித்தீன் இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன், அதன் விளைவாக 2025 இல் 280 கிலோ கிராமுக்கும் அதிகமான கலப்பின மிளகாய் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன.*
- *2025 ஆம் ஆண்டு இடைப்போகத்தின் போது சுமார் 98,000 கிலோகிராம் பாசிப்பயறு விதைகள் விநியோகிக்கப்பட்டதுடன், இது முந்தைய ஆண்டின் விநியோகத்தை விட இரண்டு மடங்கிற்கும் அதிகமான அளவாகும்.*

**விதைச் சான்றுப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு**

- **விதை மற்றும் நடுகைப் பொருட்களைச் சான்றுப்படுத்தல்**
  - *2018 முதல் 2025 வரையான காலப்பகுதியில் வருடாந்தம் மாதிரிகள் பெறப்பட்ட அதிகப்பட்ச நெல் விதைகளின் அளவான 17,767 மெற்றிக் தொன்களாகப் பதிவாகியுள்ளது.*
  - *2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி காரணமாக 752,514 ஆகக் குறைந்திருந்த லேபல் இடப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட பழக்கன்றுகளின் எண்ணிக்கை, 2025 ஆம் ஆண்டில் 948,292 ஆக அதிகரித்துள்ளது.*
  - *2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க விதைச் சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்பட்ட 42 முறைப்பாடுகளுள், உறுதிப்படுத்தப்பட்ட 2 முறைப்பாடுகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 7,240,000.00 ரூபாய் நட்டஈடு வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.*
- **தாவரப் பாதுகாப்பு**
  - *12 மாவட்டங்களுக்கு தேசிய பீடை கண்காணிப்பு முறைமையின் (NPSS) நவீனமயமாக்கப்பட்ட செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.*
  - *பூசணிப்பழ ஈக்கள் மற்றும் பழ ஈக்களின் இனங்கள் மற்றும் அவை நாடு முழுவதும் பரவியுள்ள விதம் கண்டறியப்பட்டது.*
  - *விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு வழங்கவும், இலங்கையில் ஆக்கிரமிப்பு அந்நிய இனங்களின் (IAS) பரவலைக் கண்டறிந்து வரைபடமாக்கவும் 6 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் 6 வரைபடமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.*
  - *போம்புவல, ஹன்சயாபாலம, மஹகனதராவ மற்றும் ராஜாங்கனை ஆகிய பகுதிகளில் 10 உயிரியல் கட்டுப்பாட்டு மையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.*
  - *பிரதான சோளச் செய்கைப் பகுதிகளில் படைப் புழுவின் 11 இயற்கை எதிரிகள் இனங்காணப்பட்டன.*
  - *1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 200 அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.*
- **கிருமிநாசினிகள் ஒழுங்குபடுத்தல்**

- *அங்கீகரிக்கப்பட்ட பிரிவுகளின் கீழ் 31 புதிய கிருமிநாசினி உற்பத்திகள் (10 விவசாய இரசாயனங்கள் மற்றும் ஏனைய 21) புதிதாகப் பதிவு செய்யப்பட்டன.*
- *விவசாயம், வீட்டு உபயோக பொதுச் சுகாதாரம் மற்றும் கைத்தொழில் கிருமிநாசினிகள் உள்ளிட்ட 200 கிருமிநாசினி உற்பத்திகள் பதிவு செய்யப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.*

- *195 புதிய கிருமிநாசினி விற்பனை நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதுடன், 1,733 விற்பனை நிலையங்களின் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.*
- *470 விவசாய இரசாயன விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டதுடன், அவர்களுள் 305 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.*
- *1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க கிருமிநாசினிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமைவாக 15 புதிய பீடைக்கட்டுப்பாட்டு சேவை வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டதுடன், பதிவு செய்யப்பட்ட 76 பீடைக்கட்டுப்பாட்டு சேவை வழங்குநர்களின் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.*
- *சட்டவிரோத கிருமிநாசினிகள் தொடர்பான விதிமீறல்களுக்கு எதிராக 45 சோதனைகள்/ சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 8 சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.*
- *ட்ரோன் / UAS தொழில்நுட்பத்தின் உதவியுடன் விவசாய உள்ளீடுகளை இடுவதற்கான வழிகாட்டல் இற்றைப்படுத்தப்பட்டதுடன், நெல் மற்றும் சோளச் செய்கைக்காகத் தற்காலிக கிருமிநாசினி பரிந்துரைகள் வெளியிடப்பட்டன.*
- *973 கிருமிநாசினி இறக்குமதி உரிமங்கள் (Import Licenses) வழங்கப்பட்டன.*
- *கிருமிநாசினிகள் கையேட்டின் மரக்கறிப் பயிர்கள் தொடர்பான பகுதி மொழிபெயர்க்கப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டது.*

- ***தாவர மரபணு வளங்களின் பாதுகாப்பு***

*கள ரீதியான ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விளைவாக 473 பயிர் அணுகல்கள் மற்றும் அவற்றின் காட்டு மாதிரிகள் என்பன சேகரிக்கப்பட்டன.*

- *2025 ஆம் ஆண்டில், மரபணு வங்கியில் 228 புதிய பயிர் அணுகல்கள் பாதுகாக்கப்பட்டன. இதன் மூலம் 2025 ஆண்டின் இறுதியில் மரபணு வங்கியிலுள்ள மொத்த பயிர் அணுகல்களின் எண்ணிக்கை 17,770 ஆக உயர்ந்துள்ளது.*
- *மெதுவான வளர்ச்சி நிலைமைகளின் கீழ் 421 மாதிரிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 132 வற்றாளை சேகரிப்புகள், 25 உருளைக் கிழங்கு சேகரிப்புகள், 217 உள்நாட்டுக் கிழங்கு வகைகள், 26 சிறு கிழங்கு சேகரிப்புகள் மற்றும் 21 வாழை சேகரிப்புகள் என்பன அடங்கும்.*
- *விவசாய ஆராய்ச்சி மற்றும் உணவுப் பாதுகாப்பிற்காகத் தாவர மரபணு வளங்களின் நிலையான முகாமைத்துவம் மற்றும் பயன்பாட்டில் முனைப்பான பங்களிபை வழங்கும் நோக்கில், வேண்டுகோளுக்கிணங்க பல்வேறு பயிர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 697 பயிர் வகைகள் ஆராய்ச்சியாளர்கள், விவசாயிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றுக்கு விநியோகிக்கப்பட்டன.*

- ***தாவர தனிமைப்படுத்தல் (Plant Quarantine)***

- *கொழும்புத் துறைமுகக் கட்டடத்தில் மாதிரிப் பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.*
- *கொழும்புத் துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஆய்வுகூட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.*
- *காங்கேசன்துறை துறைமுக வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தாவர தனிமைப்படுத்தல் பிரிவில் (துறைமுக சேவைகளுக்காக) தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.*
- *தாவர தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் குறித்து உத்தியோகத்தர்கள், இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் புகையூட்டுபவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.*

- *தாவர தனிமைப்படுத்தல் சேவையுடன் தொடர்பான (தாவர தனிமைப்படுத்தல் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமை – PQIMS) சேவைகள் தானியக்கமாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டன.*
- *ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 நாடுகள் உட்பட 36 நாடுகளுக்கு இலத்திரனியல் தாவர சுகாதார சான்றிதழ்கள் (e-Phyto) வழங்கப்பட்டன.*
- *JICA செயற்திட்டம் மற்றும் ஜப்பானிய செயற்திட்டமல்லாத மானிய உதவிச் செயற்திட்டத்தின் கீழ் தேசிய தாவர தனிமைப்படுத்தல் ஆய்வுகூடங்கள், தனிமைப்படுத்தல் அலகுகள் மற்றும் பரவலாக்கப்பட்ட தனிமைப்படுத்தல் அலகுகளுக்கு ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.*
- *1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்திற்கான ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.*
- *ஆஸ்திரேலிய புகையூட்டல் அங்கீகாரத் திட்டம் (AFAS) மற்றும் கூட்டு முறைமை ஆய்வு (JSR) 2025 வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.*
- *இலங்கையில் தனிமைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிக்கு முன்னரான தேவைகளுக்காக மெத்தைல் புரோமைடு பயன்பாட்டைக் குறைக்கும் நோக்கில், காப்பிரா வண்டுகளை (Trogoderma granarium) இனங் காணும் ஆய்வுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் விவசாயத் திணைக்களத்தின் தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவைக்கும் தேசிய ஓசோன் அலகுக்கும் இடையில் கையெழுத்தானது.*
- *இலங்கையில் களஞ்சியப்படுத்தப்பட்ட தானிய பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, உடனடி 'PHIo-R' பொஸ்பீன் பிறப்பாக்கியைப் பயன்படுத்தி இடப்படும் அலுமினிய பொஸ்பைட்டு (77.5%) குளிகைகளின் வினைத்திறன் பரிசோதனை DTW நிறுவனத்துடன் இணைந்து வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதுடன், அதற்கான பரிந்துரைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*
- *ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தொகுதிகள் வைரஸ் அற்றவை என்பதை உறுதிப்படுத்துவதற்காக, நோய் கண்டறியும் நெறிமுறையை (Protocol) உருவாக்கிய பின்னர் 'தக்காளி இலைச் சுருள் புது தில்லி வைரஸ்' (ToLCNDV) க்கான பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.*
- *தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் தாவர நோயியல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளுக்காக தேசிய விவசாய ஆராய்ச்சிகளுக்கான சிறப்பு விருது ஒன்று கிடைத்துள்ளது.*

### *1.8. உணவுப் பாதுகாப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்*

- ***2025.12.31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்***

*விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் **118-02-03-020-2202** எனும் செலவுத் தலைப்பின் கீழ், 2025 ஆம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பிற்கான விசேட நிகழ்ச்சித் திட்டத்திற்காக 275.83 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. 2025.12.31 ஆம் திகதி வரை அதன் செலவீனம் 208.89 மில்லியன் ரூபாய் ஆகும். அத்துடன், 2024 ஆம் ஆண்டின் பொறுப்புகளுக்காக **4.97** மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் பின்வரும் மூலோபாய முன்னுரிமைகளை உள்ளடக்கும் வகையில் இத்திணைக்களத்தினால் **54** செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன:*

*i.) உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு விவசாய உள்ளீடுகள் மற்றும் தொழில்நுட்ப ஊக்குவிப்பு.*
*ii.) விவசாய முறைமைகளில் அதிக உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துதல்.*
*iii.) விவசாய தொழில்முயற்சியாளர்கள் மற்றும் நிலையான சந்தை வாய்ப்புகளை ஊக்குவித்தல்.*

*iv.)* விவசாயம் மற்றும் விவசாயத் துறை சார்ந்த காணிகளை விஞ்ஞான ரீதியாக அபிவிருத்தி செய்து, நிலையான காணிப் பயன்பாட்டை உருவாக்குதல்.
*v.)* விவசாய நடைமுறைகளைச் சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்துதல்.
*vi.)* விவசாயம் சார்ந்த செயல்பாடுகளைச் சூழல் நட்பு ரீதியாக முன்னெடுத்தல்.
*vii.)* தொழில்முயற்சி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக விவசாயிகளை வலுவூட்டுதல்.
*viii.)* விவசாய ஆராய்ச்சி மற்றும் அறிவு முகாமைத்துவம்.
*ix.)* இறக்குமதி செய்யப்படும் பயிர்களுக்குப் பதிலாக பொருத்தமான மாற்றுப் பயிர்களைச் செய்கை பண்ணுதல் மற்றும் ஊக்குவித்தல்.
*x.)* விவசாய உற்பத்திகளுக்காகக் களஞ்சியங்கள் மற்றும் குளிரூட்டி வசதிகளை உருவாக்குதல்.

மேற்குறிப்பிட்ட முன்னுரிமைகளை உள்ளடக்கும் வகையில் களப் பயிர்கள் மேம்பாடு, தேனீ வளர்ப்பு, காலநிலைக்கு சீரமைவான தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல், விவசாயத் துறை சார்ந்த விரிவாக்க சேவைகளை விருத்தி செய்தல், சிறந்த விவசாய நடைமுறைகளை *(GAP)* அறிமுகப்படுத்துதல், அரசாங்க விதைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தல், மண் பாதுகாப்பு முறைகளைச் நடைமுறைப்படுத்துதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல், பழப் பயிர்களின் ஏற்றுமதிச் சாத்தியப்பாடுகளை விருத்தி செய்தல், விவசாய உள்ளீடுகள் தொடர்பான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், பீடை மற்றும் நோய் கட்டுப்பாட்டிற்கான நவீன முறைகளை அறிமுகப்படுத்துதல் போன்ற *54* செயற்திட்டங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன.

**குறிப்பு:** இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

புகைப்பட இலக்கம் *15 - 30*

## *02. கமநல அபிவிருத்தித் திணைக்களம்*

### *2.1. திணைக்களம் பற்றிய சிறிய அறிமுகம்*

*இலங்கையின் விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் நோக்கில் 1957 ஒக்டோபர் 01 ஆந் திகதி அப்போது இருந்த உணவுத் திணைக்களத்தைக் கலைத்து, கமநல சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வயற் காணிச் சட்டத்தின் மூலம் பலப்படுத்தப்பட்ட இத்திணைக்களம் தற்போது 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.*

### *2.2. தொலைநோக்கு*

*இலங்கையின் விவசாய சமூகத்தினதும் மற்றும் அனைத்து விவசாய நிலங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி.*

### *2.3. செயற்பணி*

*இலங்கையின் விவசாய சமுதாயத்தின் நிலைபேறான அபிவிருத்தியிலும் அனைத்து விவசாய நிலங்களின் செழுமையான அனுகூலங்கள் மற்றும் உச்ச உற்பத்தித்திறன் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் நிறுவன, ஒத்துழைப்பு, சட்ட மற்றும் முகாமைத்துவ சேவைகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தி, காலத்திற்கு ஏற்றவாறு பேணி வருதல்.*

### *2.4. நோக்கங்கள்*

- *அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் விவசாயக் காணிகளைப் பயன்படுத்துவதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்தல்.*
- *விவசாயக் காணி உரிமையாளர்கள், விவசாயக் காணி உரிமையுள்ள விவசாயிகள் மற்றும் ஆட்சியுரிமைகள் கொண்டவர்கள்/ குத்தகை விவசாயிகள் ஆகியோரின் விவசாய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் விவசாய நிலங்களை முகாமைத்துவம் செய்தல்.*
- *விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாய அமைப்புக்களைப் பதிவு செய்தல் மற்றும் பேணி வருவது தொடர்பான கட்டளைகளை உருவாக்குதல் மற்றும் அந்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல். கமநல அபிவிருத்திச் சபைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் போன்ற நிறுவன அபிவிருத்தி நடவடிக்கைகள்.*
- *நீர் முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசன முகாமைத்துவம்.*

### *2.5. பணிகள்*

- *நாடு முழுவதும் உள்ள அனைத்து கமநல அபிவிருத்தி சபை அதிகாரப் பிரதேசங்களுடன் தொடர்புடையதாக விவசாயக் காணிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய விவசாயக் காணிப் பெயர்ப் பட்டியல்கள் மற்றும் குத்தகைமுறை விவசாயிகளின் பட்டியல்கள் என்பவற்றைத் தயாரித்து அவற்றை திருத்தங்களைப் பேணி வருதல் மற்றும் அனைத்து விவசாய நிலங்களின் முகாமைத்துவம். தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.*
- *கமநல விசாரணை சபைகள் மற்றும் மீளாய்வுக் குழுக்களின் செயற்பாடுகளை வழிநடத்தல், அவற்றின் மூலம் விவசாய நிலங்கள் தொடர்பான குத்தகைமுறை விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் ஏனைய விவசாய சர்ச்சைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்*
- *சிறு நீர்ப்பாசன திட்டங்கள் மற்றும் நீர் ஆதாரங்களின் வினைத்திறன், பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுடன் தொடர்பான விதிமுறைகளை செயல்படுத்துதல் மற்றும்*

அனைத்து சிறிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்ககளையும் மறுசீரமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.

- கமநல அபிவிருத்தி சட்டத்தை மீறி செயல்படும் தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அரசின் கொள்கைகள் மற்றும் விவசாயக் கொள்கைகளை செயல்படுத்துதல்.
- நிறுவன அபிவிருத்தியின் கீழ் நாடு முழுவதும் அமைந்துள்ள 25 கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்கள், 566 கமநல சேவை நிலையங்கள் மற்றும் 560 விவசாய வங்கிகளின் செயல்பாடுகள் என்பவற்றைப் பேணிவருவதன் மூலம் விவசாயிகளுக்கு சேவைகளை வினைத்திறனாகவும் முறையாகவும் வழங்குதல்.

### 2.6. நிறுவனத்தினால் அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

- இலக்கு 2 - பட்டினிக்கு முடிவுகட்டுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.

### 2.7. நிதி முன்னேற்றம்

| தொ/ இல | விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 4,256.00 | 2,505.89 | 62 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 12,154.08 | 12,053.29 | 98 |

### 2.8. பௌதீக முன்னேற்றம்

- **பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களைப் புனரமைத்தல்**

பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களினதும் மற்றும் சேவை பெறுவோரினதும் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் 281-1-1-0-2001 எனும் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதான அலுவலகம் மற்றும் 14 மாவட்ட அலுவலகங்களில் 25 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 20 செயற்திட்டங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 19.45 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 80% ஆகும்.

புகைப்பட இலக்கம் 31

- **பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் வாகனங்களைப் புனரமைத்தல்**

வாகனங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தக் கூடிய வகையில் பிரதான அலுவலகத்திலுள்ள வாகனங்களைப் பழுதுபார்த்துத் திருத்தியமைக்கும் நோக்கில் 281-1-1-0-2003 எனும் செலவுத் தலைப்பின் கீழ் 25.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 25.00 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.

மாவட்ட அலுவலகங்களிலுள்ள வாகனங்களைத் திருத்தியமைக்கும் நோக்கில் 281-2-2-0-2003 எனும் செலவுத் தலைப்பின் கீழ் 38.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 25.70 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 67% ஆகும்.

- **பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணத் தேவைகள்**

பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் 281-1-1-0-2102 எனும் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 51.10 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதான அலுவலகத்திற்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டன. இதற்காக

*2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 42.85 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 84% ஆகும்.*

*மாவட்ட அலுவலகங்களின் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணத் தேவைகளுக்காக 281-2-2-0-2102 எனும் செலவுத் தலைப்பின் கீழ் 24.70 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 24.28 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.*

- ***பயிற்சி மற்றும் திறன் விருத்தி***

*பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஆற்றல்களை விருத்தி செய்தல் மற்றும் வினைத்திறனை அதிரிக்கும் நோக்கில் 281-1-1-0-2401 எனும் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 10.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 10 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 9.60 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 70% ஆகும்.*

- ***கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களைப் புனரமைத்தல்***

*கமநல சேவை நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களினதும் மற்றும் சேவை பெறுவோரினதும் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கிலும் மற்றும் உரக் களஞ்சியங்களின் கொள்ளளவை அதிகரிக்கும் நோக்கிலும் 281-2-2-0-2001 எனும் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 400 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரதான அலுவலகம், கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களின் 126 புனரமைப்புப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 107 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 308.46 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 85% ஆகும்.*

*புகைப்பட இலக்கம் 32*

- ***இயந்திர சாதனங்களைப் திருத்தியமைத்தல் மற்றும் கையகப்படுத்தல்***

*பயன்படுத்தக் கூடிய விவசாய இயந்திர உபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் புதிய விவசாய இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் என்பவற்றுக்காக 281-2-2-0-2002 எனும் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 72.00 மில்லியன் ரூபாய் ஆகும். முன்கணிக்கப்பட்ட மீதமான மூலதனச் செலவு (2025.07.29 ஆம் திகதிய fert/pl/03/progress/2025 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம்) 32.00 மில்லியன் ரூபாய் ஆகும். விவசாய இயந்திர உபகரணங்களைப் புனரமைப்பதற்காக 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 16.46 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 68% ஆகும். 281-2-2-0-2103 இன் கீழ் ஒதுக்கப்பட்ட 8.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாத காரணத்தினால் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.*

- ***நிலையங்களை புதிதாக நிர்மாணித்தல்***

*கமநல சேவை நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களினதும் மற்றும் சேவை பெறுவோரினதும் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில், 281-2-2-0-2104 எனும் செலவுத் தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட தொகை 100 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் கீழ் 2024 ஆம் ஆண்டின் பொறுப்பாகவிருந்த 1 செயற்திட்டம் உட்பட 16 புதிய செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 9 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 33.74 மில்லியன் ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 55% ஆகும்.*

**சிறிய அளவிலான நீர்ப்பாசன அபிவிருத்தி மற்றும் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல் (காணி மற்றும் நில அபிவிருத்தி)**

| செயற்பாடு | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| கைவிடப்பட்ட குளங்களைப் புனரமைத்தல். | 215.00 | 95.07 | 18 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 6 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவடைந்துள்ளன. 8 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 4 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. |
| செயற்பாட்டிலுள்ள சிறிய அளவிலான நீர்ப்பாசனங்களின் சிறு பழுதுபார்த்தல்களை மேற்கொள்ளல். (Kickstart) | 335.00 | 269.22 | 820 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 734 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 84 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. |
| வெள்ளத்தினால் சேதமடைந்த சிறு நீர்ப்பாசன வழிகளின் உட்கட்டமைப்பு வசதிகளைப் புனரமைத்தல் மற்றும் விசேட வெள்ளச் சேத செயற்திட்டம் | 660.00 | 415.39 | 278 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 230 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 47 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 1 செயற்திட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது. |
| சிறிய அளவிலான நீர்ப்பாசனக் குளங்கள் மற்றும் அணைகளைப் புனரமைத்தல் | 660.00 | 391.97 | 245 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 204 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 38 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 3 செயற்திட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. |
| விவசாயப் பாதைகளைப் புனரமைத்தல் | 315.00 | 242.27 | 168 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 139 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 28 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 1 செயற்திட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது. |
| நுண் நீர்ப்பாசனத் தொகுதிகளை நிறுவுதல் | 15.00 | 14.15 | செயற்திட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| பாரசூட் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல் | 163.00 | 0.00 | இரண்டு சந்தர்ப்பங்களில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், விபரக் குறிப்புகளுக்கு இணங்க எந்தவொரு நிறுவனமும் ஏலங்களை முன்வைக்காத காரணத்தினால் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. |
| குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்பை மேம்படுத்தும் செயற்திட்டம் | 6.30 | 6.27 | செயற்திட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |

| செயற்பாடு | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| "எக்கமிட்டட்ட கொவிபிமட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டம்" | 392.50 | 148.14 | 53 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. 47 செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 5 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 1 செயற்திட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது. |
| சௌபாக்கியா உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கேவண்டிஷ் வாழை பயிரிடும் கூட்டுப் பண்ணை | 50.00 | 24.77 | நிலப் பண்படுத்தல், விவசாயக் கிணறுகளைப் புனரமைத்தல், யானை வேலி அமைத்தல், சூரியசக்தி நீர் இறைக்கும் இயந்திரம் (Solar pump), நீர்த் தாங்கி ஒன்றை நிறுவுதல் மற்றும் வாழை விதைகள் கொள்வனவு செய்தல் என்பன நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| 2024 ஆம் ஆண்டின் கைவசம் உள்ள நிலுவைப் விலைப்பட்டியல்களைச் செலுத்துதல் | 220.00 | 218.07 | கைவசம் இருந்த நிலுவையான விலைப்பட்டியல் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன. |
| 2024 ஆம் ஆண்டின் பொறுப்புக்கூறப்பட்ட செயற்திட்டங்கள் | 170.00 | 119.94 | 157 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து செயற்திட்டங்களின் வேலைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| செயற்திட்ட ஆதரவுச் செலவு | 48.20 | 31.10 | |
| எஞ்சிய நிதி ஒதுக்கீடுகள் | 250.00 | 0.00 | முன்னறிவிக்கப்பட்ட மீதமான மூலதன ஒதுக்கீடு (2025.07.29 திகதியிடப்பட்ட fert/pl/03/progress/2025 கடிதத்தின் பிரகாரம்) |
| **மொத்தம்** | **3,500.00** | **1,976.36** | 2025.12.31 ஆம் திகதி வரை கைவசமுள்ள நிலுவை விலைப்பட்டியலாக 207.50 மில்லியன் ரூபாய் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்களாக 530.00 மில்லியன் ரூபாய் என்பன அறிக்கையிடப்பட்டுள்ளன. |
| **பயன்படுத்தப்படாத நிதி ஒதுக்கீடுகள்** | | **536.14** | 2025.12.31 ஆம் திகதி வரையிலான செலவு, கைவசமுள்ள நிலுவைப் விலைப்பட்டியல்கள், பொறுப்புக்கள் மற்றும் திறைசேரிக்கு ஒப்படைக்கப்பட்ட 250.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடுகளைக் கழித்த பின்னர் எஞ்சியுள்ள நிதி ஒதுக்கீட்டு அளவு. |

- ***பயிர் பல்வகைப்படுத்தல்.***

*இந்தச் செலவுத் தலைப்பின் கீழ் 2025 ஆம் ஆண்டில் இடைநிலை வலயத்தில் நீர் முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட குளங்களை அபிவிருத்தி செய்யும் மாதிரி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை 50.00 மில்லியன் ரூபாய் ஆகும். இதன் கீழ் 12 மாதிரி குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 21.85 மில்லியன் ரூபாய் ஆகும். 2026 ஆம் ஆண்டின் பொறுப்புக்களாக 17.85 மில்லியன் ரூபாய் அறிக்கையிடப்பட்டுள்ளது. பௌதீக முன்னேற்றம் 50% ஆகும்.*

***2.9. இறுதி இலக்குகளை அடைய முடியாமைக்கான காரணங்கள்***

*2025 ஆம் ஆண்டு நவம்பர் மாத பிற்பகுதியில் ஏற்பட்ட 'தித்வா' சூறாவளி இயற்கை அனர்த்த நிலைமை காரணமாக, அநேகமான செயற்திட்டங்கள் இறுதி நிலையில் இருந்ததுடன் வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கான அளவீட்டுப் பத்திரங்களைத் தயாரிப்பதற்குத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு முடியாமல் போனதாலும், வேலைகள் நிறைவு செய்யப்பட்டிருந்த சில செயற்திட்டங்களின் இறுதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் அவை அனர்த்தத்தினால் சேதமடைந்ததாலும், இலக்கு வைக்கப்பட்ட அனைத்து செயற்திட்டங்களும் நிறைவடையவில்லை என்பதுடன் எதிர்பார்க்கப்பட்டது போன்று முழுமையான நிதியைப் பயன்படுத்த முடியாமல் போனது.*

***2.10. எதிர்கால இலக்குகளை அடைந்துகொள்வதற்காக முன்வைக்கப்படும் யோசனைகள்***

*2026 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்குள் கைவசமுள்ள அனைத்து நிலுவை விலைப்பட்டியல்களையும் செலுத்துவதற்கும், ஜூன் மாதத்திற்கு முன்னர் அனைத்து பொறுப்புக்கூறப்பட்ட செயற்திட்டங்களின் வேலைகளையும் நிறைவு செய்வதற்கும் கால அட்டவணைக்கு அமைவாகச் செயற்படுதல்.*

***குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.***

## *03. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்*

### *3.1. தொலைநோக்கு*

*வாசனைத் திரவியங்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதியில் சிறப்புநிலை*

### *3.2. செயற்பணி*

*அதிக அந்நியச் செலாவணியை ஈட்டுவதையும் ஏற்றுமதி விவசாயப் பயிர்த் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களின் நிலைபேறான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியையும் முன்னிறுத்தி, சூழலைப் பாதுகாக்கும் வகையில் ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்திகளின் அளவுகோல் ரீதியான மற்றும் தர ரீதியான மேம்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயன்முறைகளைத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.*

### *3.3. இலக்குகள்*

*ஏற்றுமதி அளவை அதிகரித்தல் மற்றும் உற்பத்தியின் தரத்தை உயர்த்துவதன் ஊடாக அதிக அந்நியச் செலாவணி ஈட்டலுக்காக ஏற்றுமதி விவசாயப் பயிர்த் துறையை அபிவிருத்தி செய்தல்.*

### *3.4. பணிகள்*

- *ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை மற்றும் பதப்படுத்துதலை ஒழுங்கமைத்தலும் ஊக்குவித்தலும்.*
- *பயிர் விருத்தி செய்தல், பயிர்ச் செய்கை, பயிர் பாதுகாப்பு, அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் மற்றும் சமூகப் பொருளாதார அறிவியல் தொடர்பான பன்முக விடயங்களுடன் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்தல்.*
- *உயர்தரத்தையுடைய நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல்.*
- *பயிர் உற்பத்தி, உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும் தர மேம்பாடு தொடர்பான ஏற்றுமதி விவசாயப் பயிர் உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.*
- *பயிர் பாதுகாப்பு ஆலோசனைக் சேவைகளை வழங்கல்.*
- *ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத்தை ஊக்குவித்தல்.*
- *ஒருங்கிணைந்த தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவத்தை ஊக்குவித்தல்.*
- *சேதனப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல்.*
- *சந்தைப்படுத்தல், தர நிர்ணயங்கள் மற்றும் விலை விபரங்கள் முதலானவை தொடர்பான தரவுகளை வெளியிடுதல்.*
- *ஏற்றுமதி விவசாயப் பயிர் விளைச்சல்கள் மற்றும் நடுகைப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல்.*
- *ஏற்றுமதி விவசாயப் பயிர் உற்பத்தி, பதப்படுத்துதல், விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் பயிற்சி அளித்தல்.*
- *பெருந்தோட்டத் துறையில் ஏற்றுமதி விவசாயப் பயிர் வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.*
- *ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் சார்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்பினை வலுப்படுத்துதல்.*
- *1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாயச் சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரத்தைப் பொறுப்பளித்தல்.*
- *ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் சார்ந்த கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக ஏனைய அரச அமைப்புகளுக்கு ஆலோசனைகளை வழங்கல்.*
- *தொழில்நுட்ப ஆலோசனைகளைத் தொடர்ச்சியாகப் பேணுதல்.*

### *3.5. நிறுவனத்தின் மூலம் எய்த எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் -*

- *2.4.1.1. - வினைத்திறனான மற்றும் நிலைபேறான விவசாயத்தின் கீழ் ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கையினால் மூடப்பட்டுள்ள நிலப்பரப்பு.*
- *2.5.1.1 - நடுத்தர கால அல்லது நீண்ட கால பாதுகாப்பு வசதிகளின் ஊடாகப் பாதுகாக்கப்பட்ட உணவு மற்றும் விவசாயத்திற்கான தாவர மற்றும் விலங்கு மரபணு வளங்களின் எண்ணிக்கை (ஏற்றுமதி விவசாயப் பயிர் மரபணு வளங்களின் எண்ணிக்கை).*
- *9.5.1.1 - ஏற்றுமதி விவசாயத் துறைக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக.*
- *9.5.2.1 - புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் முன்னெடுத்துச் செல்லப்படும் ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை.*
- *17.11.1.1 - வெளிநாட்டுச் சந்தைக்கான உள்நாட்டுப் பங்களிப்பில் விவசாயத் துறையிலிருந்து ஏற்றுமதி விவசாயத் துறையின் பங்கு.*

### *3.6. நிதி முன்னேற்றம்*

| தொ/இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவு செய்த தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| *1* | மூலதன | *1,621.00* | *871.65* | *54* |
| *2* | மீண்டுவரும் | *1,101.00* | *1,026.08* | *93* |

*2025 ஆம் ஆண்டிற்காக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கு கிடைத்த மூலதன நிதி ஒதுக்கீட்டு அளவான 1,621.00 மில்லியன் ரூபாயினுள் வரவு செலவுத் திட்ட உரையினால் வழங்கப்பட்ட 250.00 மில்லியன் ரூபாய் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் 100.00 மில்லியன் ரூபாய் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்திற்கும் 150.00 மில்லியன் ரூபாய் கறுவா அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.*

### *3.7. பௌதீக முன்னேற்றம்*

*திணைக்களத்துடன் தொடர்பான, நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 2025 ஆம் ஆண்டில் 1,000.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த ஒதுக்கீடுகளில் 737.43 மில்லியன் ரூபாய் நிதிச் செலவினை 2025 ஆம் ஆண்டிற்குள் எய்துவதற்குத் திணைக்களத்தினால் முடிந்தது.*

*அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் கண்டி, நுவரெலியா, பதுளை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, மாத்தறை, பொலன்னறுவை, அம்பாறை, அனுராதபுரம், இரத்தினபுரி, மொனராகலை, கேகாலை, காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டதுடன், ஒட்டுமொத்தமாக இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 89,023 பயனாளிகள் இணைந்துள்ளனர்.*

*திணைக்களம் தொடர்பான ஒட்டுமொத்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வெவ்வேறாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள், நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு அமைகின்றன.*

• **ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம்**

| நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| *1.1 ஏற்றுமதி விவசாயப் பயிர் புதிய பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்* | *306.20 (நாற்றுகள் வழங்குதல் - 133.57 நிதி மானியம் - 172.63)* | *235.97* | *இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாக 1046.53 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மானிய அடிப்படையில் மொத்தமாக 478.88 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *பாக்கு - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 28.93 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 2.55 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *ஏலக்காய் - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 34.06 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 1.6 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *ஏலக்காய் தண்டு - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 0.75 ஹெக்டேர் பரப்பளவிற்காக தண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *சிட்ரோனெல்லா - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 0.75 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *கிராம்பு - நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 27.50 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 3.10 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *கொக்கோ - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 72.64 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 2.3 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *கோப்பி (அரபிகா) - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 277.86 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 27.12 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *கோப்பி (ரொபஸ்டா) - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 38.36 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 3.85 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*<br>• *கொரக்கா - மானிய அடிப்படையில் 0.10 ஹெக்டேர்* |

| நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| | | | பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• லெமன்கிராஸ் - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 0.10 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• சாதிக்காய் - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 36.52 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 0.60 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• மிளகு - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 513.90 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 53.36 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• வெனிலா நாற்றுகள் - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1.10 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• வெனிலா கொடிகள் - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 11.95 ஹெக்டேர் பரப்பளவிற்காக கொடிகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 5.82 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• வெற்றிலை (கொடி) - மானிய அடிப்படையில் 0.10 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• இஞ்சி - மானிய அடிப்படையில் 217.60 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• மஞ்சள் - மானிய அடிப்படையில் 160.88 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. |

| நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1.2. சிறு அளவிலான பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 108.81 | 105.22 | பயிர்ச் செய்கைகளுக்காக 1,915,400 நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• வெற்றிலை (நாற்று) - 6,598<br>• வெற்றிலை (கொடி) - 129,778<br>• ஏலக்காய் (நாற்று) - 206,361<br>• ஏலக்காய் (தண்டு) - 9,826<br>• கொக்கோ நாற்று - 15,690<br>• கோப்பி (அரபிகா) நாற்று - 275,945<br>• கோப்பி (ரொபஸ்டா) நாற்று - 91,119<br>• கிராம்பு நாற்று - 24,079<br>• கொரக்கா நாற்று - 26,115<br>• சாதிக்காய் நாற்று - 24,384<br>• மிளகு நாற்று - 1,037,941<br>• வெனிலா (நாற்று) - 2,671<br>• வெனிலா (கொடி) - 64,901 |
| 1.3 ஏற்றுமதி விவசாயப் பயிர் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 0.96 | 0.39 | • மிளகு நாற்று - 7,763<br>• கோப்பி (ரொபஸ்டா) நாற்று - 413<br>• கோப்பி (அரபிகா) நாற்று - 90<br>• ஏலக்காய் நாற்று - 265<br>(மொத்தமாக 8,531 நாற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.) |
| 1.4 பாக்கு பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 176.88 | 181.82 | 3,827,256 நாற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. |
| 2.1 விதை மற்றும் நடுகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல் | 1.50 | 0.71 | • பாக்கு (விதை) - 120,000<br>• சாதிக்காய் (விதை) - 8,500<br>என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 2.2 நாற்று உற்பத்திக்கான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தல். | 6.30 | 5.90 | 8*5 பொலித்தீன் பைகள் - 1,050,500<br>10*7 பொலித்தீன் பைகள் - 57,500<br>நடுகை ஊடக அலகுகள் - 225 (கியூப்) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |

| நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| *2.3 வலைக் கூடாரங்கள், நீர் வழங்கல் மற்றும் ஏனைய வசதிகளை விருத்தி செய்தல்* | *8.00* | *6.12* | *நடுகை ஊடக அலகுகள் 275 (கியூப்) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |
| *2.4 விவசாய நில முகாமைத்துவத்திற்கான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தல்.* | *2.50* | *0.17* | இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் *05* புல் வெட்டும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல். |
| *2.5 தனியார் நாற்று மேடைகளை விருத்தி செய்தல்* | *74.67 (நிதி மானியங்கள்)* | *23.25* | *தாய் தாவரத் தோட்டங்கள் அமைத்தல் - 13*<br>*வலைக் கூடாரங்கள் நிர்மாணித்தல் - 36*<br>*வலைக் கூடாரங்களைப் புனரமைத்தல் - 33*<br>*தற்காலிக நிழல் வலைக் கூடாரங்கள் - 61*<br>*நீர் வழங்கல் தொகுதிகளை நிறுவுதல் - 12* |
| *2.6 பண்ணை நில முகாமைத்துவத்திற்கான உள்ளீடுகளைக் கொள்வனவு செய்தல்.* | *2.60* | *0.02* | *யூரியா - 24KG*<br>*ERP - 30 KG*<br>*MOP - 20KG* |

| நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| 3.1 நில உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 63.29 (நாற்றுகள் வழங்குதல் - 11.51 நிதி மானியங்கள் - 51.77) | 42.62 | நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாக 674.79 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மானிய அடிப்படையில் மொத்தமாக 506.03 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• மிளகு - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 646.79 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 330.13 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• கோப்பி (அரபிகா) - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 18.8 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• கொக்கோ - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 7 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 168.6 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• கிராம்பு - நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2.5 ஹெக்டேர் பரப்பளவிற்காக நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. மானிய அடிப்படையில் 6.15 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.<br>• சாதிக்காய் - மானிய அடிப்படையில் 1.15 ஹெக்டேர் பரப்பளவிற்காக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 3.2 பீடை மற்றும் பயிர்ச் சேதங்களைத் தடுப்பதற்கான உபகரணங்கள்/ தொகுதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் | 5.35 (நிதி மானியங்கள்) | 3.57 | 33 அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 3.3 நுண் நீர் வழங்கல் தொகுதிகளை நிறுவும் நிகழ்ச்சித் திட்டம் | 5.86 (நிதி மானியங்கள்) | 3.13 | 24 அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 3.4 தாவரப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 5.00 (நிகழ்ச்சித் திட்டம்) | - | 41 KG 200G கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |
| 4.1 சேதன மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) விவசாயத் தரச் சான்றிதழ் பெற்ற பயிர்ச் செய்கைகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | - | - | GMP சான்றிதழ் - 01 வழங்கப்பட்டுள்ளது. |

| நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| *4.2* பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் தரத்தை விருத்தி செய்தல் | *124.02* (நிதி மானியங்கள்) | *87.67* | உபகரணங்கள் - *1011*<br>நிலையங்கள் - *12* வழங்கப்பட்டுள்ளன. |
| *4.3* சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் | *5.00* | - | நிகழ்ச்சித் திட்டங்கள் - *01* (கோப்பி தினம்) நடாத்தப்பட்டுள்ளது. |
| *4.4* சிறந்த விவசாய நடைமுறைகளை நடைமுறைப்படுத்தல் / சான்றளித்தல் | *18.56* (நிதி மானியங்கள்) | - | *04* விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. |
| *4.5* பங்குதாரர்களைப் பதிவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் | *5.00* | - | - |
| *5.1* வெகுஜன ஊடகங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பன ஊடாக ஏற்றுமதி விவசாயப் பயிர்களை ஊக்குவித்தல் | *35.50* | *17.02* | தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் - *50*,<br>வானொலி நிகழ்ச்சிகள் - *103*<br>ஏனைய நிகழ்ச்சிகள் - *53*, கண்காட்சிகள் - *04*<br>பத்திரிகை விளம்பரங்கள் - *01*, அச்சு ஊடகம் - *01*<br>தொடர்பாடல் உபகரணம் - *01* கொள்வனவு என்பன செய்யப்பட்டுள்ளன. |
| *6.1* ஏற்றுமதி விவசாயப் பயிர் பங்குதாரர்களின் நிபுணத்துவ விருத்தி நிகழ்ச்சித் திட்டம் | *9.41* | *6.72* | *3087* விவசாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>*74,604* பயனாளிகள் பங்குபற்றியுள்ளனர்.<br>*469* கள நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.<br>*11,308* பயனாளிகள் பங்குபற்றியுள்ளனர். |
| *6.2* சேவைகாலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | *3.60* | *1.03* | *59* பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. |
| *6.3* டிஜிட்டல் செயற்திட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வசதிகளை வழங்கலும் நடைமுறைப்படுத்தலும் | *1.00* | - | - |

- ***ஏற்றுமதி விவசாயப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏற்றுமதி விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய்ப் பீடைக் கட்டுப்பாட்டு செயற்திட்டத்தின் (2002, 2003, 2102, 2103, 2401, 2001, 2104, 2105, 2506 மற்றும் 2507 ஆகிய செலவுத் தலைப்புகளுக்கு அமைவாக) 2025.12.31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம்***

| **நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்** | **ஒதுக்கப் பட்ட தொகை (மில்லியன் ரூபாய்)** | **செலவிடப் பட்ட தொகை (மில்லியன் ரூபாய்)** | **பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|---|
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பழுதுபார்த்தல் *(2002)* | *7.50* | *1.84* | *கணினிகள் - 05, அச்சு இயந்திரங்கள் - 02, ப்ரொஜெக்டர்கள் - 01, நிழற்படப் பிரதி இயந்திரங்கள் - 10, நீர் மோட்டார்கள் - 01, மேசைக்கணினிகள் - 02, மடிக்கணினி மின்கலங்கள் - 01, குளிர்சாதன இயந்திரம் - 02, குளிரூட்டிகள் - 01, அடுப்பு - 01, ஜெல்டால் அலகுகள் - 01, லேமினார் அடுக்குகள் - 01, மின்பிறப்பாக்கிகள் - 02, தோல் உரிக்கும் இயந்திரம் - 01, கோப்பி உலர்த்தும் இயந்திரங்கள் - 01, நீர் இறைக்கும் இயந்திரம் - 01 ஆகியவை பழுதுபார்க்கப்பட்டுள்ளன.* |
| வாகனங்களைப் பழுதுபார்த்தல் *(2003)* | *15.00* | *11.10* | *60 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. 05 மின்கலங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. 01 உழவு இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. 05 டயர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் *(2102)* | *20.00* | *9.35* | *புத்தக அலுமாரிகள் - 01, WIFI அடாப்டர்கள் (WiFi adapters) - 01, மடிக்கணினிகள் - 11, மேசைக்கணினிகள் - 29, சுழலும் நாற்காலிகள் - 30, சீலிங் விசிறிகள் - 02, பெடஸ்டல் விசிறிகள் (Pedestal fans) - 12, சுவர் விசிறிகள் - 08, மேசை விசிறிகள் - 02, 2 கதவுகளைக் கொண்ட கோப்பு அலுமாரிகள் - 15, 4 இழுப்பறைகளைக் கொண்ட கோப்பு அலுமாரிகள் - 11, மாநாட்டு மேசைகள் - 02, மாநாட்டு நாற்காலிகள் - 20, அலுவலக மேசைகள் - 20, பாதுகாப்பு அலுமாரிகள் - 01, நிழற்படப் பிரதி இயந்திரங்கள் - 02, ப்ரொஜெக்டர் - 01, யூ.பி.எஸ் (UPS) - 39, அலுவலக தராசுகள் - 01, பார்கோட் இயந்திரங்கள் - 01, பார்கோட் ஸ்கேனர்கள் - 01, ஸ்மார்ட் பலகைகள் - 01, சுத்திகரிப்பு இயந்திரங்கள் - 01, அச்சு இயந்திரங்கள் - 02, நிறைவேற்று அதிகாரிகளுக்கான மேசைகள் - 01, நிறைவேற்று அதிகாரிகளுக்கான நாற்காலிகள் - 02, நாற்காலிகள் - 01, நூலக அலுமாரிகள் - 02, கணினி நாற்காலிகள் - 03, விற்பனை நிலைய அலமாரிகள் - 01, இரும்பு அலுமாரிகள் - 01, கண்ணாடி கதவு அலுமாரிகள் - 01, பெயர்ப் பலகைகள் - 18 ஆகியவை கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |

| | | | |
|---|---|---|---|
| *அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் (2103)* | *7.50* | *4.45* | *அச்சு இயந்திரங்கள் - 08, குளிர்சாதன இயந்திரம் (AC) - 06, ப்ரொஜெக்டர்கள் - 03, ஒலிவாங்கிகள் (Microphones) - 04, தொலைநகல் (Fax) இயந்திரங்கள் - 02, புல் வெட்டும் இயந்திரங்கள் - 05, பல்ஊடகத் திரைகள் (Multimedia screens) - 01, ஸ்கேனர் இயந்திரங்கள் - 02, மேசை ஒலிவாங்கிகள் - 05, நீர் சுத்திகரிப்பான்கள் (Water filters) - 01, சுவர் ப்ரொஜெக்டர் திரைகள் - 01, நிழற்படப் பிரதி இயந்திரங்கள் - 02, கருவித் தொகுதிகள் (Tool kits) - 02, சிறிய சுழலிகள் (Rotators) - 01 ஆகியவை கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.* |
| *திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2401)* | *1.00* | *0.99* | *511 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.* |

- **ஏற்றுமதி விவசாயப் பயிர் ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைந்த நோய், பீடைக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| *ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டங்கள்* | *10.00* | *6.80* | *30 ஆராய்ச்சித் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.* |

- **வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்தின் முன்னேற்றம்:**

| | | | |
|---|---|---|---|
| *தொழில்முனைவோர் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிச் சந்தை அணுகல் நிகழ்ச்சித் திட்டம் (Entrepreneurship Development and Export Market Access Programme)* | *100.00* | *0.93* | *செயற்திட்டம் தொடர்பான ஆரம்பக்கட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.* |

- *நிர்மாணம் மற்றும் புனரமைப்புப் பணிகளுடன் தொடர்பாக, 2001 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் 51 செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 81% சதவீதமும்,*
- *2104 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் 25 செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 24% சதவீதமும்,*
- *2105 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் 50 செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 27% சதவீதமும்,*
- *2506 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் 22 செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 33% சதவீதமும்,*
- *2507 ஆம் செலவுத் தலைப்பின் கீழ் 51 செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 72% சதவீதமும்*

*என்ற வகையில் 2025.12.31 ஆம் திகதி வரையான பௌதீக முன்னேற்றம் பதிவாகியுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 33 - 34*

**குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.**

## *04. கறுவா அபிவிருத்தித் திணைக்களம்*

*2025 ஒக்டோபர் 18 ஆம் திகதியிட்ட 2458/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கறுவா அபிவிருத்தித் திணைக்களம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

### *4.1. தொலைநோக்கு*

*இலங்கை கறுவாவை இலங்கையின் முதன்மையான ஏற்றுமதி சார்ந்த பெருந்தோட்டப் பயிராக நிலைநிறுத்துதல்.*

### *4.2. பணி*

*நிலைபேற்றுத்தன்மையை மேம்படுத்தல், தர நிர்ணயங்களை உயர்த்துதல், சந்தை அணுகலை விரிவுபடுத்தல் போன்ற உத்திகள் சார்ந்த முன்னெடுப்புகளின் ஊடாகத் தேசிய பொருளாதாரத்திற்கு இலங்கையின் கறுவா கைத்தொழிலின் பங்களிப்பை வலுப்படுத்துதல் மற்றும் அனைத்துப் பங்காளர்களின் நல்வாழ்வை விருத்தி செய்தல்.*

### *4.3. இலக்குகள்*

- *உற்பத்தி முறைமைகளை நவீனமயமாக்கல், அறுவடைக்குப் பிந்தைய வினைத்திறனை விருத்தி செய்தல் மற்றும் கூட்டு முயற்சிகளை வலுப்படுத்துவதன் ஊடாகக் கறுவா உற்பத்தி, பயிர் நிலங்களின் உற்பத்தித்திறன் மற்றும் விவசாயிகளின் வருமானம் என்பவற்றை உயர்த்துதல்.*
- *அதிக பெறுமதி கொண்ட மற்றும் அதிக விலையுடைய சந்தைகளை அணுகுவதை நோக்கமாகக் கொண்டு, பெறுமதி சேர்த்தல், உற்பத்தி பல்வகைப்படுத்தல் மற்றும் புத்தாக்கம் என்பவற்றின் மூலம் கறுவா கைத்தொழிலில் விரைவான மாற்றத்தை ஏற்படுத்துதல்.*
- *நிலவுகின்ற கறுவா ஏற்றுமதி சந்தைகளில் இலங்கையின் போட்டித்தன்மையை வலுப்படுத்துவதற்கு இணையாக, புதிய பிராந்திய மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தல்.*
- *உலகளாவிய நிலைபேற்றுத்தன்மை, சேதன மற்றும் தர உறுதிப்பாட்டுத் தரநிலைகளுக்கு இணங்கக்கூடிய வகையில், காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய மற்றும் சூழல்நேயமிக்க கறுவா கைத்தொழிலை நிறுவுதல்.*
- *கறுவா கைத்தொழில் துறையினுள் வினைத்திறனான நிருவாகம், ஒருங்கிணைப்பு மற்றும் அறிவாக்கத்திற்குத் துணைபுரியும் நிறுவன மற்றும் கொள்கைசார் சூழலை உருவாக்குதல்.*

### *4.4. பிரதான பணிகள்*

- *சிறு அளவிலான, நடுத்தர அளவிலான மற்றும் பெருந்தோட்டத் துறையினுள் கறுவா பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல்.*
- *கறுவா பயிர் தொடர்பாகப் பயிர் விருத்தி செய்தல், மண் மற்றும் தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவம், தாவர பாதுகாப்பு, அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் ஒட்டுமொத்த பயிர்ச் செய்கை முகாமைத்துவம் தொடர்பான பன்முக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.*
- *கறுவா பயிர்ச் செய்கையில் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகளை (GMP) ஊக்குவித்தல்.*
- *கறுவா பூகோள குறிகாட்டிகள் (GI) சான்றளிப்புடன் தொடர்புடைய கணக்காய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.*
- *கறுவா மற்றும் கறுவா சார்ந்த உற்பத்திகளுக்காக ஏற்றுமதி ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.*
- *கறுவா பயிர்ச் செய்கை மற்றும் கைத்தொழில் தொடர்பான தரவு முறைமைகளைப் பேணுதல் மற்றும் புதுப்பித்தல்.*

- கறுவா பயிர்ச் செய்கை, பதப்படுத்துதல் மற்றும் உற்பத்தி தொடர்பான விரிவாக்க மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.
- கறுவா பயிர்ச் செய்கை, பதப்படுத்துதல் மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய பங்காளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- கறுவா பயிர் பாதுகாப்பு மற்றும் மண் ஊட்டச்சத்து முகாமைத்துவம் தொடர்பான ஆலோசனைச் சேவைகளை வழங்கல்.
- கறுவா உற்பத்தியுடன் தொடர்புடைய ஆய்வகப் பரிசோதனைச் சேவைகளைப் பேணுதல்.
- கறுவா அபிவிருத்திக்காக அரச, அரை அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களுடன் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகளைப் பேணுதல்.
- கறுவா பயிர் தொடர்பான மரபணு வளங்களைச் சேகரித்தல், பாதுகாத்தல், பேணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

### 4.5. நிறுவனத்தின் மூலம் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs)

- **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 1 – எல்லா இடங்களிலும், எல்லா வடிவங்களிலுமான வறுமையை ஒழித்தல்**
  கறுவா கைத்தொழில் சார்ந்த பங்காளர்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல் மற்றும் நிலைபேறான விவசாயத்துக்குத் தேவையான வளங்களுக்கான அணுகலை அதிகரிப்பதன் மூலம் வறுமையைக் குறைத்தல்.
- **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 2 – பட்டினியை ஒழித்தல்**
  நிலைபேறான விவசாய நடைமுறைகள் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் கறுவா பயிரிடப்படும் பிரதேசங்களில் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்.
- **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 8 – கௌரவமான பணியும் பொருளாதார வளர்ச்சியும்**
  வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், திறன்களை விருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதி சார்ந்த கறுவா கைத்தொழில் ஊடாகத் தேசிய பொருளாதார பங்களிப்பை ஊக்குவித்தல்.
- **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 13 – காலநிலை நடவடிக்கைகள்**
  கறுவா பயிர்ச் செய்கையில் காலநிலை மாற்றங்களின் தாக்கங்களைக் குறைப்பதற்காகக் காலநிலை மாற்றங்களைத் தாங்கும் நிலைபேறான பயிர்ச் செய்கை முறைகளை ஊக்குவித்தல்.
- **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 15 – நிலவாழ் உயிரினங்கள்**
  கறுவா பயிர்ச் செய்கைக்குத் தேவையான காணிகள் மற்றும் சூழல் முறைமைகளை நிலைபேறான முறையில் முகாமைத்துவம் செய்தல் மற்றும் உயிரியல் பல்வகைமையைப் பாதுகாத்தல்.

### 4.6. நிதி முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| மூலதன | 406.00 | 189.40 | 47 |
| மீண்டுவரும் | 141.00 | 126.60 | 90 |

### 4.7. பௌதீக முன்னேற்றம்

2025 ஆம் ஆண்டில் கறுவா அபிவிருத்தித் திணைக்களம், இலங்கையின் ஏற்றுமதி விவசாயப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில், பயிர்ச் செய்கையாளர்களுக்கு நேரடி உதவிகளை வழங்குதல், உற்பத்தித்திறனை அதிகரித்தல், பயிற்சி மற்றும் விரிவாக்கச் சேவைகளை விரிவுபடுத்தல் மற்றும் சந்தை சார்ந்த அபிவிருத்தியை முதன்மைப்படுத்திய செயற்பாடுகளை மேற்கொள்ள்ளல் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது. இந்தத் தலையீடுகளின் ஊடாகக் கறுவா

*உற்பத்தி, பயிர்ச் செய்கையாளர்களின் வருமானம் மற்றும் கிராமிய வாழ்வாதாரத்தைச் குறிப்பிடத்தக்க அளவில் விருத்தி செய்யத் திணைக்களம் பங்களிப்பு செய்துள்ளது.*

- ***பயிர்ச் செய்கையாளர்களுக்கான உதவி மற்றும் கள மட்டத்திலான அபிவிருத்தி தலையீடுகள்:***

*2025 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் பிரதான கவனம் பயிர்ச் செய்கையாளர்களுக்கு நேரடி உதவிகளை வழங்குவதில் காணப்பட்டது. இலங்கை மெய்க் கறுவா கைத்தொழிற் துறையை மீளக்கட்டியெழுப்பும் பொருட்டு பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவி வழங்கும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் நிலங்களை விரிவுபடுத்தல், ஏற்கனவே காணப்படும் பயிர்ச் செய்கைகளை மீண்டும் வலுப்படுத்துதல் மற்றும் நிலத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக விரிவான நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.*

*புதிய பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் 14 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு, 565.56 ஹெக்டேர் நிலப்பரப்பு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 1,871 பயிர்ச் செய்கையாளர்கள் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். இதில் 5.08 மில்லியன் கறுவா நாற்றுகள் 62.66 மில்லியன் ரூபாய் பங்களிப்புடன் விநியோகிக்கப்பட்டுள்ளன.*

*அதற்கு இணையாக, நிலத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் (gap filling) நிகழ்ச்சித் திட்டங்கள் 8 மாவட்டங்களில் 331.91 ஹெக்டேரில் நடைமுறைப்படுத்தப்பட்டு, 557 பயிர்ச் செய்கையாளர்களுக்கு 369,401 கறுவா நாற்றுகள் 25.29 மில்லியன் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன.*

*கறுவா பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவி வழங்கும் வகையில் கள மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட மேற்கண்ட நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவாக, 2024 ஆம் ஆண்டில் 24,900 மெற்றிக் தொன்னாக இருந்த தேசிய கறுவா உற்பத்தி, 26,000 மெற்றிக் தொன் வரை அதிகரித்துள்ளது. அதன்படி, பயிர்ச் செய்கையாளர்களுக்கு 01 கிலோ கிராம் கறுவாவிற்கு கிடைத்த சராசரி விலை 2024 ஆம் ஆண்டில் நிலவிய 3,600.00 ரூபாயிலிருந்து 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 4,000.00 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.*

***ii. விரிவாக்கம், ஆலோசனை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்:***

*பயிர்ச் செய்கையாளர்கள் பரிந்துரைக்கப்பட்ட விவசாய மற்றும் அறுவடைக்குப் பிந்தைய நடைமுறைகளை வினைத்திறனாகப் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதற்காகத் திணைக்களம் ஒரு விரிவான விரிவாக்க மற்றும் ஆலோசனை வலையமைப்பைப் பேணி வருகின்றது. 2025 ஆம் ஆண்டில், 95 கறுவா பயிர் நிலங்கள் மற்றும் நாற்று மேடைகளுக்குக் கள ரீதியான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 850 வாடிக்கையாளர்களுக்கு நிறுவன ரீதியான ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*தொலைபேசி மற்றும் இணைய வழி மூலமாகக் பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் கைத்தொழில் பங்காளர்கள் 2,320 பேருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன, இதன் மூலம் சேவைகளுக்கான அணுகல் மற்றும் வினைத்திறன் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*

*பயிற்சி மற்றும் திறன் விருத்தி திட்டங்கள் என்பன 2025 ஆம் ஆண்டின் பிரதான அங்கமாக அமைந்தது. வருடாந்த இலக்காகக் கொண்ட 687 நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒப்பிடுகையில், 701 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம்:*

- *சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP),*
- *மண் போசணை மற்றும் உர முகாமைத்துவம்,*
- *தாவர பாதுகாப்பு,*
- *அறுவடைக்குப் பிந்தைய கையாளுதல் மற்றும் பதப்படுத்துதல்*

*ஆகிய துறைகளில் பயிர்ச் செய்கையாளர்களின் அறிவு மற்றும் திறன்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.*

*International Finance Corporation (IFC) நிறுவனத்துடன் இணைந்து, பெண் கறுவா பதப்படுத்துநர்களுக்காக விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, பெண்களின் பொருளாதார வலுவூட்டலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.*

- ***பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தை அணுகல்:***

*பயிர்ச் செய்கையாளர்களின் வருமானத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஆரம்ப உற்பத்திக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தியிலும் திணைக்களம் கவனம் செலுத்தியுள்ளது. ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ்:*

- *34 கறுவா பதப்படுத்தும் மையங்களும் 11 எண்ணெய் பிரித்தெடுக்கும் அலகுகளும் நிறுவப்பட்டுள்ளன.*
- *உலர்த்தும் இயந்திரங்கள், தூளாக்கும் இயந்திரங்கள், பொலித்தீன் சீலர்கள், நிறம் பிரிக்கும் இயந்திரங்கள் உள்ளிட்ட நவீன உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.*

*தர உறுதிப்பாட்டுத் துறையில்:*

- *5 GI சான்றிதழ்கள்,*
- *1 GMP சான்றிதழ்,*
- *3 ISO 22000 சான்றிதழ்கள்*

*வழங்கப்பட்டதன் ஊடாகச் சர்வதேச சந்தை தேவைகளைப் பூர்த்தி செய்வது வலுப்படுத்தப்பட்டுள்ளது.*

*பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி மற்றும் சந்தை அணுகல் விருத்தி செய்யப்பட்டதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் கறுவா ஏற்றுமதி மூலம் கிடைத்த வெளிநாட்டுச் செலாவணியான 226.00 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி பெறுமதி, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 260.00 மில்லியன் அமெரிக்க டொலர் வரை வளர்ச்சியடைந்துள்ளது.*

- ***ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப உதவி:***

*பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை வலுப்படுத்துவதற்காக, தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் மூலம் 20 ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம்:*

- *13 ஆராய்ச்சி வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.*
- *கறுவா கைத்தொழில் பற்றிய விழிப்புணர்வு வழங்கும் 53 நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.*
- *கறுவா கைத்தொழில் தொடர்பான 75 பயிற்சி நிகழ்ச்சிகள் (1,461 பயனாளிகள்) பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.*
- *அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பிற்கு இணங்கத் திணைக்களத்தின் ஐந்தாண்டு மூலோபாயங்கள் சார்ந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.*
- *"கறுவா கையேடு" (Cinnamon Handbook) திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பாக 1,000 சிங்களப் பிரதிகளும் 500 தமிழ்ப் பிரதிகளும் DevPro Guarantee Ltd நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் அச்சிடப்பட்டுள்ளன.*

*அதேபோன்று, புதிய கறுவா வர்க்கங்களின் நாற்றுகளை உற்பத்தி செய்து, தெரிவு செய்யப்பட்ட பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கறுவா சார்ந்த 2 புதிய உணவு உற்பத்திகள் விருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், சர்வதேச அங்கீகாரம் பெற்ற இரண்டு ஆய்வகங்கள் மூலம் 241 ஆய்வக அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.*

- ***ஒட்டுமொத்த தாக்கம்:***

*2025 ஆம் ஆண்டில் கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த பயிர்ச் செய்கையாளர்களுக்கான உதவி வழங்கல், பயிற்சி, விரிவாக்கம், பதப்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம், கறுவா கைத்தொழிலின்*

உற்பத்தித்திறன், வருமானம், வேலைவாய்ப்புகள் மற்றும் ஏற்றுமதி போட்டித்தன்மை என்பன குறிப்பிடத்தக்க அளவில் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பங்களிப்பு தேசிய மட்டத்தில் வறுமையை ஒழித்தல், நிலைபேறான விவசாயம், பொருத்தமான வேலைவாய்ப்புகள் மற்றும் காலநிலை மாற்றங்களுக்குத் தாக்குப் பிடிக்கும் தன்மை போன்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

*2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்:*

- *International Finance Corporation (IFC) நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் GAP மற்றும் GI சான்றளிப்பு நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*
- *அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்க, திணைக்களத்திற்குச் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் GovPay முறைமையுடன் ஒருங்கிணைக்கப்பட்டன.*
- *சீனக் கறுவா ஏற்றுமதி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 15 ஏற்றுமதியாளர்கள் பதிவு செய்யப்பட்டனர்.*
- *GCF - Knuckles செயற்திட்டத்தின் கீழ் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது.*
- *International Finance Corporation (IFC) நிறுவனத்துடன் இணைந்து பெண் கறுவா பதப்படுத்துநர்களுக்கான பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

*புகைப்பட இலக்கம் 35*

## *05. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்*

*1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய யாப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1137/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2000 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி "அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம்" நிறுவப்பட்டது. பின்னர், 2018.10.27 அன்று இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2093/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்நிறுவனத்தின் பெயர் தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் என மாற்றப்பட்டது. விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதற்கும், விவசாயம் சார்ந்த தொழில்துறைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், பயிற்சி, விரிவாக்கம், தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகள் மற்றும் ஆய்வுகூடச் சேவைகளை வழங்குவதே இந்நிறுவனத்தின் பிரதான பணியாகும்.*

### *5.1. நிதிசார் முன்னேற்றம்*

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | மூலதன | 33.00 | 19.25 | 58 |
| 2 | மீண்டுவரும் | 164.10 | 158.36 | 97 |
| | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் | 26.20 | 21.66 | 83 |

### *5.2. பௌதீக முன்னேற்றம்*

- ***ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் முன்னேற்றம்*** *(செலவுத் தலைப்பு: 118-02-03-073-2201)*

*அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் பெறுமதி சேர்த்தல், மற்றும் பாதுகாப்பான உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆகிய 3 பிரதான கருப்பொருள்களின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 15 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன (இவற்றுள் 3 ஆராய்ச்சிகள் 2026 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தன). இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 11.23 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.12.31 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 6.83 மில்லியன் ரூபாய் ஆகும். இந்த ஆராய்ச்சித் திட்டங்களுள் 3 செயற்திட்டங்களின் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. 2025.12.31 அன்று நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டு, அறுவடைக்குப் பிந்தைய ஆயுட்காலத்தை நிர்ணயிக்கும் இறுதிக்கட்டத்தில் இருந்த 9 ஆராய்ச்சிகளுக்கான மாதிரிகள், 2025.11.28 அன்று ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக முழுமையாக அழிவடைந்தன. இதனால் குறித்த பரிசோதனைகளை மீண்டும் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், 12 ஆராய்ச்சித் திட்டங்களை 2025 ஆம் ஆண்டிலிருந்து 2026 ஆம் ஆண்டு வரை நீடிக்க வேண்டியிருந்தது.*

- ***அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றம் (செலவுத் தலைப்பு: 118-02-03-020-2202)***

*i.)* ***கிராமிய ரீதியாக வீட்டு மட்டத்தில் அரிசி பதப்படுத்தும் கைத்தொழில்களை உருவாக்குதல்***

*விவசாயிகள் தமது நெல் அறுவடையை விற்பனை செய்யாமல், அதற்குப் பெறுமதி சேர்த்து அரிசியாகச் சந்தைப்படுத்துவதன் மூலம் அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். இதன் கீழ் 11 மாவட்டங்களில் 87 அரிசி பதப்படுத்தும் அலகுகளை நிறுவ எதிர்பார்க்கப்பட்டது. 2025.12.31 ஆம் திகதி வரை, முறையான அரிசி பதப்படுத்துதல் தொடர்பாக 507 பயனாளிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் 85 அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 5.92 மில்லியன் ரூபாயாகும். 2025.12.31 வரை செலவிடப்பட்ட தொகை 5.27 மில்லியன் ரூபாயாகும்.*

***ii.)* விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதற்காக அரிசி, சோளம் மற்றும் தானிய வகைகளைச் சேமிக்க வீட்டுக் களஞ்சிய வசதிகளை மேம்படுத்துதல்**

*தானியச் களஞ்சியப்படுத்தலின் போது ஏற்படும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் செயற்திட்டத்திற்காக 5.05 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இதன் கீழ் 11 மாவட்டங்களில் 108 வீட்டுக் களஞ்சிய சேமிப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2025.12.31 ஆம் திகதி வரை, முறையான களஞ்சிய முறைகள் குறித்து 545 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் 105 களஞ்சிய அலகுகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காகச்* ***செலவிடப்பட்ட தொகை 4.64 மில்லியன் ரூபாயாகும்.***

***iii.)* கிராமிய மட்டத்தில் வாசனைத்திரவியம் பதப்படுத்தும் நுண்-தொழில்முயற்சியாளர்களை அறிமுகப்படுத்துதல்**

*கிராமிய மட்டத்தில் வாசனைத்திரவியம் பதப்படுத்தும் 10 நுண்-தொழில்முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் செயற்திட்டத்திற்காக 1.71 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025.12.31 வரை 1.64 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 425 பயனாளிகளுக்குப் வாசனைத்திரவியம் பதப்படுத்துவது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டதுடன் வாசனைத்திரவியம் பதப்படுத்தும் 10 அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டன.*

***iv.)* விவசாய வழங்கல் சங்கிலியின் பங்காளர்களை வலுவூட்டுவதற்காக நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் காணப்படும் சாத்தியப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அவற்றுக்கு உகந்த அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் மையங்களை நிறுவுதல்**

*இந்தச் செயற்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு பிரதேசத்திலும் விளையும் பயிர்கள் மற்றும் அங்குள்ள சந்தை வாய்ப்புகளை ஆய்வு செய்து, விவசாயம் சார்ந்த 10 தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்தச் செயற்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 2.5 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.12.31 வரை 2.45 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 574 பயனாளிகளுக்குப் பல்வேறு விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள் குறித்துப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் 10 பதப்படுத்தும் அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டன.*

***v.)* விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய முறையான முகாமைத்துவம் குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அளித்தல் மற்றும் பெறுமதி சேர்க்கும் மையங்களை நிறுவுதல்**

*நாடு முழுவதும் உள்ள 1,000 அரச உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் விவசாயத் தொழில்முயற்சியாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கவும், 4 உற்பத்தி அலகுகளை (2 உலர்த்தும் அலகுகள் மற்றும் 2 கூழ்மமாக்கும் அலகுகள்) நிறுவவும் 'அஸ்வென்னட அருநெல்லக்' எனும் பெயரில் தொடர் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 4.12 மில்லியன் ரூபாய் ஆகும். 2025.12.31 வரை 1.48 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இரு உலர்த்தும் அலகுகள் ஸ்தாபிக்கப்பட்டன. எனினும், 2 கூழ்மமாக்கும் இயந்திரங்களை வழங்கவிருந்த விநியோகஸ்தரின் தொழிற்சாலை 'தித்வா' சூறாவளியால் சேதமடைந்ததால் அவ்வியந்திரங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் குறித்த வழங்குனர் தெரிவித்துள்ளார். இருந்தபோதிலும், இவ்வியந்திரங்களை நிறுவுவதற்குத் தேவையான ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளைப் பயனாளிகள் ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளதால், மேற்படி இயந்திரங்களின் கொள்வனவைக் கைவிட முடியாதுள்ளது. எனவே, இதற்கான 1.50 மில்லியன் ரூபாய் பொறுப்புறுதித் தொகையாக உள்ளது. இந்த செயற்திட்டத்தின் கீழ் 714 பேருக்கு அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும் தேசிய தொலைக்காட்சியில் முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் தொடர்பான 2 நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.*

***vi.)* ஒரு முன்னோடிச் செயற்திட்டமாக மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கான குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலியை நிறுவுதல்**

*இந்தச் செயற்திட்டத்தின் கீழ் நுவரெலியா மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலியுடன் தொடர்புடைய பங்காளர்களுடன் கலந்துரையாடி, அதனை நிறுவுவதில் உள்ள*

*நடைமுறைச் சிக்கல்கள் கண்டறியப்பட்டன. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பங்காளர்களுக்கு குளிரூட்டப்பட்ட விநியோகச் சங்கிலியில் பயன்படுத்தும் பொருட்டு 80 பொதியிடல் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன. மேலும், நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி மற்றும் பழங்களைக் கழுவும் அலகு ஒன்று நிறுவப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக 1.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025.12.31 திகதியளவில் அதற்காக செலவிடப்பட்ட தொகை 0.63 மில்லியன் ரூபாய்.*

***vii.) மரக்கறி மற்றும் பழங்கள் போக்குவரத்தின் போது ஏற்படும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கும் பொருட்டு பாதுகாப்பான பொதியிடல் முறைகளை அறிமுகப்படுத்துதல்***

*மரக்கறி மற்றும் பழங்களுக்கான அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் ஏற்படுவது பெரும்பாலும் போக்குவரத்தின் போதே ஆகும். இவ்வாறு ஏற்படும் இழப்புகளைக் குறைக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த செயற்திட்டத்தின் ஊடாக மரக்கறி மற்றும் பழங்களைக் கொண்டுசெல்வதற்குப் பயன்படுத்தும் நோக்கில் 1,513 பிளாஸ்டிக் பொதியிடல் பெட்டிகள் (ஜம்போ - 725, பெரியது - 788) கொள்வனவு செய்யப்பட்டன. இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 5.90 மில்லியன் ரூபாய் ஆகும். அதில் 2025.12.31 வரை 5.55 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

***5.3. மீண்டுவரும் செலவினங்களின் (செலவுத் தலைப்பு - 118-02-03-073-1509) கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்***

***3.1 தொழில்நுட்பப் பிரச்சார நடவடிக்கைகள்***

*முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பப் பயன்பாடு குறித்து 100 பயிற்சி நெறிகள் (வதிவிடப் பயிற்சி மற்றும் கள வேலைத்திட்டங்கள் என்ற அடிப்படையில்) நடாத்துவதன் ஊடாக 2,000 பயனாளர்களுக்குப் பயிற்சியளிப்பதை நோக்காகக் கொண்டு தொழில்நுட்பப் பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் மூலம் 167 வதிவிட மற்றும் கள பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு 4,312 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர். இப்பயிற்சித் திட்டங்களின் ஊடாக 51 புதிய தொழில்முயற்சியாளர்களை இத்துறைக்கு அறிமுகப்படுத்த முடிந்தது.*

***3.2 ஆலோசனை சேவைகள், பொறியியல் சேவைகள் மற்றும் ஆய்வுகூடச் சேவைகள்***

*அறுவடைக்குப் பிந்தைய பதப்படுத்தும் இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு மற்றும் அதனுடன் தொடர்பான தொழில்நுட்பங்கள் பற்றிய 20 ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதி வரை ஆய்வுகூடப் பிரிவினால் 1,950 உணவு மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அதற்கான அறிக்கைகள் உரிய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 36 - 37*

**குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.**

## *06.* ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் *(HARTI)*

### *6.1.* அறிமுகம்

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (HARTI) என்பது 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட, கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். கமநல மற்றும் கிராமிய அபிவிருத்தி தொடர்பான சமூக பொருளாதார ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும், அந்த ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளை கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு கொள்கை வகுப்பாளர்களிடம் சமர்ப்பிப்பதும் இந்நிறுவனத்தின் பிரதான கடமையாகும். சமூக பொருளாதார மற்றும் கிராமிய அபிவிருத்தியின் விவசாய பரிமாணங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஒரே நிறுவனமும் இதுவாகும். 52 வருடகால வரலாற்று நெடுகிலும், அரச மற்றும் தனியார் துறையினர், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உயர்தரமான தரவுகள் மற்றும் தகவல்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றியுள்ளது. செயலமர்வுகளை ஏற்பாடு செய்வதன் ஊடாக அனைத்து தரப்பினரிடையேயும் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைப் பரிமாறிக்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் இதன் ஏனைய செயற்பாடுகளில் ஒன்றாகும். ஒவ்வொரு துறைகளுக்கும் அமைவாக ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக மனப்பாங்கு விருத்தி, விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய தரப்பினரின் திறன்கள் மற்றும் விழிப்புணர்வை விருத்தி செய்தல் என்பன இந்த நிறுவனத்தினால் ஆற்றப்படும் மற்றுமொரு முக்கியமான பணியாகும்.*

### *6.2.* தொலைநோக்கு

*நிலைபேறான கமநல மற்றும் கிராமிய அபிவிருத்திக்காக அறிவை உருவாக்கிப் பகிர்ந்து கொள்வதில் முன்னணியில் இருத்தல்.*

### *6.3.* செயற்பணி

*ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகள் ஊடாக கமநல மற்றும் கிராமியத் துறையை வலுப்படுத்துதல்.*

### *6.4.* நிதிசார் முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை *(மில். ரூபாய்)* | செலவு செய்த தொகை *(மில். ரூபாய்)* | நிதிசார் முன்னேற்றம் *(%)* |
|---|---|---|---|
| மீண்டுவரும் | 246.80 | 242.41 | 98 |
| மூலதன | 38.00 | 26.40 | 69.5 |

*மீண்டுவரும் செலவினங்களுக்காக திறைசேரியிடமிருந்து 191.67 மில்லியன் ரூபாய் கிடைத்ததுடன், எஞ்சிய நிலுவைத் தொகை நிறுவனத்தின் வருமானத்திலிருந்து ஈடு செய்யப்பட்டது.*

*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட மொத்த ஆராய்ச்சி கற்கைகளின் எண்ணிக்கை 12 ஆகும். அவற்றுக்கான மதிப்பீட்டுச் செலவு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் குறித்த விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.*

### *6.5.* ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

| பிரதான செயற்பாடுகள் | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | அடைந்த இலக்கு | நிதிசார் முன்னேற்றம் (மில். ரூபாய்) | | |
|---|---|---|---|---|---|
| | | | ஒதுக்கப்பட்ட நிதி | முன்னேற்றம் | % |
| <u>**ஆராய்ச்சிகள்**</u><br>*01.* இலங்கையின் விவசாய சமூகத்தினரிடையே காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுக்கும் திறனை கட்டியெழுப்புவதற்கான தற்போதைய கொள்கைகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு என்பன குறித்த மீளாய்வுக் கற்கை | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | வரைவு அறிக்கை | 0.50 | 0.32 | 63 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *02.விவசாயிகளின் புரிதல் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) தொடர்பான தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல்.* | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | அறிக்கை எழுதுதல் | *1.50* | *0.61* | *41* |
| *03. இலங்கையின் மரக்கறிச் செய்கையில் சூழல் நட்பு ரீதியிலான பீடை முகாமைத்துவம்: பயன்பாடு, சவால்கள் மற்றும் சாத்தியப்பாடுகள் குறித்த ஆய்வு.* | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | வரைவு அறிக்கை | *1.50* | *0.99* | *66* |
| *04. நிலைபேறான உற்பத்திக்காகக் கால்நடை விரிவாக்கச் சேவைகளை வலுப்படுத்துதல்: நிறுவனக் கட்டமைப்புக்கள், சேவைப் பணிகள் மற்றும் திறன் விருத்தி உத்திகளைப் பகுப்பாய்வு செய்தல்.* | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | வரைவு அறிக்கை | *1.90* | *1.68* | *88* |
| *05. மலைநாட்டு மரக்கறிச் செய்கையில் பயன்படுத்தப்படும் மண் போசணை முகாமைத்துவ நடைமுறைகளை ஊக்குவிப்பதிலுள்ள தடைகள் மற்றும் சாத்தியப்பாடுகள்.* | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | வரைவு அறிக்கை | *1.50* | *0.80* | *53* |
| *06. இலங்கையில் அவரைக் குடும்பப் பயிர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் நிலவும் போக்குகள் மற்றும் சவால்கள்: பெறுமதிச் சங்கிலிப் பகுப்பாய்வு.* | இடைக்கா ல அறிக்கை | இடைக்கால அறிக்கை | *2.40* | *2.30* | *96* |
| *07. இலங்கையில் ஆரோக்கியமான உணவு வேளைக்கான செலவு (Cost of Healthy Diet – CoHD) மற்றும் அதனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய திறன் (Affordability) குறித்த பகுப்பாய்வு.* | தரவுப் பகுப்பாய்வு | தரவுப் பகுப்பாய்வு | *0.72* | *0.45* | *63* |
| *08. இலங்கையில் பாதுகாக்கப்பட்ட விவசாயம்: தற்போதைய நிலைமை, சவால்கள் மற்றும் கொள்கை ரீதியான தலையீடுகள்.* | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | அறிக்கை எழுதுதல் | *2.30* | *1.95* | *85* |
| *09. இலங்கையின் பிரதான இறக்குமதி விவசாய உணவுப் பொருட்களுக்கான இறக்குமதி வரி குறித்த மீளாய்வு.* | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | வரைவு அறிக்கை | *1.00* | *0.64* | *64* |
| *10. இலங்கையில் விவசாயத் துறையிலுள்ள பெண்களை வலுவூட்டுவதில் பெண்கள் அமைப்புகளின் தாக்கம்: எல்லைகள், வாய்ப்புகள் மற்றும் உத்திகள்.* | கொள்கை அறிக்கை மற்றும் வரைவு அறிக்கை | வரைவு அறிக்கை | *1.70* | *0.92* | *54* |
| *11. இலங்கையின் அரிசி ஆலைகள் குறித்த கணக்கெடுப்பு 2025.* | அறிக்கை | அறிக்கையை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் பட்டு உள்ளது. | *4.45* | *4.42* | *99* |
| *12. கமத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வான் துப்பாக்கி விநியோகிக்கும் திட்டத்தின் இடைக்கால மதிப்பீடு.* | தரவுப் பகுப்பாய்வு | தரவுப் பகுப்பாய்வு | *1.77* | *1.62* | *92* |
| ***<u>பயிற்சி</u>***<br>***01.*** *விவசாய அமைப்புகளை வலுப்படுத்துதல்.* | *30* நிகழ்ச்சிகள் | *30* நிகழ்ச்சிகள் | *2.00* | *1.99* | *99* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| *02.* விவசாயச் சுற்றுலா நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சித் திட்டங்கள். | 5 நிகழ்ச்சிகள் | 5 நிகழ்ச்சிகள் | 1.50 | 0.64 | 43 |
| ***03***. "கிராமப்புற இளைஞர், யுவதிகளை விவசாய தொழில்முயற்சியாளர்களாக உருவாக்க ஊக்குவித்தல்" எனும் தலைப்பிலான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சிகள் | 3 நிகழ்ச்சிகள் | 3 மாவட்டங் களுக்கான 3 நிகழ்ச்சிகள் | 1.50 | 0.95 | 63 |
| ***ஏனையவை*** ***01***. கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் பகிரங்க சொற்பொழிவுகள். | - | - | 3.10 | 0.54 | 17 |
| ***02***. நிறுவன வெளியீடுகள். | - | கல்விசார் வெளியீடுக ள் | 1.20 | 1.20 | 100 |
| ***03***. ஊடக நிகழ்ச்சிகள். | - | காணொளி நிகழ்ச்சிகள் மற்றும் புகைப்பட நூலகம் | 1.60 | 0.76 | 48 |

### *6.6. பௌதீக முன்னேற்றம்*

*நிறுவனம் 2025 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவினால் 2025 ஆண்டில் பிரதானமாக இரண்டு பயிற்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவை விவசாய அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயச் சுற்றுலா தொழில்முயற்சித் துறையை அபிவிருத்தி செய்தல் ஆகிய இரண்டு பயிற்சித் திட்டங்களாகும்.*

*விவசாய அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், காலி மாவட்டத்தின் 30 கமநல சேவைப் பிரிவு எல்லைகளுக்குள் ஒரு நாள் பயிற்சித் தொடர்களாக 2025.06.10 முதல் 2025.11.14 வரையான காலப்பகுதிக்குள் நடாத்தப்பட்டன. இதில் கலந்துகொண்ட விவசாய அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1,653 ஆகும். இந்த விவசாய அமைப்புகளை வலுப்படுத்தும் பயிற்சித் திட்டத்தின் மூலம் விவசாய அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் வி.ஆ.உ.உ. உத்தியோகத்தர்களுக்கு விவசாய அமைப்புகள் தொடர்பான சட்டம் குறித்த விழிப்புணர்வு, விவசாய அமைப்புகள் பராமரிக்க வேண்டிய புத்தகங்கள் மற்றும் கணக்குகள் குறித்த விழிப்புணர்வு, அத்துடன் விவசாய சமூகத்தின் அபிவிருத்திக்காக விவசாய அமைப்புகளை அவர்கள் பயன்படுத்தக்கூடிய விதம் குறித்த விழிப்புணர்வு என்பன வழங்கப்பட்டன.*

*மேலும், கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு மற்றும் கிராமிய அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றினால் விவசாயச் சுற்றுலாத் தொழில்முனைவு அபிவிருத்தி குறித்த 3 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், அந்தத் திட்டங்கள் ஹம்பாந்தோட்டை, களுத்துறை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்டன. விவசாயச் சுற்றுலாத் துறை அபிவிருத்தி குறித்த பயிற்சித் திட்டமானது, விவசாயச் சுற்றுலாத் துறையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் மற்றும் விவசாய ஆலோசகர்களுக்கு சுற்றுலாத் துறையிலுள்ள வாய்ப்புகள் மற்றும் தொழில்முயற்சி சந்தர்ப்பங்கள் குறித்து விழிப்புணர்வூட்டுவதையும் அவர்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டது. அதேபோன்று, கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவானது வெளி நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு இணங்க, அந்த நிறுவனங்களுக்காகவும் கடந்த ஆண்டில் சில பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடாத்தியது.*

*இதற்கு மேலதிகமாக, விவசாயத் தொழில்முயற்சி அபிவிருத்திப் பயிற்சித் திட்டங்கள் மொனராகலை, நுவரெலியா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. உரிய பிரதேசங்களுக்காக முகநூல் விளம்பரத்தின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த*

பின்னர் 61 பேர் இதில் கலந்துகொண்டனர். இணைய வழியாகப் பெறப்பட்ட 143 விண்ணப்பங்களில் இருந்து, ஒரு பரிசீலனைச் செயன்முறை ஊடாகப் பங்கேற்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலதிகமாக, நிறுவனத்தின் காணொளிப் பிரிவினால் 2025 ஆம் ஆண்டில் ஒவ்வொரு வாரமும் விவசாயம், விவசாயத் தொழில்முயற்சி அல்லது விவசாயச் சுற்றுலாத் துறை அபிவிருத்தி என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட குறைந்தபட்சம் ஒரு காணொளியாவது நிறுவனத்தின் YouTube தளத்தில் பதிவேற்றப்பட்டது. அதேபோல் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் விவசாயம், விவசாயத் தொழில்முயற்சி அல்லது விவசாயச் சுற்றுலாத் துறை அபிவிருத்தி நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட காணொளிப் படப்பிடிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டிற்குள் நிறுவனத்தின் காணொளிப் பிரிவின் மூலம் இந்நாட்டின் விவசாய சமூகத்திற்கும் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கும் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டது.

புகைப்பட இலக்கம் 38 - 39

**குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.**

## 07. நெல் சந்தைப்படுத்தல் சபை (PMB)

### 7.1. தொலைநோக்கு
நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்துதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றில் முதன்மையான அரச தலையீட்டாளராகச் செயற்படல்.

### 7.2. செயற்பணி
உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரும் திருப்தியடையும் வகையில், நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்துதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்யும் செயன்முறையை, அறிவு மற்றும் திறன்களால் பரிபூரணமான ஒரு பணியாளர் தொகுதியினூடாக வெற்றிகரமாக நிறைவேற்றுதல்.

### 7.3. குறிக்கோள்கள்
i. நெல்லுக்காகச் சந்தையில் நிலையான அதிக விலையைப் பெற்றுக்கொடுத்தல்.
ii. நியாயமான விலையில் அரிசியை வழங்கல்.
iii. அரிசி ஆலை நடவடிக்கை மற்றும் களஞ்சியப்படுத்தலை முறைப்படுத்துதல்.
iv. களஞ்சிய கொள்ளளவை அதிகரித்தல்.
v. பயன்படுத்தப்படாத களஞ்சியசாலைகளை மீண்டும் புனரமைத்தல்.
vi. விஞ்ஞான ரீதியாக நெல்லைக் களஞ்சியப்படுத்தக்கூடிய நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய களஞ்சியசாலைகளை நிர்மாணித்தல்.
vii. பாதுகாப்புக் கையிருப்புகளைப் பாதுகாப்பாக வைப்பதற்குப் பொருத்தமான களஞ்சியசாலைகளாக மாற்றியமைத்தல்.

### 7.4. பணிகள்
i. நெல் விவசாயிகளின் விற்பனை விலையை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு, உத்தரவாத விலையில் நெல்லினைக் கொள்வனவு செய்தல்.
ii. நெல் மற்றும் அரிசிச் சந்தை விலையை நிலையாகப் பேணுதல்.
iii. இலங்கையர்களுக்காக உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
iv. நெல் மற்றும் அரிசிக் கையிருப்புகளைப் பேணுதல்.

### 7.5. நிறுவனத்தினால் அடைய எதிர்பார்க்கப்படும் நிலையான அபிவிருத்தி இலக்குகள்
- இலக்கு 2 - பட்டினியை ஒழிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் ஊட்டச்சத்து நிலையை அடைந்துகொள்வதற்காக நிலையான விவசாயத்தை மேம்படுத்துதல்.
- இலக்கு 5 - பாலின சமத்துவத்தை அடைந்துகொள்ளுதல் மற்றும் அனைத்துப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டுதல்.

- இலக்கு 12 - நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்துதல்.

### 7.6. நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

- **நிதி முன்னேற்றம்**

| விபரம் | | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| மூலதன | | 7,808.50 | 6,029.20 | 77 |
| மீண்டுவரும் | 2025 வரவுசெலவில் ஒதுக்கப்பட்ட தொகை | 185.00 | 210.60 | 100 |
| | நிறுவன நிதி | 25.60 | | |

- **பௌதீக முன்னேற்றம்**

i. நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதானமான செயற்பாட்டுப் பணியான நெல் கொள்வனவு நடவடிக்கையானது 2024/25 பெரும் போகம் மற்றும் 2025 சிறு போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக 6,308.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளது.

| போகம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா) | கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு (மெற்றிக் தொன்) | விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2024/25 பெரும் போகம் | 8.10 | 59.60 | 56 |
| 2025 சிறு போகம் | 6,300.40 | 49,552.40 | 13,821 |

நெல் கொள்வனவுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியை இந்த ஆண்டிற்குள்ளேயே மீண்டும் வெற்றிகரமாகச் செலுத்தி முடிப்பதற்கும் நெல் சந்தைப்படுத்தல் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ii. இந்த ஆண்டில் 2024 சிறு போகத்தில் கொள்வனவு செய்த 118,265 கிலோ கிராம் கீரி சம்பா நெல் கையிருப்பானது, நெல் சந்தைப்படுத்தல் சபையில் பதிவு செய்துள்ள ஆலை உரிமையாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட விலைமனு கோரல் மூலம் விடுவிக்கப்பட்டது.

iii. 2025 ஆம் ஆண்டில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் சில செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், அவற்றில் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களில் களஞ்சியசாலைகளின் திருத்தப் பணிகளுக்காகச் சிறு திருத்தங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டன. குறித்த களஞ்சியசாலை திருத்தப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு வழங்கியுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் 'நெல்லின் பாதுகாப்புக் கையிருப்பைப் பேணுதல்' (Maintaining a Buffer Stock of Paddy) எனும் நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 118-02-03-094-2509 எனும் செலவுத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட 6,212.00 மில்லியன் ரூபாய் நிதியைப் பயன்படுத்தி, நெல் சந்தைப்படுத்தல் சபையினால் களஞ்சியசாலை திருத்தங்கள் உள்ளிட்ட சில செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- **நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளைத் திருத்தம் செய்தல்**

| கட்டம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவிடப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட மொத்தக் களஞ்சியங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு கிடைத்த விதம் |
|---|---|---|---|---|
| 01 | 9.99 | 9.74 | 39 | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக |

| கட்டம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவிடப்பட்ட தொகை (மில். ரூபா) | திருத்தப்பட்ட மொத்தக் களஞ்சியங்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு கிடைத்த விதம் |
|---|---|---|---|---|
| *02* | *5.97* | *4.19* | *33* | கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக |
| *03* | *124.70* | *89.75* | *76* | *2025 செயல் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் மூலம் (செலவுத் தலைப்பு 118-02-03-094-2509)* |

- *2025 ஆம் ஆண்டில் செயல் திட்டத்தின் ஊடாக 19.12 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு நெல் உலர்த்தும் இயந்திரங்களைப் பொருத்துவதற்காக ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, அநுராதபுர தலாவ வளாகத்திற்கு 02 மாதிரி நெல் உலர்த்தும் இயந்திரங்கள் மற்றும் இரண்டு நெல் சுத்திகரிப்பு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

| | | செலவு (மில். ரூபா) |
|---|---|---|
| *நெல் உலர்த்தும் இயந்திரம் II (NCD-54SAX)* | - | *13.22* |
| *நெல் சுத்திகரிப்பு இயந்திரங்கள் II (TQLZ125)* | - | *5.90* |

- ***அலுவலக இலத்திரனியல் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்***

*அலுவலக இலத்திரனியல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2025 ஆம் ஆண்டில் செயற்பாட்டுத் திட்டத்தின் ஊடாக 3.15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதுடன், அதில் 2.02 மில்லியன் ரூபாயைச் செலவிட்டு 07 நிழற்படப் பிரதி இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

- ***ஈரப்பதமானி இயந்திரங்களைத் திருத்தம் செய்தல்***

*2025 செயற்பாட்டுத் திட்டத்தின் ஊடாக ஈரப்பதமானி இயந்திரங்களைத் திருத்தம் செய்வதற்காக 3.06 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், அந்த நிதியைப் பயன்படுத்தி 138 ஈரப்பதமானி இயந்திரங்களைத் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*i.* *நெற் களஞ்சியசாலைகளின் கையிருப்புகளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் காரணமாக, செயற்பாட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 1.04 மில்லியன் ரூபாய் தொகையைச் செலவிட்டு 238 ஆக்டெலிக் போத்தல்கள் (200 ml) கொள்வனவு செய்யப்பட்டன.*

*ii.* *2025 செயற்பாட்டுத் திட்டத்தின் ஊடாக ஊழியர்களின் திறன் விருத்திக்காக 0.39 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் 0.13 மில்லியன் ரூபாயைச் செலவிட்டு நெல் சந்தைப்படுத்தல் சபை உத்தியோகத்தர்களுக்காக 02 நாட்களைக் கொண்ட ஊழியர் திறன் விருத்திப் பயிற்சிப் பட்டறை ஒன்று 2025 ஆம் ஆண்டிற்குள் நடாத்தப்பட்டது.*

*iii.* *டிஜிட்டல் அரிசி பெறுமதிச் சங்கிலி தடமறியும் அமைப்பு (Digital Rice Value Chain Traceability System) திட்டம் தொடர்பான பங்காளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் கமத்தொழில் அமைச்சு மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) என்பன இணைந்து முன்னெடுக்கப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 40 – 41*

## *08. விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை (AAIB)*

***8.1. தொலைநோக்கு***
*உள்நாட்டு விவசாயத்தின் மிகச்சிறந்த பாதுகாவலனாகத் திகழ்வதன் மூலம் தெற்காசியாவின் முன்மாதிரியான விவசாயக் காப்புறுதி நிறுவனமாக மாறுதல்.*

***8.2. செயற்பணி***
*விவசாய இடர் முகாமைத்துவம் மற்றும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் திருப்திகரமான விவசாய மற்றும் மீனவ சமூகத்தைக் கட்டியெழுப்பும் பொருட்டு, உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்ட தலைசிறந்த விவசாயக் காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்புச் சேவையை வழங்குதல்.*

***8.3. குறிக்கோள்கள் - (நீண்டகால நோக்கங்கள்)***

- *விவசாய இடர் மற்றும் சமூகப் பாதுகாப்பு முகாமைத்துவத்தை வலுப்படுத்துதல்.*
- *நிறுவன ரீதியான தரம், சட்ட ரீதியான இணக்கத்தன்மை மற்றும் நிர்வாகம் என்பவற்றை வலுப்படுத்துதல்.*
- *செயல்பாட்டு வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் மாவட்ட மட்டத்திலான சேவை வழங்கலை வலுப்படுத்துதல்.*
- *மூலோபாயத் திட்டமிடல், மனித வள மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டின் மூலம் நிறுவன ரீதியான கொள்ளளவை அதிகரித்தல்.*
- *நிறுவன ரீதியான நிலையான நிதி உறுதித்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்தல்.*
- *தகவல் தொழில்நுட்பம் மற்றும் GIS முறைகள் மூலம் டிஜிட்டல் மாற்றத்தை மேம்படுத்துதல்.*

***8.4. பணிகள்***

***i. விவசாய இடர் முகாமைத்துவம்***
*விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் ஊடாக ஓர் இடர் முகாமைத்துவ முறையாக, இலங்கையின் விவசாயத் துறைக்கு பயிர், கால்நடை மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய துறைகளின் கீழ் விவசாயக் காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய இடர் முகாமைத்துவத்திற்குப் பங்களிப்பு வழங்குதல், திடீர் அனர்த்தங்களின் போது விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார வீழ்ச்சியைக் குறைப்பதற்கு உதவுதல் மற்றும் விவசாயக் கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களின் நிதித் தளம்பலற்ற நிலையை மேம்படுத்தல் என்பவற்றுக்கு துணையாக அமைகின்றது.*

***சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காப்புறுதித் திட்டங்கள்:***

- *பயிர் காப்புறுதித் திட்டங்கள் (நெல் மற்றும் ஏனைய பயிர்கள்)*
- *கால்நடை காப்புறுதித் திட்டங்கள்*
- *விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம்*
- *களஞ்சியக் காப்புறுதித் திட்டம்*
- *2 சக்கர, 4 சக்கர உழவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய மூன்றாம் தரப்புக் காப்புறுதித் திட்டங்கள்*
- *பாதுகாக்கப்பட்ட இல்லங்கள் மற்றும் பசுமை இல்லக் காப்புறுதித் திட்டம்*

***ii. சமூக நலனோம்பல்***
*சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையானது இலங்கையின் விவசாயத் துறையுடன் தொடர்புபட்டுள்ள விவசாயிகளின் ஓய்வுநிலை காலத்தில் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் மருத்துவ உதவித் திட்டங்களின் மூலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.*

***சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்:***

- *விவசாய ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்*
- *மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்*

- 'சுவசெத்த' சுகாதாரக் காப்புறுதித் திட்டம்
- திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டம்
- ஆயுள் காப்புறுதித் திட்டம்

**8.5. நிறுவனத்தினால் அடைய எதிர்பார்க்கப்படும் நிலையான அபிவிருத்தி இலக்குகள்**

- பட்டினியை ஒழிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் ஊட்டச்சத்தை அடைதல் மற்றும் நிலையான விவசாயத்தை விருத்தி செய்தல்
- காலநிலை மாற்றங்கள் மற்றும் அதன் தாக்கங்களைத் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**8.6. நிதி முன்னேற்றம்**

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| | **மீண்டுவரும்** | | | |
| 1. | * கட்டாயப் காப்புறுதி (118-02-03-43-2202) | 1,500.00 | 626.00 | 42 |
| 2. | விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியங்களை வழங்குவதற்கு (118-02-03-049-1509) | 5,635.00 | 5,323.87 | 94 |

- 2024/25 பெரும் போகத்தில் 'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு அரசாங்கத்தின் தலையீட்டின் மூலம் உரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டமையால், அந்தப் போகத்திற்குரிய தேசிய பயிர் காப்புறுதியின் கீழ் இழப்பீட்டு வழங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இந்தச் செலவினங்களின் முன்னேற்றமானது காலநிலை மற்றும் ஏனைய காரணிகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களின் அடிப்படையில் அமையும்.
- இந்தச் செலவின முன்னேற்றமானது 60 வயது பூர்த்தியடைந்து, ஓய்வூதியத்திற்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அமையும்.

**8.4. பௌதீக முன்னேற்றம்**

**i. விவசாய/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.**

பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் திருப்திகரமான விவசாய மற்றும் மீனவ சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில் 185,357 மீனவ மற்றும் விவசாய ஓய்வூதியதாரர்களுக்கு 5,323.87 மில்லியன் ரூபாய் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

2022 அக்டோபர் 31 ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் தற்போது மொத்தப் பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 13,910 ஆகும். இதில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 8,754 பங்களிப்பாளர்கள் இப்புதிய விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

2025 நவம்பர் மாதத்தில் நடைபெற்ற Aqua Planet 2025 கண்காட்சிக்கு இணைவாக, மீனவ சமூகத்திற்காகப் புதிய மீனவ ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அங்கு இப்புதிய மீனவ ஓய்வூதியத் திட்டத்திற்காக ஆரம்பகட்டமாக 42 பங்களிப்பாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

புதிய விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியத் திட்டத்திற்காக விவசாயிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் 2025 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டதுடன், அந்த நடவடிக்கைகள் 2026 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

(புகைப்பட இலக்கம்: 42 - 43)

***ii. 6 வகைப் பயிர்களுக்காக விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் கட்டாயப் பயிர் காப்புறுதி முறையை நடைமுறைப்படுத்தல்***

*இலங்கையில் சிறந்த விவசாய இடர் முகாமைத்துவ முறையை நடைமுறைப்படுத்தும் நோக்கில், அரசாங்கத்தின் பங்களிப்புடன் 6 பயிர் வகைகளுக்கு விவசாயிகளிடமிருந்து காப்புறுதி தவணைக் கட்டணம் அறவிடப்படாமல் தேசிய பயிர் காப்புறுதி முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் 2023 சிறு போகம், 2023/24 பெரும் போகம், 2024 சிறு போகம், 2024/25 பெரும் போகம் மற்றும் 2025 சிறு போகம் ஆகிய போகங்களுக்குரிய பயிர்ச் சேதங்களுக்காக (மேன்முறையீடுகள் உட்பட) 85,319 விவசாயிகளின் 101,983.69 ஏக்கர் நிலப்பரப்பிற்கான இழப்பீட்டுத் தொகையாக 1,755.20 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டது. இந்தத் தேசிய பயிர் காப்புறுதித் திட்டம் 2025 ஆம் ஆண்டில் இரண்டு பிரதான விவசாயப் போகங்களை மையமாகக் கொண்டு நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், பல்வேறு காரணங்களால் சேதமடைந்த பயிர் நிலங்களுக்கான இழப்பீட்டு வழங்கல்களும் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன. 2026 ஆம் ஆண்டிலும் அரசாங்கத்தின் பங்களிப்புடனான இப்பயிர் காப்புறுதித் திட்டத்தைத் தொடரத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்: 44*

***i. பல்வேறு துறைகளை உள்ளடக்கிய புதிய காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.***

*விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் 2025 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளை உள்ளடக்கும் வகையிலான புதிய காப்புறுதித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கமைய பனை, தென்னை, கித்துள் மற்றும் கறுவாத் தொழில்களில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும், கடல் மற்றும் நன்னீர் மீனவ சமூகத்திற்கும் விபத்துக் காப்புறுதித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் தென்னை, இறப்பர், மரவள்ளி உள்ளிட்ட பயிர்களுக்காகப் புதுப்பிக்கப்பட்ட காப்புறுதித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பன்றி வளர்ப்பு தொடர்பான புதிய காப்புறுதித் திட்டம் மற்றும் விதைப் பண்ணைக் காப்புறுதித் திட்டம் ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்பகட்டப் பணிகளும் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் புதிய பயிர் காப்புறுதித் திட்டங்களை 2026 ஆம் ஆண்டில் அதற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்ட பிரதேசங்களை இலக்காகக் கொண்டு அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 45*

***ii. டிஜிட்டல் மயமாக்கல்***

*சபையின் அனைத்துச் செயல்பாடுகளையும் காப்புறுதிச் செயன்முறைகளையும் டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பான ERP கட்டமைப்பை விருத்தி செய்தல் மற்றும் அறிமுகப்படுத்தல் ஆகிய பணிகள் 2025 ஆம் ஆண்டு முழுவதும் நடைபெற்றன. இதில் பயிர் காப்புறுதி, மூன்றாம் தரப்புக் காப்புறுதி, விபத்துக் காப்புறுதி மற்றும் மனித வளம் போன்ற பகுதிகளை பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணிகள் இடம்பெற்றன. 2025 ஆம் ஆண்டில் இது தொடர்பாக அனைத்து மாவட்ட உத்தியோகத்தர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் என்பன முன்னெடுக்கப்பட்டன. இக்கட்டமைப்பை விருத்தி செய்யும் பணிகள் தற்போது அதன் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதுடன், 2026 ஆம் ஆண்டில் இதனை முழுமையாக களத்திற்கு அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 46*

***குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.***

## *09. இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை (SLCARP)*

### *9.1. தொலைநோக்கு*

*இலங்கையின் சமூக - பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் வகையிலான இயக்கமிக்கதும் நிலைபேறானதுமான விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கக் கட்டமைப்பை உருவாக்குதல்.*

### *9.2. செயற்பணி*

*கொள்கை வகுப்பதற்கான உதவிகளை வழங்கல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றின் ஊடாக, விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களை தேசிய அபிவிருத்தி இலக்குகளை நோக்கி இட்டுச் செல்வதை உறுதிப்படுத்துதல்.*

### *9.3. குறிக்கோள்கள்*

*i.) விவசாய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களில் மேன்மையான நிலையை அடைதல்.*

*ii.) தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அடைந்துகொள்வதற்காக விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை வழிப்படுத்துதல்.*

*iii.) தேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கக் கட்டமைப்பின் (விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப) கொள்ளளவை விருத்தி செய்தல்.*

*iv.) விவசாய அபிவிருத்திகளுக்கு ஆதரவளிப்பதற்காக உயர்தரமான, தேவைப்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்கும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.*

*v.) உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களை அடைந்துகொள்வதற்காக சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய மட்டத்திலான ஒத்துழைப்புகளை மேம்படுத்துதல்.*

*vi.) தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத் திட்டங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.*

*vii.) தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத் திட்டங்களை விரிவுபடுத்துதல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்.*

*viii.) தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அடைந்துகொள்வதற்காக இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் நிறுவன ரீதியான கொள்ளளவை வலுப்படுத்துதல்.*

### *9.4. பிரதான பணிகள்*

*i.) விவசாய ஆராய்ச்சி முகாமைத்துவம், ஆராய்ச்சிகளின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சி முன்னேற்றங்களை மதிப்பீடு செய்தல்.*

*ii.) விவசாய ஆராய்ச்சி கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளைத் தயாரித்தல்.*

*iii.) விவசாய ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.*

*iv.) விவசாய ஆராய்ச்சிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கல்.*

*v.) விவசாய மனித வள மேம்பாடு.*

### *9.5. நிதி முன்னேற்றம்*

| விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) |
|---|---|---|
| மூலதன | 75.00 | 41.41 |
| ஆராய்ச்சிகளுக்கு | 62.35 | 37.41 |
| மீண்டுவரும் | 93.00 | 60.74 |

**9.6. விசேட துறை**

| செயல்பாடுகள் | இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| 2025 ஆம் ஆண்டிற்காக தேசிய விவசாய ஆராய்ச்சி கட்டமைப்பை (NARS) உள்ளடக்கிய நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயல்பாட்டுத் திட்டங்களைச் சேகரித்தல் மற்றும் குறுகிய கால, நடுத்தர கால ஆராய்ச்சி முன்னுரிமைகளின் அடிப்படையில் செயல்பாட்டுத் திட்டங்களைப் பகுப்பாய்வு செய்தல். | 25 நிறுவனங்களிடமிருந்து ஆராய்ச்சி செயல்பாட்டுத் திட்டங்களைச் சேகரித்தல். | தேசிய விவசாய ஆராய்ச்சி கட்டமைப்பின் (NARS) 25 நிறுவனங்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. |
| அரசாங்கத்திற்குப் பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல். | ஒரு கொள்கைச் சுருக்கத்தை (Policy Brief) தயாரித்தல். | கொள்கைச் சுருக்க வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| தேசிய விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டம் (NARP) / நிறுவனங்களுக்கு இடையிலான ஆராய்ச்சித் திட்ட முன்மொழிவு முறைமையின் (IIMDRGS) கருத்துரு அறிக்கைகளை மதிப்பீடு செய்தல். | கிடைக்கப்பெறும் அனைத்து கருத்துரு அறிக்கைகளும். | 2025 ஆம் ஆண்டிற்காக 164 புதிய ஆராய்ச்சிக் கருத்துரு அறிக்கைகள் கிடைக்கப்பெற்று மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. |
| தேசிய விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளைத் தயாரித்தல். | உணவுப் பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள், மலர்ச் செய்கை, வனச் செய்கை, மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள், விலங்குகள் ஆகிய துறைகளை உள்ளடக்குதல். | உணவுப் பயிர்களுக்கான ஆராய்ச்சி முன்னுரிமைகளைத் தயாரிப்பதற்கான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. |
| தேசிய விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டம் (NARP) / நிறுவனங்களுக்கு இடையிலான ஆராய்ச்சித் திட்ட முன்மொழிவு முறைமையின் (IIMDRGS) திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்தல். | 2026 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்கப்பெறும் அனைத்துச் செயற்திட்டங்களும். | 2026 ஆம் ஆண்டிற்காக 125 செயற்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றதுடன், அவை வெளிவாரியான ஆய்வாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| ஆராய்ச்சி இடைவெளி பகுப்பாய்வு / ஆராய்ச்சி வெளியீடு பற்றிய கணக்கெடுப்பு (பட்டறைகள் / கணக்கெடுப்புகள்). | 03 பட்டறைகளை நடாத்துதல். | விவசாய ஆராய்ச்சிப் பணியாளர்களில் முதுகலை பட்டப்படிப்பு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களின் புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தும் 03 பட்டறைகள் நடாத்தப்பட்டன. |
| விவசாய ஆராய்ச்சி முகாமையாளர்களுக்கான தகவல் (INFORM) தரவுத்தள முகாமைத்துவம். | தகவல் வழங்க வேண்டிய தேசிய விவசாய ஆராய்ச்சி கட்டமைப்பின் (NARS) நிறுவனங்களின் எண்ணிக்கை 30. | பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டு, 2024 ஆம் ஆண்டிற்குரிய தரவுத்தளங்கள் சேகரிக்கப்பட்டன. |
| நிறுவனங்களின் வெளிவாரியான மீளாய்வு. | 05 நிறுவனங்கள் தெரிவு | நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், |

| செயல்பாடுகள் | இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| | செய்யப்பட்டன. | பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம், தாவர மரபணு வள மையம், விதைச் சான்றுப்படுத்தும் சேவை, பூச்சிக்கொல்லி பதிவாளர் அலுவலகம், கறுவா அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றில் வெளிவாரியான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. |
| மீளாய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் பின்தொடர் நடவடிக்கைகள். | 02 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டன. |
| தேசிய விருது விழா. | 2023 மற்றும் 2025 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான தேசிய விருது விழாக்களை நடாத்தத் திட்டமிடப்பட்டது. | 2023 மற்றும் 2025 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான தேசிய விருது விழா, 2025 ஆம் ஆண்டு 23-10-2025 அன்று கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. |
| வருடாந்த உரையாடல் பட்டறை. | வருடாந்த உரையாடல் பட்டறையை நடாத்தத் திட்டமிடப்பட்டது. | 2025 ஆம் ஆண்டின் வருடாந்த உரையாடல் பட்டறை டிசம்பர் மாதம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இயற்கை அனர்த்தம் (தித்வா சூறாவளி) காரணமாக அதனை நடாத்த முடியாமல் போனது. |
| நிறுவனங்களுக்கு இடையிலான ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் (IIMDRGS) நிதி வழங்கல். | நிறுவனங்களுக்கு இடையிலான பல்துறை ஆராய்ச்சிகளுக்கு நிதி வழங்கப்பட்டது (05 செயல்பாட்டிலுள்ள ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் மற்றும் 15 புதிய ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள்). | 15 நிறுவனங்களுக்கு இடையிலான பல்துறை ஆராய்ச்சிகளுக்கு நிதி வழங்கப்பட்டது. செயல்பாட்டிலுள்ள ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் பெறப்பட்டது. |
| இலங்கை உணவு மற்றும் விவசாய இதழ் (Sri Lanka Journal of Food and Agriculture). | 02 தொகுதிகள். | தொகுதி 8.1 மற்றும் 2 தொகுக்கப்பட்டுள்ளன. |
| SLCARP செய்தி மடல் (News Letter). | 01 தொகுதி. | தொகுப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| Agrinet மற்றும் நூலகம். | KOHA மென்பொருளுடன் நூலகத்தை மேம்படுத்தல், விழிப்புணர்வு பட்டறை மற்றும் 01 கூட்டம். | KOHA மென்பொருளைக் கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. Agrinet தொடர்பான 04 விழிப்புணர்வு பட்டறைகளும் 02 கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. |
| தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்புகளை விருத்தி | 02 பட்டறைகள், 10 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளித்தல். | சீன அயன மண்டல விவசாய அறிவியல் அகாடமி (CATAS) மூலம் NARS விஞ்ஞானிகள் 60 பேருக்கான பயிற்சி நிகழ்ச்சி |

| செயல்பாடுகள் | இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| செய்தல். ஆசிய பசுபிக் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களின் சங்கத்துடன் (APAARI) புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடல். | | நடாத்தப்பட்டது. APAARI கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. நேபாள விவசாய அமைச்சரின் வருகை. சீன அறிஞர்களின் வருகை. KOICA நிறுவனத்தினால் 20 உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். |
| விவசாய ஆராய்ச்சிகள் தொடர்பான சர்வதேச, தேசிய மற்றும் நிறுவனங்களுக்கு இடையிலான சிக்கல்கள் குறித்த கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல். | 1 சர்வதேச கருத்தரங்கு மற்றும் 02 தேசிய மாநாடுகள். | NARP - NUS மற்றும் IIMDRGS மானியங்கள் வழங்கும் விழா, DOA ஆராய்ச்சியாளர்களுக்கான முன்மொழிவு எழுதும் செயலமர்வு, கிளீன் ஸ்ரீ லங்கா (Clean Sri Lanka) கூட்டம், NARP ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளைப் பரப்புவதற்கான தேசிய விவசாய புத்தாக்க மாநாடு (NAIC 2025) மற்றும் பசுமையிலிருந்து பசுமைக்கு (GtoG – 2025) சர்வதேச ஆராய்ச்சி மாநாடு என்பன நடாத்தப்பட்டன. தாவரவியல் பூங்கா திணைக்களத்துடன் இணைந்து அலங்கார மலர்ச் செய்கை ஆராய்ச்சி தொடர்பான கருத்தரங்கு (2025-12-19) நடாத்தப்பட்டது. |
| விவசாய ஆராய்ச்சிப் பணியாளர்களின் முதுகலை பட்டப்படிப்பு பயிற்சி மற்றும் வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்களுடன் விஞ்ஞானிகளைப் பரிமாறிக் கொள்வதற்கான நடவடிக்கைகள். | 10 உத்தியோகத்தர்கள். | தொடர்ச்சியான நீண்டகாலப் பயிற்சிகளில் ஈடுபடும் மாணவர்களிடமிருந்து முன்னேற்றத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. |
| விவசாய ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளின் செயல்பாடுகளை அவ்வப்போது மீளாய்வு செய்தல். | 89 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல். | 2025 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் 89 அரையாண்டு அறிக்கைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. 34 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் கள முன்னேற்றம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. 30 ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் முன்னேற்றம் இணைய வழியாக (Online) மீளாய்வு செய்யப்பட்டது. |

புகைப்பட இலக்கம் 47 - 50

**குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.**

## *10. விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (FTF)*

### *10.1. அறிமுகம்*

*1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பொறுப்பு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் 2002 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் குறிக்கோள்கள் விரிவுபடுத்தப்பட்டமைக்கு இணங்கவும், விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது பின்வரும் குறிக்கோள்களுடன் இயங்கி வருகின்றது:*

- *இலங்கையின் விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாய சமூகத்தின் நலன்புரிச் சேவைகளை அபிவிருத்தி செய்தல்.*
- *சிறிய அளவிலான விவசாயிகளுக்குக் குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல்.*
- *சிறிய அளவிலான விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்கல்.*
- *சிறிய அளவிலான விவசாயிகளின் நிதிச் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்குச் சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல்.*
- *சிறிய அளவிலான விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலன்புரிச் சேவைகளுக்காக விழிப்புணர்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.*
- *பயிர் மற்றும் விலங்கு உற்பத்திச் செயன்முறைகள் மற்றும் உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்தல் என்பவற்றுக்கு சிறிய அளவிலான விவசாயிகளுக்குத் தேவையான ஏனைய உதவிகளை வழங்குதல்.*
- *விவசாய அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நோக்கில் விசேட விவசாய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.*

### *10.2. விவசாயிகளின் பொறுப்பு நிதியத்தின் பிரதான பணிகள்*

#### *i. மானியங்கள்*

*விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒதுக்கீடுகளின் கீழ், கமநல அபிவிருத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலகங்களின் ஊடாகப் பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.*

#### *ii. கடன்கள்*

- *பிராந்திய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படும் 'க்ருஷி சக்தி' கடன் திட்டத்தின் கீழ் செயற்திட்டக் கடன்களை வழங்குதல்.*
- ***விவசாய வங்கிகளுக்கான மேலதிக மூலதனத்தை வழங்கல்:** சிறிய அளவிலான விவசாயிகளுக்குக் குறுகிய கால கடன் வசதிகளை வழங்கும் நோக்கில், விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒதுக்கீடுகளின் கீழ் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் விவசாய வங்கி முன்னோடித் திட்டத்தின் ஊடாக இது செயல்படுத்தப்படுகிறது.*
- ***ஏனைய கடன்கள்:** விவசாய அவசரத் தேவைகளுக்காக கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்குக் கடன் தொகைகளை வழங்குதல். (உதாரணம்: நெல் கொள்வனவுக்காக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குதல்).*

#### *iii. முற்பணங்கள் (Advances)*

*கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக, ஒரு வருட காலத்திற்குள் மீளச் செலுத்தும் அடிப்படையில் வட்டி இல்லாத கடன் முற்பணங்களை வழங்குதல்.*

### *10.3. நடைமுறைப்படுத்தும் முறைமை*

*ஒவ்வொரு ஆண்டிற்கும் அனைத்து மாகாண சபைகள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகள், விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்படும். பணிப்பாளர் சபையானது*

குறித்த செயற்திட்டங்களை ஆராய்ந்து அங்கீகாரம் வழங்கும். அவ்வாறு அங்கீகரிக்கப்படும் செயற்திட்டங்கள் விவசாயிகளின் பொறுப்பு நிதியத்தின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் உள்வாங்கப்படும்.

### *10.4.* மானியங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

| தொ/ இல | செயற்திட்டம் | நோக்கம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | உண்மைத் தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| *i.* | அவசர வெள்ள நிலைமையினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு நிவாரணம் வழங்குதல் - *2023* முன்கொண்டு செல்லப்பட்டவை (கமநல சே. தி) | சேதங்களுக்கான திருத்தப் பணிகள் | *20.00* | *3.62* | *18* |
| *ii.* | பெண் விவசாய அமைப்புக்களின் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பெண் விவசாய அமைப்புக்களின் தலைவிகளுக்கான நிதி முகாமைத்துவ பாடநெறிக்கான கட்டணங்களைச் செலுத்தல் | உரிய துறையில் நிபுணத்துவம் கொண்ட ஒரு தொகுதியினரை நாடு முழுவதும் உருவாக்குவதற்காக | *10.00* | *7.04* | *70* |
| *iii.* | இடைப்போக பாசிப்பயறுப் பயிர்ச் செய்கை செயற்திட்டம் - *2024* | *10,903* விவசாயிகளுக்காக *18,063* ஏக்கர் செய்கை நிலப்பரப்பில் பாசிப்பயறுச் செய்கையை முன்னெடுப்பதற்காக விதை மானியம் வழங்கப்பட்டுள்ளது | *100.00* | *100.00* | *100* |
| *iv.* | நடுத்தர அளவிலான கோழி வளர்ப்பு அலகுகளை நிறுவும் செயற்திட்டம் (தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை) | முட்டைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக, குழந்தைகளின் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டை ஒழித்தல் மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் | *32.80* | *23.51* | *72* |
| *v.* | தேசிய புத்தரிசித் திருவிழா (அளுத் சஹால் மங்கல்லய) - *2025* | கலாசார உற்சவம் | *3.00* | | |

### *10.5.* விவசாயக் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

| தொ/ இல | செயற்திட்டம் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | உண்மைத் தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| *i.* | க்ருஷி சக்தி கடன் திட்டம் (பிராந்திய அபிவிருத்தி வங்கி) | *300.00* | *11.85* | *4* | *24* விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது |
| *ii.* | சிறிய அளவிலான விவசாயிகளுக்குக் குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்கல் (கமநல அபிவிருத்தித் திணைக்களம்) | *100.00* | *60.00* | *60* | |

புகைப்பட இலக்கம் *51 – 54*

## *11.* தேசிய உரச் செயலகம்

### *11.1.* அறிமுகம்

*1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரங்களை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்ளல்.*

### *11.2.* நோக்கு, செயற்பணி மற்றும் பணிகள்

*இலங்கையில் பயிர் செய்யப்படும் அனைத்து பயிர் வகைகளினதும் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்காக உரிய தர நிர்ணயத்துடன் கூடிய அசேதன மற்றும் சேதன உர வகைகள் வழங்கப்படுவதையும் அவற்றின் முறையான பாவனையையும் உறுதிப்படுத்தல் இந்த நிறுவனத்தின் தொலைநோக்காகும். மேலும் உரத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் வழிமுறைகளுக்கு அமைவாக உரிய அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து விஞ்ஞான ரீதியான சிபாரிசுகளின் அடிப்படையில் உரத் தேவையை மதிப்பீடு செய்தல், உர இறக்குமதி மற்றும் கையிருப்புகளை நிர்வகித்தல், உரிய தரத்தைக் கொண்ட உர வகைகளை விநியோகம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை உறுதி செய்தல், சேதன மற்றும் அசேதன உரப் பாவனையின் போது சூழல் நட்புடன் கூடிய முறையிலான உரப் பாவனையை ஊக்குவித்தல், விவசாய சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கைக் கொண்ட உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் உரப் பாவனைத் துறையில் காணப்படும் முறைகேடுகளை தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல் என்பன இதன் செயற்பணியாகும். 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரச் சட்டத்தை முறையாகச் நடைமுறைப்படுத்துவதே நிறுவனத்தின் பிரதான பணியாகும்.*

### *11.3.* நிறுவனத்தினால் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

- *இலக்கு 2 – பட்டினியை ஒழிப்பதன் மூலம் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணைத் தரத்தை அடைவதற்காக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.*
- *இலக்கு 12 – நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.*

### *11.4.* நிதி முன்னேற்றம் *(2025.12.31* ஆம் திகதிக்குரியது*)*

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதி முன்னேற்றத்தின் சதவீதம் % |
|---|---|---|---|
| மீண்டுவரும் | 3.55 | 2.98 | 84 |

*11.5.* **தேசிய உர செயலகத்தின் உள்ளகப் பிரிவுகளின் முன்னேற்றம்**

| **அனுமதிப்பத்திரப் பிரிவு** | | | | | |
|---|---|---|---|---|---|
| **தொ/ இல** | **பிரதான வேலைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள்** | **நிதி இலக்கு (மில். ரூபா)** | **நிதி முன்னேற்றம் (மில். ரூபா)** | **பௌதீக இலக்கு** | **பௌதீக முன்னேற்றம்** |
| *1* | *சேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய)* | *0.04* | *0.42* | *2* | *21* |
| *2* | *சேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதுப்பித்தல்)* | *0.81* | *0.21* | *54* | *14* |
| *3* | *உர இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய)*<br>*உர இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதுப்பித்தல்)* | *0.30* | *9.60* | *2* | *64* |
| *4* | *அசேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய)* | *17.6* | *10.30* | *176* | *103* |
| *5* | *அசேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதுப்பித்தல்)* | - | *0.15* | - | *1* |
| *6* | *உரக் கலவை தயாரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய)* | *0. 80* | *0.20* | *8* | *2* |
| *7* | *உரக் கலவை தயாரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதுப்பித்தல்)* | - | *4.65* | - | *31* |
| *8* | *சேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய)* | *5.80* | *2.70* | *58* | *27* |
| **மொத்தம்** | | ***25.35*** | ***28.23*** | *300* | *263* |

| **தொழில்நுட்பப் பிரிவு** | | | | | |
|---|---|---|---|---|---|
| **தொ/ இல** | **பிரதான வேலைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள்** | **நிதி இலக்கு (ரூபா.)** | **நிதி முன்னேற்றம் (ரூபாய்)** | **பௌதீக இலக்கு** | **பௌதீக முன்னேற்றம்** |
| *1* | *இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரங்களின் தரப் பரிசோதனைக்காக மாதிரிகளைப் பெறுதல்* | நிதி ஒதுக்கீடு தேவையில்லை | | *1900* | *1,382* |
| *2* | *உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சூழல் நட்பு உர மாதிரிகளைப் பெறுதல்* | | | | *129* |
| *3* | *உள்நாட்டு கலப்பு உர உற்பத்தியாளர்களின் உர மாதிரிகளைப் பெறுதல்* | | | | *417* |
| *4* | *மாவட்ட மட்டத்தில் விற்பனை நிலையங்களிலிருந்து பெறப்பட்ட உர மாதிரிகளின் ஆய்வுகூடப் பரிசோதனைக்கான கட்டணங்கள்* | *2.62* | - | | *264* |
| **மொத்தம்** | | - | - | *1900* | ***2,192*** |

| உர இறக்குமதிப் பிரிவு | | | | | |
|---|---|---|---|---|---|
| **தொ/ இல** | **பிரதான வேலைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள்** | **நிதி இலக்கு (ரூபா.)** | **நிதி முன்னேற்றம் (ரூபாய்)** | **பௌதீக இலக்கு** | **பௌதீக முன்னேற்றம்** |
| *1* | இரசாயன உர இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளைப் பரிசோதிப்பதற்கான கோப்புகளைத் தயாரித்தல் *(Order Approval)* | நிதி ஒதுக்கீடு தேவையில்லை | | *1,200* | *1,169* |
| *2* | இறக்குமதியின் பின்னர் சுங்கக் தீர்வை *(Customs Clearance)* நடவடிக்கைகளுக்காகப் பரிந்துரைகளைத் தயாரித்து சமர்ப்பித்தல் | | | *1,200* | *1,579* |
| *3* | ஆய்வுகூட அறிக்கைகளைப் பரிசோதித்து உர வகைகளுக்கான தீர்மானங்களை வழங்குவதற்குப் பரிந்துரைகளை முன்வைத்தல் | | | *1,200* | *1,528* |
| **மொத்தம்** | | - | - | ***3,600*** | ***4,276*** |

| விசாரணைப் பிரிவு | | | | | |
|---|---|---|---|---|---|
| **தொ/ இல** | **பிரதான வேலைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள்** | **நிதி இலக்கு (ரூபா.)** | **நிதி முன்னேற்றம் (ரூபாய்)** | **பௌதீக இலக்கு (அலகுகள்)** | **பௌதீக முன்னேற்றம் (அலகுகள்)** |
| *1* | தரமற்ற சேதன உரங்கள் தொடர்பான விசாரணைகள் | நிதி ஒதுக்கீடு தேவையில்லை | | | *37* |
| *2* | சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த உரக் கையிருப்புகள் தொடர்பான விசாரணைகள் | | | | - |
| *3* | சட்டவிரோத உர விற்பனை/விநியோகம் தொடர்பான விசாரணைகள் | | | | *63* |
| *4* | உர மானியப் பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகள் | | | | *5* |
| *5* | உர உற்பத்தித் திட்டங்கள் தொடர்பான விசாரணைகள் | | | | *3* |
| *6* | பயிர்ச் செய்கைகளுக்காக உரம் கிடைக்காமை தொடர்பான விசாரணைகள் | | | | - |
| *7* | உரக் கையிருப்புகளைக் கைப்பற்றுதல் தொடர்பான விசாரணைகள் | | | | *5* |
| *8* | பொதுவான உரப் பிரச்சினைகள் | | | | *13* |
| *9* | உரம் தொடர்பான நிறுவன உத்தியோகத்தர்களின் பிரச்சினைகளை விசாரித்தல் | | | | *1* |
| **மொத்தம்** | | - | - | - | ***127*** |

| உற்பத்தி ஊக்குவிப்புப் பிரிவு | | | | | |
|---|---|---|---|---|---|
| தொ/ இல | பிரதான வேலைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் | நிதி இலக்கு (ரூபா.) | நிதி முன்னேற்றம் (ரூபாய்) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
| *1* | உர விநியோகம் தொடர்பான மாவட்ட மட்டப் பரிசோதனைகள் | நிதி ஒதுக்கீடு தேவையில்லை | | *12* | *10* |
| *2* | உற்பத்தி தொடர்பான நிறுவனப் பரிசோதனைகள் | | | *12* | *20* |
| *3* | கள மாதிரிகளைச் சேகரித்தல் | | | *12* | *264* |
| **மொத்தம்** | | | | ***424*** | ***294*** |

| நிதிப் பிரிவு | | | | | |
|---|---|---|---|---|---|
| தொ/ இல | பிரதான வேலைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் | நிதி இலக்கு (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் (மில். ரூபாய்) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் |
| *1* | **தவணைக் கடன்** *(Term Loan)* | *8,663.62* | *8,663.62* | - | - |
| **மொத்தம்** | | ***8,663.62*** | ***8,663.62*** | **-** | **-** |

| தாபனப் பிரிவு | | | | | |
|---|---|---|---|---|---|
| தொ/ இல | பிரதான வேலைத்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் | முன்னேற்றம் | | | |
| | | நிதி (மில். ரூபாய்) | | | பௌதீக முன்னேற்றம் |
| | | செலுத்தப்பட்ட விலைப்பட்டியல்கள் | கையிலுள்ள விலைப்பட்டியல்கள் | பொறுப்புகள் | |
| *1* | அலுவலகத் தொலைபேசிக் கட்டணங்கள் | *0.29* | *0.03* | | |
| *2* | மின்சாரக் கட்டணங்கள் | *2.06* | *0.17* | | |
| *3* | அலுவலக வாடகைச் செலவுகள் | *17.73* | *1.61* | | |
| | துப்பரவுச் சேவைகள் | *0.26* | *0.02* | | |
| **மொத்தம்** | | ***20.34*** | ***1.84*** | **-** | **-** |

*நிறுவனத்தின் திட்டமிடல் பிரிவு, தரவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகியவற்றின் அனைத்து செயற்பாடுகளும் உரிய இலக்குகளுக்கு ஏற்ப 2025 ஆண்டுக்குள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.*

*11.6. தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்*

| செயற்திட்டம் / வேலைத்திட்டம் | நிதி | | | பௌதீக | | | பயனாளிகளின் எண்ணிக்கை | விவசாயத் துறைக்கு வழங்கப்பட்ட வினைத்திறனான பங்களிப்பு | இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) | பௌதீக இலக்கு | பௌதீக முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் (%) | | | |
| *(i)* சேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய) | *3.55* | *2.98* | *84* | *2* | *21* | *1,050* | இலங்கையில் நெல் உட்பட ஏனைய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகள் | இலங்கையில் நெல் உட்பட ஏனைய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குத் தரமான உரங்களை வழங்குதல் | நாடு முழுவதும் |
| *(ii)* சேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் (புதுப்பித்தல்) | | | | *54* | *14* | *26* | | | |
| *(iii)* உர இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய) | | | | *2* | *64* | *3,200* | | | |
| *(iv)* உர இறக்குமதி அனுமதிப்பத்திரம் (புதுப்பித்தல்) | | | | *176* | *103* | *59* | | | |
| *(v)* அசேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதிய) | | | | *0* | *1* | *0* | | | |
| *(vi)* அசேதன உர உற்பத்தி அனுமதிப்பத்திரம் (புதுப்பித்தல்) | | | | *8* | *2* | *25* | | | |
| *(vii)* உரக் கலவை தயாரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் (புதியது | | | | *0* | *31* | *0* | | | |
| *(viii)* உரக் கலவை தயாரிப்பதற்கான அனுமதிப்பத்திரம் (புதுப்பித்தல்) | | | | *58* | *27* | *47* | | | |

## *12. ஸ்டேட் பேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட்*

***11.1. அறிமுகம்***

*"லக் பொஹொர" மற்றும் "கொமர்ஷல் பொஹொர" ஆகிய வர்த்தக நாமங்கள் இலங்கை விவசாய மக்களிடையே நற்பெயர் பெற்றிருப்பதால், சேதன மற்றும் இரசாயன உரங்கள் உட்பட ஏனைய விவசாய உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்கும் இலாபகரமான வர்த்தக அலகுகளாக அவற்றைப் பேணுவதை நோக்கமாகக் கொண்டு, 21/0118/323/005 ஆம் இலக்க மற்றும் 2021.02.01 ஆம் திகதிய, CP/22/0706/514/001 ஆம் இலக்க மற்றும் 2022.05.30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானங்களின் படி, வரையறுக்கப்பட்ட லங்கா உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியவற்றை இணைத்து, 2024.07.11 ஆம் திகதி "ஸ்டேட் பெர்ட்டிலைசர் கம்பனி லிமிடெட்" நிறுவனம் நிறுவப்பட்டது.*

***12.2. தொலைநோக்கு***

*நிலையான மற்றும் தரத்தில் உயர்ந்த, சூழல் பாதுகாப்புடன் கூடிய நவீன விவசாயத் தீர்வுகளை வழங்குவதன் ஊடாகச் சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொள்வதற்காக விவசாயச் சமூகத்தை வலுப்படுத்தும் செயன்முறையில் முன்னிலை வகிப்பதன் மூலம், எதிர்கால சந்ததியினருக்கான உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.*

***12.3. செயற்பணி***

*இலங்கை விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்காக தரத்தில் உயர்ந்த உர வகைகள் மற்றும் உள்ளீடுகளை வழங்குவதன் ஊடாக விவசாய உற்பத்தித் திறனை அதிகரிப்பது எமது செயற்பணி ஆகும். அத்துடன் தரத்தில் சிறந்த விவசாய உள்ளீடுகளை, அவசியமான தொழில்நுட்ப வழிகாட்டல்களுடன் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக நாம் எந்நேரமும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.*

***12.4. நோக்கங்கள்***

*உரிய தரத்தைக் கொண்ட உர வகைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு விற்பனை செய்தல்.*

***12.5. பணிகள்***

*உர வகைகளை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்துதல், கலப்பு உர வகைகளைத் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல்.*

***12.6. நிதி முன்னேற்றம் (09 மாதங்களின் முன்னேற்றம்)***

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) (A) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) (B) | நிதி முன்னேற்றத்தின் சதவீதம் (%) (C) |
|---|---|---|---|
| நேரடி மற்றும் கலப்பு உர வகைகளை சந்தையில் விற்பனை செய்தல் | 7,516 | 4,718 | 64 |

***12.7. பௌதீக முன்னேற்றம் (09 மாதங்களின் முன்னேற்றம்)***

| விபரம் | பௌதீக இலக்கு (மெற்றிக் தொன்) | உண்மையான விற்பனை (மெற்றிக் தொன்) | பௌதீக முன்னேற்றத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|
| நேரடி மற்றும் கலப்பு உர வகைகளை சந்தையில் விற்பனை செய்தல் | 64,735 | 41,206 | 64 |

*இந்த நிறுவனம் ஒரு சுயநிதி நிறுவனம் என்பதால், 2025 நிதி ஆண்டிற்கான மதிப்பீட்டுத் தொகை (A) மூலமும், 31.12.2025 திகதி வரையிலான உண்மை விற்பனை நிதிப் பெறுமதி (B) மூலமும், உண்மை விற்பனைப் சதவீதமானது (C) மூலமும் முன்வைக்கப்பட்டுள்ளது.*

*இந்த நிறுவனத்தின் நிதி ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைவதால், இறுதி விற்பனை இலக்குகளை எட்டுவதற்கு இன்னும் ஒரு காலாண்டு காலம் எஞ்சியுள்ளது.*

***குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.***

## *13.* இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்பு சபை)

### *13.1.* அறிமுகம்

*இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை எனும் தேசிய உணவு ஊக்குவிப்பு சபை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டுள்ளது.*

### *16.2.* தொலைநோக்கு

*கிராமப்புற மக்கள் மற்றும் குறைந்த வசதி வாய்ப்புகளைக் கொண்ட மக்களின் கௌரவத்தை நிலைநாட்டுவதற்காக, அதனுடன் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதன் மூலம் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.*

### *16.3.* செயற்பணி

*மக்களை மற்றவர்களில் தங்கியிருக்கும் கலாசாரத்திலிருந்து விடுவித்து, பொருளாதாரச் சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்காக விவசாயம், கால்நடை மற்றும் அது சார்ந்த ஏனைய துறைகளில் நிபுணத்துவத்தை உருவாக்குவதற்கு அவசியமான பங்களிப்புடனான அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் நடைமுறைப்படுத்துதல்.*

### *13.4.* நோக்கங்கள்

*i.* *அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணங்க, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவர் நிலையங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.*

*ii.* *பொதுநலச் சேவைகள், சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தும்போது நிறுவனங்களுக்கும் ஏனைய சபைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்குதல்.*

*iii.* *விவசாய மற்றும் கைத்தொழில் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட குறிப்பிட்ட திட்டங்களுக்கு உதவி செய்தல், அந்தத் திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.*

*iv.* *விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான திட்டங்களைச் செயற்படுத்துவதில் அரச சார்பற்ற முகவர் நிலையங்களை ஊக்குவித்தல்*

*v.* *சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் வெளிநாடுகளிலுள்ள அது போன்ற ஏனைய நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.*

### *13.5.* நிதி முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை *(மில். ரூபாய்)* | செலவு செய்த தொகை *(மில். ரூபாய்)* | நிதி முன்னேற்றம் *(%)* |
|---|---|---|---|
| *மீண்டுவரும்* | *40.00* | *66.07* | *165* |

- ***அபிபிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்***

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை *(மில். ரூபாய்)* | செலவு செய்த தொகை *(மில். ரூபாய்)* | நிதி முன்னேற்றம் *(%)* |
|---|---|---|---|---|
| *1* | பொலித்தீன் உறைகளுக்குப் பதிலாக வாழை இலைகளினாலான பொதியிடலை அறிமுகப்படுத்தும் திட்டம் | *6.18* | *0.09* | *1* |
| *2* | சலுகை விலையில் ஆரோக்கியமான உணவு வேளையை அறிமுகப்படுத்தும் திட்டம் | *0.18* | *0.11* | *61* |
| *3* | நாரஹேன்பிட்டி நாற்றுக்கள் மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | *10.96* | *12.60* | *115* |
| *4* | தெஹிவளை அக்ரோ பிரெஷ் சுப்பர் விற்பனை நிலையம் | *43.33* | *45.10* | *104* |
| *5* | தெஹிவளை நாற்றுக்கள் மற்றும் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் | *6.92* | *9.30* | *134* |

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற் றம் (%) |
|---|---|---|---|---|
| 6 | I. விலங்கு உணவிற்காக 50,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்தல் | 6,604.23 | 123.55 | 2 |
| | II. உள்நாட்டுச் சோளத்தைக் கொள்வனவு செய்தல் | 2,101.38 | 1.04 | 0 |
| 7 | அரிசி வலுவூட்டல் திட்டம் | 1,047.23 | 103.52 | 10 |
| 8 | தனமல்வில மற்றும் புத்தல பண்ணைகளில் முறையே 15 மற்றும் 10 ஏக்கர் நிலப்பரப்பிற்கான நில அபிவிருத்திப் பணிகள் | 1.96 | 1.94 | 99 |
| 9 | இடைப்போக பாசிப்பயறு செய்கைத் திட்டம் | 1.66 | 95.03 | 5,725 |

### *13.6. பௌதீக முன்னேற்றம்*

#### *i. வாழை இலை பொதி தாள் உற்பத்தித் திட்டம்*

*தற்போது தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் கீழ் உள்ள தெஹிவளை விற்பனை நிலையத்தில், உணவுப் பொதி தாள்களாக உயிரியல் உறைகளை உற்பத்தி செய்து பிரபல்யப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக நிறுவப்பட்டுள்ள மின்சாரத்தினால் இயங்கும் இயந்திரமொன்றின் மூலம் வாழை இலைகளைப் பயன்படுத்தி உணவு பொதி தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த இயந்திரம் மூலம் ஒரு மணித்தியாலத்திற்கு குறைந்தது 150 பொதி தாள்களைத் தயாரிக்க முடியும். ஒரு பொதி தாளின் விற்பனை விலை சுமார் 10.00 ரூபாயாகும். இதுவரை 2,520 வாழை இலை பொதி தாள்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம்: 55*

#### *ii. சலுகை விலையில் ஆரோக்கியமான உணவு வேளையை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம்*

*மக்களிடையே ஆரோக்கியமான உணவு முறையை ஊக்குவிக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, டொரிங்டனில் "சுகுண சப்பாயம" Torrington, Good Market - Saturday special எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாயத் தொழில்நுட்பம் மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்தின் மாணவர் குழுவினால் இந்த விற்பனைச் சாவடி ஆரம்பிக்கப்பட்டு, 2025 மே 03 முதல் 2025 ஜூலை 05 வரை ஒவ்வொரு சனிக்கிழமையும் நடத்தப்பட்டது. இது கொழும்பு நகர மக்களின் வரவேற்பு குறித்துப் புரிந்துகொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு சாத்தியக்கூறு ஆய்வு ஆகும். அங்கு திரட்டப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகளின் அடிப்படையில், கொழும்பு கோட்டையிலுள்ள ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் பிரதான அலுவலகத்தில் தனியார் துறையின் பங்களிப்புடன் 2025 செப்டம்பர் முதல் வாரத்தில் "சுகுண சப்பாயம" ஆரம்பிக்கப்பட்டது.*

*புகைப்பட இலக்கம்: 56*

- ***சலுகை விலையில் ஆரோக்கியமான உணவு வேளையை அறிமுகப்படுத்தும் திட்டம் - கொழும்பு டெலிகொம் நிறுவனம்:***

*எமது சபையினால் ஊட்டச்சத்துமிக்க உணவு வேளையைச் சலுகை விலையில் நுகர்வோருக்கு வழங்கும் செயற்திட்டம் "சுகுண சப்பாயம" எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் சிற்றுண்டிச்சாலையில் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், அங்கு பணியாற்றுவதற்கு எமது நிறுவனத்தில் போதுமான ஊழியர்கள் இல்லாத காரணத்தினால், வெளிவாரியான நிறுவனம் ஒன்றின் மூலம் அந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய, இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 3 "சுகுண சப்பாயம" உணவகங்கள் நிறுவப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம்: 57*

***iii. நாற்று விற்பனை நிலையம் மற்றும் வீட்டுத்தோட்டம் - நாரஹேன்பிட்டி***

*கிராமப்புற மக்களைப் போலவே நகர்ப்புற மக்களும் தமது வீட்டுத் தோட்டத்தில் தமக்குத் தேவையானவற்றை முடிந்தவரை பயிரிட்டுப் பயன்படுத்துவதற்குத் தூண்டும் வகையில், நகர்ப்புறவாசிகளுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக்குத் தேவையான அனைத்து வகையான காய்கறி நாற்றுகள் உள்ளிட்டவற்றைச் சலுகை விலையில் வழங்கும் நோக்குடன் நாரஹேன்பிட்டி நாற்றுமேடை மற்றும் விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு மருதத்துவப் பயனுள்ள நாற்றுகள். மலர்க் கன்றுகள், பழக் கன்றுகள் (குறிப்பாக அதிகம் குறைபாவனையுள்ள பழ வகைகள்), பழம் மற்றும் காய்கறி விதைகள், காய்கறி மற்றும் மலர் உரங்கள், சேதன உரங்கள், பூச்சி விரட்டிகள், விவசாய உபகரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய முடியும். அத்துடன் பயிர்ச் செய்கை தொடர்பான ஆலோசனைகளையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். இங்கு இதுவரை 30,000 கன்றுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம்: 58*

***iv. நாற்று விற்பனை நிலையம் - தெஹிவளை***

*நாரஹேன்பிட்டி விற்பனை நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் அனைத்து விற்பனை நடவடிக்கைகளும் தெஹிவளை நிலையத்தின் மூலமும் முன்னெடுக்கப்படுகின்றன. வருமானமாக 7.85 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளதுடன், இவ்வருடச் செலவு 9.30 மில்லியன் ரூபாய் ஆகும். இந்தச் செயற்திட்டத்தின் மூலம் சுமார் 28,000 கன்றுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

***v. விவசாய உற்பத்திப் பொருட்கள் மற்றும் உணவு விற்பனை நிலையம் - தெஹிவளை***

*இத்திட்டத்தின் கீழ் இவ்வருடச் செலவு 45.10 மில்லியன் ரூபாய் ஆகும். வருமானமாக 43.33 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்: 59*

***சோள செயற்திட்டம்***

- ***சோளம் இறக்குமதித் திட்டம்:***

*கோழி வளர்ப்பில் சோளம் ஒரு பிரதான உணவாகப் பயன்படுத்தப்படுவதால், இலங்கையின் கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியாளர்களிடையே இதற்கு அதிகத் தேவை நிலவுகிறது. இலங்கையில் ஆண்டுக்கு 200,000 மெற்றிக் தொன் சோளம் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், அது வருடாந்தத் தேவையின் 50% மட்டுமே பூர்த்தி செய்கிறது.*

*தற்போது தனியார் நிறுவனங்கள் சோளத்தை இறக்குமதி செய்வதால், அவர்கள் ஒரு ஏகபோக உரிமையைக் கொண்டுள்ளனர். இதன் காரணமாகக் கோழித் தீவன விலை அதிகரிப்பதுடன், கோழி வளர்ப்பு விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதற்கமைய, தனியார் துறையின் உதவியுடன் 50,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்யவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் நிர்வாகக் கட்டணமாக 512.90 மில்லியன் ரூபாய் நிகர வருமானம் கிடைத்துள்ளது.*

- ***உள்நாட்டுச் சோளத்தைக் கொள்வனவு செய்தல்:***

*தனியார் துறையுடன் இணைந்து தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு 6,955 கிலோகிராம் உள்நாட்டுச் சோளம் வழங்கப்பட்டது. சோளத்திற்குச் சந்தையில் ஒரு நிலையான விலையை ஏற்படுத்துவதற்காக, விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை தலையிட்டுச் செயற்பட்டது. எனினும், 2025 ஆம் ஆண்டில் உள்நாட்டுச் சோள அறுவடைக்கு விவசாயிகளுக்கு அதிக விலை கிடைத்தமையினால் எமது சபையின் தலையீடு அவசியப்படவில்லை.*

***vii. அரிசி வலுவூட்டல் திட்டம் (Rice Fortification Project)***

*ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டில் 500,000 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்காக வலுவூட்டப்பட்ட அரிசியை பதப்படுத்தும் பணி எமது சபையின் கலன்குட்டிய தொழிற்சாலையில்*

*நடைபெறுவதுடன் இது உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடன் நடைபெற்று வருகிறது. இந்த செயற்திட்டத்தின் செலவு 103.52 மில்லியன் ரூபாய் ஆகும். வருமானமாக 202.47 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது. இதுவரை 347 மெற்றிக் தொன் வலுவூட்டப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்: 60*

***viii. தனமல்வில மற்றும் புத்தல பண்ணைகளில் முறையே 15 மற்றும் 10 ஏக்கர் நில அபிவிருத்தி***

*புத்தல பண்ணையில் விலங்கு உணவிற்காக 6 ஏக்கர் நிலப்பரப்பில் சோளம் பயிரிடப்பட்டுள்ளதுடன், 16 மெற்றிக் தொன் சோளம் விலங்கு உணவிற்காக அம்பேவளை பண்ணைக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்: 61*

***ix. இடைப்போக பாசிப்பயறு செய்கைச் செயற்திட்டம்***

*தற்போது இலங்கையில் பாசிப்பயறுச் செய்கை நிலப்பரப்பு சுமார் 9,100 ஹெக்டேயர் ஆகும். வருடாந்த உற்பத்தி சுமார் 13,000 மெற்றிக் தொன் ஆகும். எனினும், வருடாந்தத் தேவை சுமார் 20,000 மெற்றிக் தொன் ஆகும். ஒரு ஹெக்டேயருக்கான அறுவடை 1.1 முதல் 2.0 மெற்றிக் தொன் வரை வேறுபடுகிறது. தற்போது பாசிப்பயறு இறக்குமதி செய்யப்பட்டு வரும் நிலையில், உற்பத்தியை அதிகரிக்க இடைப்போகச் செய்கையையும் ஓரளவுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். பாசிப்பயறு கொள்வனவின் போது, எதிர்பார்த்ததை விட அதிக அறுவடையை விவசாயிகள் எமது சபைக்கு வழங்கியுள்ளனர். இவ்வாறு கொள்வனவு செய்த பாசிப்பயறை மீண்டும் சந்தையில் விற்பனை செய்ததன் மூலம் ஈட்டப்பட்ட 63.50 மில்லியன் ரூபாய் வருமானம், கமத்தொழில் அமைச்சின் ஊடாக திறைசேரிக்கு செலுத்தப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 62*

***குறிப்பு: இந்நிறுவனத்தினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.***

## *14. இலங்கை ஹதபிம அதிகாரசபை (தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை)*

### *14.1. தொலைநோக்கு*

*காணிகள் மற்றும் இயற்கை வளங்களின் நிலைபேறான முகாமைத்துவத்திற்கான சேவைச் சிறப்பின் ஊடாக, பசுமையான சூழலையும் செழிப்பான விளைச்சலையும் கொண்ட ஒரு நாட்டை உருவாக்குதல்.*

### *14.2. செயற்பணி*

*பயனுறுதிமிக்க நில முகமைத்துவம் மற்றும் முறையான நீர் பாதுகாப்பு மற்றும் உச்ச அளவிலான மனிதவளப் பயன்பாடு ஆகியவற்றின் ஊடாக சூழல் வளங்களைப் பாதுகாப்பதற்கும் விவசாயப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் தேவையான பங்களிப்பை வழங்குதல்.*

### *14.3. குறிக்கோள்கள்*

*1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2026/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் பின்வருமாறு;*

- *i.) விவசாய பல்வகைப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர்ப்பிடிப்பு முகாமைத்துவம் ஆகியவற்றிற்கான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அரசாங்க அல்லது அரச சார்பற்ற முகவர் நிறுவனங்கள் ஊடாக அத்திட்டங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்துதல்.*
- *ii.) கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட அனைத்து காணிகளையும், அதிகபட்ச உற்பத்தித் திறன், சூழல் பாதுகாப்பு, நிலம் மற்றும் நீர் வளப்*

*பாதுகாப்பு மற்றும் குடியேற்ற அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் நிர்வகித்தல்.*

*iii.) விவசாய உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல்.*

*iv.) விவசாயப் பன்முகப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தி என்பவற்றுக்கு அவசியமான வசதிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றை நிறுவுதல், அவற்றை பராமரித்தல் மற்றும் இயக்குதல்.*

*v.) (1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட பிரதேசங்களில் விவசாயப் பன்முகப்படுத்தல், குடியேற்ற அபிவிருத்தி மற்றும் நீர்ப்பிடிப்பு முகாமைத்துவம் ஆகியவற்றைச் செயற்படுத்துவதற்குத் தேவையெனக் கருதப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல்.*

*vi.) வர்த்தக ரீதியிலான விவசாயப் பயிர்ச் செய்கை அல்லது வேறு ஏதேனும் விவசாய வணிகங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விவசாயத் துறை சார்ந்த முதலீடுகளை ஊக்குவித்தல் மற்றும் உதவி வழங்குதல்.*

*vii.) அதிகார சபையுடன் இணைந்தோ அல்லது இணையாமலோ அரச சார்பற்ற முகவர் நிறுவனங்கள், தனியார் துறை அல்லது விவசாயிகளினால் பொறுப்பேற்கப்பட்ட அத்தகைய விவசாய முதலீடுகளை உருவாக்குவதற்கான திட்டமிடல் மற்றும் அத்திட்டங்களைச் செயற்படுத்துதல், சேவைகளை வழங்குதல் மற்றும் நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.*

*viii.) (அ) "விவசாயம்" என்பது பயிர்ச் செய்கைத் துறைக்குத் தேவையான பௌதீக உள்ளீடுகளை வழங்குதல் மற்றும் உள்நாட்டு, சர்வதேச சந்தை தேவைகளை இலக்காகக் கொண்டு விவசாய மூலப்பொருட்களை மாற்றியமைத்தல், விநியோகித்தல் அல்லது வேறு வழிகளில் அதற்குப் பெறுமதி சேர்த்தலை மேற்கொள்ளும் ஏதேனும் ஒரு வணிகம் அல்லது நிறுவனத்தைக் குறிக்கும்.*

*ix.) (ஆ) "வர்த்தகப் பயிர்ச் செய்கை" என்பது சந்தையை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை, கால்நடை வள வளர்ப்பு, தோட்டக்கலை, மலர்ச் செய்கை மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு என்பவற்றை உள்ளடக்கும்.*

*x.) (இ) ஏனைய விவசாய முயற்சிகள் என்பதில் திசு வளர்ப்பு, சேதன உர உற்பத்தி, உணவு மற்றும் உணவுக்குப் பயன்படுத்தக்கூடிய எண்ணெய் வகைகளைப் பதப்படுத்துதல், மருத்துவப் பயிர்களைப் பயன்படுத்தி மருந்து உற்பத்தி செய்தல், விவசாயச் சுற்றுலாத்துறை முயற்சிகள், விவசாய இயந்திரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உபகரண உற்பத்தி மற்றும் விவசாயம், தோட்டக்கலை மற்றும் பெருந்தோட்டப் பயிர்களை அடிப்படையாகக் கொண்ட அத்தகைய ஏனைய கைத்தொழில்கள் உள்ளடங்கும்.*

### *14.4. நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 01 | மூலதன | 338.00 | 243.75 | 72 |
| 02 | மீண்டுவரும் | 172.00 | 153.51 | 89 |

### *14.7. பௌதீக முன்னேற்றம்*

***விடயப்பரப்பு 01 : நிலப் பயன்பாட்டுத் திறனை உச்ச அளவிற்கு கொண்டு வருதல்.***

***1.1. மண் அரிப்பு மற்றும் மண் தரமிழப்பைக் குறைப்பதற்காக விவசாய நிலங்களில் மண் பாதுகாப்பு கட்டமைப்புகளை நிறுவுதல்.***

*மத்திய மலைநாடு சார்ந்த விவசாய நிலங்கள் அதிக மழைவீழ்ச்சி, காடழிப்பு, நிலப் பயன்பாட்டு முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், நகரமயமாக்கல் மற்றும் மனித செயல்பாடுகள் காரணமாக மண் அரிப்புக்கும் மண் தரமிழப்பிற்கும் உள்ளாகியுள்ளன. மண் அரிப்பினால் ஏற்படும் பக்கவிளைவு என்னவென்றால், அரிக்கப்படும் மண் துகள்கள் நீருடன் அடித்துச் செல்லப்பட்டு நீர்த்தேக்கங்களில் படிவதாகும். இதனால் நீர்த்தேக்கங்களின் நீரைத் தேக்கி*

வைக்கும் கொள்ளளவு குறைவடைந்து, நீர்மின் உற்பத்தியில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அத்துடன் நிலச்சரிவுகள் ஏற்படல், ஆற்றுப்படுக்கைகள் அரிப்படைதல், நீர்ப்பாசன வழிகள் தடைப்படுதல் மற்றும் வறட்சி போன்ற பாதகமான விளைவுகள் மண் அரிப்பின் மூலம் ஏற்படுகின்றன. இலங்கையில் விவசாய நிலங்களின் உற்பத்தித் திறன் குறைவதற்கு மண் அரிப்பே பிரதான காரணமாக அமைகின்றது. எனவே, விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு மண் பாதுகாப்பு இன்றியமையாததாகும்.

விவசாய நிலங்களில் மண் பாதுகாப்பு 3முறைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது:

| | வகை | பாதுகாப்பு முறைகள் |
|---|---|---|
| I. | இயந்திரவியல் பாதுகாப்பு | கற்கள் மற்றும் மண் வரம்புகள், குழிகள், மலைப்பாங்கான அடுக்கு நிலங்கள், சமவுயர மேடைகள். |
| II. | உயிரியல் பாதுகாப்பு | வெட்டிவேர் வரம்புகள், மூடுபயிர்கள், புல் வரம்புகள், இரட்டை வரம்புகள், காடாக்கம், காற்றுத் தடுப்பு வரம்புகள், பல்லாண்டுப் பயிர்ச் செய்கை. |
| III. | பயிர்ச் செய்கை முறைசார் பாதுகாப்பு | சமவுயர நிலப் பண்படுத்தல், சேதன உரமிடல், தழைக்கூளம் இடுதல், குறைந்தபட்ச நிலப் பண்படுத்தல் மற்றும் ஊடுபயிர்ச் செய்கை. |

விவசாய நிலங்களின் சரிவு மற்றும் அதன் தன்மையை இனங்கண்டு, இந்த மண் பாதுகாப்பு முறைகளில் ஒன்று அல்லது பலவற்றைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியும்.

இலங்கை ஹதபிம (Hadabima) அதிகார சபையின் பிரதான நோக்கம் நிலப் பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பதாகும். அதற்கமைய இயந்திரவியல், உயிரியல் மற்றும் பயிர்ச் செய்கை முறைசார் வழிமுறைகள் மூலம் நிலப் பயன்பாட்டுத் திறனை உயர்த்துவதற்காக, தெரிவு செய்யப்பட்ட நீர்ப்பிடிப்புப் பிரதேசங்களில் விவசாயிகளுடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் 800 ஹெக்டேயர் விவசாய நிலங்களில் மண் பாதுகாப்பு கட்டமைப்புகளை நிறுவத் திட்டமிடப்பட்டதுடன், பயனாளிகளுக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குவதற்காக 28.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 771.14 ஹெக்டேயர் விவசாய நிலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 26.99 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 63

### 1.2. சேதன உர உற்பத்தி மற்றும் பயன்பாட்டைப் பிரபல்யப்படுத்துதல்

மண் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிப்பதன் ஊடாகச் செழுமையான மண் வளத்தை உருவாக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சேதன உரங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல், அவ்வாறு வெற்றிகரமாக உர உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விவசாய உபகரணத் தொகுதிகளை வழங்குதல் மற்றும் தரமான சேதன உர உற்பத்திக்குத் தேவையான ரொக் பொஸ்பேட் ஆகியவற்றை வழங்கத் திட்டமிடப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் 2,600 மெற்றிக் தொன் சேதன உர உற்பத்தி செய்வதற்காக 2,600 விவசாய உபகரணத் தொகுதிகளை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதற்கமைய மண்வெட்டித் தகடு, மண்வெட்டி முள், மண் சட்டி, மண்வாரி மற்றும் பூவாளி ஆகியவற்றை உள்ளடக்கிய உபகரணத் தொகுதியை வழங்கத் திட்டமிடப்பட்டு, அதற்காக 26.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. மேலும், அந்த உர உற்பத்தியின் மேலும் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் 130,000 கிலோகிராம் எப்பாவல ரொக் பொஸ்பேட் உரத்தை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டு, அதற்காக 3.25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

*2025 ஆம் ஆண்டின் இறுதியில், சேதன உர உற்பத்திக்கு வழங்கும் 2,600 உபகரணத் தொகுதிகளும், 130,000 கிலோகிராம் ரொக் பொஸ்பேட்டும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்காக விவசாய உபகரணத் தொகுதிகளுக்கு 10.43 மில்லியன் ரூபாயும், ரொக் பொஸ்பேட் உரத்திர்காக 3.06 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்: 64*

***1.3. மண் பாதுகாப்புக்கான தொழில்நுட்ப உபகரணப் பயன்பாட்டைப் பிரபல்யப்படுத்துதல்***

*மண் பாதுகாப்பு கட்டமைப்புகளை நிறுவும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், விவசாய நிலங்களில் சமவுயரக் கோடுகளை அடையாளம் காணுதல் உள்ளிட்ட பணிகளுக்காக நவீன தொழில்நுட்பக் கருவிகளின் (ரோட் ரேசர் / சரிவுமானி / மண் பரிசோதனைத் தொகுதிகள்) பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டது. அதற்கமைய, 0.99 மில்லியன் ரூபாய் செலவில் மண் பாதுகாப்பிற்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.*

***விடயப்பரப்பு 02 : பாதுகாக்கப்பட்ட நீர்வளம்***

***2.1. நீர் மூலாதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் மூலாதாரங்கள் சார்ந்த வசதிகளை வழங்குதல்***

*பல்வேறு மனிதச் செயல்பாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள நீர் மூலாதாரங்களையும் அதனைச் சூழவுள்ள சூழலமைப்பையும் பாதுகாத்தல், நீர்வாழ் தாவரங்களை நடுவதன் மூலம் பல்லுயிர்த்தன்மையைப் பாதுகாத்தல், அப்பிரதேச மக்களின் குடிநீர் தேவையையும் விவசாய நடவடிக்கைகளுக்கான நீர் தேவையையும் பூர்த்தி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*2025 ஆம் ஆண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட நீர்ப்பிடிப்புப் பிரதேசங்களிலுள்ள 52 நீர் மூலாதாரங்களைப் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டது. அதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 62.40 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 52.60 மில்லியன் ரூபாய்செலவில் 52 நீர் மூலாதாரங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 65*

***2.2. நீரேந்துப் பகுதி பாதுகாப்பு***

*நீரேந்துப் பகுதிகளை நிலைபேறான முறையில் பயன்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மர நடுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டது. அதற்காக 15,000 நீர்வாழ் தாவரக் கன்றுகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டதுடன், அதற்கென 3.00 மில்லியன் ரூபாய் நிதி மதிப்பிடப்பட்டது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது 13,379 நீர்வாழ் தாவரக் கன்றுகள் நீரேந்துப் பகுதிகளில் நடப்பட்டதுடன், அதற்காக 1.73 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 66*

***2.3. சமூகப் பங்களிப்புடன் கூடிய நீர்மூல பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்***

*நீர்மூலங்களைச் சூழவுள்ள பகுதிகளைப் பாதுகாப்பதன் மூலம் குடிநீர் தேவைக்காகச் சுத்தமான நீரைப் பெற்றுக்கொள்ளுதல், பல்வேறு மானிடச் செயற்பாடுகள் காரணமாகச் சீரழிந்துள்ள நீர்மூலங்களைச் சூழவுள்ள சூழலைத் தூய்மைப்படுத்துதல் மற்றும் சூழலைப் பாதுகாத்தல் என்பவற்றுக்காகச் சமூகப் பங்களிப்புடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். அதற்கமைய, 2025 ஆம் ஆண்டிற்காக இத்தகைய 52 நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டதுடன், அதற்காக 1.56 மில்லியன் ரூபாய் நிதி மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளுக்குள் 48 தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக 1.53 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 67*

***விடய எல்லை 03: உணவுத் தாராளத்தன்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பவை உறுதிப்படுத்தப்பட்ட ஆரோக்கியமான மற்றும் செழிப்பான சமூகம்***

***3.1 வீட்டுத் தோட்டச் செய்கை மேம்பாடு***

***3.1 வர்த்தக ரீதியிலான வீட்டுத் தோட்டச் செய்கை மேம்பாடு***

*2025 ஆம் ஆண்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட நீரேந்துப் பகுதிகளுக்குள் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், நஞ்சற்ற உணவு உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் விவசாயிகள் சந்தையில் தங்கியிருப்பதை இயன்றவரை குறைத்து பொருளாதார நிலையை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு, வீட்டுத் தோட்டச் செய்கைக்காக விவசாயிகளை ஊக்குவிக்கும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாக இது நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய, தெரிவு செய்யப்பட்ட பயன்பெறுநர்களை ஊக்குவிப்பதற்காக வீட்டுத் தோட்ட நாற்றுத் தொகுதிகள், வீட்டுத் தோட்ட விவசாய உபகரணத் தொகுதிகள் மற்றும் சேதனத் திரவச் சாறு என்பவற்றை வழங்கத் திட்டமிடப்பட்டது. இதில் வர்த்தக ரீதியிலான வீட்டுத் தோட்டச் செய்கைக்காக கத்தரிக்காய், மிளகாய், கறிமிளகாய், தக்காளி மற்றும் 'நை மிரிஸ்' வகை மிளகாய் போன்ற வர்க்கங்களில் ஒன்று அல்லது இரண்டு பயிர்களைப் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன், ஒரு விவசாயிக்கு சுமார் 300 நாற்றுகளைக் கொண்ட 30 நாற்றுப் சாடிகள் மற்றும் 2 போத்தல் சேதனத் திரவச் சாறு வீதம் வழங்க எதிர்பார்க்கப்பட்டது.*

*அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் 52 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் 1700 வீட்டுத் தோட்டங்களுக்கு நடுகைப் பொருட்கள் மற்றும் விவசாய உபகரணத் தொகுதிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டதுடன், அதற்காக 25.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த விவசாய உபகரணத் தொகுதியில் 16 லீற்றர் தெளிப்பான் கருவி, 30 மீற்றர் நீர்க்குழாய், பயிர்ச் செய்கைத் தட்டு மற்றும் 84 பயிர்ச் செய்கைப் பைகள் உள்ளடங்குகின்றன. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 1700 விவசாய உபகரணத் தொகுதிகள், நடுகைப் பொருட்களான 61,567 வீட்டுத் தோட்ட நாற்றுகள் மற்றும் சேதனத் திரவச் சாறு என்பன பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 21.10 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 68*

***3.2. பொருளாதாரப் பயிர்ச் செய்கை மேம்பாடு***

*தேங்காய், பாக்கு, மிளகு, வெனிலா, வெற்றிலை, கறுவா, கோப்பி மற்றும் எலுமிச்சை போன்ற பொருளாதாரப் பயிர்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உதவி வழங்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்கமைய, 93,000 பொருளாதாரப் பயிர் நாற்றுகளை வழங்கத் திட்டமிடப்பட்டதுடன், அதற்காக 10.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 61,567 நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 4.87 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செலவிடப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 69*

***3.4. மேலதிக உணவுப் பயிர் மேம்பாடு***

***உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் விவசாயிகளுக்கு மேலதிக வருமான மார்க்கங்களை உருவாக்குதல்***

*உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் விவசாயிகளுக்கு மேலதிக வருமான மார்க்கங்களை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு 2025 ஆம் ஆண்டிற்கான மேலதிக உணவுப் பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டது. இதன் மூலம் 300 ஹெக்டேயரில் மேலதிக உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்காகப் தட்டைப்பயறு, பாசிப்பயறு, நிலக்கடலை, கேழ்வரகு, மிளகாய் மற்றும் சோளம் என்பவற்றை விவசாயிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டது.*

*அதற்காக 9.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், மாத்தளை, அனுராதபுரம், பதுளை, குருநாகல் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டு முடிவடையும்*

*போது 185.36 ஹெக்டேயரில் மேலதிக உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதுடன், இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 8.34 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 70*

***3.4. சீரமைவான விவசாயத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கலப்பின மிளகாய் செய்கையைப் பிரபல்யப்படுத்தும் முன்னோடிச் செயற்திட்டம்***

*நவீன தொழில்நுட்ப முறைகளுக்கமைய கலப்பின மிளகாய் செய்கையைப் பிரபல்யப்படுத்தி, 10 மிளகாய் செய்கை தொழில் முனைவோரை உருவாக்குவதற்கு இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. அதற்கமைய, 10 பயனாளிகளுக்கு 5.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 0.09 மில்லியன் ரூபாய் செலவில் மிளகாய் விதைகள் கொள்வனவு செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனினும், நாடு முழுவதும் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இந்த முன்னோடிச் செயற்திட்டத்தின் எஞ்சிய பணிகள் 2026 ஆம் ஆண்டில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 71*

***3.5. பயிர்ச் செய்கைகளுக்கு வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் (50% பங்களிப்பின் கீழ்)***

*இலங்கையில் வன விலங்குகளால் வருடாந்தம் ஏற்படும் பயிர்ச் சேதம் 40% என ஆராய்ச்சி அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன. இதனால் வன விலங்கு பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக விவசாயிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு, விவசாயிகள் பயிர்ச் செய்கை மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கான சேவைகளை வழங்குவதற்காக இலங்கை ஹதபிம அதிகார சபையினால் ஓர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக 2023 ஆம் ஆண்டில் இது ஆரம்பிக்கப்பட்டது. பயன்பெறும் பயனாளிகளிடமிருந்து 50% பங்களிப்பைப் பெற்றுக்கொண்டு மின்சார வேலி மற்றும் வாயுத் துப்பாக்கிகளை (Air Rifles)வழங்கத் திட்டமிடப்பட்டது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டிலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*புகைப்பட இலக்கம் 72*

*2025 ஆம் ஆண்டில் 1,000 வாயுத் துப்பாக்கிகளை வழங்குவதற்காக 26.00 மில்லியன் ரூபாயும், 100 மின்சார வேலிகளை வழங்குவதற்காக 10.00 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டன. 998 வாயுத் துப்பாக்கிகளுக்காகப் பயனாளிகளின் 50% பங்களிப்பின் கீழ் நிதி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது 370 வாயுத் துப்பாக்கிகள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 628 வாயுத் துப்பாக்கிகளை 2026 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மின்சார வேலிகளுக்காக நிதி செலுத்திய 43 பயனாளிகளுக்குத் தேவையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

**விடய எல்லை 04: தெரிவு செய்யப்பட்ட நீர்ப்பகுதிகள் சார்ந்து சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து, அறிவு மற்றும் தொழில்நுட்பத்தினால் வலுவூட்டப்பட்ட புதிய விவசாயத் தொழில் முனைவோரை உருவாக்குதல்.**

***4.1. வர்த்தக ரீதியிலான தேனீ வளர்ப்பிற்கு ஊக்குவித்தல் (50% பங்களிப்பின் கீழ்)***

*தேனீ வளர்ப்பில் வர்த்தக ரீதியாக ஈடுபடும் விவசாயச் சமூகத்தை மேலும் வலுவூட்டுவதற்காகத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் உள்ளீடுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதற்கமைய, பயனாளிகளின் செயற்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் சாத்தியமான 113 நிலைபேறான செயற்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டன. இதற்காக 2.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், அந்த நிதியில் 2.49 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுத் தேவையான உள்ளீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.*

*புகைப்பட இலக்கம் 72*

***4.2. காளான் உற்பத்தித் தொழில் முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பின் கீழ்)***

*வர்த்தக ரீதியாகக் காளான் உற்பத்தியில் ஈடுபடும் தொழில் முனைவோரை அடையாளம் கண்டு, 50% சமூகப் பங்களிப்பின் கீழ் அவர்களை மேலும் வலுவூட்டுவதே இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். அதற்கமைய, இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 12.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி நுவரெலியா, கம்பஹா, கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, பதுளை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவுகளைப் பரிசீலித்த பின்னர், 113 பயனாளிகளுக்கு 9.27 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு அவற்றுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டன.*

***4.3. பெறுமதி சேர்த்த உற்பத்திகள் தொடர்பான தொழில் முனைவோரை உருவாக்குதல் (50% பங்களிப்பின் கீழ்)***

*விவசாய உற்பத்திப் பொருட்களுக்குப் பெறுமதி சேர்க்கும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழில் முனைவோருக்கு 50% சமூகப் பங்களிப்பின் கீழ் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இதற்காக 6.25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் கண்டி, மாத்தளை, கம்பஹா, கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, பதுளை, அனுராதபுரம், குருநாகல் மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளுள் முறையான சாத்தியப்பாட்டு ஆய்வுகளுடன் கூடிய 50 செயற்திட்ட அறிக்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவர்களுள் 05 பயனாளிகளுக்கு 244,150 ரூபாய் செலவிடப்பட்டு 2025 ஆம் ஆண்டில் தேவையான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட எஞ்சிய 45 பயனாளிகளுக்கு 2026 ஆம் ஆண்டில் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

***4.4. தொழில் முனைவோர் மட்டத்தில் பழக் கிராமங்களைப் பிரபல்யப்படுத்தல்***

*பழப் பயிர் உற்பத்தியை அதிகரித்தல், விவசாயிகளின் வருமான மார்க்கங்களை உயர்த்துதல், பழ இறக்குமதிச் செலவைக் குறைத்தல் மற்றும் பழ ஏற்றுமதியை ஊக்குவித்தல் என்பவற்றுக்காகப் பழக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் எனும் செயற்திட்டம் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய, 10 பழக் கிராமங்களுக்காக 25.00 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது 17 பழக் கிராமங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதற்காக 22.96 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

***விடய எல்லை 05: பாதுகாக்கப்பட்ட சூழல்***

***5.1 பாடசாலைகள் அடிப்படையிலான சூழல் நிகழ்ச்சித் திட்டங்கள்***

*அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் சீரமைவான வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, 52 நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த இலக்கிடப்பட்டிருந்ததுடன், அதற்காக 1.56 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது 49 நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 1.40 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.*

***5.2 சமூக அடிப்படையிலான சூழல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்***

*அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் நீரேந்துப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள மக்களுக்காகச் சூழல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். அதற்கமைய, இதற்காக 1.04 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 52 நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது 1.04 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் 53 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.*

***விடய எல்லை 06: ஆரோக்கியமான சமூகம்***

***6.1 அரை-வீட்டுமுறை கோழி வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்***

*புரத சக்தி மந்தபோசணையானது கிராமப்புற மக்களிடையே நிலவும் ஒரு பாரிய பிரச்சினையாகத் தற்காலத்தில் மாறியுள்ளது. எனவே, கிராமப்புற மக்களின் தினசரி விலங்குப் புரத நுகர்வை அதிகரித்தல், உள்நாட்டுச் சந்தையில் முட்டை விலையின் தளம்பல்களைக் குறைத்தல் மற்றும் விவசாயிகளுக்கு ஒரு மேலதிக வருமான மார்க்கத்தை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, தெரிவு செய்யப்பட்ட நீரேந்து பகுதிகளில் வாழும் கிராமப்புற மக்களுக்கு அரையளவு வீட்டுமுறை கோழி வளர்ப்பு எனும் செயற்திட்டம் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்படுகிறது. இதில் தேவையான கோழி வளர்ப்பு இல்லங்களை பயனாளிகளே அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதுடன், எமது அதிகார சபையின் பல்லேகலை பண்ணையில் ஒரு மாதம் வளர்க்கப்பட்டுத் தடுப்பூசி ஏற்றப்பட்ட கோழிக் குஞ்சுகளை எமது அதிகார சபையினூடாக இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*2025 ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 45,000 கோழிக் குஞ்சுகளை 38.25 மில்லியன் ரூபாய் செலவில் வழங்கத் திட்டமிடப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 42,130 குஞ்சுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 35.66 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டது.*

***6.2 கிராமப்புற மக்களிடையே முட்டையிடும் கோழி வளர்ப்பை (Layer Chicks) மேம்படுத்தல்***

*சந்தையில் நிலவும் முட்டைத் தேவை மற்றும் வழங்கலுக்கிடையிலான சமநிலையற்ற தன்மை காரணமாக, வருடாந்தம் முட்டைக்கான சந்தை விலை அடிக்கடி மாற்றங்களுக்கு உள்ளாவதால், தேசிய மட்டத்தில் இப்பிரச்சினையைக் குறைப்பதற்குப் பங்களிப்பு செய்யும் நோக்கில் கிராமப்புற மக்களுக்கு முட்டையிடும் கோழிகளை (Layer Chicks) வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் தலா 50 கோழிக் குஞ்சுகள் வீதம் 256 பயனாளிகளுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையிடமிருந்து (NLDB) பெற்றுக்கொள்ளப்படும் கோழிக் குஞ்சுகளை இலங்கை ஹதபிம அதிகார சபையின் பண்ணைகளில் ஒரு மாதம் வளர்த்துப் பயனாளிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டது. அத்துடன் கோழி வளர்ப்பு இல்லங்களை அமைப்பதற்காக 45,000 ரூபாய் பெறுமதியான பொருள் உதவியைத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் 50% பயனாளிகளின் பங்களிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டது.*

*2025 ஆம் ஆண்டில் 173 பயனாளிக் குடும்பங்களுக்காக 17.95 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு இதற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 73*

***விடய எல்லை 07: விவசாய சமூகத்தை விவசாயத் தொழில்நுட்ப அறிவினால் வலுவூட்டல்***

***7.1. விவசாயச் சமூகத்திற்காகத் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி விவசாயிகளை வலுவூட்டல்***

*இதன் கீழ் 2025 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட நீரேந்துப் பகுதிகளைச் சார்ந்து அமைந்துள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில், பங்களிப்புடனான அபிவிருத்தி கிராமிய அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டங்கள் (PRA) மூலம் அடையாளம் காணப்பட்ட விவசாயச் சமூகத்தின் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்வதற்காக, அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணையாகத் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய, அதற்காக 2.08 மில்லியன் ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 104 விவசாயப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த எதிர்பார்க்கப்பட்டது. அதற்கமைய 31.12.2025 ஆம் திகதி வரை 95 விவசாயப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 1.71 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

**7.2. சமூக உயிரூட்டல் மூலம் பங்களிப்புடனான அபிவிருத்தி கிராமிய அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டத்தினூடாக விவசாயச் சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளுதல்**

*இதன் கீழ் சமூக உயிரூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி வலுவூட்டுதல் மற்றும் விவசாயத்தில் ஈடுபடுத்துதல், சமூக உயிரூட்டல் மூலம் பங்களிப்புடனான அபிவிருத்தி கிராமிய அணுகுமுறை (PRA) ஊடாக விவசாயச் சமூகத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதன் மூலம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டிற்காகத் தெரிவு செய்யப்பட்ட நீரேந்துப் பகுதிகளுக்குள் 52 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக 1.25 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 31.12.2025 ஆம் திகதி வரை 52 நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டு, அதற்காக 1.24 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

**7.3 தொழில் முனைவோருக்காகத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்**

*சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, அறிவு மற்றும் தொழில்நுட்பத்தினால் வலுவூட்டப்பட்ட புதிய விவசாயத் தொழில் முனைவோரை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட தேனீ வளர்ப்பு, காளான் உற்பத்தி மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களுக்குப் பெறுமதி சேர்த்தல் போன்ற தொழில் முனைவோருக்காகத் தேவையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இணையாக நடாத்தத் திட்டமிடப்பட்டது. அதற்கமைய, 5 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 1.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், 31.12.2025 ஆம் திகதி வரை ஒரு விவசாயப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டு அதற்காக 0.23 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

**7.4 விவசாயத் துறையின் முன்னேற்றம் மூலம் பொருளாதார அபிவிருத்தியடைந்த விவசாயச் சமூகத்தைப் பாராட்டுதல்**

*விவசாயச் சமூகத்தை விவசாயத் துறையில் ஈடுபடுவோரை ஊக்குவிக்கும் நோக்கில், 2025 ஆம் ஆண்டில் பயன் பெற்ற விவசாயச் சமூகத்தைப் பாராட்டுவதற்கு இந்தச் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக 1.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2025 நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட 'தித்வா' (Ditwa) சூறாவளி காரணமாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பயிர் நிலங்கள் அழிவடைந்துள்ளதாக அறிக்கை இடப்பட்டதையடுத்து, இந்த நிகழ்ச்சித் திட்டம் 2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.*

**விடய எல்லை 08: ஊழியர் ஊக்குவிப்பு மூலம் சேவை உற்பத்தித்திறனை உயர்த்துதல்**

*இந்த விடய எல்லையின் கீழ் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பௌதீக வளங்களைக் கையகப்படுத்துவதற்காக 5.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது அதில் 4.82 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம், கள உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களின் தலைமையில் மாதாந்தம் மீளாய்வு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தத் திட்டமிடப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது 12 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அதற்காக ஒதுக்கப்பட்ட 0.96 மில்லியன் ரூபாய் நிதியிலிருந்து 0.42 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*அதேபோன்று, நிறுவன ஊழியர்களின் எண்ணக்கரு சார், தொழில்நுட்ப மற்றும் மனித ஆற்றல்களை மேம்படுத்துவதற்கும் அவற்றை இற்றைப்படுத்துவதற்கும் 50 மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்த 1.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது 05 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 0.29 மில்லியன் ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*அதிகார சபையின் ஊடக நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டில் 1.15 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, 2 ஊடக நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன், அதற்காக 1.15 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்பட்டுள்ளது.*

***2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட செயற்திட்டங்கள்***

***i. Clean Sri Lanka நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகளில் 50 பசுமை வலயங்களை நிறுவும் "சொபா சிப் வதுல" செயற்திட்டம்***

*கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு அமைய, மாணவர்களிடையே ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துவதன் கீழ் இயற்கையுடன் கல்விச் சூழலை இணைப்பதற்காக, நாடு தழுவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகளில் பசுமை வலயங்களை நிறுவும் "சொபா சிப் வதுல" செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த செயற்திட்டத்தை கிளீன் ஸ்ரீலங்கா செயலகம், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இலங்கை ஹதபிம அதிகார சபை ஆகியன இணைந்து முன்னெடுத்தன. 2025 ஆம் ஆண்டில் இந்தச் செயற்திட்டத்திற்காக 29.97 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 10.74 மில்லியன் ரூபாய் இந்த செயற்திட்டத்துக்காக செலவிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய முடியாத பணிகளுக்காக 11.63 மில்லியன் ரூபாய் நிதியை 2026 ஆம் ஆண்டிற்காகப் பெற்றுக்கொள்ளவும், அக்குறிப்பிட்ட பணிகளை நிறைவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்: 74*

***ii. பல்லேகல பண்ணையை ஒரு ஒருங்கிணைந்த பண்ணையாக அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்***

*கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் ஊடாக உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பச் செலவுத் தலைப்பின் கீழ், இலங்கை ஹதபிம அதிகார சபைக்குச் சொந்தமான பல்லேகல பண்ணையை ஒரு ஒருங்கிணைந்த பண்ணையாக அபிவிருத்தி செய்வதற்காக 2025 ஆம் ஆண்டிற்கு 8.73 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த ஒதுக்கீட்டில் 2.81 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், பூர்த்தி செய்ய முடியாத பணிகளுக்காக 2026 ஆம் ஆண்டில் 2.43 மில்லியன் ரூபாய் நிதியைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.*

# கால்நடை வளப் பிரிவு

## செலவுத் தலைப்பு இலக்கம் *118* இன் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

### *1.* விலங்கு இனப்பெருக்கப் பண்ணைகளை நிறுவுதல் செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-078-2507*

**1.1 விலங்கு இனப்பெருக்கப் பண்ணை அபிவிருத்தித் திட்டம்**

*2025 ஆம் ஆண்டின் கால்நடை வளங்கள் பிரிவின் செயற்பாட்டுத் திட்டத்தின்படி, வடமத்திய மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களின் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மற்றும் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை ஆகியவற்றால் நடைமுறைப்படுத்தப்படும் விலங்கு இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளுக்காக 62.57 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் முன்னேற்றம் பின்வருமாறு அமைகிறது. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியின் இறுதியில் இந்த செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 70% ஆகும்.*

| மாகாணம் | செயற்திட்டம் | ஒதுக்கீடு (மில். ரூபா) | செலவு (மில். ரூபா) |
|---|---|---|---|
| வடமத்தி | திரப்பனை பண்ணையின் இனப்பெருக்கப் பிரிவை அபிவிருத்தி செய்தல் | 4.00 | 1.98 |
| கிழக்கு | வெள்ளை மாடுகளின் மரபணுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் | 4.00 | 3.97 |
| தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபை | போபத்தலாவை மற்றும் நிக்கவெரட்டிய பண்ணைகளில் மாட்டுத் தொழுவங்களை அபிவிருத்தி செய்தல் | 12.00 | 12.00 |
| | தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையினால் உயர்தர மாட்டு விந்து வில்லைகளை இறக்குமதி செய்தல் மற்றும் விந்து சேமிப்பு வசதிகளை உருவாக்குதல் | 38.00 | 27.05 |
| உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | | 2.77 | 0.42 |
| திட்டக் கண்காணிப்பு மற்றும் நிர்வாகச் செலவுகள் | | 1.80 | 0.08 |
| **மொத்தக் கூட்டுத்தொகை** | | ***62.57*** | ***45.50*** |

**1.2. நிதிப் பொறுப்புகள் - 2024**

*2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட விலங்கு இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்தித் திட்டத்திற்காகச் செலுத்த வேண்டியிருந்த 6.43 மில்லியன் ரூபாய் நிதி இதன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.*

### 2. சிறு மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வளங்கள் அபிவிருத்தி (கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி) செலவுத் தலைப்பு இலக்கம் *118-2-03-079-2506*

**2.1. இடைக்காலக் கால்நடை வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

*கால்நடை வளங்கள் துறையை மேம்படுத்துவதற்காக வட மாகாணத்தில் உள்ள அதிக சாத்தியக்கூறுகளைப் பயன்படுத்தி, கால்நடை வைத்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதன் மூலம் கால்நடை வளங்கள் துறையின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காக இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.*

*இந்தச் செயற்திட்டத்தின் கீழ் பகுதியளவில் கட்டப்பட்டிருந்த பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலக வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக 2025 ஆம் ஆண்டிற்கு 40.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, அது தொடர்பான கொடுப்பனவுகளுக்காக 21.79 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 01*

***2.2. கோழிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (நியாயமான விலையில் ஒரு நாள் வயதுடைய பெண் கோழிக் குஞ்சுகளை வழங்குவதற்காக தேசிய கால்நடை வளங்கள் சபைக்குச் சொந்தமான முட்டையிடும் கோழி இனப்பெருக்கப் பண்ணையை அபிவிருத்தி செய்தல்)***

*ஒரு நாள் வயதுடைய பெண் கோழிக் குஞ்சுகளை விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்குவதற்காக, கோழி இனப்பெருக்கப் பிரிவொன்றை நிறுவுவதற்கு 47.60 மில்லியன் ரூபாயும், அதன் செயல்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக 1.40 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில், தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மாரவில கோழி இனப்பெருக்கப் பண்ணையின் கொள்ளளவை விரிவாக்கும் நோக்கில், 5,500 தாய் விலங்குகளுக்கான மூடிய முறையிலான கோழிக்கூடு கட்டுமானப் பணிகளில் சுமார் 70% நிறைவடைந்துள்ளதுடன், அதற்காக 32.86 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 02*

***2.3 பால் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (பாலின் தரத்தை மேம்படுத்துதல்)***

*இந்தச் செயற்திட்டம் தேசிய கொள்கை கட்டமைப்பு மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்திக் கொள்கை முன்மொழிவுகளுக்கு இணங்க நடைமுறைப்படுத்தப்படுவதுடன், பண்ணை மட்டத்திலான அபிவிருத்தி நடவடிக்கைகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கண்காணிப்பு முறையூடாகப் பால் விளைச்சலை அதிகரிப்பதையும் தரத்தை விருத்தி செய்வதையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டது. மடிவீக்க நோய் (Mastitis) பாலின் தரம் மற்றும் அளவில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு பிரதான நோயாகும். இந்தச் செயற்திட்டத்தின் மூலம் நோயைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதன் ஊடாக பண்ணையின் பால் உற்பத்தியை உயர்த்துவதற்கும், விவசாயிகளிடையே தரமான பால் உற்பத்தி குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதன் ஊடாக பாலின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் பண்ணை மட்டத்தில் பாலின் தரம் மற்றும் அளவு என்பவற்றை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்க முடியும். அதற்கமைய, மடிவீக்க நோயைக் கண்டறிவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அவசியமான உள்ளீடுகளை வழங்குவதற்கு இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன.*

*இந்தச் செயற்திட்டம் வடக்கு, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ, தெற்கு மற்றும் மேல் மாகாணம் ஆகிய 06 மாகாணங்களைச் சேர்ந்த 13 மாவட்டங்களில் (யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தறை, கொழும்பு மற்றும் களுத்துறை) நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டதுடன், இதற்கான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு அமைந்தது:*

| ***செயல்பாடு*** | ***ஒதுக்கீடு (மில். ரூபாய்)*** |
|---|---|
| *மடிவீக்க நோய் (Mastitis) கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்* | *31.00* |
| *பயிற்சி* | *3.00* |
| *நிர்வாகச் செலவுகள்* | *1.00* |
| *மொத்தம்* | *35.00* |

*மீளாய்வு காலப்பகுதியின் முடிவில் செலவிடப்பட்ட தொகை 15.42 மில்லியன் ரூபாயாகும். CMT சிகிச்சைக்குத் தேவையான சோதனைப் பொருட்கள், தடுப்பூசிகள் போன்ற சில பொருட்களுக்கு ஏலதாரர்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்காமை, அப்பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்திலிருந்து நிதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் போன்ற காரணங்களால் ஒதுக்கப்பட்ட முழுத் தொகையையும் பயன்படுத்த முடியாமல் போனது. மேல் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக இந்தச் செயற்திட்டத்தை மாகாண நிதியுதவியுடன் செயல்படுத்துவதால், அமைச்சின் நிதி ஒதுக்கீடு அவசியமில்லை எனத் அறிவித்துள்ளது.*

*புகைப்பட இலக்கம் 03*

### *2.3. ஏற்றுமதி நடவடிக்கைகளை எளிதாக்கும் செயற்திட்டம்*

*இதற்காக 2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை 10.00 மில்லியன் ரூபாயாகும். அலங்கார மீன்கள், கோழி இறைச்சி மற்றும் முட்டை, வளர்ப்புப் பறவைகள், உயிருள்ள விலங்குகள் மற்றும் ஏனைய கால்நடை வள உற்பத்திப் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதிக்குத் தேவையான உதவிகளை வழங்கி அதனை எளிதாக்கும் நோக்கில் 9.71 மில்லியன் ரூபாயும், அமைச்சின் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக 0.29 மில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்திற்குப் பங்களிப்பதற்கும், விலங்கு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டு வருவதற்கும் பெரும் சாத்தியக்கூறுகளைக் கொண்டுள்ள இலங்கையின் கால்நடை வளக் கைத்தொழிற் துறையை எதிர்பார்த்த உற்பத்தித் திறன் மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு, இத்துறையில் நிலவும் பிரச்சினைகளைச் சரியாகத் தீர்ப்பதும் இத்துறையை விருத்தி செய்வதும் காலத்தின் தேவையாகவும் இன்றியமையாததாகவும் காணப்படுகின்றது. மேலும், தற்போதைய அரசாங்கத்தின் "செழிப்பான ஒரு தேசம் - அழகான வாழ்க்கை" எனும் கொள்கை விளக்க அறிக்கையில் கால்நடை வளங்கள் மற்றும் நீர்வாழ் வளங்கள் என்பவற்றின் ஏற்றுமதி மேம்பாடு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.*

*அதற்கமைய, விலங்குகள் மற்றும் விலங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி மேம்பாடு மற்றும் ஏற்றுமதிச் செயன்முறையை முறைப்படுத்தும் நோக்கில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு போன்ற தொடர்புடைய அரச நிறுவனங்களை ஒருங்கிணைத்து, ஏற்றுமதி வசதிப்படுத்தலுக்காகத் தயாரிக்கப்பட வேண்டிய கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் ஏற்றுமதி சாத்தியக்கூறுகள், கவனம் செலுத்த வேண்டிய குறைபாடுகள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்துக் கவனம் செலுத்தி, ஏற்றுமதியுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கிடையில் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணி, களத்தில் அதிகாரிகளால் இனங்காணப்பட்ட விடயங்கள் மற்றும் அதன் பின்னர் ஏற்றுமதியாளர்களுடனான சந்திப்பின் போது இனங்காணப்பட்ட தேவைகளுக்கேற்ப ஏற்றுமதி வசதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை வரிசைப்படுத்துவது இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*இவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகள் குறித்து அரசியல் தலைமைத்துவம் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், அதன் விளைவாக அந்த இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு தொடர்புடைய அமைச்சுகளின் செயலாளர்களைக் கொண்ட அமைச்சுகளுக்கு இடையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டது.*

*கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தொழில்நுட்பப் பங்களிப்புடன் சீனாவுக்கான அலங்கார மீன் மற்றும் கால்நடை வளங்கள் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல் மற்றும் ஏற்றுமதி அங்கீகாரம் பெறும் செயன்முறை என்பன முன்னெடுக்கப்பட்டன. சீனாவிற்கு கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வதில் நிலவும் தடைகள் / பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சீன அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக அமைச்சு, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் மற்றும் தொடர்புடைய கைத்தொழிற் துறைகளின் பங்காளர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அக்குழுவினால் பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டு தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிங்கப்பூர், துருக்கி மற்றும் ஓமானுக்கு கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்வதற்காக இலங்கை பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகளை நிறைவு செய்யவும், நிலவும் தடைகளைத் தவிர்க்கவும் தேவையான பின்னணியை உருவாக்கும் பணிகள் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, கணினி தரவுத் தொகுப்பை உருவாக்கும் பணிகள் கால்நடை உற்பத்தி மற்றும்*

*சுகாதாரத் திணைக்களத்தின் தலையீட்டுடன் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அது நடைமுறைக்கு வரவுள்ளது.*

*அலங்கார மீன்கள் மற்றும் கால்நடை வள உற்பத்திப் பொருட்கள் என்பவற்றின் ஏற்றுமதியில் நிலவும் சட்ட மற்றும் ஒழுங்குமுறை சிக்கல்கள், தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் சர்வதேச ஒழுங்குமுறை சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் செயன்முறை ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்டது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை 0.31 மில்லியன் ரூபாயாகும்.*

*புகைப்பட இலக்கம் 04*

***2.4. திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்***

*2025 ஆம் ஆண்டில் இந்தச் செயற்திட்டத்திற்காக 5.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள், விவசாயிகள் மற்றும் இளம் தொழில்முனைவோரின் ஆளுமை அபிவிருத்தி மற்றும் கால்நடை வளத் துறையுடன் தொடர்பான கொள்கை உருவாக்கம் ஆகியவை இந்தச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். மீளாய்வு காலப்பகுதியின் இறுதியில் 0.34 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

***2.5 நிதிப் பொறுப்புகள் - 2024***

*2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட, கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காகச் செலுத்தப்பட வேண்டியிருந்த 11.00 மில்லியன் ரூபாய் தொகை இதன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.*

## 3. ***சிறு மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வளங்கள் அபிவிருத்தி (அபிவிருத்தி உதவிகள்) செலவுத் தலைப்பு இலக்கம் 118-2-03-079-2202***

***3.1. பால் உற்பத்தி அபிவிருத்திச் செயற்திட்டம்***

*கறவை மாடுகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தும் நோக்கில் பால் உற்பத்தி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 72.00 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இந்தச் செயற்திட்டத்தின் கீழ் மூன்று (03) உப செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.*

- ***கறவை மாடுகளின் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல் (புல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்):***

*உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட "தரமான புல் இனங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து முகாமைத்துவ நடைமுறைகள் மூலம் சிறு அளவிலான பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்திட்டத்தின்" பயனாளிகளுள் தெரிவு செய்யப்பட்ட 16 பயனாளிகளுக்குத் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் தேவையான உபகரணங்கள், வைக்கோல் தீவனம் உற்பத்திக்கான இயந்திரங்கள் போன்ற உள்ளீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டது. இதன்கீழ் ஒரு பயனாளிக்காக அரசாங்கம் வழங்கும் அதிகபட்ச பங்களிப்பு 150,000 ரூபாயாகும், இது குறித்த செயற்திட்டச் செலவின் 50% ஆகும். மீதமுள்ள 50% பங்களிப்பைப் பயனாளி பொறுப்பேற்க வேண்டும். 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 15 பயனாளிகளுக்கு 2.18 மில்லியன் ரூபாய் பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.*

***கறவை மாடு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (புல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்):***

*தரமான விலங்கு உணவுகளைத் தாராளமாகக் கிடைக்கச் செய்தல், கறவை மாடுகளின் ஊட்டச்சத்து மட்டத்தை உயர்த்துவதற்காக மேம்படுத்தப்பட்ட புல் இனங்களைப் பயிரிடுவதை ஊக்குவித்தல், வருமானம் ஈட்டும் செயல்பாடாகப் புல் மற்றும் வைக்கோல் தீவன (Silage) உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் நீரை வினைத்திறனாகப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் புல் செய்கைக்கான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றிற்காக இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 269 பயனாளிகளுக்கு நிலப் பண்படுத்தல், புல் செய்கையை நிறுவுதல், எல்லை வேலிகளை அமைத்தல் போன்ற பணிகளுக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டம் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இதன்கீழ் ஒரு பயனாளிக்காக அரசாங்கம் வழங்கும்*

*அதிகபட்ச பங்களிப்பு 150,000 ரூபாயாகும், இது குறித்த செயற்திட்டச் செலவின் 50% ஆகும். மீதமுள்ள 50% பங்களிப்பைப் பயனாளி வழங்கியுள்ளார். 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 264 பயனாளிகளுக்கு 38.25 மில்லியன் ரூபாய் பெறுமதியான உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 05 - 06*

***வட மாகாணத்தில் 'தித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட விலங்குகளுக்கு மாட்டுத் தீவனம் வழங்குதல்:***
*2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாட்டைத் தாக்கிய 'தித்வா' சூறாவளி மற்றும் வெள்ள நிலைமை காரணமாக வட மாகாணத்திலுள்ள இயற்கை புல்வெளிகள் மற்றும் பயிரிடப்பட்ட புல்வெளிகள் பெருமளவில் அழிவடைந்ததால், பாதிப்புக்குள்ளான விலங்குகளின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அடர் தீவனம் வழங்கத் திட்டமிடப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட 4,749 பண்ணைகளில் உள்ள விலங்குகளுக்காக 28.0 மில்லியன் ரூபாய் பெறுமதியான 266,650 கிலோகிராம் அடர் தீவனம் விநியோகிக்கப்பட்டுள்ளது.*

### *3.2. சிறு மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*2025 ஆம் ஆண்டிற்காகச் சுகாதாரமான முறையில் பேணப்படும் நிலைபேறான சிறு அளவிலான முட்டையிடும் கோழி அலகுகளை நிறுவுவதற்காக **9.71 மில்லியன் ரூபாயும்**, அமைச்சு மற்றும் மாகாணங்களின் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக **0.29 மில்லியன் ரூபாயும்** ஒதுக்கப்பட்டுள்ளது.*

*இதன்கீழ், கிராமப்புற மக்களிடையே ஊட்டச்சத்து மட்டத்தை உயர்த்துதல் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன் ஊடாக வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சிறு அளவிலான முட்டையிடும் அலகுகளை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. சுகாதாரமான முறையில் குஞ்சுகளைப் பராமரிப்பதன் மூலம் நிலையாக இந்தச் செயற்திட்டத்தைச் சில வருடங்கள் முன்னெடுத்துச் செல்வதற்காக ஒரு பயனாளிக்கு ஒரு மாத வயதுடைய 25 நாட்டுக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன. இந்த 25 குஞ்சுகளில் தேவைக்கேற்ப அதிகபட்சமாக 3 சேவற்குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளும் வசதி உள்ளது. பயனாளியின் 50% பங்களிப்பின் கீழ் கூடுகளை அமைத்தல், உணவுகளை வழங்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை முன்னெடுத்தல் வேண்டும்.*

*வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களுக்கு ஊடாக கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 448 பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளதுடன், இதற்காக 9.86 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம்: 07*

### *3.1. பன்றி வளர்ப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*

*சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் குறைத்துச் சூழல் நட்பு ரீதியிலான பன்றிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கும் நோக்கில் இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், 61 பன்றிப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக 12.60 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.*

*எனினும், ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் வைரஸ் நோய் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள பன்றித் தொழில்துறையை மீளக் கட்டியெழுப்புவதற்கான தேசிய செயலணிக் குழுவின் தீர்மானத்திற்கமைய, இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 12.60 மில்லியன் ரூபாய் நிதியானது ஆபிரிக்க பன்றிக் காய்ச்சலைக் கண்டறிவதற்கான பரிசோதனைத் தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பன்றிக் காய்ச்சல் நோய் நிர்ணயம் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு அவசியமான உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்ய 02 பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து அதற்காக செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை.*

*3.2. நிதிப் பொறுப்புக்கள் - 2024*

*2024 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கால்நடை வளங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காகச் செலுத்தப்பட வேண்டியிருந்த **5.40 மில்லியன் ரூபாய்** தொகை இதன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 07*

## 4. ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்திட்டம் *(அபிவிருத்தி உதவிகள்)*

*2025 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தின்படி, ஆட்டுப்பால் மற்றும் ஆட்டிறைச்சியைத் தாராளமாகக் கிடைக்கச் செய்யும் நோக்குடன் கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவினால் இந்தச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்தச் செயற்திட்டத்திற்காக 91.85 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆட்டுப் பண்ணை அலகுகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு இதன்கீழ் 445 ஆட்டுப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டது. இதன்போது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள ஆட்டுப் பண்ணைகளுக்கு விலங்குகள் வழங்கப்பட்டன. மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தச் செயற்திட்டத்தின் கீழ், ஒரு பயனாளிக்காக அரசாங்கம் வழங்கும் அதிகபட்ச பங்களிப்பின் கீழ் 10 விலங்குகளைக் கொள்வனவு செய்ய (09 பெண் விலங்குகள் மற்றும் 01 ஆண் விலங்கு) 300,000 ரூபாயோ அல்லது 05 விலங்குகளைக் கொள்வனவு செய்ய (04 பெண் விலங்குகள் மற்றும் 01 ஆண் விலங்கு) 150,000 ரூபாயோ வழங்கப்படுகிறது. இது குறித்த செயற்திட்டச் செலவின் 50% ஆகும். மீதமுள்ள 50% பங்களிப்பைப் பயனாளி பொறுப்பேற்க வேண்டும். 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 05 விலங்குகளைக் கொண்ட 253 அலகுகளை விருத்தி செய்வதற்கு 38.47 மில்லியன் ரூபாயும், 10 விலங்குகளைக் கொண்ட 94 அலகுகளை விருத்தி செய்வதற்கு 28.58 மில்லியன் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 08 - 09*

### *4. ஆடு வளர்ப்பு மூலம் வாழ்வாதார மேம்பாட்டுச் செயற்திட்டம் (கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி)*

*2025 ஆம் ஆண்டில் ஆட்டுப்பால் மற்றும் ஆட்டிறைச்சியைத் தாராளமாகக் கிடைக்கச் செய்வதற்காக இந்தச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 108.15 மில்லியன் ரூபாய் ஆகும். நாட்டின் ஆட்டிறைச்சித் தேவைக்குப் பங்களிப்பு செய்யும் பொருட்டு, இறைச்சி உற்பத்தியை நோக்கமாகக் கொண்டு 'போயர்' இன ஆடுகளை அறிமுகப்படுத்துதல், போயர் ஆடு வளர்ப்பை ஊக்குவித்தல் மற்றும் போயர் ஆட்டுப் பண்ணைகளை ஆரம்பிப்பதற்காக விவசாயிகளுக்கு இனப்பெருக்கப் பொருட்களை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன், தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் போபத்தலாவ பண்ணையில் ஆடு இனப்பெருக்கப் பண்ணையை நிறுவுவதற்காக 100 போயர் ஆடுகளை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டது. இதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விநியோகஸ்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட போதிலும், ஆடு இறக்குமதி தொடர்பான விலங்கு சுகாதார நடைமுறை (Animal Health Protocol) குறித்து ஆஸ்திரேலியாவின் பிரதான கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் இணக்கப்பாட்டிற்கு வர முடியாமல் போனமையினால் இந்தச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது.*

*இதற்கு மேலதிகமாக, இந்தச் செயற்திட்டத்தின் கீழ் இனப்பெருக்கப் பண்ணை மற்றும் இனப்பெருக்கப் பொருட்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பண்ணையின் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் புல் செய்கையின் உற்பத்திச் செலவைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களுடன் வட மாகாணத்தின் வவுனியா, செக்கடிப்பிலவு பிரதேச கால்நடை பண்ணையில் நிறுவப்பட்டுள்ள மாகாண ஆடு இனப்பெருக்கப் பண்ணையை விருத்தி செய்யத் திட்டமிடப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் **18.87 மில்லியன் ரூபாய்** நிதி ஒதுக்கீட்டின் மூலம் பண்ணை அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 10 – 11*

## *2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம்*

***1. உள்ளடக்கிய இணைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - பகுதி II (Inclusive Connectivity Development Project – ICDP)***

*உலக வங்கி கடன் உதவியின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் செயற்திட்டத்தின் விவசாயம் தொடர்பான 'பகுதி II' (Component II) கால்நடை வளங்கள் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் "பால் உற்பத்தியாளர்களை ஒழுங்கமைத்து வலுப்படுத்துவதன் ஊடாக அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் பால் பெறுமதிச் சங்கிலியை விருத்தி செய்தல்" எனும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.*

*இங்கு பால் பெறுமதிச் சங்கிலி மற்றும் விநியோகச் சங்கிலியை விருத்தி செய்வதற்குத் தேவையான அடிப்படை உள்ளீடுகளான பண்ணை உற்பத்தியை விருத்தி செய்வதற்கு மூலோபாய அணுகுமுறைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக முறையான உற்பத்தித் திட்டத்தை உருவாக்குதல், உற்பத்தித் திறனை அதிகரிக்க நவீன தொழில்நுட்பம் மற்றும் உள்ளீடுகளை அறிமுகப்படுத்துதல், மாற்று எரிசக்தி மூலமாகச் சூரிய சக்தியைப் பயன்படுத்திப் பாலைக் குளிரூட்டும் உபகரணங்களை அறிமுகப்படுத்துதல், புல் வளர்ப்பாளர்களை உருவாக்குதல் மற்றும் அவர்களைத் தொழில்முனைவோராக மாற்றுதல், மாலை நேரப் பால் சேகரிப்பு வலையமைப்பை வலுப்படுத்துவதற்காகப் பால் குளிரூட்டும் வசதிகளை மேம்படுத்தல் மற்றும் மடிவீக்க நோய் உள்ளிட்ட பொருளாதார ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் விரிவாக்கச் சேவைகளை முறைப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 3,000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வு காலப்பகுதியின் இறுதியில் பால் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான மீண்டெழும் செலவு 7.94 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட உள்ளடக்கிய இணைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (ICDP) பகுதி II பணிகள், 2025 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நாட்டைத் தாக்கிய 'தித்வா' சூறாவளி நிலைமையினால் நெடுஞ்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்களை ஈடுசெய்வதற்காக, பகுதி II இற்கு ஒதுக்கப்பட்டிருந்த முழுத் தொகையையும் பகுதி I இன் கீழ் வழங்குவதன் மூலம் இந்தச் செயற்திட்டம் மீளக் கட்டமைக்கப்பட்டது*

## காால்நடை வளங்கள் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்தும் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

### *01.* கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

**1.1 தொலைநோக்கு**

இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்காக கால்நடைத் துறையை வழிநடத்தும் முன்னணி நிறுவனமாக இருத்தல்.

**1.2. செயற்பணி**

ஆரோக்கியமான விலங்குகளின் எண்ணிக்கை மற்றும் உயர் உற்பத்தித்திறனுடன் கூடியதாக உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பு செலுத்துவதன் மூலமும் உணவுகளின் சுகாதாரத் தன்மையை உறுதி செய்வதன் மூலமும் கால்நடை வளத் துறையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கு தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குதல்.

**1.3 நோக்கம்**

- கால்நடை நோய்களைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் வினைத்திறனான கால்நடை சுகாதார சேவையை உறுதிப்படுத்தல்.
- கால்நடை மரபணு வளங்ளை உச்ச நிலையில் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- தரமான விலங்கு உணவு மற்றும் உணவு வளங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- விலங்கு உணவு உற்பத்தித் தொழிற்துறையின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல்.
- நிலைபேறான கால்நடை வள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கால்நடை தடுப்பூசிகள் மற்றும் ஏனைய கால்நடை உயிரியல் பொருட்களை உற்பத்தி செய்தல்.
- கால்நடை வளத் துறையுடன் தொடர்பான ஆய்வகச் சேவைகளைச் தரநிலைப்படுத்தப்பட்ட ஆய்வகங்களில் மேற்கொள்ளல்.
- கால்நடை வளத் துறை தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை தேவைப்படும் போது மறுபரிசீலனை செய்தல், அவற்றுக்கான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் கண்காணித்தல்.
- தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்.
- தகவல்களை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் பரப்புதல் மற்றும் தொழில்நுட்ப சேவைகளின் வழங்கலை உறுதி செய்தல்.
- கால்நடை உற்பத்திகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல், செயற்படுத்தல், மதிப்பீடு செய்தல்.
- முறையான கால்நடை வளர்ப்பு முறைகளை ஊக்குவித்தல் மற்றும் அதனுடன் தொடர்பானவற்றுக்கு உதவி வழங்குதல்.
- கால்நடைகளின் நலன் மற்றும் நலனோம்பலை உறுதிப்படுத்துதல்.
- திணைக்களச் செயற்பாடுகளின் வினைத்திறனான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துதல்.

**1.4. பிரதான செயற்பாடுகள்**

- உயர்ந்த உற்பத்தி திறன் கொண்ட உயர்ரக மாடு மற்றும் ஆட்டு விந்து உற்பத்தி செய்வது உட்பட தேசிய செயற்கைமுறை சினைப்படுத்தல் சேவையினை ஒருங்கிணைத்தல்
- போசணைப் புல் மற்றும் சைலேஜ் உற்பத்தி மற்றும் புல் சந்தைப்படுத்தல் என்பவற்றை பிரபல்யப்படுத்துதல்.

- நோய்த் தடுப்புக்கான தடுப்பூசி வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- உள்நாட்டு தடுப்பூசி (கால் வாய் நோய், கருங்காலி நோய், தொண்டையடைப்பான், ரெனிகட்) மற்றும் ஏனைய உயிரியல் பொட்களை உற்பத்தி செய்தல்
- மடியழற்சியைத் தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் சுரப்புகளை உற்பத்தி செய்தல்
- சால்மனெல்லோசிஸ் மற்றும் ரனிகெட் நோய் கட்டுப்பாடு
- அதிக நோய்த் தாக்கம்கொண்ட பறவைக் காய்ச்சல் நோய்க்கு எதிராக வினைத்தினான முன் எச்சரிக்கை அமைப்பை நிறுவுதல்
- கால்நடை நோய்களைக் கண்டறியும் திறனை அதிகரிப்பதற்கு கால்நடை ஆய்வு மையங்களை வலுப்படுத்துதல்
- பால் பண்ணைகளின் சுகாதார தரத்தை விருத்தி செய்தல்.
- ஆய்வுகூட வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்தல்
- பால் உற்பத்தி தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை விருத்தி செய்தல்.
- கால்நடை வளத் துறைக்கான பகுப்பாய்வு மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- கள மட்டத்தில் விலங்குகளை அடையாளம் காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உள்நாட்டு சந்தையில் உயர்தர கால்நடைத் தீவனங்கள் கிடைப்பதை உறுதி செய்தல்
- கால்நடை உற்பத்திகள் மற்றும் உயிர் மூலப்பொருட்களின் ஒழுங்குறுத்துகை
- கோழி வளர்ப்பு தொடர்பான ஒழுங்குறுத்துகை விவகாரங்கள்
- விலங்கு தனிமைப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான ஒழுங்குறுத்துகை விவகாரங்கள்
- சர்வதேச வர்த்தகத்துக்கு உதவி வழங்குதல்.
- தனிமைப்படுத்தல் பிரிவுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் ஆய்வக வசதிகளை விருத்தி செய்தல்
- கால்நடை வள ஆராய்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்
- கால்நடை வள டிப்ளோமாதாரர்களை உருவாக்குவதற்காக கால்நடை பராமரிப்புக் கல்லூரிகளை (கரந்தகொல்ல/ சீப்புக்குளம்) நடத்துதல்.
- விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தொடர் கல்வி நிறுவனத்தில் பயிற்சி மற்றும் கல்வித் திட்டங்களை நடத்துதல்
- இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மற்றும் கண்காட்சிகள் மூலம் தகவல்களைப் பரப்புதல்
- மாதிரி பண்ணை அலகு கண்காட்சிகள்
- விலங்கு தொழில்நுட்ப பூங்காவில் பல்வேறு பண்ணை அலகுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்.
- கால்நடை வளத் துறையின் சமூகப் பொருளாதார தாக்கம் பற்றிய ஆய்வுகளை நடத்துதல்
- கால்நடை வளங்கள் தொடர்பான புள்ளிவிவர வெளியீடுகளைத் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்
- சூழல் நட்பு கால்நடைப் பண்ணைகளுக்கு உதவி வழங்கல்
- விரிவாக்க சேவைகளை வழங்கல்

**1.5 நிறுவனத்தின் ஊடாக அடைவதற்கு எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

- இலக்கு *01:* அனைத்து நிலைகளிலும் காணப்படும் வறுமையை நிறைவு செய்தல்.
- இலக்கு *02:* பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசணை நிலையை அடைதல் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்
- இலக்கு *08 :* பொருளாதார அபிவிருத்தி வேகத்தை அதிகரித்தல்

**1.6. நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்**

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன செலவுகள் | 95.00 | 38.58 | 40.61 |
| 2 | மீண்டுவரும் செலவுகள் | 938.38 | 929.85 | 99.09 |
| | **அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| 1 | கால்நடை சுகாதாரம் மற்றும் கால்நடை ஆராய்ச்சி | 262.00 | 175.34 | 67 |
| 2 | கால்நடைவள அபிவிருத்தி மற்றும் பயிற்சி | 360.00 | 233.19 | 65 |
| | **வெளிநாட்டு செயற்திட்டம்** | | | |
| 1 | தரமான புல்/ ஊட்டச்சத்துமிக்க உணவு இனங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து முகாமைத்துவப் பழக்கவழக்கங்கள் ஊடாகச் சிறு அளவிலான பால் உற்பத்தியாளர்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் - FAO | 0.11 | 0.06 | 57 |
| 2 | இறால் தொடர்பான நோய் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம் - FAO | 0.59 | 0.36 | 60 |
| | **விஷேட செயற்திட்டம்** | | | |
| 1 | அனர்த்த நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு | 2,200.00 | 2,200.00 | 100 |

**அபிபிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம் தனித்தனியாக கீழ் தரப்பட்டுள்ளது**

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 2025.12.31 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| | **அபிபிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்** | | | |
| 1 | கால்நடை இனப்பெருக்கச் செயற்திட்டம் | 185.00 | 133.35 | 72.08 |
| 2 | கால்நடை வளங்கள் ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் | 85.00 | 57.97 | 68.20 |
| 3 | உயர்தர கால்நடை தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | 24.00 | 18.64 | 77.67 |
| 4 | கோமாரி (வாய் மற்றும் குளம்பு நோய்) தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | 38.00 | 12.20 | 32.11 |
| 5 | விலங்குகளின் தொற்றுநோய்களைத் தடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 45.00 | 43.77 | 97.27 |
| 6 | மடிவீக்க நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 22.40 | 9.56 | 42.68 |
| 7 | கால்நடை வளர்ப்பு டிப்ளோமாதாரர்களை உருவாக்கும் ஆற்றலை வலுப்படுத்துதல் | 25.00 | 24.90 | 99.60 |
| 8 | விலங்குகளை அடையாளப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | 20.00 | 7.33 | 36.65 |
| 9 | வனவிலங்கு நோய் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 2.00 | 0.86 | 43 |
| 10 | கால்நடை புலனாய்வு மையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களைக் கண்டறியும் மற்றும் கண்காணிக்கும் வசதிகளை மேம்படுத்தல் | 5.00 | 4.13 | 82.60 |

| தொ / இல | நிகழ்ச்சித் திட்டம் | 2025 ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபாய்) | 2025.12.31 வரை செலவு செய்த தொகை (மில். ரூபாய்) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 11 | தர உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம், சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், கால்நடை வளங்களைப் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம், புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் | 22.00 | 4.35 | 19.78 |
| 12 | உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை வசதிப்படுத்துவதற்காக விலங்கு தீவனம் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தல் | 40.00 | 28.18 | 70.45 |
| 13 | கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்களின் சேவை வழங்கல் கட்டமைப்பை விருத்தி செய்தல் | 15.00 | 12.90 | 86 |
| 14 | கோழி ஆரோக்கிய முகாமைத்துவத்தின் ஊடாகக் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதிக்கு உதவி வழங்கல் | 10.00 | 8.66 | 86.60 |
| 15 | பயிற்சிக் கொள்ளளவை அதிகரித்தல் | 10.00 | 7.65 | 76.50 |
| 16 | விலங்கு தனிமைப்படுத்தல் அலகுகளை விரிவாக்குதல் மற்றும் நவீனமயமாக்கல் | 5.00 | 0.32 | 6.40 |
| 17 | குண்டசாலை செயற்கை சினைப்படுத்தல் நிலையத்தை அபிவிருத்தி செய்வதன் ஊடாக உயர்தர மாட்டு விந்துப் பொதிகளை உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகிப்பதை அதிகரித்தல் | 100.00 | 45.72 | 45.72 |

### *1.7. 2025.12.31* வரையிலான அபிபிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்

### *1.* மனிதவள அபிவிருத்திப் பிரிவு

#### *1.1.* கால்நடை வளர்ப்பு டிப்ளோமாதாரர்களை உருவாக்கும் ஆற்றலை வலுப்படுத்துதல்

*மீளாய்வு காலப்பகுதி முடிவடையும் போது, கரந்தகொல்ல கால்நடை வளர்ப்பு கல்லூரியில் கால்நடை வளங்கள் தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறியில் (NVQ 6) 46 மாணவர்கள் பயிற்சி பெற்று வருவதுடன், அந்த மாணவர்களுக்கான பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பண்ணை திருத்தப் பணிகளுக்கான பொருட்கள்/ சேவைகளைக் கொள்வனவு செய்யும் பணிகள் 31.12.2025 அன்று முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. சீப்புக்குளம் கால்நடை வளர்ப்பு கல்லூரியில் 25 மாணவர்கள் தங்கியிருந்து பயில்வதுடன், மொத்தம் 45 மாணவர்கள் (NVQ 04) பாடநெறியைத் தொடர்கின்றனர்.*

*புகைப்பட இலக்கம் 12 - 14*

#### *1.2.* பயிற்சிக் கொள்ளளவை அதிகரித்தல்

*31.12.2025 ஆம் திகதியளவில் இதன்கீழ் 38 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் (EB) I / II / III இன் கீழ் 06 பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன. கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான 01 பரீட்சை நடாத்தப்பட்டுள்ளது.*

#### *1.3.* கால்நடை வளங்களைப் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

*இதன்கீழ் மீளாய்வு காலப்பகுதி முடிவடையும் போது 75 வானொலி நிகழ்ச்சிகளையும் 138 தொலைக்காட்சி மற்றும் காணொளி நிகழ்ச்சிகளையும் வழங்க முடிந்துள்ளதுடன், கால்நடை வளங்களைப் பிரபல்யப்படுத்தும் ஊடக நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணையாக 12 புத்தகங்களை அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.*

#### *1.4.* புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள்

*31.12.2025 ஆம் திகதியளவில் 'Dairy Hub' செயற்திட்டத்திற்கு இணையாக அதன் பிரச்சாரப் பணிகளுக்காக 5,000 கோப்பு உறைகளும் 2,000 துண்டுப் பிரசுரங்களும் அச்சிடப்பட்டுள்ளன.*

### *2. கால்நடைச் சட்டங்கள் மற்றும் நீதிப் பிரிவு*

#### *2.1. விலங்குகளை அடையாளப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்*

*இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் களச் செயற்றிட்ட உத்தியோகத்தர்களினால் பதிவு செய்யப்பட்ட பண்ணைகள் கண்காணிக்கப்படுவதுடன், அங்கிருக்கும் விலங்குகளுக்கு காது அடையாளமிடுதல் மேற்கொள்ளப்படுகிறது. மீளாய்வு காலப்பகுதி முடிவடையும் போது 15,236 விலங்குகளுக்கு காது அடையாளங்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், விநியோகிக்கப்பட்ட காது அடையாளங்களின் எண்ணிக்கை 46,376 ஆகும். மேலும் காது அடையாளங்கள், Marker பேனாக்கள் மற்றும் Tag பின்கள் ஆகியவற்றின் பெறுகை நடவடிக்கைகளுக்காக பெறுகை பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், **7 மில்லியன் ரூபாய்** பெறுமதியான அட்டவணைகளை அச்சிடும் பணிகள் நிறைவடைந்துள்ளன.*

#### *2.2. விலங்கு தனிமைப்படுத்தல் அலகுகளை விரிவாக்குதல் மற்றும் நவீனமயமாக்கல்*

*இந்தச் செயற்திட்டத்திற்காக 05 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், காணியின் உரிமை தொடர்பான பிரச்சினை காரணமாக கொழும்பு விலங்கு தனிமைப்படுத்தல் அலுவலகத்தின் திருத்தப் பணிகள் தாமதமடைந்துள்ளன. மேலும், அங்குள்ள தகன இயந்திரம் (Incinerator) ஒரு தொல்பொருள் நினைவுச் சின்னம் என்பதால், அந்த அளவுகோல்களின் கீழ் உரிய பணிகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

#### *2.3. தர உறுதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்*

*"தர உறுதிப்படுத்தல் மற்றும் தனிமைப்படுத்தல் பணிகள்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக இனங்காணப்பட்ட இலக்குகளான விலங்கு தீவனம் தொடர்பான பணிகள், கால்நடை மருந்துகள் அதிகாரசபையின் பணிகள், விலங்கு மற்றும் விலங்கு உற்பத்திப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான முன்-அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் தனிமைப்படுத்தல் பணிகளைக் கண்காணித்தல் ஆகியவற்றில் மீளாய்வு காலப்பகுதியில் ஒட்டுமொத்தமாக 98% வரையான முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.*

### *3. விலங்கு சுகாதாரப் பிரிவு*

#### *3.1. விலங்குகளின் தொற்றுநோய்களைத் தடுக்கும் நிகழ்ச்சித் திட்டம்*

*இந்தச் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை **45 மில்லியன் ரூபாய்** ஆகும். இதன்கீழ் பால் உற்பத்தித் தொழில்துறையைப் பாதிக்கும் என இனங்காணப்பட்ட 05 பிரதான நோய்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்தத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் நோய்களுக்கேற்ப பின்வரும் பகுதிகளில் முன்னெடுக்கப்படுகின்றன:*

| # | நோய் | விநியோகிக்கப் பட்ட தடுப்பூசி பொதிகளின் எண்ணிக்கை | தடுப்பூசி ஏற்றப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை | மாகாணங்கள்/ பிரதேசங்கள் |
|---|---|---|---|---|
| *1.* | கோமாரி நோய் *(FMD)* | *300,660* | *254,204* | நாடு முழுவதும் |
| *2.* | மாட்டு இரத்தக் கசிவு நோய் *(HS)* | *125,040* | *155,252* | வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் |
| *3.* | தொற்றும் நிணநீர் நோய் *(BQ)* | *101,937* | *97,899* | வடக்கு, வட மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் |
| *4.* | தோல் கட்டி நோய் *(LSD)* | *41,780* | *5,885* | வட மத்திய, ஊவா, மத்திய, வடமேல், சப்ரகமுவ, வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்கள் |
| *5.* | புருசெல்லோசிஸ் *(Bovine Brucellosis)* | *10,200* | *6,468* | அம்பாறை, அநுராதபுரம், மட்டக்களப்பு, புத்தளம், மொனராகலை, வவுனியா, நுவரெலியா, பொலன்னறுவை, ஹம்பாந்தோட்டை, பதுளை, திருகோணமலை, கிளிநொச்சி, குருநாகல் மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்கள் |

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் கோமாரி நோய் பதிவாகுதல் 33% ஆல் குறைவடைந்துள்ளதுடன், அடைப்பான் நோய் நிலைமையை 100% கட்டுப்படுத்த முடிந்துள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகச் செலவிடப்பட்டுள்ளதுடன், 31.12.2025 ஆம் திகதியளவில் 100% பௌதீக முன்னேற்றத்தைப் பெற முடிந்துள்ளது.

### 3.2. வனவிலங்கு நோய் கண்காணிப்பு மூலம் மனிதர்களுக்கும் பண்ணை விலங்குகளுக்கும் வனவிலங்குகள் ஊடாக நோய் பரவுவதைக் குறைக்கும் செயற்திட்டம்

இந்த அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 02 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், வனவிலங்குகள் மூலம் கால்நடை வளத் துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நோய்களை இனங்காணும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறன. இந்த நிகழ்ச்சித் திட்டம் அம்பாறை, தம்புள்ளை, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை, ஹோமாகம, குண்டசாலை, மாங்குளம், பொலன்னறுவை மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் தற்போது கால்நடை புலனாய்வு மையங்களில் 63 பிரேத பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதுடன், பன்றித் தொழில்துறைக்கு முக்கியமான 'பன்றிக் காய்ச்சல்' காட்டுப் பன்றிகளிடமும் காணப்படுவது இனங்காணப்பட்டுள்ளது. 31.12.2025 ஆம் திகதியளவில் இந்தச் செயற்திட்டம் 70% பௌதீக முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது.

### 3.3. கோழி மற்றும் மீன் நோய்களைக் கண்டறியும் மற்றும் கண்காணிக்கும் வசதிகளை விருத்தி செய்தல்

இந்த அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 05 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீன் ஏற்றுமதி நடவடிக்கைகளின் போது அவசியமான ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுத்து அதற்கான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் மீன் ஏற்றுமதி பண்ணைகளைப் பதிவு செய்வதற்கான உயிரியல் பாதுகாப்பு முறைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பதிவிற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல் என்பன இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தச் செயற்திட்டம் மீன் ஏற்றுமதி பண்ணைகள் அமைந்துள்ளமைக்கு ஏற்ப மேல் மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் மாத்தறை, கேகாலை, சிலாபம், குருநாகல், திருகோணமலை, கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. உலக விலங்கு சுகாதார நிறுவனத்துடன் (WOAH) இணைந்து 'PVS Aquatic Animal Health Mission' எனும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், இதனூடாக இலங்கையின் மீன் தொழில்துறை மற்றும் மீன் ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் தொற்று நிலைமை காரணமாக மேற்கொள்ளப்பட்ட விசேட தீர்மானத்திற்கமைய, அந்த நோயைக் கட்டுப்படுத்தத் தேவையான உள்ளீடுகளை இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய அந்த உள்ளீடுகள் நாடளாவிய ரீதியிலுள்ள இனங்காணப்பட்ட பண்ணைகளுக்குப் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் மீன் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள 115 ஏற்றுமதி மீன் பண்ணைகளின் தரத்தை உயர்த்த முடிந்துள்ளது. இந்தச் செயற்திட்டத்திற்காக 31.12.2025 ஆம் திகதியளவில் 4.13 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், 95% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

### 3.4. கோழி நோய் முகாமைத்துவத்தின் ஊடாகக் கோழி இறைச்சி மற்றும் முட்டை ஏற்றுமதிக்கான வசதிகளை மேம்படுத்தல்

இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் பறவைக் காய்ச்சல், ரெனிக்கட் மற்றும் சல்மோனெல்லா போன்ற நோய் நிலைமைகளைக் கட்டுப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது.

அதற்கமைய இனப்பெருக்கப் பண்ணைகள், குஞ்சு பொரிப்பகங்கள் மற்றும் முட்டை ஏற்றுமதி பண்ணைகளின் உயிரியல் பாதுகாப்பு முறைகளைக் கண்காணிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன், வருடாந்த பதிவிற்கான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. வர்த்தக ரீதியிலான முட்டை ஏற்றுமதி பண்ணைகளில் பொருளாதார ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும்

கோழி நோய்களைப் பரிசோதித்து, முட்டை ஏற்றுமதிக்குத் தேவையான சுகாதாரச் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை மேம்படுத்த முடிந்துள்ளது.

ரெனிக்கட் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் நாடளாவிய ரீதியிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் கால்நடை புலனாய்வு மையங்கள் ஊடாக விநியோகிக்கப்படுவதுடன், 31.12.2025 ஆம் திகதியளவில் 4,485,200 தடுப்பூசிப் பொதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்தத் தடுப்பூசிகள் சிறு அளவிலான பண்ணைகளுக்கு இலவசமாக வழங்கப்படுவதுடன், இதனூடாக ஒரு பெருந்தொற்று ஏற்படாத வகையில் நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சல்மோனெல்லா நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வு காலப்பகுதி முடிவடையும் போது 93 கோழி இனப்பெருக்கப் பண்ணை கண்காணிப்புகளும் 111 குஞ்சு பொரிப்பக கண்காணிப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பறவைக் காய்ச்சல் கண்காணிப்புப் பணிகளின் கீழ் 3,442 இரத்த மாதிரிகளும், 22,492 எச்ச மாதிரிகள் மற்றும் உட்குழி துடைப்பங்களும் நோய்ப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இனப்பெருக்கப் பண்ணைகள் மற்றும் குஞ்சு பொரிப்பகங்களில் சல்மோனெல்லா நோய் நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வர்த்தகப் பண்ணைகளுக்கு அந்த நோய் பரவுவது தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும், பறவைக் காய்ச்சல் கண்காணிப்பு மூலம் பறவைக் காய்ச்சல் அற்ற நாடாக இலங்கையைப் பேண முடிந்துள்ளது. 31.12.2025 ஆம் திகதியளவில் இதன் பௌதீக முன்னேற்றம் 95% ஆகும்.

### 4. கால்நடை வளத் திட்டமிடல் மற்றும் பொருளாதாரப் பிரிவு

#### 4.1. சமூகப் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

இதன் கீழ், கால்நடை வளத் துறையின் உற்பத்தித் தரவுகள், கால்நடைத் தொகை, பதிவுசெய்யப்பட்ட கால்நடைப் பண்ணைகளின் எண்ணிக்கை ஆகிய தரவுகள் மாதாந்த மற்றும் காலாண்டு அடிப்படையில் வழங்கப்படுவதுடன், கால்நடை வைத்திய அலுவலகங்களின் மனித மற்றும் பௌதீக வளங்கள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்படுகின்றன. அத் தகவல்களின் அடிப்படையில் 'Livestock Statistical Bulletin', 'Livestock Outlook' மற்றும் வருடாந்த அறிக்கை போன்ற வெளியீடுகள் பிரசுரிக்கப்படுகின்றன. அத்துடன், இத்துறையிலுள்ள தொழில்முனைவோர் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 'Poultry Forecast', 'Poultry Monthly Bulletin' மற்றும் 'Dairy Bulletin' ஆகியன பிரசுரிக்கப்படுகின்றன.

2025.12.31 ஆம் திகதி வரை 'Poultry Forecast', 'Livestock Statistical Bulletin', 'Livestock Outlook', வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கை ஆகிய வெளியீடுகள் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், பண்ணைகளைப் பதிவுசெய்யும் நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய படிவங்கள் மற்றும் பெயர்ப்பட்டியல் புத்தகங்களை அச்சிட்டு மாகாண மட்டத்தில் வெளியிடுவதற்காக 09 மாகாணங்களுக்கும் விநியோகிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்த பண்ணைகளின் எண்ணிக்கை 46,009 ஆகும். இப்பிரிவுக்கு கால்நடை வைத்திய அலுவலகங்கள் ஊடாகக் கிடைக்கும் தரவுகளின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில், தற்போது நாடு முழுவதும் 09 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்படுகின்றன.

#### 4.2. கால்நடை வைத்தியத் துறையின் சேவை வழங்கல் முறைமையை விருத்தி செய்தல்

2023 ஆம் ஆண்டு முதல் விலங்குகள் மற்றும் கால்நடை உற்பத்திகளின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பான செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதற்கும் வலையமைப்பாக்குவதற்குமாக 'VRRAS' செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் ஊடாக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு செலவிடும் காலத்தை ஆகக்குறைந்த மட்டத்திற்குக் குறைப்பதற்கும், சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள சமூகத்தின் செயல்முறைகளை இலகுபடுத்துவதற்கும் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது கால்நடைச் சட்டக் கட்டளைகள் மற்றும் சட்டப் பிரிவு, கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

கால்நடை தனிமைப்படுத்தல் நிலையங்களின் செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்தும் மற்றும் வலையமைப்பாக்கும் ஒரு செயல்முறையாகும்.

இதன் அபிவிருத்திப் பணிகளுக்காக அரச பெறுகை செயல்முறையினூடாகப் புறம்பாகச் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தின் உப முறைமைகளுடன் தொடர்புடைய பல்வேறு வகையான தொகுதி அலகுகள் காணப்படுவதுடன், அவை ஏற்கனவே விருத்தி செய்யப்பட்டு பயனர் ஏற்புப் சோதனைக்கும் *(User Acceptance Test)* உட்படுத்தப்பட்டுள்ளன. கால்நடைச் சட்டக் கட்டளைகள் மற்றும் சட்டப் பிரிவுக்கும் தனிமைப்படுத்தல் அலுவலகங்களுக்கும் தொடர்புடைய உப முறைமைகள் இன்னும் விருத்தி செய்யப்பட்டு வருவதுடன், இவ்வருடத்திற்குள் முழுமையான முறைமையை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5. கால்நடை வள ஆராய்ச்சி நிறுவனம்

#### 5.1. உயர்தர கால்நடைத் தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்

இந்தச் செயற்திட்டத்தின் மூலம் உயர்தர கால்நடைத் தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதை மேலும் விரிவுபடுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கமைய, இந்தச் செயற்திட்டத்தின் கீழ் கால்நடைத் தொண்டை அடைப்பான் *(Hemorrhagic Septicemia - OAV)*, கால்கறணை *(Black Quarter)*, ரெனிகட் *(Ranikhet)* தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் செயற்பாடுகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது ஒட்டுமொத்தமாக 91% பௌதீக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது.

| தடுப்பூசி வகை | வருடாந்த இலக்கு | 2025.12.31 ஆம் திகதி வரை உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பூசி அளவுகள் |
|---|---|---|
| கால்நடைத் தொண்டை அடைப்பான் *(OAV)* | *125,000* | *125,040* |
| கால்நடைத் தொண்டை அடைப்பான் *(APV)* | *20,040* | *20,040* |
| கருங்கால் நோய் *(BQ)* | *90,000* | *110,517* |
| புருசெல்லா *(Brucella S19)* | *10,000* | *15,600* |
| ரெனிகட் *(Primary)* | *2,874,000* | *3,000,800* |
| ரெனிகட் *(Secondary)* | *2,521,000* | *3,042,600* |
| தனியார் நிறுவனங்களுக்காகத் தேவைக்கு ஏற்ப தடுப்பூசி உற்பத்தி செய்தல் | | |
| கோழிக் கொலரா *(Fowl Cholera - FC)* | *400,000* (தேவைக்கு ஏற்ப) | *348,840* |
| பன்றி பாஸ்சுரெலோசிஸ் *(SP)* | *3,000* | தேவைக்கு ஏற்ப |
| ரெனிகட் *(Primary)* | *1,500,000* | *2,894,600* |

#### 5.2. கால்நடை வள ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்

இந்தச் செயற்திட்டத்தின் கீழ் தற்போது 23 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தேவைக்கு ஏற்ப மாதிரிகளைப் பரிசோதித்தல் மற்றும் உயிரியல் உற்பத்திகளை மேற்கொள்ளுதல் ஆகியன இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது இந்தச் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.

| செயற்பாடுகள் | வருட்டந்த இலக்கு | 2025.12.31 ஆம் திகதி வரையிலான முன்னேற்றம் |
|---|---|---|
| உயிரியல் உற்பத்திகள் | கேள்விக்கு ஏற்றவாறு | |
| பகுப்பாய்வு அறிக்கைகள் | | *54,789* |
| பரிசோதனை அறிக்கைகள் | | *2,574* |
| நோய் கண்காணிப்பு அறிக்கைகள் | | *2,037* |
| மடிவீக்கத்தைக் கண்டறிவதற்கான CMT வினையாக்கி *(CMT reagent)* | | *17 லீட்டர்* |
| புல்லோரம் பிறபொருளெதிரி அளவுகள் | | *109,500* |
| *RBPT* பிறபொருளெதிரி அளவுகள் | | *12,000* |
| *MRT* பிறபொருளெதிரி அளவுகள் | | *9,200* |
| காம்பு நனைப்பு கரைசல் *(Teat dip solution)* | | *46.765 லீட்டர்* |

**5.3. கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசியை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்**

*இந்தச் செயற்திட்டத்தின் கீழ் உள்நாட்டில் கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசிகளைத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டில் 450,000 தடுப்பூசி அளவுகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டதுடன், திணைக்களத்தின் விலங்குச் சுகாதாரப் பிரிவுக்கு 326,100 தடுப்பூசி அளவுகள் வழங்கப்பட்டுள்ளன. 2025.12.31 ஆம் திகதியாகும்போது சுமார் 100,000 இற்குப் போதுமான கால் மற்றும் வாய் நோய் பிறபொருளெதிரியாக்கிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்தச் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 72% ஆகும்.*

**5.4. மடி அழற்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்**

*இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 30,000 மடி அழற்சி ஊசிமருந்துகளைத் (Infusions) தயாரிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதுடன், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதிக்குள் 33,671 மருந்தளவுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 27,373 மடி அழற்சி ஊசிமருந்துகள் களப் பணிக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், பௌதீக முன்னேற்றம் 77% ஆகும்.*

**5.5. உணவுப் பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக விலங்குணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்தல்**

*2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக விலங்குணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி வசதியளிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படுகின்றன. இந்தச் செயற்திட்டத்தின் கீழ் இந்த வருடத்திற்காக 2025.12.31 ஆம் திகதி வரை 9,988 விலங்குணவு மற்றும் கால்நடை உற்பத்தி மாதிரிகளின் தரம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இதன் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 92% ஆகும்.*

**6. கால்நடை இனவிருத்திப் பிரிவு**

**6.1. கால்நடை இனவிருத்திச் செயற்திட்டம்**

**6.1.1. அதி குளிரூட்டப்பட்ட காளை விந்துக்களை இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் நாடு முழுவதும் விநியோகித்தல்**

*இதற்காக கால்நடை இனவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் 27.31 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2025.12.31 ஆம் திகதியாகும்போது G to G முறைமையின் கீழ் 20,000 'Milking Gir' காளை விந்துக் குப்பிகளும், போட்டித்தன்மைமிக்க கேள்விப் பத்திர முறைமையின் கீழ் Jersey - 4,000, Boer - 2,000, Nili Ravi - 2,000, Brazilian Milking Gir - 10,000 என்ற அடிப்படையில் விந்துக் குப்பிகளையும் கொள்வனவு செய்வதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் Jersey, Nili-Ravi மற்றும் Milking Gir காளை விந்துக்களைக் கொள்வனவு செய்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது வழங்கப்பட்டுள்ளன. Boer ஆட்டு விந்துக் குப்பிகளைக் கொள்வனவு செய்வதற்காகக் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைப் பட்டியல்கள் விபரக்குறிப்புகளுக்கு இணங்காததன் காரணத்தினால், அக் கொள்வனவை 2026 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.*

*அதேபோல் குண்டசாலை மத்திய செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்தினால் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட காளைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் காளை விந்துக் குப்பிகள் பின்வரும் அளவுகளில் களஞ்சியப்படுத்தப்பட்டு மாகாண மட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் விநியோகிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல் இது வரை 334,796 விந்துக் குப்பிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், விநியோகங்கள் மற்றும் கையிருப்பு மீதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன:*

| காளை விந்து வகை | விநியோகம் | கையிருப்பு மீதி |
|---|---|---|
| உள்நாட்டு | 231,019 | 678,239 |
| இறக்குமதி செய்யப்பட்டது | 3,652 | 58,824 |
| பாலின நிர்ணயம் செய்யப்பட்டது | 133 | 3,008 |
| **மொத்தக் கூட்டுத்தொகை** | **234,804** | **740,071** |

#### *6.1.2. செயற்கைச் சினைப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்*

*அத்துடன் இப்பிரிவினால் தேசிய செயற்கைச் சினைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக செயற்கைச் சினைப்படுத்தல் பயிற்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதுடன், மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு அமைகின்றன:*

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | எண்ணிக்கை |
|---|---|
| *கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 14 நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்* | *02* |
| *தனியார் செயற்கைச் சினைப்படுத்தல் கைவினைஞர்களுக்கான 24 நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்* | *01* |
| *செய்முறைப் பரீட்சைகள் (33 பங்கேற்பாளர்களைக் கொண்டது)* | *05* |
| *செயற்கைச் சினைப்படுத்தல் கைவினைஞர்களின் அறிவைப் புதுப்பிக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (20 பங்கேற்பாளர்களைக் கொண்டது)* | *02* |

*தேசிய செயற்கைச் சினைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக கால்நடை வைத்தியப் பிரிவுகளின் மட்டத்தில் செயற்கைச் சினைப்படுத்தல் உபகரணங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக இவ்வருடத்தில் செயற்கைச் சினைப்படுத்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2025.12.31 ஆம் திகதியாகும்போது செயற்கைச் சினைப்படுத்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது அதி குளிரூட்டப்பட்ட காளை விந்துக் குப்பிகளுக்குத் தேவையான 188,546 லீற்றர் திரவ நைதரசன் மாகாண மட்டத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளது.*

#### *6.1.3. நிர்மாணப் பணிகள்*

*மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது குண்டசாலை மற்றும் பொலன்னறுவை செயற்கைச் சினைப்படுத்தல் நிலையங்களின் மாட்டுத் தொழுவங்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், வீதிகள், கட்டடங்கள் போன்றவற்றின் புனரமைப்புப் பணிகள் மற்றும் புதிய நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*பொலன்னறுவை செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் தமன்கடுவை பிரதேச செயலகத்தினாலும், குண்டசாலை செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்திற்குரிய நிர்மாணப் பணிகள் குண்டசாலை பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழும் மேற்கொள்வதற்காகப் பல மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதுடன், அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் இடம்பெற்றன. 2025.12.31 ஆம் திகதியாகும்போது இப்பணிகளை மேற்கொள்ள முடியாமல் போனதுடன், இப் புனரமைப்புப் பணிகள் 2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளன.*

*குண்டசாலை செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்தின் விலங்குகளுக்காகத் தங்குமிடத் தடாகங்களை நிர்மாணிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் 2025 டிசம்பர் 30 ஆம் திகதி திறக்கப்பட்டதுடன், 2025.12.31 ஆம் திகதியாகும்போது கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.*

*மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது குண்டசாலை செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்தின் அலுவலகம் மற்றும் ஆய்வகத்திற்கு மின்சாரம் வழங்கும் மின்சுற்று முறைமையைத் திருத்தியமைக்கும் பணிகளுக்குத் தேவையான மூலப்பொருட்களின் பட்டியல் கொள்வனவு செய்யப்பட்டதுடன், அது 2026 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ளது.*

#### *6.1.4. இனவிருத்திப் பண்ணைகளைப் பதிவு செய்தல்*

*1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க விலங்கு நோய் சட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்பட்ட பண்ணைகளை, இனவிருத்திப் பண்ணைகளாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கு தேவையான சுற்றுநிருபங்கள்,*

வழிகாட்டிக் கையேடுகள் மற்றும் செயல்முறை ஒழுங்குகள் தயாரிக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

பசு, ஆடு, செம்மறியாடு மற்றும் பன்றிப் பண்ணைகள் இதன் கீழ் பதிவுசெய்யப்படவுள்ளதுடன், விலங்குச் சுகாதாரப் பிரிவின் அளவுகோல்களின்படி நோயற்ற முறையான உயிரியல் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றும் பண்ணைகள் இதற்காகப் பதிவுசெய்யப்படவுள்ளன. இவ்வாறு இனவிருத்திப் பண்ணைகளாகப் பதிவுசெய்யப்படும் பண்ணைகளிலிருந்து மாத்திரமே விலங்குகளைக் களத்திற்கு விடுவிப்பதற்குத் திணைக்களம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும். 2025.12.31 ஆம் திகதியாகும்போது 02 பசுப் பண்ணைகளும் 04 பன்றிப் பண்ணைகளும் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### 6.1.5. கறவைப் பசு மந்தையின் செயலாற்றுகை மதிப்பீட்டு அறிக்கை

இந்தச் செயற்திட்டம் நாட்டின் வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் உயர்தர இனத்தைச் சேர்ந்த விலங்குகள் தெரிவுசெய்யப்பட்டு செயற்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படுகின்றன. அதற்கமைய 2025.12.31 ஆம் திகதி வரை 924 விலங்குகள் அடையாளம் காணப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 785 தாய் பசுக்கள் ஆகும். பண்ணை உரிமையாளரிடமிருந்து நாளாந்தம் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளின் அடிப்படையில் அதிக பால் உற்பத்தித் திறனுள்ள விலங்குகள் அடையாளம் காணப்பட்டு பண்ணை உரிமையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன், அங்கு அடையாளம் காணப்படும் பலவீனங்களுக்கு உரிய கால்நடை வைத்தியச் சேவைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் உயர்தர இனத்தைச் சேர்ந்த ஆண் விலங்குகள் குண்டசாலை மற்றும் பொலன்னறுவை செயற்கைச் சினைப்படுத்தல் நிலையங்களின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு காளை விந்து உற்பத்தி செயல்முறைக்கு உள்வாங்கப்படுகின்றன.

### 6.1.6. விலங்குணவு விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

விலங்குணவு வள விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025.12.31 ஆம் திகதி வரை 03 புதிய புல் மற்றும் அவரை வர்க்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன CO-6, Mulato-II மற்றும் Stylosanthes ஆகும். மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது 03 தாய் புல் நாற்றுமேடைகளும் 41 பெருக்க வரிசை புல் நாற்றுமேடைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் புதிய புல் வர்க்கங்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டு 789 உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. 2025.12.31 ஆம் திகதி வரையில் 49 புல் உற்பத்தித் தொழில்முனைவோர் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். குண்டசாலை மத்திய செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்தின் 02 ஏக்கர் நேப்பியர் புல் செய்கை நிலப்பரப்பில் தெளிப்பான் நீர்ப்பாசன முறைமையொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், 02 ஏக்கர் பரப்பில் Mulato-II செய்கையும் நிறுவப்பட்டுள்ளது.

புகைப்பட இலக்கம் 15 – 16

### 6.2. குண்டசாலை செயற்கைச் சினைப்படுத்தல் நிலையத்தை விருத்தி செய்வதன் ஊடாக உயர்தர காளை விந்துக் குப்பிகளின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பவற்றை மேம்படுத்தும் செயற்திட்டம் (100.00 மில்லியன் ரூபாய்)

இந்தச் செயற்திட்டத்திற்காக 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இதன் கீழ் பாகிஸ்தானிலிருந்து விந்து வழங்கும் காளைகளை இறக்குமதி செய்வதற்கு 75 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது விலங்குகளைத் தெரிவு செய்யும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், 2026 பெப்ரவரி மாதத்தில் விலங்குகளை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல் இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 14.8 மில்லியன் ரூபாய் செலவில் இறக்குமதி செய்யப்படவுள்ள 20,000 Brazilian Milking Gir அதி குளிரூப்பட்ட காளை விந்துக் குப்பிகளை இறக்குமதி செய்வதற்குரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகள் கேள்விப் பத்திர அனுமதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேலும் அதே செயற்திட்டத்தின் கீழ் 10.2 மில்லியன் ரூபாய் செலவில் குண்டசாலை செயற்கைச்

*சினைப்படுத்தல் நிலையத்தின் பாதுகாப்பு வேலி தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 17*

### *7. வெளிநாட்டுச் செயற்திட்டங்கள்*

#### *7.1. தரமான புல்/ ஊட்டச்சத்துமிக்க உணவு வர்க்கங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் விருத்தி செய்யப்பட்ட ஊட்டச்சத்து முகாமைத்துவப் பழக்கவழக்கங்களின் ஊடாகச் சிறு அளவிலான கறவை மாட்டு விவசாயிகளின் உற்பத்தியை மேம்படுத்தல்*

*இந்தச் செயற்திட்டத்தின் மூலம் CO-6, Mulato-II, Stylosanthes ஆகிய புல் வர்க்கங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.*

i. *CO-6: 30 கிலோகிராம் தண்டுகள் இறக்குமதி செய்யப்பட்டதுடன், அதிலிருந்து 22,200 தண்டுத் துண்டுகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. அத்துடன் 2025.12.31 ஆம் திகதி வரை 06 ஏக்கர் புல் செய்கை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*
ii. *Stylosanthes: 50 கிலோகிராம் விதைகள் இறக்குமதி செய்யப்பட்டதுடன், அதிலிருந்து 35 கிலோகிராம் விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. 10 ஏக்கர் பரப்பில் நாற்றுமேடைகள் இடப்பட்டுள்ளன.*
iii. *Mulato-II: 100 கிலோகிராம் விதைகள் இறக்குமதி செய்யப்பட்டன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதி முடிவடையும் போது இவ் விதைகள் தனிமைப்படுத்தல் காலப்பகுதியைக் கடந்து வருவதுடன், எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.*

#### *7.2. இறால்களின் நோய் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம்*

*இது இறால்களின் நோய்கள் தொடர்பாகக் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட முதலாவது கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டமாகும்.*

*பாலிமரேஸ் சங்கிலித் தாக்கம் (PCR) ஊடாகப் பின்வரும் நோய்கள் பரிசோதிக்கப்பட்டன: என்டெரோசைடோசூன் ஹெபடோபெனெய் (EHP), வெள்ளைப் புள்ளி நோய் வைரஸ் (WSSV), தீவிர ஹெபடோ பான்கிரியாடிக் நெக்ரோசிஸ் நோய் (AHPND) மற்றும் தொற்றக்கூடிய ஹைப்போடெர்மல் மற்றும் ஹீமடோபொயட்டிக் நெக்ரோசிஸ் வைரஸ் (IHHNV) என்பன ஆகும். இலங்கையில் பதிவாகாத நோய் நிலைமைகள் தொடர்பான தரவுகளைச் சேகரிப்பதே இக் கண்காணிப்புகளின் நோக்கமாகும்.*

*2025 ஜூலை முதல் நவம்பர் வரை மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. வடமேல் மாகாணத்தின் 18 பண்ணைகளிலிருந்து இறால் மாதிரிகள் பெறப்பட்டன. பேராதனை கால்நடை வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலக்கூற்று உயிரியல் ஆய்வகத்தில் உலக விலங்குச் சுகாதார அமைப்பின் (WOAH) தரநிலைகளுக்கு ஏற்ப 1,155 DNA பிரித்தெடுப்புகளும் 3,038 பாலிமரேஸ் சங்கிலித் தாக்கங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்தச் செயற்திட்டத்தின் மூலம் அனைத்துப் பண்ணைகளிலும் EHP அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், எந்தவொரு பண்ணையிலும் AHPND மற்றும் IHHNV கண்டறியப்படவில்லை. 02 பண்ணைகளில் WSSV அடையாளம் காணப்பட்டுள்ளது. பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.*

### *8. விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்*

#### *8.1. அனர்த்த நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு*

*2025.12.31 ஆம் திகதியாகும்போது 'தித்வா' சூறாவளி அனர்த்தத்தினால் பாதிப்படையாத தென் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலுமுள்ள 21 மாவட்டங்களில், 9,622 பண்ணைகளுக்காக 2,200 மில்லியன் ரூபாய் அனர்த்த நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.*

## 02. மில்கோ (பிறைவட்) லிமிடெட்

### 2.1. தொலைநோக்கு
இலங்கையின் மிகச்சிறந்த ஊட்டச்சத்துத் தரத்தைக் கொண்ட உணவு மற்றும் பானங்களை வழங்கும் நிறுவனமாக மாறுதல்.

### 2.2. செயற்பணி
உள்நாட்டு பால் விவசாயிகளை வலுப்படுத்துவதன் ஊடாக பசுப்பால் உற்பத்தியின் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சியை அடைந்துகொள்வதில் ஒரு செயற்திறன்மிக்க பங்குதாரராக இருத்தல் மற்றும் நுகர்வோருக்கு கட்டுப்படியாகும் விலையில் ஊட்டச்சத்தைக் கொண்ட உணவு மற்றும் பானங்களை வழங்கும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்துடனான தொடர்ச்சியான அபிவிருத்தி அணுகுமுறைகளை பின்பற்றுதல்.

### 2.3. நோக்கங்கள்
i.) உயர் தரத்துடனான பால் மற்றும் அது சார்ந்த உணவு மற்றும் பானங்களை வழங்குதல்.

ii.) பசும்பாலினால் நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்கு பங்களிப்பு செய்தல்.

iii.) உள்நாட்டு பால் விவசாயிகளை வலுப்படுத்துதல்.

iv.) உள்நாட்டு பால் கைத்தொழிலினதும் நிறுவனத்தினதும் இருப்பு மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்துதல்.

v.) செயற்பணியில் பங்களிப்பு வழங்குவோரின் திருப்தியை உறுதிப்படுத்துதல்.

### 2.4. பணிகள்
மூன்று பிரதான துறைகளின் ஊடாக செயற்பாட்டு செயன்முறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- உள்நாட்டு பால் விவசாயிகளின் பால் அறுவடையைச் சேகரித்தல்.
- பால் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளல்.
- குறித்த உற்பத்திகளை “ஹைலண்ட்” வர்த்தக நாமத்தின் கீழ் நாடு முழுவதும் விநியோகித்தல்.

### 2.5. நிறுவனத்தின் ஊடாக அடைய எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்
- இலக்கு 1: அனைத்து வடிவங்களிலுமான வறுமையை அனைத்து இடங்களிலும் ஒழித்தல்.
- இலக்கு 2: பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டை அடைதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.
- இலக்கு 8: அனைவருக்கும் பூரண மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கிய முழுமையான மற்றும் உற்பத்தித்திறன்மிக்க வேலைவாய்ப்பு மற்றும் கௌரவமான தொழில் வாய்ப்புகளை ஊக்குவித்தல்.

### 2.6. நிதி முன்னேற்றம்

| விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|
| மூலதனம் | 1,239.00 | 381.00 | 31 |
| மீண்டுவரும் | 24,936.00 | 17,846.00 | 72 |

### 2.7. பௌதீக முன்னேற்றம்

#### i.) பசுந்தழைச் செயற்திட்டம்.
கறவைப் பசுக்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதற்காக நாட்டிற்குள் ஒரே சீரான தீவன உற்பத்தி முறையை உருவாக்குவதையும், உயர் ஊட்டச்சத்தைக் கொண்ட புற்களை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு இந்தச் செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அதன் கீழ் 2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 575 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி, ஆண்டின் இறுதியில் மில்கோ கள உத்தியோகத்தர்களின் வழிகாட்டல் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் 434 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. இதற்கான செலவினை சம்பந்தப்பட்ட விவசாயிகள் ஏற்றுக்கொண்டனர்.

புகைப்பட இலக்கம் 18

***ii.) கறவைப் பசுக்களுக்கு தொடர்ச்சியாக குடிநீர் வழங்குதல்.***

*அதிக பால் உற்பத்தியைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒரே சீரான உற்பத்தி முறையைப் பேணுவதற்கும் கறவைப் பசுக்களுக்கு ஊட்டச்சத்து வழங்கும் போது தொடர்ச்சியான குடிநீர் வழங்கல் இருப்பது அவசியமாகும். அந்தத் தேவையினைப் பிரபல்யப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் 2025 ஆம் ஆண்டில் செலவின் அரைவாசியை அறவிடும் அடிப்படையில் விவசாயிகளுக்கு 800 தண்ணீர் கொள்கலன்களை வழங்கத் திட்டமிடப்பட்டது. ஆண்டின் இறுதியில் வடக்கு, மத்திய, வடமத்திய, வடமேல், தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் 230 குடிநீர் கொள்கலன்கள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்காக மில்கோ நிறுவனத்தினால் ஒரு மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 19*

***iii.) விவசாயப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல்.***

*பால் உற்பத்தியை வினைத்திறனாகவும், உற்பத்தித்திறனுடனும் மற்றும் தொடர்ச்சியாகவும் பேணுவதற்காக கறவைப் பசு வளர்ப்பு மற்றும் முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட செய்முறை மற்றும் தத்துவார்த்த அறிவை வழங்கும் பணி இந்தப் பயிற்சிப் பட்டறைகள் ஊடாக நடைபெறுகின்றது. மில்கோ களப் பணியாளர்கள் ஊடாக இது முன்னெடுக்கப்படுவதுடன், 2025 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 11,150 பால் உற்பத்தி விவசாயிகளுக்குப் பயிற்சியளிப்பதை இது இலக்காக கொண்டிருந்தது. அதன்படி, ஆண்டின் இறுதியில் 7,425 பால் உற்பத்தி விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக மில்கோ நிறுவனம் மேற்கொண்ட செலவு 5.94 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*புகைப்பட இலக்கம் 20*

***iv.) கால்நடை இனவிருத்தியை வினைத்திறனாக்கல்.***

*தரமான மற்றும் அதிக பால் உற்பத்திக்கு விலங்குகளின் சுகாதார முகாமைத்துவம் அவசியமாவதுடன், பண்ணைகளில் அதே இடத்திலேயே கறவைப் பசுக்களின் நோய்களை அடையாளம் காணுதல், சிகிச்சை அளித்தல், நோய்களைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் குறித்த காலப்பகுதிக்குள் செயற்கைமுறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளுதல் ஆகியன இந்தச் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். அதன் கீழ் 2025 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 1,819 நடமாடும் கால்நடை மருத்துவ முகாம்களில் 800 முகாம்கள் ஆண்டின் இறுதியில் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக மில்கோ நிறுவனம் செலவிட்ட தொகை 4.23 மில்லியன் ரூபாய் ஆகும்.*

*புகைப்பட இலக்கம் 21*

***v.) சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)***

*விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் (IFAD) இலங்கையில் செயற்படுத்தப்படும் சிறு அளவிலான விவசாய வணிகக் கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP), மில்கோ நிறுவனத்துடன் இணைந்ததாக 3000 பால் உற்பத்தி விவசாயிகளின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஊவா, மத்திய, வடமேல், வடமத்திய மற்றும் தென் மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் செயற்படுத்தப்படுகின்றது.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் 2165 மாட்டுத் தொழுவங்கள், 51 விவசாயக் கிணறுகள், 760 அசோலா குளங்கள் மற்றும் 04 உயிரியல் வாயு அலகுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 975 புல் நறுக்கும் இயந்திரங்கள், 27 பால் கறக்கும் இயந்திரங்கள், 115 பால் குளிர்விப்பான்கள், 364 எண்ணிக்கையிலான 20 லீட்டர் பால் கொள்கலன்கள், 712 எண்ணிக்கையிலான 10 லீட்டர் பால் கொள்கலன்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. மேலும், 529 பால் உற்பத்தி விவசாயிகளுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விவசாயப் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2025 ஆம் ஆண்டில் மில்கோ நிறுவனத்தினால் 0.49 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 22*

***vi.) விவசாய நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள்.***

*இலங்கை பால் உற்பத்தியாளர்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கும் அவர்களின் குடும்பக் கட்டமைப்பிற்குள் ஏற்படும் அவசர மற்றும் அத்தியாவசிய தேவைகளின் போது உதவுவதற்குமாக 2003 ஆம் ஆண்டில் 'மில்கோ பால் விவசாய சமூகப் பாதுகாப்பு நிதியம்' நிறுவப்பட்டது. அதன் கீழ் 2025 ஆம் ஆண்டில் மாத்திரம் 7,140 பயனாளிகளுக்கு 35.00 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 'தித்வா' சூறாவளியினால் பாதிக்கப்பட்ட 2,822 பால் உற்பத்தி விவசாயிகளுக்கு தலா 5,000 ரூபாய் வீதமான நிவாரண வவுச்சர்களை சத்தோச நிறுவனம் ஊடாக நாடு முழுவதும் விநியோகிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.*

*புகைப்பட இலக்கம் 23*

***vii.) சுப்பர் மார்க்கெட்களுக்கு அதிகுளிரூட்டல் பெட்டிகளை வழங்குதல்.***

*சுப்பர் மார்க்கெட் வலையமைப்புகளில் ஐஸ்கிரீம் விற்பனையை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில், தெரிவுசெய்யப்பட்ட சுப்பர் மார்க்கெட்களுக்கு வழங்குவதற்காக 100 அதிகுளிரூட்டல் பெட்டிகள் 2025 ஆம் ஆண்டின் மூலதன வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட மில்கோ நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டதுடன், தெரிவுசெய்யப்பட்ட சுப்பர் மார்க்கெட்களுக்கு அந்த அதிகுளிரூட்டல் பெட்டிகளை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*புகைப்பட இலக்கம் 24*

***viii.) புதிய உரிமம் பெற்ற விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.***

*மில்கோ விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தும் வகையில் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 132 உரிமம் பெற்ற விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன், விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்கான அனைத்து செலவுகளையும் விற்பனை நிலைய உரிமையாளர்கள் ஏற்றுக்கொண்டனர். விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் போது பிரதேச அபிவிருத்தி வங்கியின் (RDB) ஊடாக எதிர்பார்க்கப்பட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்ய முடியாமை மற்றும் விண்ணப்பதாரிகளுக்கு கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது பாதிப்பை ஏற்படுத்தும் சட்டதிட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக, விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், 2026 ஆம் ஆண்டில் மேலும் 300 உரிமம் பெற்ற விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 25*

***ix.) விநியோக விற்பனை மேற்பார்வையாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு முறையை அறிமுகப்படுத்தல்.***

*நிறுவனத்தின் விற்பனையை மேம்படுத்துவதற்காகவும், மாதாந்த விற்பனை இலக்குகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நீண்டகாலமாக நியமிக்க முடியாமல் இருந்த விற்பனை பிரதிநிதிகளுக்கான விற்பனை மேற்பார்வையாளர்களை (DSR), பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், தற்போது அவ்வாறு நியமிக்கப்பட்ட 64 விற்பனை பிரதிநிதிகளுக்கான விற்பனை மேற்பார்வையாளர்கள் விற்பனைப் பிரதிநிதிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். அவர்களின் விற்பனை இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் அவர்களுக்கு நிறுவனத்தினால் ஒரு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. மேலும், அவர்களின் சேவையை அதிக வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதற்காக பயிற்சிப் பட்டறைகளை நடாத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*புகைப்பட இலக்கம் 26*

## *03. தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை*

***3.1. தொலைநோக்கு:***
*நிலைபேறான பண்ணை கால்நடை உற்பத்தியில் முன்னோடியாக இருத்தல்.*

***3.2. செயற்பணி:***
*கால்நடை உற்பத்திகளில் தன்னிறைவடைதல் எனும் தேசியத் தேவைக்கு பங்களிப்பு செய்தல்.*

***3.3. நோக்கங்கள்:***

- *உள்நாட்டு விவசாயிகளுக்கு இனவிருத்திக்குத் தேவையான விலங்குகளை வழங்குதல்.*
- *கால்நடை வளங்கள் மற்றும் விவசாய உற்பத்திகளின் உற்பத்தியை அதிகரித்தல்.*
- *கால்நடைத் துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், மாணவர்கள், டிப்ளோமா தாரிகள், கால்நடைத் துறையில் வேலைவாய்ப்புகளை எதிர்பார்ப்போர் மற்றும் முதலீட்டாளர்களுக்காக கால்நடை வளப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.*
- *விற்பனை வலையமைப்பை முறைப்படுத்துதல்.*
- *சபைக்குச் சொந்தமான காணிகளில் பழங்கள் மற்றும் ஏனைய பொருளாதாரப் பயிர்களைப் பயிரிடுவதன் ஊடாக வருமானத்தை அதிகரித்தல்.*

***3.4. பணிகள்:***

- *கால்நடை இனவிருத்தி மற்றும் வளர்ப்பு*
- *இனவிருத்திக்காக உயர்தர விலங்குகளை நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்குதல்.*
- *மக்களுக்குத் தேவையான தரமான பால், இறைச்சி, முட்டை, தேங்காய், காய்கறிகளை உற்பத்தி செய்தல் மற்றும் நியாயமான விலையில் விற்பனை செய்தல்.*
- *நிலைபேறான தன்மை மற்றும் உகந்த காணிப் பயன்பாட்டிற்காக பண்ணைகளில் கால்நடை - பயிர் ஒருங்கிணைந்த விவசாய முறையொன்றை நடைமுறைப்படுத்தல்.*
- *தெங்குப் பயிர்ச் செய்கையிலிருந்து கிடைக்கும் மேலதிக நிதியைப் பயன்படுத்தி நிலைபேறான தன்மைக்காக உகந்த மட்டத்தில் பண்ணை நடவடிக்கைகளைப் பராமரித்தல்.*
- *செலவைக் குறைப்பதற்கும் உற்பத்திப் போட்டித்தன்மையை விருத்தி செய்வதற்கும் நவீன தொழில்நுட்பம், நிபுணத்துவம் மற்றும் மூலதனத்தை அறிமுகப்படுத்துதல்.*
- *இலாபகரமான வணிகத்திற்காக சிறந்த சந்தைப்படுத்தல் உத்திகளுடன் புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிதல்.*

***3.5. நிறுவனத்தின் ஊடாக அடைய எதிர்பார்க்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்***

- *இலக்கு 1 : அனைத்து வடிவங்களிலுமான வறுமையை அனைத்து இடங்களிலும் ஒழித்தல்.*
- *இலக்கு 2 : பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து மேம்பாட்டை அடைதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.*
- *இலக்கு 15 : தரைவாழ் உயிர்வாழ்க்கை.*

***3.6 நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்***

| தொ. இல | நிகழ்ச்சித் திட்டங்கள் | ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | செலவிடப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்) | நிதி முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | மூலதனம் | 629.63 | 169.69 | 27 |
| 2 | மீண்டுவரும் | 1,534.59 | 1,319.55 | 86 |

***3.7 நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம்***

| செயற்பாடுகள் | அலகு | 2025.12.31 ஆம் திகதிக்கு இலக்கு | 2025.12.31 ஆம் திகதிக்கு உண்மைப் பெறுமதி | அடைந்த விகிதாசாரம் (%) |
|---|---|---|---|---|
| பசுப்பால் உற்பத்தி | லீட்டர் | 6,869,748 | 4,508,176 | 66 |
| எருமைப்பால் உற்பத்தி | லீட்டர் | 933,922 | 721,300 | 77 |
| ஆட்டுப்பால் உற்பத்தி | லீட்டர் | 25,914 | 15,935 | 61 |

| செயற்பாடுகள் | அலகு | 2025.12.31 ஆம் திகதிக்கு இலக்கு | 2025.12.31 ஆம் திகதிக்கு உண்மைப் பெறுமதி | அடைந்த விகிதாசாரம் (%) |
|---|---|---|---|---|
| தேங்காய் உற்பத்தி | காய்களின் எண்ணிக்கை | 18,574,830 | 9,380,460 | 51 |
| புரோய்லர் கோழிக்குஞ்சு உற்பத்தி | எண்ணிக்கை | 4,080,518 | 3,133,786 | 77 |
| முட்டையிடும் கோழிக்குஞ்சு உற்பத்தி | எண்ணிக்கை | 2,340,337 | 1,511,736 | 65 |
| வர்த்தக ரீதியிலான முட்டை உற்பத்தி | எண்ணிக்கை | 6,685,868 | 4,848,184 | 73 |
| புரோய்லர் கோழி இறைச்சி உற்பத்தி | எண்ணிக்கை | 22,800 | 25,279 | 111 |
| **விலங்குகளை வழங்குதல்** | | | | |
| பசு மாடு - ஆண் | எண்ணிக்கை | 1,088 | 571 | 52 |
| பசு மாடு - பெண் | எண்ணிக்கை | 165 | 47 | 28 |
| எருமை மாடு - ஆண் | எண்ணிக்கை | 470 | 199 | 42 |
| எருமை மாடு - பெண் | எண்ணிக்கை | 30 | 15 | 50 |
| ஆடுகள் | எண்ணிக்கை | 311 | 157 | 50 |
| செம்மறி ஆடுகள் | எண்ணிக்கை | 1,147 | 629 | 55 |
| **பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள்** | | | | |
| யோகட் | 80 மில்லி லீட்டர் | 1,230,674 | 857,291 | 70 |
| தயிர் | 1 லீட்டர் | 807,053 | 407,477 | 50 |
| மில்க் டொபி | பொதிகள் | 583,981 | 163,973 | 28 |
| UHT பால் பொதிகள் | பொதிகள் | 931,500 | 124,266 | 13 |
| யோகட் பானம் | 200 மில்லி லீட்டர் | 210,000 | 173,062 | 82 |
| ஐஸ்கிரீம் | 1 லீட்டர் | 25,561 | 12,321 | 48 |
| | கோன் (Cone) | 160,500 | 94,158 | 59 |
| ரப்பர் ஷீட் | கிலோகிராம் | 29,296 | 14,263 | 49 |
| விவசாய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | எண்ணிக்கை | 104 | 20 | 19 |

### 3.7.1. UHT 1 லீட்டர் பால் பொதியை மீண்டும் சந்தைக்கு வெளியிடுதல்

தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையினால் தற்காலிகமாக உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்த UHT 1 லீட்டர் பால் பொதியை மீண்டும் சந்தைக்கு வெளியிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிகழ்வில் கௌரவ கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டதுடன், தேசிய பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உள்நாட்டு பால் கைத்தொழிலை வலுப்படுத்துவதற்கும் பங்களிப்பு வழங்குவதே இதன் நோக்கமாகும்.

### 3.7.2. உலக பால் தினக் கொண்டாட்டம்

ஜூன் மாதம் 01 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட உலக பால் தினத்தை முன்னிட்டு, தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையினால் விசேட விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. திரவப் பால் நுகர்வை மக்களிடையே பிரபல்யப்படுத்துவதும் அதன் ஆரோக்கிய நன்மைகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுமே இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இந்த விழாவின் போது, நிறுவனத்தினால் இலவசமாக திரவப் பால் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இதில் பெருமளவிலான மக்கள் கலந்துகொண்டதுடன், திரவப் பால் அருந்துவதன் முக்கியத்துவம் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

புகைப்பட இலக்கம் 27

### 3.7.3. விற்பனை நிலைய வலையமைப்பை விரிவுபடுத்தல்

திரவப் பால் நுகர்வை ஊக்குவித்தல் மற்றும் தரத்தில் சிறந்த பண்ணை சார்ந்த உற்பத்திகளை நுகர்வோருக்கு வழங்குதல் எனும் நோக்கில், தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையினால்

*நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டத் தொடரின் கீழ் 2025 ஆம் ஆண்டில் 05 புதிய பண்ணை விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இந்த விற்பனை நிலையங்கள் மாரவில பண்டார பெதுமே, ருக்கத்தன, மரந்தவில, ஹொரகெலே மற்றும் மெல்சிறிபுர வல்பொலயாய பெதுமே ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.*

*மேலும், சிறீங்கபாத மற்றும் மாவத்தை பண்ணைகளின் விற்பனை நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளதுடன், மருதானை புகையிரத நிலையத்தில் அமைந்துள்ள விற்பனை நிலையம் அதே வளாகத்திற்குள் வேறொரு இடத்தில் புதிய தோற்றத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன், எமது புதிய விற்பனை நிலையம் கொழும்பு மாநகர சபை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.*

*இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு உயர்தரமான பால், இறைச்சி மற்றும் ஏனைய பண்ணை சார்ந்த பல உற்பத்திகளை இந்த விற்பனை நிலையங்கள் மூலம் இலகுவாகக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 28*

### *3.7.4. சூரிய சக்தியால் இயங்கும் நீர் வழங்கல் தொகுதி ஒன்றை நிறுவுதல்*

*தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான நாரங்கல்ல பண்ணைக்குள் 20 ஏக்கரை உள்ளடக்கும் வகையில் சூரிய சக்தியால் இயங்கும் ஒரு நீர் வழங்கல் தொகுதி நிறுவப்பட்டதுடன், இது கௌரவ கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. இதன் கீழ் வருடாந்தம் 4 போகங்களில் பயிர்ச் செய்கை மேற்கொண்டு, சோளச் செடிகள் மற்றும் விதைகள் உட்பட வருடாந்தம் 1,600 மெற்றிக் தொன் அறுவடையைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சோள அறுவடை மூலம் இந்தப் பண்ணைக்கு வருடாந்தம் செறிவூட்டப்பட்ட உணவிற்காக செலவிடப்படும் சுமார் 80 இலட்சம் ரூபாய் பணத்தைச் சேமிப்பதற்கும் பால் அறுவடையை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.*

*புகைப்பட இலக்கம் 29*

### *3.7.5. செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் தென்னைச் செயற்திட்டத்தைக் கண்காணித்தல்*

*தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையிடமுள்ள 11,000 ஏக்கர் தென்னைப் பயிர்ச் செய்கையைக் கண்காணிப்பதற்கும், பயிர்ச் செய்கை தரவுகளைச் சேகரிப்பதற்கும் மற்றும் எதிர்வுகூறுவதற்கும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) மற்றும் ட்ரோன் தொழில்நுட்பத்தை (Drone technology) இணைத்த செயலி ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*இதன் மூலம் தென்னை மரங்களின் வளர்ச்சி நிலை, நோய் மற்றும் பீடைத் தாக்கங்கள், நீர்த் தேவைகள் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடுகளை அடையாளம் காண முடியும். இதன் ஊடாக சபை, நவீன நுட்ப விவசாயத்தை (Smart Agriculture) நோக்கி நகர்வதுடன், வேகமான மற்றும் துல்லியமான தரவுகளின் அடிப்படையில் சரியான மற்றும் காலத்திற்குப் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றது. அதன் மூலம் தென்னைப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான இடுபொருட்களை முகாமைத்துவம் செய்வதன் ஊடாக தற்போதைய தென்னைப் பயிர்ச் செய்கையின் உற்பத்தித்திறனை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.*

*புகைப்பட இலக்கம் 30*

### *3.7.6. போசணைமிக்க புல் வகைகளைப் பயிரிடல்*

*இதன் கீழ் தேசிய கால்நடை வளச் சபைக்குச் சொந்தமான பண்ணைகளில் கறவை மாட்டுச் செயற்திட்டத்திற்குத் தேவையான போசணைமிக்க புற்களைப் பயிரிடும் பணிகள் இடம்பெற்றதுடன், 2025 ஆம் ஆண்டில் சுமார் 1,600 ஏக்கரில் சோளம் மற்றும் தீவனச் சோளம் (Sorghum) பயிரிடப்பட்டன. இதன் மூலம் விலங்குகளுக்கு உயர்தரமான போசணைமிக்க புல் வகைகளை வழங்க முடிந்ததோடு, அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது.*

*புகைப்பட இலக்கம் 31*

***3.7.7. எருமைப்பால் யோகட்டை சந்தைக்கு அறிமுகப்படுத்துதல்***

*உள்நாட்டு நுகர்வோரின் ஊட்டச்சத்து தேவைகளைக் கருத்திற்கொண்டு, முதன்முறையாக தேசிய கால்நடை வளச் சபையினால் எருமைப்பால் யோகட் உற்பத்தி ஒன்று சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உயர்தரமான எருமைப்பாலைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் இந்த யோகட், சுவை மற்றும் ஊட்டச்சத்துடன் இயற்கையான சுவை மற்றும் தரத்தைப் பேணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த எருமைப்பால் யோகட்டை சபைக்குச் சொந்தமான விற்பனை நிலையங்கள் மற்றும் சுப்பர் மார்க்கெட்கள் ஊடாக நுகர்வோர் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*புகைப்பட இலக்கம் 32*

***அமைச்சு ஒதுக்கீட்டின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்***

| **#** | ***அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*** | ***ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்)*** | ***2025.12.31 ஆம் திகதிக்கான பௌதீக முன்னேற்றம்*** |
|---|---|---|---|
| *1* | *போயர் (Boer) இன ஆடுகளை இறக்குமதி செய்தல்* | *85.00* | *விலங்குகளை இறக்குமதி செய்வது தொடர்பான சுகாதார வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டதால், 2026 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.* |
| *2* | *பால் நிர்ணயம் செய்யப்பட்ட 5,000 பசு விந்து அலகுகளை இறக்குமதி செய்தல்* | *38.00* | *இறக்குமதி செய்வது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், 2026 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இறக்குமதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.* |
| *3* | *நிக்கவெரட்டிய மற்றும் போபத்தலாவ பண்ணைகளில் இரண்டு மாட்டுத் தொழுவங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல்* | *12.36* | *நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.* |
| *4* | *மாரவில பண்ணையில் மூடிய முறைமையிலான கோழி வளர்ப்பு மனையொன்றை நிர்மாணித்தல்* | *47.00* | *நிர்மாணப் பணிகளில் சுமார் 60% நிறைவு செய்யப்பட்டுள்ளது.* |

- ***"2025 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் குறைவாகப் பயன்படுத்தப்படும் காணிகளை அடையாளம் கண்டு, அக்காணிகளின் உகந்த தன்மை குறித்துக் கவனம் செலுத்தி சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோர் உள்ளடங்கலாக தனியார் முதலீடுகளுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்" எனும் முன்மொழிவு தொடர்பான விபரம்:***

| **#** | ***அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்*** | ***ஒதுக்கப்பட்ட தொகை (மில்லியன் ரூபாய்)*** | ***2025.12.31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம்*** |
|---|---|---|---|
| *1.* | *சபைக்குச் சொந்தமான குறைவாகப் பயன்படுத்தப்படும் காணிகளை உகந்த பயன்பாட்டிற்காக தகுதியான முதலீட்டாளர்களுக்கு வழங்குதல்* | *63.80* | *எதிர்பார்க்கப்பட்ட அளவில் 55% மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. நிக்கவெரட்டிய பண்ணைக்கான தேவையான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதமும், 'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ள நிலைமையினால் காடுகளை அழிப்பதற்குத் தேவையான இயந்திர உபகரணங்களை இயக்குவதில் ஏற்பட்ட சிரமமுமே இதற்குக் காரணமாகும்.* |

## *04. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்ரொக் என்ரபிரய்ஸ் கம்பனி*

### *4.1. தொலைநோக்கு*

*ஒரு நாள் வயதுடைய உயர் தரத்திலான புரொய்லர் கோழிக் குஞ்சுகள் மற்றும் புரொய்லர் கோழி இறைச்சியை உள்நாட்டு சந்தையில் நியாயமான விலையில் வழங்கும் முன்னணி உற்பத்தியாளராக திகழ்தல்.*

### *4.2. செயற்பணி*

*சர்வதேச தர நிர்ணயங்களுக்கு இணங்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒரு நாள் வயதான புரோய்லர் கோழிக் குஞ்சுகள் மற்றும் பிராய்லர் கோழி இறைச்சி என்பவற்றை தரமான முறையில் விருத்தி செய்தல்.*

### *4.3. நோக்கங்கள்*

- *சந்தை விலை சமநிலையைப் பேணுவதை இலக்காகக் கொண்டு மனித நுகர்வுக்குத் தேவையான கோழி இறைச்சி மற்றும் முட்டையை உற்பத்தி செய்தல் மற்றும் ஒரு நாள் வயதுடைய பிராய்லர் கோழிக் குஞ்சுகளை இனவிருத்தி செய்தல்.*
- *மஹாவெலி "எச்" வலயத்தின் விவசாயிகளை விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஆர்வம் கொள்ளச் செய்வதன் மூலம் அவர்களின் வருமானத்தை உயர்த்துதல், தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை ஏற்படுத்துதல்.*

### *4.4. பிரதான துறைகள்*

*உயர் தரத்திலான ஒரு நாள் வயதான புரோய்லர் கோழிக் குஞ்சுகளின் உற்பத்தி மற்றும் புரோய்லர் கோழி இறைச்சி உற்பத்தி.*

### *4.5. பணிகள்*

*i.* *இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விலங்குகளைக் கொண்ட ஒரு தாய் கோழிப் பிரிவைப் பராமரித்துப் பேணுதல்*

*ii.* *ஓர் அரை-தானியங்கி முட்டை அடைகாப்பகத்தைப் பராமரித்துப் பேணுதல்.*

*iii.* *ஒரு வர்த்தக புரோய்லர் பிரிவைப் பராமரித்துப் பேணுதல்.*

*iv.* *சுகாதாரப் பாதுகாப்புடனும் நிர்ணயிக்கப்பட்ட தரத்துடனும் கோழி இறைச்சியை உற்பத்தி செய்வதற்காக ஓர் அரை-தானியங்கி இறைச்சி பதப்படுத்தும் நிலையத்தைப் பராமரித்துப் பேணுதல்.*

*v.* *நிறுவனத்தின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையங்களைப் பராமரித்துப் பேணுதல்.*

### *4.6. நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி முன்னேற்றம்*

| தொ/ இல | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) | செலவு செய்த தொகை (மில். ரூபா) | நிதி முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | மூலதன | 175.51 | 201.09 | 114.57 |
| 2 | மீண்டுவரும் | 238.94 | 334.18 | 139.86 |

# *அத்தியாயம் 03*

# *டிசம்பர் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை*

## *3.1. நிதிச் செயலாற்றுகை அறிக்கை*

ஏசீஏ- எப்

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 ரூபா | | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | உண்மை நிலை 2024 ரூபா | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| 1,443,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 1,939,987,603 | 86,430,015 | |
| 1,443,000,000 | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | **1,939,987,603** | **86,430,015** | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 36,319,927,056 | 22,762,348,930 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 1,560,218,838 | 96,911,906 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 199,548,906 | 108,271,180 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **38,079,694,800** | **22,967,532,016** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **40,019,682,403** | **23,053,962,031** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | **2,566,748,234** | **159,254,397** | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **37,452,934,169** | **22,894,707,634** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 3,250,950,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 3,223,052,555 | 2,540,698,945 | ஏசீஏ-2(ஐ) |
| 696,800,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 508,428,281 | 656,110,596 | ஏசீஏ-2(ஐ) |
| 49,523,900,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 48,853,904,632 | 48,459,517,438 | ஏசீஏ-2(ஐ) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ஐ) |
| 1,350,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 426,458 | 183,374 | ஏசீஏ-2(ஐ) |
| **53,473,000,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **52,585,811,926** | **51,656,510,353** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 6,701,600,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 2,898,750,681 | 56,441,952 | ஏசீஏ-2(ii) |
| 53,642,213,093 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 32,015,726,471 | 4,112,529,144 | ஏசீஏ-2(ii) |
| 25,011,850,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 17,781,152,264 | 8,811,486,846 | ஏசீஏ-2(ii) |
| 1,730,000,000 | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | 1,463,676,399 | 1,947,579,800 | ஏசீஏ-2(ii) |
| 37,500,000 | திறன் விருத்தி | 14 | 25,490,468 | 5,034,812 | ஏசீஏ-2(ii) |
| 15,754,150,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 11,734,321,850 | 10,212,201,739 | ஏசீஏ-2(ii) |
| **102,877,313,093** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **65,919,118,133** | **25,145,274,293** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 591,718,713 | 89,778,157 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 252,911,897 | 219,295,950 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | - | - | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **844,630,610** | **309,074,107** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | **119,349,560,668** | **77,110,858,753** | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | **(81,896,626,499)** | **(54,216,151,119)** | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (81,896,626,499) | (54,218,905,365) | ஏசீஏ-7 |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | - | 2,754,245 | ஏசீஏ-3 |
| | | | - | - | |

*3.2. நிதி நிலைமை தொடர்பான அறிக்கை*

**ஏசீஏ -பீ**

ஏசீஏ -பீ

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| <u>நிதி சொத்துக்கள் அற்றது</u> | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 129,158,836,914 | 4,111,761,351 |
| <u>நிதி சொத்துக்கள்</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5(ஏ) | 390,829,393 | 337,466,402 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | 2,754,245 |
| **மொத்த சொத்துக்கள்** | | **129,549,666,307** | **4,451,981,998** |
| <u>தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு</u> | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | (837,117,180) | 206,093,422 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 129,158,836,914 | 4,111,761,351 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | 63,000,000 | 63,000,000 |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 1,164,946,573 | 68,372,979 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | 2,754,245 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **129,549,666,307** | **4,451,981,997** |

பக்க இலக்கம் 8 முதல் 59 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 60 முதல் 225 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ........................ | .................. | ........................ |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி) |
| பெயர்: | பெயர்: | பெயர் : |
| பதவி : | பதவி : | |
| திகதி : 2026.02.26 | திகதி : 2026.02.26 | திகதி : 2026.02.26 |
| D.P. Wickramasinghe<br>Secretary<br>Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation<br>80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road<br>Battaramulla. | D.P. Wickramasinghe<br>Secretary<br>Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation<br>80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road<br>Battaramulla. | D.K.T. Samanmali<br>Chief Accountant<br>Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation<br>(Agriculture Division)<br>No. 80/5, "Govijana Mandiraya"<br>Rajamalwatta Road, Battaramulla. |

### *3.3. காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை*

**ஏசீஏ- சீ**

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை | |
|---|---|---|
| | **2025** ரூபா | **2024** ரூபா |
| **<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 561,411,246 | 192,983,847 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 36,319,927,056 | 22,762,348,930 |
| முற்பணங்களை அறவிடல் | 245,469,771 | 88,551,601 |
| வைப்புக்களின் பெறுகை | 1,560,218,838 | 96,911,906 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **38,687,026,911** | **23,140,796,284** |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 2,637,629,588 | 2,553,780,522 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 2,600,816,082 | 15,176,218,129 |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு, மூலதன மாற்றங்ள், திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள் | - | - |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 234,171,203 | 58,871,340 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 2,566,748,234 | 159,254,397 |
| முற்பணக் கொடுப்பனவு | 263,725,680 | 146,641,299 |
| வைப்புக் கொடுப்பனவு | 591,718,713 | 89,778,157 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **8,894,809,500** | **18,184,543,844** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **29,792,217,411** | **4,956,252,440** |
| **<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| வட்டி | | |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>** | | |
| மூலதனச் சொத்துகளின் நிர்மாணம்இ கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள் | 29,792,217,411 | 4,953,498,195 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **29,792,217,411** | **4,953,498,195** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(29,792,217,411)** | **(4,953,498,195)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | - | **2,754,245** |
| **<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (எ)** | - | - |
| ***<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(எ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | 2,754,245 |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

### *3.4. நிதி அறிக்கை குறிப்புகள்*

**அறிக்கையிடலின் அடிப்படை**

1) **தயார்படுத்தலின் நோக்கம்**

2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2025 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

3) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

4) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

6) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

7) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2025 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

*

ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

### 3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

ஏசீஏ - 1

## 2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமானக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்:- கமத்தொழில், கால்நடை வள, காணி மற்றும் நீர்பாசன அமைச்சு

செலவின தலைப்பு டில : 118

ரூபா

| அரசிறை குறியீடு | வருமானத் தலைப்பு | குறிப்பு | வருமான மதிப்பீடு (1) | | வருமானத்தைத் திரட்டுதல் (2) | | | (3) | வருமானத்திலிருந்து மீளச்செலுத் (4) | | | (5) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மூல மதிப்பீடு 1(i) | திருத்திய மதிப்பீடு 1(ii) | தொடர்புடைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது 2(i) | ஏனைய அமைச்சினால்/ திணைக்களத்தினால்திரட்டப்பட்டது (Table SA-21-1) 2(ii) | மொத்தம் 2(iii)=2(i)+2(ii) | நிலுவை வருமானங்களை திரட்டுதல் (3) | காசாக 4(i) | தவறுகளைத் திருத்துதல் 4(ii) | மொத்தம் 4(iii)=4(i)+ 4(ii) | 2025 இற்குரிய தேறிய வருமானம் 5=2(iii)+ (3)-4(iii) |
| 2003.07.00 | அரசின் நெல் கொள்முதல் நிகழ்ச்சித்திட்டம் | | 110,000,000 | 110,000,000 | | 68,273,002 | 68,273,002 | | | | | 68,273,002 |
| 2003.08.00 | நீர் மின்சாரம் விற்பனை | | 1,333,000,000 | 1,333,000,000 | - | 1,871,714,601 | 1,871,714,601 | | - | - | - | 1,871,714,601 |
| | மொத்த வரியற்ற வருமானம் | 4 | 1,443,000,000 | 1,443,000,000 | - | 1,939,987,603 | 1,939,987,603 | - | - | - | - | 1,939,987,603 |
| | மொத்த முழு வருமானம் | | | | | | | | | | | |

2026-02-26
திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின்/
பிரதான கணக்காளரின்/ நிதிப் பிரிவுத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

D.K.G. Samanmali
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation
(Agriculture Division)
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Road, Battaramulla.

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பமும் பெயரும் பதவியும்

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

* உங்களுக்குப் பொருந்தக்கூடிய வருமானச் சின்னத்தை மட்டும் சேர்க்க படிவம் திருத்தப்பட வேண்டும்

ஏசீஏ - 1(i)

## 2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற காலப்பகுதிக்கான வருமான நிலுவைக் கூற்று

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்: செயலாளர்,கமத்தொழில்,கால்நடைவள, காணி மற்றும் நீர்பாசன அமைச்சு

செலவின தலைப்பு இல:118

| முந்திய மூன்று நிதியாண்டிற்கான தேறிய அரசிறை சேகரிப்பு | | | |
|---|---|---|---|
| | ஆண்டு 1 | (2022) | ரு. 1,379,145,061.21 |
| | ஆண்டு 2 | (2023) | ரு. 2,076,755,010.26 |
| | ஆண்டு 3 | (2024) | ரு. 1,617,286,539.83 |

ரு

| காலம் | அரசிறை குறியீடு | வருமான வரி | வருட ஆரம்பத்தில் மீதி (1) | அறிக்கையிடும் ஆண்டின் தொடர்பில் நிலுவைகள் (2) | அறவீடுகள் (3) | வெட்டிநீக்கப்பட்ட நிலுவை வருமானம் (4) | வருட இறுதியில் மீதி 5=(1)+(2)-[(3)+(4)] |
|---|---|---|---|---|---|---|---|
| (1) அறிக்கையிடும் ஆண்டின் தொடர்பில் நிலுவைகள் | 2003.07.00 | அரசின் நெல் கொள்முதல் நிகழ்ச்சித்திட்டம் | | - | - | - | - |
| | 2003.08.00 | நீர் மின்சாரம் விற்பனை | | 1,848,535,046 | 1,436,959,970 | - | 411,575,077 |
| உப மொத்தம் | | | - | 1,848,535,046.28 | 1,436,959,969.60 | - | 411,575,076.68 |
| (2) முந்திய ஆண்டின் தொடர்பில் நிலுவைகள் | 2003.07.00 | அரசின் நெல் கொள்முதல் நிகழ்ச்சித்திட்டம் | - | | - | - | - |
| | 2003.08.00 | நீர் மின்சாரம் விற்பனை | 434,406,815 | | 434,406,039 | - | 775.58 |
| உப மொத்தம் | | | 434,406,815.00 | - | 434,406,039.42 | - | 775.58 |
| (3) முந்திய ஆண்டிற்கு முற்பட்ட ஆண்டுவரையுள்ள நிலுவைகள் | 2003.07.00 | அரசின் நெல் கொள்முதல் நிகழ்ச்சித்திட்டம் | 717,052,154 | | 68,273,002 | - | 648,779,153 |
| | 2003.08.00 | நீர் மின்சாரம் விற்பனை | 11,224,725 | | - | - | 11,224,725 |
| உப மொத்தம் | | | 728,276,880 | - | 68,273,002 | - | 660,003,878 |
| மொத்தம் | | | 1,162,683,695 | 1,848,535,046 | 1,939,639,011 | - | 1,071,579,730 |

2026.02.26.
திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின்/
நிதிப் பிரிவுத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

D.K.T. Samanmali
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation
(Agriculture Division)
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Road, Battaramulla.

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம்
வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பெயர்
வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதவி

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

# திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுக்கும் உண்மை வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான விளக்கம்

அரசிறை கணக்கீட்டு உத்தியோத்தர்: செயலாளர்,கமத்தொழில்,கால்நடைவள, காணி மற்றும் நீர்பாசன அமைச்சு      செலவின தலைப்பு இல:118

ரூ

| அரசிறை குறியீடு | விபரம் | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு | உண்மை வருமானம் | திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டுக்கும் உண்மை வருமானத்திற்கும் இடையிலான வேறுபாடு | திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டின் % சதவீதமாக வேறுபாடு | வேறுபாட்டுக்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| 2003.07.00 | அரசின் நெல் கொள்முதல் நிகழ்ச்சித்திட்டம் | 110,000,000 | 68,273,002 | (41,726,998) | -38% | எதிர்பார்த்த வருமானத்தை சேகரிக்க முடியவில்லை |
| 2003.08.00 | நீர் மின்சாரம் விற்பனை | 1,333,000,000 | 1,871,714,601 | 538,714,601 | 40% | 2003.08.00 திகதி தலைப்பு 206 இன் கீழ் கலாச்சார விவகாரத் துறைக்கு ரூ. 348,591.94 தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும், காலநிலை மாற்றங்கள் காரணமாக அதிகரித்த நீர் காரணமாக உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக வருமானம் அதிகரித்துள்ளது. |

2026.02.26
திகதி

பிரதான நிதி உத்தியோகத்தரின்/ பிரதான கணக்காளரின்/ நிதிப் பிரிவுத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

D.K.T. Samanmali
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation
(Agriculture Division)
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Road, Battaramulla.

வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பம்
வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பெயர்
வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பதவி

D.P. Wickramasinghe
Secretary
Ministry of Agriculture, Livestock, Lands & Irrigation
80/5, "Govijana Mandiraya", Rajamalwatta Road
Battaramulla.

*3.6. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது தொடர்பான செயலாற்றுகை*

ஏசீஓ - 2

## 2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

செலவின தலைப்பு இல: 118

அமைச்சின் பெயர் : கமத்தொழில், கால்நடைவள, காணி மற்றும் நீர்பாசன அமைச்சு

ரு

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | செலவினத் தலைப்பு | வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1) | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2) | நி.ஒ 66/69 மாற்றல்கள் (3) | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3) | மொத்தச் செலவினம் (5) | தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (6)=(4)-(5) |
|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் (1) | (1) மீண்டுவரும் | 3,858,000,000 | - | 64,300,000 | 3,922,300,000 | 3,713,929,252 | 208,370,748 |
| | (2) மூலதனம் | 273,000,000 | - | 6,000,000 | 279,000,000 | 114,777,341 | 164,222,659 |
| | **உப மொத்தம்** | **4,131,000,000** | - | **70,300,000** | **4,201,300,000** | **3,828,706,593** | **372,593,407** |
| நிகழ்ச்சித் திட்டம் (2) | (1) மீண்டுவரும் | 47,781,000,000 | 1,840,000,000 | (70,300,000) | 49,550,700,000 | 48,871,882,673 | 678,817,327 |
| | (2) மூலதனம் | 101,507,000,000 | 1,091,313,093 | - | 102,598,313,093 | 65,804,340,792 | 36,793,972,301 |
| | **உப மொத்தம்** | **149,288,000,000** | **2,931,313,093** | **(70,300,000)** | **152,149,013,093** | **114,676,223,465** | **37,472,789,628** |
| | **முழு மொத்தம்** | **153,419,000,000** | **2,931,313,093** | - | **156,350,313,093** | **118,504,930,058** | **37,845,383,035** |

..................................................

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /

பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 2026. 02. 26

D.K.T. Samanmali
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation
(Agriculture Division)
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Road, Battaramulla.

### 3.7. நி.பி 208 இற்கு அமைய ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதி எனும் வகையில் இந்தத் திணைக்களத்துக்கு/ மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

ஏசீஏ - 2(i)

நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 118

அமைச்சின் பெயர் : கமத்தொழில்,கால்நடை வள , காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

ரூபா

| செலவினக் குறியீடு | கருத்திட்டம் (1) | | | | | கருத்திட்டம் (2) | | | | | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்பாடுகள் | | | | | ஏற்பாடுகள் | | | | | |
| | செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு | செலவினம் | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு | செலவினம் | |
| | (1) | (2) | (3) | (4)=(1)+(2)+(3) | (5) | (6) | (7) | (8) | (9)=(6)+(7)+(8) | (10) | (11)=(5)+(10) |
| *மீண்டுவரும் செலவினம்* | | | | | | | | | | | |
| **ஆளுக்குரிய வேதனங்கள்** | | | | | | | | | | | |
| 1001 - சம்பளமும் கூலியும் | 1,638,000,000 | - | 403,186,085 | 2,041,186,085 | 2,034,611,999 | 116,000,000 | - | 35,000,000 | 151,000,000 | 149,160,968 | 2,183,772,967 |
| 1002 - மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள் | 48,000,000 | - | (11,750,000) | 36,250,000 | 33,606,236 | 10,000,000 | - | - | 10,000,000 | 8,496,567 | 42,102,803 |
| 1003 - ஏனைய கொடுப்பனவுகள் | 1,212,000,000 | - | (270,686,085) | 941,313,915 | 926,442,822 | 85,200,000 | - | (14,000,000) | 71,200,000 | 70,733,963 | 997,176,785 |
| | | | | | | | | | - | | |
| **பிரயாணச் செலவினம்** | | | | | | | | | - | | |
| 1101 - உள்ளூர் | 23,500,000 | - | (2,550,000) | 20,950,000 | 13,738,719 | 15,000,000 | - | - | 15,000,000 | 13,730,892 | 27,469,611 |
| 1102 - வெளிநாடு | 19,500,000 | - | (4,500,000) | 15,000,000 | 6,214,114 | - | - | - | - | - | 6,214,114 |
| | | | | | | | | | - | | |
| **வழங்கல்கள்** | | | | | | | | | - | | |
| 1201 - எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும் | 37,000,000 | - | (3,015,000) | 33,985,000 | 25,034,960 | 5,000,000 | - | - | 5,000,000 | 4,889,517 | 29,924,477 |
| 1202 - எரிபொருள் | 171,784,000 | - | (26,552,000) | 145,232,000 | 93,678,373 | 21,200,000 | - | (3,300,000) | 17,900,000 | 13,065,672 | 106,744,045 |
| 1203 - உணவும் சீருடைகளும் | 666,000 | - | - | 666,000 | 448,000 | 200,000 | - | - | 200,000 | 156,000 | 604,000 |
| 1204 - மருத்துவ வழங்கல்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 1205 - ஏனையவை | 1,600,000 | - | - | 1,600,000 | 1,083,306 | - | - | - | - | - | 1,083,306 |
| | | | | | | | | | - | | |
| **பராமரிப்புச் செலவினங்கள்** | | | | | | | | | - | | |
| 1301 - வாகனங்கள் | 135,400,000 | - | (1,000,000) | 134,400,000 | 107,443,654 | 5,000,000 | - | - | 5,000,000 | 3,052,113 | 110,495,767 |
| 1302 - பொறி, இயந்திரம், உபகரணம் | 10,800,000 | - | 272,000 | 11,072,000 | 10,053,331 | 1,400,000 | - | - | 1,400,000 | 335,869 | 10,389,200 |
| 1303 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 6,800,000 | - | - | 6,800,000 | 3,290,587 | 2,000,000 | - | 1,000,000 | 3,000,000 | 2,831,423 | 6,122,010 |

# நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 118

அமைச்சின் பெயர் : கமத்தொழில்,கால்நடை வள , காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

ரூபா

| செலவினக் குறியீடு | கருத்திட்டம் (1) | | | | | கருத்திட்டம் (2) | | | | | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்பாடுகள் | | | | | ஏற்பாடுகள் | | | | | |
| | செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு | செலவினம் | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு | செலவினம் | |
| | (1) | (2) | (3) | (4)=(1)+(2)+(3) | (5) | (6) | (7) | (8) | (9)=(6)+(7)+(8) | (10) | (11)=(5)+(10) |
| 1304 - மென்பொருள் பராமரிப்பு | 6,800,000 | - | 15,000 | 6,815,000 | 3,262,350 | - | - | - | - | - | 3,262,350 |
| **சேவைகள்** | | | | | | | | | | | |
| 1401 - போக்குவரத்து | 43,250,000 | - | (9,000,000) | 34,250,000 | 29,229,439 | 600,000 | - | (500,000) | 100,000 | - | 29,229,439 |
| 1402 - தபால், தொலைத்தொடர்பு | 36,000,000 | - | (2,000,000) | 34,000,000 | 28,509,770 | 4,000,000 | - | - | 4,000,000 | 2,692,871 | 31,202,641 |
| 1403 - மின்சாரமும் நீரும் | 64,500,000 | - | (4,500,000) | 60,000,000 | 46,774,569 | 3,600,000 | - | - | 3,600,000 | 1,635,739 | 48,410,308 |
| 1404 - வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும் | 25,000,000 | - | - | 25,000,000 | 21,523,273 | 100,000 | - | - | 100,000 | 92,944 | 21,616,217 |
| 1405 - துப்புரவு மற்றும் துப்புரவு சேவைகள் | 31,750,000 | - | (500,000) | 31,250,000 | 19,338,830 | - | - | - | - | - | 19,338,830 |
| 1407 - பாதுகாப்பு சேவைகள் | 29,000,000 | - | (11,000,000) | 18,000,000 | 15,892,550 | - | - | - | - | - | 15,892,550 |
| 1409 ஏனையவை | 59,600,000 | | (7,120,000) | 52,480,000 | 32,050,573 | 9,000,000 | | 1,000,000 | 10,000,000 | 8,378,844 | 40,429,417 |
| **மாற்றங்கள்** | | | | | | | | | | | |
| 1503 - பொது நிறுவனங்கள் | - | - | - | - | - | 3,975,000,000 | - | 260,833,000 | 4,235,833,000 | 4,213,787,200 | 4,213,787,200 |
| 1504 - அபிவிருத்தி மானியங்கள் | - | - | - | - | - | 37,005,000,000 | 1,840,000,000 | (320,465,000) | 38,524,535,000 | 38,258,366,385 | 38,258,366,385 |
| 1505 - சந்தா மற்றும் பங்களிப்புக் கட்டணங்கள் | 200,000,000 | - | - | 200,000,000 | 197,555,885 | - | - | - | - | - | 197,555,885 |
| 1506 - அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி | 10,800,000 | - | (1,000,000) | 9,800,000 | 8,182,452 | 1,000,000 | - | (600,000) | 400,000 | 299,708 | 8,482,160 |
| 1508 - ஏனையவை | 45,000,000 | - | 16,000,000 | 61,000,000 | 55,537,002 | - | - | - | - | | 55,537,002 |
| 1509 பொது நிறுவனங்கள்(பிற இதர செலவுகள்) | - | - | - | - | - | 6,521,000,000 | - | (28,668,000) | 6,492,332,000 | 6,120,176,000 | 6,120,176,000 |
| **வட்டிக் கொடுப்பனவுகள்** | | | | | | | | | | | |
| **ஏனைய மீண்டுவரும் செலவினம்** | | | | | | | | | | | |

## நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 118

அமைச்சின் பெயர் : கமத்தொழில்,கால்நடை வள , காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

ரூபா

| செலவினக் குறியீடு | கருத்திட்டம் (1) | | | | | கருத்திட்டம் (2) | | | | | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்பாடுகள் | | | | | ஏற்பாடுகள் | | | | | |
| | செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு | செலவினம் | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு | நி.ஒ 66/69 மாற்றல்கள் | மொத்தத் தேறிய ஒதுக்கீடு | செலவினம் | |
| | (1) | (2) | (3) | (4)=(1)+(2)+(3) | (5) | (6) | (7) | (8) | (9)=(6)+(7)+(8) | (10) | (11)=(5)+(10) |
| 1703 அலுவலக மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல் | 1,250,000 | - | - | 1,250,000 | 426,458 | 700,000 | - | (600,000) | 100,000 | - | 426,458 |
| முழு மொத்தம் | 3,858,000,000 | - | 64,300,000 | 3,922,300,000 | 3,713,929,252 | 47,781,000,000 | 1,840,000,000 | (70,300,000) | 49,550,700,000 | 48,871,882,673 | 52,585,811,926 |
| *மூலதனம் செலவினம்* | | | | | | | | | | | |
| **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்** | | | | | | | | | | | |
| 2001 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் | 19,500,000 | - | 1,600,000 | 21,100,000 | 15,681,165 | 6,565,000,000 | - | - | 6,565,000,000 | 2,839,765,659 | 2,855,446,823 |
| 2002 - பொறி, இயந்திரம், உபகரணம் | 12,000,000 | - | - | 12,000,000 | 2,899,922 | 3,000,000 | - | - | 3,000,000 | 1,332,974 | 4,232,895 |
| 2003 - வாகனங்கள் | 77,500,000 | - | 6,000,000 | 83,500,000 | 22,477,492 | 17,000,000 | - | - | 17,000,000 | 16,593,470 | 39,070,962 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | | | | | | | | |
| 2102 - தளபாடங்களும், | 22,500,000 | - | (1,600,000) | 20,900,000 | 14,180,907 | 2,000,000 | - | - | 2,000,000 | 1,452,344 | 15,633,251 |
| 2103 - பொறி, இயந்திரம், உபகரணம் | 6,500,000 | - | - | 6,500,000 | 988,980 | 2,000,000 | 96,313,093 | - | 98,313,093 | 20,665,686 | 21,654,666 |
| 2105 - காணியும், காணி மேம்படுத்தலும் | - | - | - | - | | 55,760,000,000 | - | (2,248,000,000) | 53,512,000,000 | 31,978,438,555 | 31,978,438,555 |
| 2106 மென்பொருள் அபிவிருத்தி | 500,000 | - | - | 500,000 | - | 2,000,000 | - | - | 2,000,000 | - | - |
| **மூலதன மாற்றங்கள்** | | | | | | | | | | | |
| 2201 - பொது நிறுவனங்கள் | - | - | - | - | - | 4,084,000,000 | - | - | 4,084,000,000 | 3,614,538,500 | 3,614,538,500 |
| 2202 - அபிவிருத்தி உதவிகள் | - | - | - | - | - | 21,501,000,000 | - | (573,150,000) | 20,927,850,000 | 14,166,613,764 | 14,166,613,764 |
| **நிதிச் சொத்துக்களின் கொள்வனவு** | | | | | | | | | | | |
| 2302 - மீள் கடன்கள் | - | - | - | - | - | 1,780,000,000 | - | (50,000,000) | 1,730,000,000 | 1,463,676,399 | 1,463,676,399 |

# நிகழ்ச்சித்திட்டம் மூலமான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 118

அமைச்சின் பெயர் : கமத்தொழில்,கால்நடை வள , காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

ரூபா

| செலவினக் குறியீடு | கருத்திட்டம் (1) | | | | | கருத்திட்டம் (2) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஏற்பாடுகள் | | | | | ஏற்பாடுகள் | | | | | |
| | செலவு ஏற்பாடு மதிப்பீட்டுஏற்பாடு (1) | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2) | நி.ஓ 66/69 மாற்றல்கள் (3) | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3) | செலவினம் (5) | வருடாந்த வரவு செலவு ஏற்பாடு (6) | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (7) | நி.ஓ 66/69 மாற்றல்கள் (8) | மொத்தத் தேறிய ஒதுக்கீடு (9)=(6)+(7)+(8) | செலவினம் (10) | மொத்தச் செலவினம் (11)=(5)+(10) |
| <u>மனித வள அபிவிருத்தி</u> | | | | | | | | | | | |
| 2401 - பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும் | 34,500,000 | - | - | 34,500,000 | 23,200,142 | 3,000,000 | - | - | 3,000,000 | 2,290,325 | 25,490,468 |
| <u>ஏனைய மூலதனச் செலவினங்கள்</u> | | | | | | | | | | | |
| 2506 உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி | - | - | - | - | - | 2,070,000,000 | - | 156,150,000 | 2,226,150,000 | 1,439,051,347 | 1,439,051,347 |
| 2507 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | - | - | - | - | - | 2,660,000,000 | 995,000,000 | 787,297,793 | 4,442,297,793 | 3,606,354,363 | 3,606,354,363 |
| 2509 ஏனையவை | 100,000,000 | - | - | 100,000,000 | 35,348,733 | 7,058,000,000 | - | 1,927,702,207 | 8,985,702,207 | 6,653,567,406 | 6,688,916,140 |
| முழு மொத்தம் | 273,000,000 | - | 6,000,000 | 279,000,000 | 114,777,341 | 101,507,000,000 | 1,091,313,093 | - | 102,598,313,093 | 65,804,340,792 | 65,919,118,132 |
| மொத்த மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவிணம் | 4,131,000,000 | - | 70,300,000 | 4,201,300,000 | 3,828,706,594 | 149,288,000,000 | 2,931,313,093 | (70,300,000) | 152,149,013,093 | 114,676,223,465 | 118,504,930,058 |

*தேவையான செலவு விடய குறியீடுகளை மாத்திரம் உள்ளடக்கி இந்த மாதிரிப்படிவங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்

..............................................................

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி : 2026.02.26

D.K.T. Samanmali
Chief Accountant
Ministry of Agriculture, Livestock, Lands and Irrigation
(Agriculture Division)
No. 80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Road, Battaramulla.

*3.7. நி.பி 208 இற்கு அமைய ஏனைய அமைச்சுகள் / திணைக்களங்களின் பிரதிநிதி எனும் வகையில் இந்தத் திணைக்களத்துக்கு/ மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்*

ඒසීඒ-6

මූල්‍ය නොවන වත්කම් පිළිබඳ ප්‍රකාශනය - 2025

Cumulative Non Financial Asset Accounts Report- Central Govt-2025

| | | | |
|---|---|---|---|
| **Land-9153:** | 98,336,423,393.74 | **Table:** | SA 82 |
| **Building- 9151:** | 8,358,678,262.70 | **Year:** | 2025 |
| **Machinary-9152:** | 22,460,126,135.64 | **Rpt Date** | 2/16/2026 10:26 |
| **WIP-9160:** | 0 | **Head** | 118 |
| **Intangible-9154:** | 3,609,121.50 | | |
| **Lease-9180:** | **0** | | |

NEW CIGAS FINAL 2025 REPORTS

| Ledger | category | Item | Code | Opn_Bal | Opn_Bal_Add | TransferIn | Purchase | Disposal | Balance |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9151 | 1.2-Non Residential Building | | 61112 | 8,358,678,262.70 | 0 | 0 | 0 | 0 | 8,358,678,262.70 |
| | | Office Building | ****6111201 | 8,358,678,262.70 | 0 | 0 | 0 | 0 | 8,358,678,262.70 |
| 9152 | 2.1-Transport Equipment | | 61121 | 13,468,947,330.00 | 5,002,270,000.00 | 22,500,000.00 | 0 | 829,192,800.00 | 17,664,524,530.00 |
| | | Passenger vehicle | ****6112101 | 13,453,633,570.00 | 5,002,270,000.00 | 22,500,000.00 | 0 | 827,360,000.00 | 17,651,043,570.00 |
| | | Motor cycle | ****6112109 | 15,313,760.00 | 0 | 0 | 0 | 1,832,800.00 | 13,480,960.00 |
| 9152 | 2.2-Other Machinary & Equipment | | 61122 | 4,599,111,269.59 | 117,069,124.00 | 0 | 158,150,198.45 | 78,728,986.40 | 4,795,601,605.64 |
| | | Defence Equipment | ****6112215 | 0 | 0 | 0 | 286,600.00 | 0 | 286,600.00 |
| | | Office Equipment | ****6112201 | 280,421,508.70 | 751,400.00 | 0 | 131,129,966.00 | 2,819,557.11 | 409,483,317.59 |
| | | Broadcasting Equipment | ****6112214 | 200,000.00 | 0 | 0 | 0 | 0 | 200,000.00 |
| | | Communication Equipment | ****6112204 | 467,439,214.72 | 4,334,000.00 | 0 | 1,043,520.00 | 3,924,951.00 | 468,891,783.72 |
| | | Construction Eqipment | ****6112213 | 125,039.92 | 0 | 0 | 0 | 0 | 125,039.92 |
| | | Computer Equipment | ****6112202 | 1,601,502,097.72 | 55,491,524.00 | 0 | 11,880,289.36 | 19,181,170.50 | 1,649,692,740.58 |
| | | Furniture | ****6112205 | 1,811,023,070.77 | 45,783,000.00 | 0 | 6,676,927.50 | 23,854,970.01 | 1,839,628,028.26 |
| | | Agricultural & Dairy Farm Equipment | ****6112216 | 15,695,417.50 | 0 | 0 | 0 | 0 | 15,695,417.50 |
| | | Musical Instruments | ****6112206 | 204,000.00 | 0 | 0 | 0 | 0 | 204,000.00 |
| | | Electrical Equipment | ****6112203 | 421,404,120.26 | 10,709,200.00 | 0 | 7,132,895.59 | 28,948,337.78 | 410,297,878.07 |
| | | Paintings Sculptures & other Antiques | ****6112209 | 1,096,800.00 | 0 | 0 | 0 | 0 | 1,096,800.00 |
| 9154 | 5.3 Other Non Finacial-Intangible | | 61133 | 4,176,121.50 | 0 | 0 | 0 | 567,000.00 | 3,609,121.50 |
| | | Computer Software | ****6113301 | 4,176,121.50 | 0 | 0 | 0 | 567,000.00 | 3,609,121.50 |
| 9153 | 4.1-Land | | 61410 | 180,575,194,260.00 | 0 | 0 | 42,805,880,603.02 | 131,471,845,733.02 | 91,909,229,130.00 |
| | | Land | ****614100 | 180,575,194,260.00 | 0 | 0 | 42,805,880,603.02 | 131,471,845,733.02 | 91,909,229,130.00 |
| 9153 | Water | | 61414 | 11,166,994,435.00 | 0 | 0 | 0 | 4,739,800,171.26 | 6,427,194,263.74 |
| | | Reservoirs | ****6141403 | 11,166,994,435.00 | 0 | 0 | 0 | 4,739,800,171.26 | 6,427,194,263.74 |

*3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை*

ஏஆர்ஐ/ஏ/எம்ஓஏ/02/2026/04/07 2026 மே ஆந் திகதி

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

**தலைப்பு 118 – விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 118 – விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2025 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை விவசாய, கால்நடை வள, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமானம்

(அ) ஏசீஏ – 1 (i) படிவம் மற்றும் CIGAS கணனி முறைமையின் பிரகாரம் மீளாய்வாண்டில் 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 68,273,002 ஆகவும், ஏசீஏ – 1 (i) படிவத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 648,779,153 ஆகவும், கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்குப் பிரிவின் கோவைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்குரியதாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 61,894,276 உம், மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 655,157,879 உம் ஆகும். அதன் பிரகாரம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானத்தில் ரூபா 6,378,726 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஏசீஏ – 1 (i) படிவத்தின் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிலுவை வருமானக் கூற்றில் அறிக்கையிடுகின்ற ஆண்டிற்குரிய நிலுவைப் பணம் மற்றும் ஆண்டின் இறுதி மீதி கணக்கீடு செய்யப்படவில்லை. அதன் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் நிலுவை வருமானத்தின் மொத்தப் பெறுமதி இனங்காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கணக்குப் பிரிவின் கோவைகளின் பிரகாரம் மீளாவாண்டின் இறுதியில் 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு

திட்டத்திற்குரிய அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலிருந்து மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 579,246,258 ஆக இருந்ததுடன் லங்கா சதொச நிறுவனம் வழங்கிய தகவலின்படி, மேலும் அந்த மாவட்டங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 24,780,679 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 544,465,579 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-1(iii) படிவத்தின் பிரகாரம் நீர்ப்பாசன பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற மொறகஹகந்த நீர் மின் உற்பத்தி செயற்திட்டத்தின் மூலம் 2025 ஆம் ஆண்டிற்காக நீர் மின் மூலம் விற்பனை செய்யப்பட்டு கிடைத்த உள்ளபடியான வருமானம் ரூபா 1,436,959,970 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வருமானக் கூற்றின் படி (ஏசீஏ-1) 2025 ஆம் ஆண்டிற்காக கிடைக்கப்பெற்ற உள்ளபடியான வருமானம் ரூபா 1,871,366,009 ஆனமையால் அதனிடையே ரூபா 434,406,039 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அந்த மின் உற்பத்தி செயற்திட்ட வருமானமாக ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,871,714,601 ஆக இருந்த போதிலும் சிகாஸ் கணனி உள்ளீட்டில் நாளதுவரையாக்கப்பட்ட வருமானம் ரூபா 1,872,063,193 ஆனமையால் அதற்கிடையே ரூபா 348,592 வேறுபாடு காணப்பட்டது.

(உ) மொறகஹகந்த நீர் மின் உற்பத்தி செயற்திட்டத்தின் வருமான பெறுவனவுகளில் விபரங்களின் படி நீர்மின் விற்பனைக்காக 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் இல்லாது இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் நிலுவை வருமானக் கூற்றில் (ACA-1(i)) 2023 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 11,224,726 நிலுவையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 மூலதன செலவினம்

விவசாயப் பிரிவில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2103 செலவின விடயத்திற்காக 240 தலைப்பின் மூலம் ரூபா 73,489,136 நிதியேற்பாட்டின் கீழ் 05 விவசாய உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரண தொகுதி ஒன்று வெளிநாட்டு மானியமாக கிடைக்கப் பெற்று விவசாயத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய மானியம் தொடர்பாக நிதிப்பிரமாணம் 625(1) இன் பிரகாரம் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அப் பெறுமதியால் மூலதன செலவினம் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. மேலும் மாணியமாகக் கிடைக்கப் பெற்ற இந்த உபகரணங்கள் நிதிப்பிரமாணம் 625(ஆ) மற்றும் (உ) பிரிவுகளின் படி பொருட் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 நிதியல்லாச் சொத்துக்கள்

(அ) அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA-06/SA 82 படிவம்) நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 129,158,836,914 ஆக இருந்ததுடன் அமைச்சின் ஒவ்வொரு பிரிவுகளினாலும் தயாரிக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்களில் கூட்டுமொத்தம் ரூபா 4,391,348,967 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 124,767,487,947 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் ஏனைய நிறுவனங்களில் இருந்து மாற்றப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 22,500,000 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட தகவல்களின் படி மாற்றப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,500,000 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 18,000,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் ஒவ்வொரு பிரிவினாலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 42,964,030,801 ஆக இருந்த போதிலும்

அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட தகவல்களின் படி ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 9,549,976,058 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 33,414,054,743 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் ஒவ்வொரு பிரிவினாலும் அகற்றப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்தக்களின் பெறுமதி ரூபா 137,120,134,690 ஆக இருந்த போதிலும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவினாலும் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 29,744,688,323 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 107,375,446,368 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) சனாதிபதியால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் 2412/08 மற்றும் 2024 நவம்பர் 25 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமாணி மூலம் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட கிராமிய பொருளாதார பிரிவு வியாபாரம், வணிகம், உணவு, பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 02/2017 இன் பிரகாரம் கிராமிய பொருளாதார பிரிவிற்குரிய பெறுமதி ரூபா 109,748,677 ஆன நிதியல்லாச் சொத்துக்கள் புதிய அமைச்சிற்கு மாற்றப்படால் தொடர்ந்தும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது.

(ஊ) அமைச்சின் விவசாயப் பிரிவு மற்றும் கால்நடை வளப் பிரிவினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட ஆவணங்கள் மற்றும் CIGAS கணனி முறைமையை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) அமைச்சுக்கு உரித்தற்ற மற்றும் பயன்பாட்டில் காணப்படாத பெறுமதி ரூபா 88,692,820 ஆன 07 வாகனங்கள் CIGAS கணனி முறைமை மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டதன் காரணமாக நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய இலக்கம் 2/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு உரித்து இன்றி பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள், பதிவு உரித்து உள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கோ அல்லது பதிவு உரித்து உள்ள நிறுவனத்திற்கு முறையான பிரகாரம் கையளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் ஏனைய நிறுவனங்களுக்கு சட்ட ரீதியான உரித்து காணப்படுகின்ற விவசாய அமைச்சின் பயன்பாட்டில் உள்ள பெறுமதி ரூபா 7,600,000 ஆன 03 வாகனங்கள் CIGAS கணனி முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) அமைச்சு பயன்படுத்துகின்ற பதிவு உரித்து அமைச்சுக்கு சொந்தமான கூட்டுப்பெறுமதி ரூபா 303,980,000 ஆன 24 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 01 வாகனம் CIGAS கணனி முறைமையிலும், நிதிக்கூற்றுக்களிலும் நிதியல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(iv) விவசாய அமைச்சின் கீழ் பதிவு காணப்படுகின்ற அமைச்சு மற்றும் திணைக்களங்களால் பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி ரூபா 138,700,000

ஆன 13 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 10 வாகனங்கள் ஒதுக்கப்பட்ட அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்படாமல் தொடர்ந்தும் பேணிச் செல்லப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிதியல்லாச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைமதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 13,770.22 மில்லியன் கிரயமொன்று செலவிடப்பட்ட எனினும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படாத நீர்ப்பாசன பிரிவின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 06 உள்நாட்டு நிதிய செயற்திட்டங்கள் நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் (SA 82) கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த ஒவ்வொரு செயற்திட்டத்திற்கான நடைமுறை வேலை அறிக்கை அல்லது விரிவான செலவின விபரங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நீர்ப்பாசன பிரிவின் மூலம் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலமைக் கூற்றில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் 118 வாகனங்களின் பெறுமதி ரூபா 1,120,129,125 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் இயந்திரப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களின் படி அமைச்சின் செயலாளரின் பெயரில் பதிவு செய்த அமைச்சுக்குச் சொந்தமான கெப் வண்டி, கார், மோட்டார் வண்டியை உள்ளடக்கிய 178 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த பிரிவிற்குரிய 48 இயந்திர உபகரணங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கி அப்பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முன்னாள் காணப்பட்ட நீர்பாசன அமைச்சினால் 05 செயற்திட்ட நிர்மாணங்கள் பேணிச் செல்லப்பட்டதுடன் அந்த செயற்திட்டத்திற்காக திறைசேரி அச்சிடல் குறிப்பின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூபா 6,679,003,446 ஆகும். எனினும் அந்த திகதியின் பின்னர் இந்த செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக எந்த ஒரு தொகையும் செலவிடப்படாமல் கைவிடப்பட்ட போதும் அதற்காக செலவிடப்பட்ட செலவினத்திற்கான விரிவான செலவின விபரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் முறையான அங்கீகாரம் இன்றி செயற்திட்ட கணக்காளரின் 2025 திசெம்பர் 11 ஆந் திகதிய இலக்கம் MI/F/15/Project/Gen/2025 என்ற கடிதத்தின் மூலம் அந்த செயற்திட்ட செலவினம் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை மகாவலி அதிகார சபையினால் அந்த செலவினங்கள் அல்லது சொத்துக்களை கையேற்று நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வந்திருந்தமைக்கு அமைச்சுக்கு அறிவிக்காது இருந்ததுடன் மேலே குறிப்பிடப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அந்த செலவினங்கள் இலங்கை மகாவலி அதிகார சபையின் புத்தகங்களில் எடுக்கப்படாத இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 1.6.4 நிதிச் சொத்துக்கள்

(அ) அமைச்சின் விவசாயப் பிரிவில் சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 511,340 ஆக இருந்ததுடன் அந்த மீதி 1 – 3 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரியதாகும்.

(ஆ) கிராமியப் பொருளாதாரப் பிரிவின் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிட வேண்டிய 5 – 10 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்குரிய கடன் மீதி ரூபா 175,714 கடன் மீதியாக இருந்ததுடன் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 5 – 10 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்குரிய கடன் மீதி ரூபா 249,535 ஆகும்.

(இ) கால்நடை வளப் பிரிவில் சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 338,927 ஆக இருந்ததுடன் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 286,408 ஆன இரண்டு பேர்களிடம் இருந்தான மீதி 1 – 3 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரிய மிதியாக இருந்ததுடன் ரூபா 62,519 மீதி 10 – 20 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரியதாகும்.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் காணிப் பிரிவில் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 01 – 03 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்கு உரிய ரூபா 226,024 அறவிடப்படாத பழைய மீதி ஒன்று காணப்பட்டது.

(உ) 2017 திசெம்பர் 29 ஆம் திகதிய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 262/2017 இன் பிரகாரம் அறவிட வேண்டிய 2025 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் மரணமடைந்த காணிப் பிரிவின் உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற 1 – 3 வருடங்களுக்கு இடையிலான காலப் பகுதிக்குரிய ரூபா 236,802 கடன் மீதி காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நீர்ப்பாசனப் பிரிவில் மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 222,545 தொகை ஓய்வு பெற்றுச் சென்றிருந்த நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 359,364 தொகை, சேவையை விட்டுச் சென்ற நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 801,408 ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 80,511 மற்றும் இனங்காணப்படாத கடன் மீதி ரூபா 431,666 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,895,494 கடன் மீதி அறவிடப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டது. இந்த மீதியில் 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 1,015,749 மீதியும், 1 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் ரூபா 359,122 உம், 10 இற்கும் 20 வருடங்களுக்கும் இடையில் ரூபா 520,623 உம் காணப்பட்டது.

### 1.6.5 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை

அமைச்சின் விவசாயப் பிரிவின் மூலம் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நட்டம் மற்றும் இழப்பு பதிவேடு | நிதிப்பிரமாணம் 104 | நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | செலவினப் பேரேடுகள் | நிதிப்பிரமாணம் 447 | நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வெளிநாட்டு மானிய உபகரணங்களுக்கான பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 625 (ஆ) மற்றும் (உ) | பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **விவசாய பிரிவு** | | | |
| (அ) | 4.9 | கணக்காய்வு ஐயவினாவிற்காக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 4.6 |
| (ஆ) | 1.6.2.2 (உ) | பழுதுபார்த்தல் மேற்கொண்டு வாகனத்தை பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். | 4.7 (ஆ) |
| (இ) | 4.10 | வைப்புத் தொகை அறவிடப்படல் வேண்டும். | 4.7 (அ) |
| **நீர்ப்பாசன பிரிவு** | | | |
| (ஈ) | 1.6.1 (ஆ) (I) | 2024 மற்றும் 2025 என்ற ஆண்டுகளுக்கான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டுள்ள அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட செலவினங்கள் நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் (SA 82) கணக்கீடு செய்தல் வேண்டும். | 1.6.3 (எ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

முன்னர் காணப்பட்ட அரசாங்கத்தின் உரக் கம்பனியான வ/ப லங்கா உரக் கம்பனி மற்றும் வ/ப கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியால் 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இறக்குமதி செய்யப்பட்ட உரத்திற்கான நாணயக் கடிதம் காலாவதியாகின்ற சந்தர்ப்பத்தின் போது உரிய வழங்குனருக்கு செலுத்துவதற்கு தேவையான பணம் அந்த சந்தர்ப்பத்தின் போது திறைசேரியில் இருந்து கிடைக்காமையின் அடிப்படையில் அரசாங்க வங்கியில் இருந்து பெறப்பட்ட காலக் கடன்களான ரூபா 47,465,632,771 இற்கு உரிய 2025 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் ரூபா 8,784,284,850 மூலதன பெறுமதி ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1,443,211,932 வட்டி செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் செலுத்துவதற்கு உள்ள கடன் மீதியின் பெறுமதி ரூபா 8,993,745,673 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 வருமான முகாமைத்துவம்

(அ) நிதிப்பிரமாணம் 128(2)(ஈ), நிதிப்பிரமாணம் 176(1), இலக்கம் 01/2015 மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதிய அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தியின்

பிரகாரம் இலக்கம் 2003.07.00 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் விவசாயப் பிரிவின் அரையாண்டு நிலுவை வருமான அறிக்கை அந்த கால எல்லை முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் அரச நிதிப் பணிப்பாளருக்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2025 இன் நிதி ஆண்டிற்குரிய அந்த அறிக்கை எதுவும் உரிய கால எல்லை முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏசீஏ-1 (iii) படிவத்தின் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் இடையிலான முரண்கள் 38 சதவீதம் வரை முரண்கள் ஏற்பட்டதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு முடியாது இருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு ஏற்படுவதற்குரிய குறித்துரைத்த காரணம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேலும் அறவிட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 648,779,153 ஆக இருந்ததுடன் அது ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் 90 சதவீதத்தைக் கொண்டிருந்ததுடன் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகும். அதன் பிரகாரம் மாவட்ட செயலகங்களின் மூலம் வருமானம் சேகரித்தல் மற்றும் நிலுவை வருமானம் அறவிடல் தொடர்பாக அமைச்சின் மேற்பார்வை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) நீர்ப்பாசன பிரிவிற்குரிய கொத்தமலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் குறுங்கால பயிற்சி திட்டத்திற்காக வழங்கப்படுகின்ற விடுதி வசதிகளுக்காக நிறுவனத்தால் அறவிடப்படுகின்ற கட்டணம் மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற ஏனைய வசதிகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களை தீர்மானிப்பதற்கு உரிய குறிகாட்டிகளை தீர்மானித்து அதற்காக அமைச்சின் அங்கீகாரம் ஒன்று பெற்றுக் கொள்ளப்படாது இருந்ததுடன் அந்த பயிற்சி நிறுவனம் 2024 ஆம் ஆண்டின் போது குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 18 இனை நடாத்தி அதன் மூலம் நிறுவனத்திற்கு ரூபா 4,435,871 வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் அதில் செலவினங்களைக் கழித்த பின்னர் ரூபா 2,222,241 மிகைப் பணம் காணப்பட்ட போதும் ரூபா 1,573,127 தொகை மாத்திரம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 649,114 தொகை அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செலவின முகாமைத்துவம்

(அ) விவசாயப் பிரிவின் செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் கீழ் வருகின்ற மீண்டெழும் மற்றும் மூலதன செலவின விடயங்களுக்காக 2025 இன் 03 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் செலவின விடயம் 03 இற்குரியதாக 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் அமைச்சின் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிப்பதிலில் உள்ள பற்றாக்குறை போன்று திட்டமிடப்பட்ட மூலதன செயற்திட்டங்கள் உரிய பிரகாரம் அமுல்படுத்தாமை மற்றும் தேவையினை விஞ்சி நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மூலதன செலவின விடயத்தின் கீழ் விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆன செயற்திட்ட இலக்கம் 80, 93 மற்றும் 94 இற்குரிய மூலதன செலவின விடய இலக்கம் 2506 மற்றும் 2509 இற்கு பெறப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 22 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையிலான வீச்சிலும், விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மூலதன செலவின விடய இலக்கம் 2003 இற்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 15 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மாற்றப்பட்ட பின்னரும் விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செயற்திட்ட இலக்கம் 47, 66, 80 மற்றும் 95 இற்குரிய மூலதன செலவின விடயங்களின் கீழான பாதீட்டு நிதியேற்பாடு 25 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையும், விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டெழும் செலவின விடயங்கள் 10 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதியேற்பாட்டின் அந்த செலவின விடயத்தில் 16 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையும், விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செயற்திட்ட இலக்கம் 73 மற்றும் 91 இற்குரிய மீண்டெழும் செலவின விடயங்கள் 02 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதியேற்பாடு முறையே 14 சதவீதம் மற்றும் 31 சதவீத நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீண்டெழும் செலவின விடய இலக்கம் 1101, 1102 மற்றும் 1201 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதியேற்பாட்டில் 23 சதவீதம் முதல் 45 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூலதன செலவின விடய இலக்கம் 2001, 2002, 2103 மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மூலதன செலவின விடய இலக்கம் 2002 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 310,500,000 பாதீட்டு நிதியேற்பாடும், அபிவிருத்தி நிகழச்சித் திட்டத்தின் கீழான செயற்திட்ட இலக்கம் 64 இற்குரிய மீண்டெழும் செலவின விடய இலக்கம் 1509 இன் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 39,000,000 இல் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு ரூபா 16,668,000 நிதியேற்பாடு மாற்றப்பட்ட பின்னர் சேமிப்பு நிதியேற்பாடும், விவசாயப் பிரிவின் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டெழும் செலவின விடய இலக்கம் 1405 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு ரூபா 500,000 நிதியேற்பாடு மாற்றப்பட்ட பின்னர் சேமிக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 100 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிதிப்பிரமாணம் 622 இன் பிரகாரம் வரைவு மதிப்பீடு தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கப்படாத வெளிநாட்டு மாணியம் நன்கொடைகளுக்காக வீரமன் நடைமுறை அல்லது குறைநிரப்பு நிதியேற்பாடு பெற வேண்டி இருந்த போதிலும் விவசாயப் பிரிவின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான 2103 செலவின விடயங்களுக்கு உரிய 240 தலைப்பின் மூலம் ரூபா 73,489,136 நிதியேற்பாடு பெறப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பெறப்பட்ட வெளிநாட்டு மாணியம் அவசர மானியம் அல்லாமல் 2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் எதிர்பார்க்கப்பட்டிருந்த வெளிநாட்டு மானியம் ஒன்றாக இருந்தமை கோவைகளைப் பரீட்சித்த போது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(எ) நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ 2(ii) படிவத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட அபிவிருத்தி செலவினத்தின் கீழ் வருகின்ற செலவின விடய இலக்கம் 2103 இல் நிதியேற்பாட்டின் சேமிப்பு 79 சதவீதம் ஆக இருந்ததுடன் சேமிப்பிற்கான காரணமாக மடிகணனி மற்றும் ஸ்கானர் இயந்திரம் கொள்னவவு செய்தல் நிராகரிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்ட போதிலும் இந்த நிதியேற்பாட்டின் சேமிப்பில் 94 சதவீதமும் வெளிநாட்டு மானியமாக பெறப்பட்ட விவாசய உபகரணங்களுக்காக தலைப்பு 240 இன் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) மதிப்பீடு தயாரிக்கும் போது நிதிப்பிரமானம் 50 இன் பிரகாரம் மற்றும் தேவைகளை இனங்காணாமல் நிதி ஒதுக்குதல் மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமையினால் 2025 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் மூலதன செலவின விடயம் 04 இற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் மீண்டெழும் செலவின விடயம் 02 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 15,500,000 தொகையில் ரூபா 200,000 முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் செலவின விடயம் 26 இற்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமாக ரூபா 51,247,720,000 தேறிய நிதியேற்பாட்டில் கூட்டுமொத்தமாக ரூபா 23,180,545,846

சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு 30 சதவீதத்திற்கும் 93 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஐ) 2025 ஆம் ஆண்டின் போது அமைச்சின் காணிப் பிரிவின் நிகழ்ச்சித் திட்டம் 01 இல் செலவின விடயம் 03 இற்காக ரூபா 11,900,360 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 7,529,617 அதாவது 60 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 07 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 31,130,339 நிதியேற்பாட்டில் ரூபா 11,000,869 தொகை அதாவது 25 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான அளவு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஒ) அமைச்சின் நிகழ்ச்சித் திட்டம் 02 இல் செலவின விடய இலக்கம் 2105 மற்றும் 2509 இன் கீழ் காணிப் பிரிவின் நிதியேற்பாடை ஒதுக்கும் போது உரிய செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியுமா என முறையான ஆய்வு செய்யாமல் ஒதுக்கப்பட்ட ஆரம்ப நிதியேற்பாடான ரூபா 5,000,000,000 தொகையில் ரூபா 1,282,297,793 நிதியேற்பாடு மீண்டும் ஏனைய செலவின விடயங்களுக்கு நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் ரூபா 1,258,279,779 அதாவது 34 சதவீத அளவு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஓ) நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு தயாரிக்கும் பொறுப்பு தமது திணைக்களத்திற்கு உரிய வரைவு மதிப்பீடு பிரமாணங்களுக்கு இணங்க தயாரிக்கப்படுகின்றமை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு இயலுமான வரை முழுமையாக சரியாத் தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு ஆகும். எனினும் காணி பிரிவில் செலவின விடயம் 09 இற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாடான ரூபா 4,054,000,000 பின்னர் 30 சதவீத அளவினால் அதாவது கூட்டுமொத்தமாக ரூபா 1,220,265,000 இனால் குறைவடைந்து இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

(அ) அமைச்சின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,272,613 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் விவசாய மற்றும் கால்நடை வளப் பிரிவினால் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் விவசாய மற்றும் கால்நடைவளப் பிரிவிற்குரிய ரூபா 17,127,988 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் இணைப்பு இலக்கம் iii இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டியிருந்தமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.11 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சின் விவசாயப் பிரிவிற்கு வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| திறைசேரி செயலாளரின் 2024 திசெம்பர் 18 ஆம் திகதிய இலக்கம் 05/2024 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | விற்றுத் தீர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட அமைச்சின் விவசாயப் பிரிவிற்கு உரிய 41 வாகனங்கள் மற்றும் கொம்ரோலர் ஜனராலின் 2024 மே 20 ஆம் திகதிய இலக்கம் CGO/NFAMS/01/03 என்ற கடிதத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள 05 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. |

### 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சின் விவசாயப் பிரிவில் PF-8350 என்ற வாகனத்தின் சாரதி 2025 யூலை மாத இறுதியில் இருந்து செப்தெம்பர் மாத இறுதி வரை தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் விடுமுறை பெற்றுக் கொண்டு சேவைக்கு அறிக்கையிடாது இருந்த போதிலும் அந்த மாதத்திற்கான மாதாந்த சம்பளமாக ரூபா 110,955 தொகை அவரின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சேவையில் ஈடுபடாத காலத்திற்கு மூல ஆவணங்கள் இல்லாமல் கொடுப்பனவு செய்தமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 இன் பிரகாரம் அதிகாரம் வழங்குதல், அங்கீகரித்தல், உறுதிப்படுத்தல் மற்றும் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பாக கணக்காய்வில் பிரச்சினைக்குரியதாக இருந்தது.

### 3.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

அமைச்சின் செயலாளரின் அதிகாரத்தின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற பத்தரமுல்ல இலங்கை வங்கியில் பேணிச் செல்லப்படுகின்ற செயலாளர், விவசாய அமைச்சு மற்றும் தலைவர், விவசாயிகளின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்ற பெயரிலான இரண்டு உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இணைப்பு (viii) இன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.9 வைப்புக்கள்

2025 மே 31 இல் உள்ளவாறு 02 வருடங்களை விஞ்சிய காணிப் பிரிவிற்குரிய ரூபா 426,593 காலாவதியான வைப்பு மீதிகள் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படாமல் அந்த கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலக காணி மாநாட்டிற்காக காணி அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் அமைச்சின் பணிப்பாளர் (காணிக் கொள்கை) என்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்காக தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் வழங்கப்படுவதாக உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவு முகாமையாளர்களின் 2024 மார்ச் 13 ஆந் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் போது அவர்களுக்கு இணைந்த படியாக ரூபா 714,980 செலுத்தப்பட்டதுடன் 2026 மார்ச் 27 ஆம் திகதியில் மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டு பேரிடம் இருந்து மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 640,419 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்பெறாமை

(அ) காணிப் பிரிவினால் நில அளவையாளர் திணைக்களத்திற்கு 2018 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,656,654,840 தொகை செலுத்தி அளவிடப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை 2,134,429 ஆக இருந்ததுடன் அதில் வழங்கப்பட்டிருந்த உரித்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கை 482,139 மாத்திரமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2025 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது ரூபா 276,510,197 நிதி ஏற்பாடு பதிவாளர் நாயகம் திணைக்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1998 ஆம் ஆண்டு முதல் பதிவாளர் நாயகம் திணைக்கத்திற்கு உரித்துறுதி சான்றிதழ் பத்திரம் தயாரிப்பதற்காக பட்டோலை அனுப்பப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை 864,960 ஆகவும் அந்த எண்ணிக்கையில் பதிவு செய்துள்ள உரித்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கை 474,518 அல்லது 54 சதவீதம் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

#### 4.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை

(அ) அறுவடைக்குப் பின்னர் பயிர் இழப்புகளைக் குறைக்கவும், களஞ்சிய வசதிகளை மேம்படுத்தவும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளாமல் 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் ரூபா 47,289,222 செலவில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கச்சிகல்ஆர கிராம அலுவலர் பிரிவில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் சொந்தமான களஞ்சிய வளாகத்தில் ஏற்றுமதிக்கான புளி வாழை பதப்படுத்தும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின்னர் கட்டிடம் மற்றும் பொருத்திகளை ஒப்படைப்பது குறித்து எந்தவொரு குறிப்பிட்ட முடிவும் எடுக்கப்படவில்லை. பின்னர் ஒரு விவசாய கம்பனியொன்று ஸ்தாபித்து அந்த நிலையத்தின் பொறுப்பை அந்தக் கம்பனிக்கு கையளிக்க முன்மொழியப்பட்டு விவசாய கம்பனியைப் பதிவு செய்வதற்குரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநருடன் ரூபா 500,000 கேள்வி பெறுமதியின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் விவசாய கம்பனியை ஸ்தாபிக்கும் செயற்பாடுகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் உற்பத்தியை ஏற்றுமதி செய்வதற்காக எந்தவொரு ஏற்றுமதியாளரும் இனங்காணப்படாதிருந்ததுடன் செயற்பாடற்று காணப்படுகின்ற இந்த செயற்திட்டத்திற்காகச் செய்யப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உரத் தேவை மற்றும் உரங்களுக்கான கேள்வி குறித்த முதன்மைத் தரவுகள் இல்லாமையின் காரணமாக ஏற்படும் சிரமங்களைக் களைவதற்காக சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட மதிப்பீடுகளைத் தயாரித்து உரங்களின் பயன்பாட்டை நெறிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் நோக்கத்தில் தேசிய உரச் செயலகத்திற்குள் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் முறைமை உடன்படிக்கையின் இணைப்பு C இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி 04 தொகுதிகளின் (உரத் தேவை மதிப்பீடு, விநியோகத் திட்டமிடல், உற்பத்தி/கலவை/இறக்குமதி ஒழுங்குபடுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு மற்றும் ஏனைய செயற்பாடுகள்) கீழ் அபிவிருத்தி செய்வதற்கு இணங்கியிருந்த போதும் உர உற்பத்தி/கலவை/இறக்குமதி ஒழுங்குபடுத்துதல் மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகிய செயல்பாடுகள் மாத்திரம் இந்த முறைமை ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை 2024 திசெம்பர் 13 மற்றும் 2026 பெப்ரவரி 02 ஆந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த

முறைமையின் மூலம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்ட ஏனைய செயற்பாடுகள், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் சமீபத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் முறைமைகள் (Agrarian.lk, GeoGoviya மற்றும் FarmerNet.lk) ஊடாகவும் செய்யப்படுவதால் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளின் இந்த இரட்டிப்பின் காரணமாக சிக்கனமற்ற செலவின நிகழ்ச்சித் திட்டங்கள் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதையும், அவற்றில் பெரும்பாலானவை வெளிநாட்டு நிதிகள் மூலம் நிதியீட்டம் செய்ய வேண்டியிருப்பதையும் தடுக்கும் தேசிய நோக்கத்தை மறுதலித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 4.1.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

வருடாந்த நிதிஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது ஏனைய காரணங்களால் இடைநடுவில் நிறுத்தப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்படாத நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் உள்ள செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள், அதாவது, நீர்ப்பாசனப் பிரிவின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்த மாதுரு ஓயா தென்கரை அபிவிருத்தி செயற்திட்டம், ரிதீமாலியத்த செயற்திட்டம், வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தி செயற்திட்டம், கிவுல் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் மற்றும் கிங்னில்வலா செயற்திட்டம் போன்ற பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களின் விபரங்கள் எதுவும் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் அறிக்கைகளில் காண்பிக்கப்படவில்லை.

## 4.2 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

### 4.2.1 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்

இலங்கையில் திரவப் பால் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கத்தில், கால்நடை வளப் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட யூரோ 13.9 மில்லியன் பிரான்ஸ் குடியரசிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் 06 சிறு அளவிலான பால் உற்பத்தி நிலையங்களையும், 30 பால் சேகரிப்பு நிலையங்களையும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் 06 பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கு தலா ரூபா 500,000,000 பெறுமதியுள்ள இயந்திரங்களை வழங்கி அந்த இயந்திரத்தை ஸ்தாபித்து 02 அல்லது 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதிலும் ஹோமோஜிநய்சர் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான நிதிசார் இயலுமை காணப்படாமையின் காரணமாக, அத்தனகல்ல, பண்டாரகம, பொலன்னறுவை, வென்னப்புவ மற்றும் நாவலப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள 05 பால் பதப்படுத்தும் நிலையங்களில் உற்பத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மேலும், அந்த இயந்திரம் இல்லாமையின் காரணத்தால், சந்தைக்கு வெளியிடப்பட்ட திரவப் பால் உற்பத்திப் பொருட்கள் கெட்டுப்போனதன் காரணமாக அப்புறப்படுத்துவதற்காக 250 மில்லி லீட்டர் ஆன 1940 பால் போத்தல்கள் நாவலப்பிட்டி பால் பதப்படுத்தும் நிலையத்தில் களஞ்சியப்பட்டிருந்தமை 2026.03.06 ஆந் திகதி நடத்தப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தினசரி சேகரிக்கப்படும் திரவப் பாலின் தரத்தைச் பரிசோதிப்பதற்காக பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,429,698 பெறுமதியுடைய (யூரோ 4,084.85) நவீன ஆய்வுகூட உபகரணங்கள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி பால் மாதிரிகளின் தரப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.2.2 செயற்திட்டச் சொத்துக்களின் குறைவான பயன்பாடு /செயற்பாடற்று காணப்படுதல்

118-2-3-056-2506/12 என்ற செலவின விடயத்தின் கீழ் மேலே 4.2.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சிறு அளவிலான பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்யும் செயற்திட்ட முன்மொழிவின் கீழ் 06 பால் பதப்படுத்தும் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு காணப்படுகின்ற 05 பால் சேகரிப்பு நிலையங்கள் வீதம் 30 இனை ஊக்குவிக்கும் நோக்கில் 06 பால் பதப்படுத்தும் நிலையங்களுக்கு ரூபா 13,366,593 (யூரோ 38,190.28) பெறுமதியுள்ள 05 பால் குளிரூட்டும் தாங்கிகளும் மற்றும் அது தொடர்பான துணை உபகரணங்களும் வழங்கப்பட்டிருந்தபோதும் அந்த உபகரணத் தொகுப்புகள் உரிய பால் சேகரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படாதிருந்ததுடன் அந்தப் பால் சேகரிப்பு நிலையங்களிலிருந்து பால் பதப்படுத்தும் நிலையங்களுக்குப் பாலைக் கொண்டு செல்லும் நோக்கில் முறையே ரூபா 9,131,594 (யூரோ 26,090.27) மற்றும் ரூபா 6,048,262 (17,280.75

யூரோ) பெறுமதியுள்ள ட்ரெக் வண்டி பால் சேகரிப்பு பிரிவிலிருந்து வழங்கப்பட்டிருந்த போதிலும் பால் வழங்குனர்களால் தினமும் பால் பதப்படுத்தும் நிலையத்திற்கு வருகைதந்து பால் வழங்கியமையால் உரிய இயந்திரங்கள் விளைவற்று காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.3 பெறுகைகள்**

(அ) நீர்ப்பாசன அமைச்சால் Ameropa Asia Pte Ltd கம்பனியுடனான ஒப்பந்தத்தின் கீழ் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட 41,876 மெட்ரிக் தொன் உரம் 2022 திசெம்பர் 02 ஆந் திகதி துறைமுக வளாகத்தில் பெறப்பட்டு நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் 2022 திசெம்பர் 05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் விவசாய அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டதுடன் இந்த உர இருப்பு தொடர்பான கப்பல்சரக்கு பத்திரம், வர்த்தக விலைப்பட்டியல், சுங்கப் பத்திரம் (CusDec) மற்றும் உரம் தரை இறக்குதல் தொடர்பான Daily Cargo Discharge Statement (F7) சான்றிதழ் போன்ற அனைத்து ஆவணங்களும், அந்த உர இருப்பு வழங்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தினாலும், உரிய உர கம்பனிக்கு பெறப்பட்ட உரத்தின் அளவு 41,714.5 மெட்ரிக் தொன்கள் ஆக இருந்தது எனவும், 161.5 மெட்ரிக் டன்கள் உரம் பற்றாக்குறையாக உள்ளது எனவும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உர கம்பனியின் தலைவரால் 2023.01.20 ஆந் திகதிய CCFL/PS/MOP/MI/02/2023 ஆம் இலக்க கடிதம் மூலம் விவசாய அமைச்சின் செயலாளருக்கும், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் செயல்பாட்டு முகாமையாளருக்கும் பிரதியுடன் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ரூபா 55,769,987 நட்டத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கொத்மலையில் உள்ள நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பான கேள்வி ஆவணங்களின் படி, கடந்த 5 ஆண்டுகளில் இதே போன்ற மற்றும் சமமான பெறுமதிக்கும், சிக்கலான தன்மையுடைய ஆகக் குறைந்தது 02 செயற்திட்டங்கள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளமைக்காக செல்லுபடியான சான்றுகள் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன்படி, நிறுவனத்தின் 06 நிர்மாண ஒப்பந்தங்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் மேற்குறிப்பிட்ட தகவல்களுக்குச் செல்லுபடியாகும் சான்றுகளை வழங்கத் தவறியமையால் 2024 செப்டம்பர் 20 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின்படி பதிலளிக்காத கேள்விதாரர்களாகக் கருதி மீண்டும் கூறுவிலை கோருவதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அதற்கு முரணாக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 21,199,239 ஆன 06 ஒப்பந்தங்களையும் ஒரே ஒப்பந்ததாரருக்கு ஒரு மாதத்திற்குள் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்காக கையளிப்பதற்கு 2024 ஒக்டோபர் 01 ஆந் திகதி பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

அதன் போது 2024 ஆம் ஆண்டுக்குரிய நிதிஏற்பாடுகள் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைவதாலும், இந்தக் பெறுகைகளுக்குரிய பட்டியல்களைத் தீர்த்தல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியிருப்பதாலும், இந்த ஒப்பந்ததாரரின் CIDA நிறுவனத்தின் பதிவை ஓர் அனுபவமாக ஏற்றுக்கொண்டு மேற்குறிப்பிட்ட தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்பட்டிருந்தது.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) விவசாயப் பிரிவிற்குச் சொந்தமான JK-0194 மற்றும் JK-0188 என்ற இரண்டு பேருந்து வண்டிகள் பல வருட காலம் முதல் அமைச்சுக் கட்டுபாட்டிற்கு புறம்பாக எந்த ஒரு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரும் முன்வராமல் அலுவலகத்தில் போக்குவரத்தில் ஈடுபடுகின்றது. அதில் பிரயாணம் செய்கின்ற உத்தியோகத்தர்கள் பல வருட காலம் முதல் போக்குவரத்து கட்டணம் சேகரித்து அந்த தொகையில் உரிய பேருந்து வண்டிகளின் எரிபொருள் செலவினம் தீர்த்து வைக்கப்பட்ட பின்னர்

2025 யூன் 30 ஆம் திகதி முறையே ரூபா 205,840 மற்றும் 257,111 தொகை அந்த உத்தியோகத்தரின் கையில் காணப்பட்டது. எனினும் இந்த பேருந்து வண்டிகளுக்குரிய சகல பழுது பார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதுடன் கணக்கீட்டு உத்தியோகத்தர், வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டுக்கு புறம்பாக அரசாங்கத்தின் சொத்து ஒன்றைப் பயன்படுத்துவதன் மூலம் உழைக்கப்படுகின்ற பணம் முறையற்ற வகையில் இருக்கின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சின் பெறுகைகள் பிரிவினால் 2025 ஆகஸ்ட் 20 ஆம் திகதி விவசாய பிரிவிற்குரிய PF 8350 என்ற கெப் வண்டிக்குரிய 05 டயர்கள் மற்றும் 05 டியூப்லெஸ் வேல்வுகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதில் ரூபா 127,776 பெறுமதியுடைய 04 டயர்கள் அமைச்சின் கீழ் மாடியில் உடைந்த பொருட்கள் மற்றும் டயர்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள வலை அறையில் வைக்கப்பட்டிருந்த போது தொலைந்து பேயிருந்தது. இது தொடர்பாக உயர் முகாமைத்துவத்திற்கு பல சந்தர்ப்பங்களின் போது அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர்ப்பாசனப் பிரிவினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களுக்கு இடையே 14 வாகனங்கள் பழுதுபார்க்க வேண்டிய வாகனங்களாக 2026 மார்ச் 04 ஆம் திகதி இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் அவற்றின் பழுதபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீர்ப்பாசன அமைச்சின் பேரில் பதிவு செய்யப்பட்டிருந்த 169 வாகனங்கள் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், சபைகள் மற்றும் தனியார் ஒப்பந்தகாரர்களினால் பயன்படுத்தப்படுவதுடன் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் உள்ள செயற்திட்டங்களினால் ஏனைய நிறுவனங்களுக்குரிய 67 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அரசாங்கத்திற்குரிய வாகனங்களின் பதிவு உரித்து தொடர்பான பிரச்சனைகளை தீர்த்து வைத்தல் தொடர்பாக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் MF/CG/02 (cir) என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நீர்ப்பாசனப் பிரிவிற்குரிய என்ஜின் இயலளவு 1800 இற்கு மேற்பட்ட 04 பெற்றோல் வாகனங்கள் மற்றும் என்ஜின் இயலளவு 2300 இற்கு மேற்பட்ட 11 டீசல் வாகனங்களை உள்ளடக்கிய 21 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் அமைச்சின் வளவில் திறந்தவெளியில் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் கவனத்தில் கொள்ளக்கூடிய காலம் முதல் தரித்து வைக்கப்பட்டிருந்த வகையில் 2026 மார்ச் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இந்த வாகனங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கோ அல்லது ஏனைய பொருத்தமான மாற்று வழிகளில் ஈடுபடுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 76,876,755,039 செலவினம் ஒன்றைச் செய்து 2024 ஏப்ரல் 03 ஆம் திகதி நிர்மாணங்கள் பூர்த்தி செய்து செயற்திட்டம் கையளிக்கும் போது கையளித்தல் சான்றிதழ் பெறப்பட்டிருந்த போதிலும் இதன் வழுக்களின் பொறுப்பு உத்தரவாதக் காலமான 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தமையால் அந்த காலத்தில் முறையே 2025 செப்தெம்பர் 30 மற்றும் 2026 மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2025 திசெம்பர் 15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் கணக்குகளை தீர்த்து பூர்த்தி செய்யும் சான்றிதழ் விநியோகிப்பதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகும் 2026 மார்ச் 31 ஆந் திகதி வரை மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த காலப் பகுதியிலும் இதுவரையில் விஞ்சியிருந்ததுடன் செயற்திட்டத்தின் இறுதிக் கணக்குகள் தயாரித்து கணக்குகளை தீர்த்து செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு தவறியிருந்தது. 2024 ஏப்ரல் 03 ஆந் திகதி

முதல் மின்வலு உற்பத்தி செய்யும் மின்நிலையம், நீர்த்தேக்கத்தை உள்ளடக்கிய ஏனைய செயற்திட்டத்தின் சொத்துக்கள் மின்சார சபை மற்றும் மகாவலி அதிகார சபையினால் பயன்படுத்தப்பட்ட போதும் அவற்றின் செலவினங்களை இனங்கண்டு முறையான பிரகாரம் உரிய நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சேதனப் பசளை செயற்திட்டத்தில் இடம்பெற்ற மோசடிகளை விசாரணை செய்வதற்காக விசேட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்ட போதும் அந்த குழுவின் அறிக்கை இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த சேதனப் பசளை செயற்திட்டத்தின் கீழ் ரூபா 31,027,575 சொத்துக்கள் அமைச்சின் நிலையான சொத்து கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்களின் பௌதீக மெய்மையாய்வு இன்றியும், சொத்துக்கள் கையளித்தல் உரிய திட்ட முறைமைக்குப் புறம்பாகவும் 2024 ஆம் ஆண்டின் போது புத்தகங்களில் இருந்து நீக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2025 திசெம்பர் 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சின் செயலாற்றல் அறிக்கையின் படி 2023 ஆம் ஆண்டு முதல் காணிப் பிரிவிற்குரிய சட்டங்கள், 12 விதிகளை திருத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மேலும் 06 சட்டங்களுக்குரிய பணிகள் பூர்த்தி செய்யப்படாது இருந்ததுடன் காணி அமைச்சின் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையில் 1979 இன் 43 ஆம் இலக்க அரச காணிகள் கையளித்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் திருத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் போது காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்திற்கு இந்த சட்டத்தினை திருத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2026.03.31 ஆந் திகதி வரையிலும் சட்ட திருத்தங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்**

(அ) விவசாயப் பிரிவிற்குரியதாக நட்ட இழப்பு ஏற்பட்டு 02 இற்கும் 11 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்து முன்கொண்டு செல்லப்பட்டிருந்த 44 சம்பவங்களுக்குரிய ரூபா 29,579,093 நட்டத்திற்காக காப்புறுதி இழப்பீட்டின் மூலமும், பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து உரிய நட்டப் பெறுமதி அறவிடப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) மற்றும் நிதிப்பிரமாணம் 109(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் 11 சம்பவங்களுக்குரிய ரூபா 1,788,138 நட்டப் பெறுமதியை பதிவழிப்பதற்காக நிதிப்பிரமாணம் 104(4) இறுதி அறிக்கையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 109(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் மீதியாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்ட இழப்புக்கள் ஏற்பட்டு இருந்த திகதியில் இருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் விவசாயப் பிரிவிற்குரிய 2013 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 ஆந் திகதி வரை ஏற்பட்டிருந்த 26 சம்பவங்களுக்குரிய ரூபா 3,765,406 தொகை ஆன நட்டத்திற்காக இறுதி அறிக்கை சமர்ப்பித்தல் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பிரிவுகளில் முன்னைய ஆண்டுகளில் இருந்து கொண்டு வரப்படுகின்ற 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இறுதி மீதியாகக் காணப்பிக்கப்பட்ட 05 சந்தர்ப்பங்களுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 6,185,021 நட்டப் பெறுமதி 2025 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாய பிரிவினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள் தொடர்பான பதிவேட்டிற்குரிய படிவத்தின் பிரகாரம் நாளதுவரையாக்கப்படாது இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற 11 சம்பங்களுக்குரிய ரூபா 9,970,679 நட்டப் பெறுமதி இழப்புக்கள் மற்றும் நட்டப் பதிவேட்டில் குறிப்பிடப்படாது இருந்ததுடன் அந்த பிரிவினால் இழப்புக்கள் மற்றும் நட்டப் பதிவேட்டில்

குறிப்பிடப்பட்டிருந்த 05 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 15,120,182 நட்டப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2025 ஆம் ஆண்டின் ஏற்பட்டிருந்த 07 சம்பவங்களுக்குரிய நிதிப்பிரமாணம் 104 (3) இன் பிரகாரம் ஆரம்ப அறிக்கை சம்பவம் ஏற்பட்ட உடன் அனுப்ப வேண்டியிருந்த போதிலும் விவசாயப் பிரிவினால் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நீர்ப்பாசன பிரிவில் பதிவழிக்கப்படாமல் முன்கொண்டு செல்லப்படுகின்ற வாகன விபத்து நட்டம் ரூபா 10,482,500 இனை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிப்பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நட்டம் அல்லது நட்ட இழப்பு ஏற்பட்ட உடன் அதன் அளவு அதன் தொகை மற்றும் காரணம் குறித்துரைத்த ரீதியில் இனங்காண்பதற்கும் பொறுப்பு வாய்ந்த நபரை இனங்காண்பதற்காகவும் பரிசோதனை உடனடியாக நடாத்த வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 26 ஆந் திகதி வரையிலும் காணிப் பிரிவின் இலக்கம் PH-856 மற்றும் CAO-8946 என்ற வாகனங்களின் ஆரம்ப பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட இரண்டு வாகனங்களுக்கும் மேலதிகமாக 64-3203 என்ற வாகனத்திற்கு 2025 மே 21 ஆந் திகதி மற்றும் 2025 யூன் 24 ஆம் திகதிகளில் விபத்து ஏற்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதிப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) காணி அமைச்சின் முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பயன்படுத்திய அரசிற்குச் சொந்தமான Sunny Vedio Camera Battery Charger என்ற பெயருடைய விடயம் கையளிக்கப்படாமையினால் அரசிற்கு ரூபா 93,750 நிதி நட்டம் ஏற்பட்டிரந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2026 மார்ச் 27 ஆந் திகதி வரையிலும் உரிய சம்பவம் ஏற்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் உரிய நட்டத்தை பொறுப்பு வாய்ந்த நபரிடம் இருந்து அறவிடப்படாமை அவதானிக்கப்பட்டது.

### 4.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 452(1) இல் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாப் பதிவேட்டில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கு பின்னர் பரீட்சிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டியிருந்த போதிலும் அமைச்சிற்கு 2024.07.24 ஆந் திகதி முதல் 2026.02.27 வரையான காலப் பகுதியில் விநியோகிக்கப்பட்ட 06 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக இந்த அறிக்கைத் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 முகாமைத்துவ நலிவுகள்

(அ) 2016 ஏப்ரல் 08 ஆந் திகதி முதல் 2021 ஏப்ரல் 07 ஆந் திகதி வரை அதாவது 05 வருட கால எல்லைக்காக விவசாய அமைச்சிற்காக வாடகை அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றுடன் மேற்கொள்ளப்பட்ட இலக்கம் 2178 என்ற வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே, இலக்கம் 288 இல் அமைந்துள்ள DPJ TOWER என்ற பெயருடைய கட்டிட வளாகம் வாடகையாளருக்கு மீண்டும் 2020 சனவரி 31 ஆந் திகதி கையளிக்கப்பட்ட போதும் அமைச்சினால் அந்த வாடகையாளருக்கு செலுத்தப்பட்ட ரூபா 63 மில்லியன் மீள செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பு இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் உடன்படிக்கை முடிவடைந்து வாடகைச் சொத்துக்கள் கையளிக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் வாடகையாளர் அந்த செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்பை வாடகைக்குப் பெற்றவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பிரகாரம் வாடகைக்கு வழங்கிய தரப்பினரால் சட்ட விரோதமாக இந்த பாதுகாப்பு வைப்பு நிறுத்தி வைக்கப்பட்டு இதுவரையில் விஞ்சியிருந்த காலம் 05 வருடங்கள் ஆகும்.

(ஆ) முன்னாள் விவசாய இராஜாங்க அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்த உரப் பிரிவிற்கு உரிய ரூபா 18,000,000 பெறுமதியான இலக்கம் KW-8202 என்ற வாகனம் 2021 மார்ச் 21 ஆந் திகதி விபத்திற்காக ரூபா 7,500,000 காப்புறுதி இழப்பீடு செலுத்துவதற்கு காப்புறுதி நிறுவனம் இனங்கி அதன் பிரகாரம் வாகனத்தை பழுது பார்ப்பதற்கு 2022 திசெம்பர் 12 ஆந் திகதி உரிய கராஜ் இற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2023 மார்ச் 23 ஆந் திகதி ரூபா 5,625,000 தொகை வாகன பழுது பார்த்தல் நிறுவனத்திற்கு காப்புறுதி நிறுவனத்தால் செலுத்தப்பட்டிருந்தது. இந்த அறிக்கை திகதி வரையிலும் 03 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் உரிய பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டில் ரூபா 125,574,546 மூலதன செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. அது 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 11.67 சதவீதத்தால் அதிகரித்து இருந்த போதிலும் பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட புதிய மாணவர்களின் எண்ணிக்கையில் கவனத்தில் கொள்ளக் கூடிய அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில் விவசாய தொழில் நுட்பவியல் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக சேர்க்கப்பட்ட புதிய மாணவர்களின் எண்ணிக்கை முறையே 23 மற்றும் 36 ஆன குறைந்த எண்ணிக்கையினைக் கொண்டிருந்தது.

(ஈ) கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மட்டத்தில் பயிற்சி பாடநெறியினை நடாத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2017 யூலை மாதம் 18 ஆந் திகதிய இலக்கம் 17/1456/729/017 என்ற அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் கிடைத்திருந்த போதும் நிறுவனத்தால் இதுவரை நடாத்தப்பட்ட சர்வதேச பயிற்சிப் பாடநெறிகளின் எண்ணிக்கை 05 மாத்திரமாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் பின்னர் எந்த ஒரு சர்வதேச பயிற்சிப் பாடநெறியும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச மட்டத்தில் பயிற்சி நெறிகளை விளம்பரம் செய்வதற்கு உள்ள பிரதானமான ஊடகமாக நிறுவனத்தின் இணையதளத்தை பயன்படுத்துவதற்கு முடியுமாக இருந்தது. 2024 திசெம்பர் மாதம் ரூபா 168,275 செலவினம் ஒன்றை மேற்கொண்டு இணையதளம் நாளதுவரையாக்கப்பட்ட போதிலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட விசேட பயற்சிப் பாடநெறிகள், அந்த பாடநெறிகளின் உள்ளடக்கம் (Course Contents) நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற வசதிகள் மற்றும் அதன் கூறுவிலைகள் தொடர்பான விரிவான தகவல்கள் எதுவும் வெளிநாட்டு மாணவர்களை கவரும் வகையில் பகிரங்கப்படுத்தல் ஒன்று இந்த இணையதளம் மூலம் காட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.8 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான சர்வதேச பயிற்சி நிறுவனத்தின் விடுதியினைச் சுற்றி பாதுகாப்பு வேலி ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் பெண்கள் விடுதியில் வேலி 200 மீற்றர் மற்றும் ஆண்கள் விடுதியின் வேலி 212 மீற்றர் நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2025 யூலை 28 ஆந் திகதி இந்த நிறுவனத்தின் ஆலோசனையாளருடன் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வேலியின் நீளத்தை அளவிடும் போது நிர்மாணிக்கப்படாத 55 மீற்றருக்காக ரூபா 529,627 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 நியமிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் விவசாயப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 2,177 ஆக இருந்ததுடன் அதில் 93 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அதனிடையே 21 பதவிகள் சிரேஸ்ட நிலையில் பதவிகளாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. கால்நடை வளப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 566 ஆக இருந்ததுடன் அதில் 45 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. காணிப் பிரிவில் சிரேஸ்ட நிலையில் 05 பதவிகளும், மூன்றாம் நிலையில் 01 பதவியும், இரண்டாம் நிலையில் 26 பதவிகளும், ஆரம்ப நிலையல் 09 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) 2025 யூலை 14 ஆந் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு மீதான விசாரணை ஆணைக்குழுவினால் 2023 இன் 09 ஆம் இலக்க இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்பட்ட காணிப் பிரிவின் உதவி செயலாளர் ஒருவர் தொடர்பாக தாபன விதிக் கோவையின் XLVIII அத்தியாயத்தின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் காணி அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) இனால் இந்த உத்தியோகத்தருக்காக இலங்கை நிர்வாக சேவையின் I தரத்திற்கு பதவியுயர்வு வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர் 2025 யூலை 14 ஆந் திகதி கைது செய்யப்பட்டதுடன் உயர் பதவி கடமைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த அங்கீகாரமும் முடிவுறுத்தப்பட்டமையால் உத்தியோகத்தருக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனம் மற்றும் சாரதி 2025 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் போக்குவரத்து பிரிவிற்கு கையளிக்குமாறு உதவி செயலாளர் (நிர்வாகம்) 2025.08.01 ஆந் திகதிய இலக்கம் 1/16/35/101 என்ற கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆகஸ்ட் மாதத்தில் இந்த வாகனம் மற்றும் சாரதி போக்குவரத்து பிரிவிற்கு கையளிக்கப்படாமல் ஒதுக்கப்பட்ட வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

பீ.கே.எம்.பீ. நோனிஸ்
பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

# அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டிகள்

## *4.1* நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

| விஷேட குறிகாட்டிகள் | எதிர்பார்த்த பெறுபேறு உண்மையான பெறுபேற்றின் சதவீதத்தில் (%) | | |
|---|---|---|---|
| | *100% - 90%* | *89% - 75%* | *74% - 50%* |
| **விவசாயப் பிரிவு** | | | |
| நெற்பயிரின் உற்பத்தித்திறன் மற்றும் உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல். | √ | | |
| ஏனைய பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல். | √ | | |
| விதை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் தரமான விதை வழங்கலை உறுதிப்படுத்துதல். | √ | | |
| தாவர பாதுகாப்பு நடைமுறைகளை விருத்தி செய்தல். | √ | | |
| உயர் தரமான நடைமுறைகளுக்காக விவசாயப் பயிற்சி மற்றும் விரிவாக்கல் சேவைகளை விருத்தி செய்தல். | √ | | |
| விவசாயத் துறைக்காக உயர் தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல் | √ | | |
| விவசாயத் துறையை இயந்திரமயமாக்கல் | √ | | |
| விவசாய வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலை ஊக்குவித்தல் | √ | | |
| அறுவடைக்குப் பிந்தைய துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கான தொழில்நுட்ப தீர்வுகளைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் | | √ | |
| 10 ஆராய்ச்சி வெளியீடுகளை உள்நாட்டு/ வெளிநாட்டு சஞ்சிகைகளில் பிரசுரித்தல் | √ | | |
| தெரிவுசெய்யப்பட்ட சில காய்கறி மற்றும் பழங்கள் ஆகியவற்றின் வழங்கல் சங்கிலிகளில் முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்/ பிரயோகித்தல் | √ | | |
| காய்கறி, பழங்களின் அறுவடைக்குப் பிந்தைய சேதத்தைக் குறைப்பதற்காகப் பாதுகாப்பான பொதியிடல் மற்றும் போக்குவரத்து முறைகளை அறிமுகப்படுத்துதல் | √ | | |
| அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பப் பரவலாக்கத்திற்காக 100 பயிற்சிப் பாடநெறிகளை நடத்துவதன் ஊடாக 2000 பயனாளிகளுக்குப் பயிற்சியளித்தல், அறுவடைக்குப் பிந்தைய துறைக்காகப் புதிய தொழில்முனைவோரை உருவாக்குதல் | | √ | |
| முறையான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களைக் களத்தில் பயன்படுத்துவதற்காக ஆலோசனைச் சேவைகள், பொறியியல் சேவைகள் மற்றும் ஆய்வகச் சேவைகளை வழங்குதல் | √ | | |
| நிறுவனத்தின் மனிதவளத்தை விவசாய துறைக்கு ஏற்றவாறு விருத்தி செய்தல். | √ | | |
| நெற் செய்கையில் உரப் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு முன்பணச் சீட்டுகளை வழங்குதல். | √ | | |
| கொள்கை வகுத்தல் மற்றும் செயலாற்றுகையை விருத்தி செய்தல் <br> மூலதன நிதிகளை 100% பயன்பாட்டுக் கொண்டுவரல். | √ | | |
| கிராமியப் பிரதேசங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புதல். <br> 1. ஆடு வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம் செயலாற்றுகை குறிகாட்டிகள் - <br> • பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை <br> • விநியோகிக்கப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை | √ | | |
| கிராமியப் பிரதேசங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புதல். <br> • 2. பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் <br> • செயலாற்றுகை குறிகாட்டிகள் - | √ | | |

| விஷேட குறிகாட்டிகள் | | எதிர்பார்த்த பெறுபேறு உண்மையான பெறுபேற்றின் சதவீதத்தில் (%) | | |
|---|---|---|---|---|
| | | 100% - 90% | 89% - 75% | 74% - 50% |
| | • பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை<br>• விநியோகிக்கப்பட்ட விதைகளின் அளவு (கிலோ கிராம்)<br>• பயிர்ச் செய்கை மேற்கொண்ட நிலப்பரப்பு (ஏக்கர்)<br>• எதிர்பார்த்த விளைச்சல் | | | |
| விவசாய உற்பத்தியாளருக்கு அதிக விலையிலும் நுகர்வோருக்கு நியாயமான விலையிலும் தரமான மற்றும் புதிய உணவு வகைளை நுகர்வதற்கு உதவும் வகையிலான நுகர்வுப் போக்கை உருவாக்குதல் | விஷேட பொருளாதார மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.<br>செயலாற்றுகை குறிகாட்டிகள்<br>• செயல்பாட்டில் உள்ள பொருளாதார மையங்களின் எண்ணிக்கை<br>• பொருளாதார மையங்களுக்குச் சொந்தமான வணிக வளாகங்களின் (கடை அலகுகளின்) எண்ணிக்கை<br>• பொருளாதார மையங்களில் செயல்படும் வணிக வளாகங்களின் (கடை அலகுகளின்) எண்ணிக்கை<br>• வரவுசெலவு ஒதுக்கீடுகளின் ஊடாக பொருளாதார மையங்களில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை<br>• அறக்கட்டளை நிதிகள் மூலம் பொருளாதார மையங்களில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களின் எண்ணிக்கை<br>• பொருளாதார மையங்களுக்குக் கிடைக்கும் விவசாய உற்பத்திப் பொருட்களின் அளவு | √ | | |
| **கால்நடை வளப் பிரிவு** | | | | |
| உள்ளூர் பால் உற்பத்தி (மில்லியன் லிட்டர்/ ஆண்டுக்கு) | | √ | | |
| ஆண்டு முட்டை உற்பத்தி (ஆண்டுக்கு மில்லியன் முட்டைகள்) | | √ | | |
| ஆண்டு கோழி இறைச்சி உற்பத்தி (Mt/ஆண்டு) | | √ | | |

## அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகை

| இலக்குகள்/ குறிக்கோள்கள் | இலக்குகள் | அடைவு குறிகாட்டி | வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| நோக்கம் 02 பட்டினியை ஒழித்து உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசணை நிலையை அடைவதற்கு நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல் | 2.1. 2030 ஆம் ஆண்டளவில் பட்டினியை ஒழித்து, அனைத்து மக்களுக்கும், குறிப்பாக ஏழைகள் மற்றும் குழந்தைகள் உட்பட அபாய நேர்வுக்கு முகங் கொடுக்கும் சூழ்நிலைகளில் உள்ள மக்களுக்கு ஆண்டு முழுவதும் பாதுகாப்பானதும், ஊட்டச்சத்துமிக்கதுமான உணவு வகைகள் போதுமானதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்தல். | நெற் செய்கையில் உற்பத்தித்திறனை 4 Mt/ha வரை அதிகரித்தல். | | | √ |
| | | சோளப் பயிர் உற்பத்தியை 3 மெ. தொன் இலிருந்து 4 மெ. தொன் வரை அதிகரித்தல் | | | √ |
| | | விதை உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் தரத்தில் சிறந்த விதைகளின் விநியோகத்தை உறுதி செய்தல். | | | √ |
| | | தாவரப் பாதுகாப்பு நடைமுறைகளை விருத்தி செய்தல். | | | √ |
| | | உயர்தர நடைமுறைகள் தொடர்பான விவசாய பயிற்சி மற்றும் விரிவாக்க சேவைகளை விருத்தி செய்தல். | | | √ |
| | | நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல் | | | |
| | 2025 ஆம் ஆண்டில் 412.83 மில்லியன் லீற்றர் பால் உள்நாட்டில் உற்பத்தி செய்தல். | உள்ளூர் பால் உற்பத்தி (மில்லியன் லிட்டர்/ ஆண்டுக்கு) | | | √ |
| | 2025 ஆம் ஆண்டில் 3817.09 மில்லியன் முட்டைகள் உற்பத்தி செய்தல். | வருடாந்த முட்டை உற்பத்தி (ஆண்டுக்கு மில்லியன் முட்டைகள்) | | | √ |
| | 2025 ஆம் ஆண்டில் 290,000 மெற்றிக் தொன் கோழி இறைச்சி உற்பத்தி செய்தல். | வருடாந்த கோழி இறைச்சி உற்பத்தி (Mt/ஆண்டு) | | | √ |
| | 2.3 2030 ஆம் ஆண்டளவில் சிறு அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் விவசாய உற்பத்தித்திறன் மற்றும் வருமானம், சந்தை வாய்ப்பு என்பவற்றை பெறுமதி சேர்த்தலின் மூலம் இரட்டிப்பாக்குதல். | **தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள்**<br>• பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை<br>• புதிய மேம்பட்ட பயிர்ச் செய்கை முறைகளை அறிமுகப்படுத்துதல்<br>• அரச அங்கீகாரம் பெற்ற உயர்தர விதைகளைப் பெறுக்கொள்ள விவசாயிகளை நெறிப்படுத்தல்<br>• சேதன உர உற்பத்தியை ஊக்குவித்தல் | | | √ |
| | | விவசாயம்/கால்நடை வளர்ப்பு/காடு தொடர்பான தொழிற்துறைகளின் வகுப்புகளின் அளவின் அடிப்படையில் தொழிலாளர் உற்பத்தித்திறன். | | √ | |

| இலக்குகள்/ குறிக்கோள்கள் | இலக்குகள் | அடைவு குறிகாட்டி | வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | *0%-49%* | *50%-74%* | *75%-100%* |
| | | *பாலினத் தன்மை மற்றும் பூர்வீக ரீதியாக சிறிய அளவிலான உணவு உற்பத்தியாளர்களின் சராசரி வருமானம்.* | | √ | |
| | *2.4 2030 ஆம் ஆண்டளவில், உணவு உற்பத்தித் தொகுதிகளின் இருப்பை உறுதி செய்தல் மற்றும் உயிர்த் தொகுதிகளின் இருப்பை உறுதி செய்தல் மற்றும் உயிர்த் தொகுதிகளை பேணுவதற்கு உதவியாகக் காணப்படும் காலநிலை மாற்ற இசைவடைதலுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்தும் பாதகமான வானிலை நிகழ்வுகள், வறட்சி, வெள்ளப் பெருக்கு மற்றும் ஏனைய பேரிடர்கள் மற்றும் நிலம் மற்றும் மண்ணின் தரப் பண்புகளை விருத்தி செய்யும் ஈடுகொடுக்கக் கூடிய விவசாய பிரயோகங்களை நடைமுறைக்கு கொண்டு வருதல்.* | *2.4.1 பயனுறுதிமிக்கதும் நிலைபேறானதுமான விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விவசாய நிலத்தின் அளவு.* | | √ | |
| *நோக்கம் 12. நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்திப் போக்குகளை உறுதி செய்தல்.* | *மரக்கறி மற்றும் பழப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலிகளை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.* | *தெரிவு செய்யப்பட்ட 15 பழ வகைகள் மற்றும் 10 காய்கறி வகைகள் மற்றும் நெல் மற்றும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட இலகுவில் பழுதடையாத 9 பயிர் வகைகளின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளைக் குறைக்க விருத்தி செய்யப்பட்ட புதிய தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, களத்திற்கு அறிமுகம் செய்த தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை, அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் குறைவடைந்துள்ள அளவு.* | √ | - | - |
| | *2030ஆம் ஆண்டடளவில் தனிநபர் உணவு வீண் விரயமாதலை சில்லறை மற்றும் நுகர்வு மட்டங்களில் குறைத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் உட்பட உற்பத்தி மற்றும்* | *காய்கறி மற்றும் பழப் பயிர்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளை 25% ஆகவும், நெல் மற்றும் ஏனைய பழுதடையாத பயிர்களில் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை 5% ஆகவும் குறைத்தல்.* | √ | - | - |

| இலக்குகள்/ குறிக்கோள்கள் | இலக்குகள் | அடைவு குறிகாட்டி | வெற்றி இலக்கை நோக்கிய அடைவின் இதுவரையான முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | *0%-49%* | *50%-74%* | *75%-100%* |
| | விநியோகச் சங்கிலிகளில் உள்ள இழப்புகளை குறைத்தல் | | | | |
| *5. பாலின சமத்துவத்தை அடைவதன் மூலம் அனைத்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுவூட்டல்.* | *5.a பெண்களுக்கு பொருளாதார உரிமைகளை வழங்குவதற்கான திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் உள்நாட்டு சட்டங்களுக்கு அமைவாக நிலம் மற்றும் ஏனைய சொத்துக்கள், நிதிச் சேவைகள், பாரம்பரியம் மற்றும் இயற்கை வளங்களின் உரிமையைப் பெற்றுக்கொள்ளவும் நிருவகிக்கவும் வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.* | *5.a.1 உரிமையாளர் முறைமைக்கு அமைய: (a) பால்நிலை ரீதியாக, விவசாய நிலங்கள் தொடர்பாக எவ்வித உரிமையுமின்றி அல்லது பாதுகாப்பான உரிமை கொண்டிராத மொத்த விவசாய சனத்தொகையின் அளவு. (b) விவசாய நிலங்களின் உரிமையாளர்கள் மற்றும் உரிமைகளைப் பெற்றிருப்பவர்களிடையே பெண்களின் சதவீதம்.* | | √ | |

## *5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான செயலாற்றுகையின் அடைவுகளும் சவால்களும்*

*i.)* *தேசிய விவசாயக் கொள்கையை அறிமுகப்படுத்துதல்*

*ii.)* *உணவுப் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஊக்கிவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உற்பத்தித் திறனை உயர்த்துதல், விவசாயத்திற்கான உயர் தொழில்நுட்பப் பயன்பாட்டை ஊக்குவித்தல், விவசாயத்துடன் தொடர்பான கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி, நீர் முகாமைத்துவம், குறைவாகப் பயன்படுத்தும் காணிகளின் அபிவிருத்தி, காலநிலை மாற்றங்களைக் குறைப்பதற்கான பயிர் பாதுகாப்பு வேலைத்திட்டம், விவசாய செயற்திட்டச் செயற்பாடுகள், ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பழக் கிராமங்களை நிறுவுதல், விவசாய கண்டுபிடிப்புகள், விவசாயக் கொள்கைகள் ஆகிய துறைகளை உள்ளடக்கும் வகையில் செயற்திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தல்.*

*iii.)* *சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சிறந்த விலங்கு வளர்ப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை வெற்றிகரமாக செயல்படுத்தல்.*

*iv.)* *தரத்தில் சிறந்த உர வகைகளின் பாவனையை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.*

*v.)* *காய்கறி, பழங்கள் போக்குவரத்திற்காகப் பாதுகாப்பான பொதியிடல்களை வழங்குதல், தானியக் களஞ்சியப்படுத்தல் வசதிகளை விருத்தி செய்தல், பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்காகப் பங்குதாரர்களை வழிப்படுத்துதல் போன்ற செயற்பாடுகளின் ஊடாக விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய சேதத்தைக் குறிப்பிடத்தக்க அளவில் குறைத்தல்.*

*vi.)* *உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு ஆராய்ச்சிகளின் ஊடாக புதிய விதை வகைகள் மற்றும் பயிர் வகைகளை அறிமுகப்படுத்துதல்.*

*vii.)* *நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் பயிர் நிலங்களில் மற்றும் கால்நடை உற்பத்திகளின் பயனுறுதித்தன்மையை அதிகரித்தல்.*

***சவால்கள்***

*i.)* *தீவிர காலநிலைத் தன்மைகள்*
*ii.)* *காலநிலை மாற்றங்களுக்கு சிறந்த முறையில் ஈடுகொடுக்கும் தன்மை கொண்ட விதைகளின் தாராளமாகக் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டு விதைகளைப் பாதுகாத்தல்.*
*iii.)* இத்துறைக்குரிய சட்டரீதியான ஏற்பாடுகள் இற்றைப்படுத்தப்படாமை
*iv.)* *விவசாயத் துறை தொடர்பான துல்லியமான தரவுகளைத் தொகுத்தல் மற்றும் சேகரித்தல் என்பன தொடர்பாக காணப்படும் நடைமுறைச் சவால்கள்.*
*v.)* *விவசாய விரிவாக்கல் சேவைகள் தொடர்பான தேவைப்பாட்டிற்கும் தற்போதைய நிலைமைக்கும் இடையே காணப்படும் இடைவெளி.*

## அத்தியாயம் 06 - மனிதவள விபரம்

### 6.1 ஆளணி முகாமைத்துவம்

- **விவசாயப் பிரிவு**

| வகை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 92 | 71 | 21 |
| மூன்றாம் நிலை | 07 | 03 | 04 |
| இரண்டாம் நிலை | 1924 | 1885 | 39 |
| ஆரம்ப நிலை | 154 | 125 | 29 |

- **கால்நடை வளங்கள் பிரிவு**

| வகை | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 19 | 10 | 9 |
| மூன்றாம் நிலை | 3 | 3 | 0 |
| இரண்டாம் நிலை | 509 | 490 | 19 |
| ஆரம்ப நிலை | 35 | 18 | 17 |

6.2 **நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு மனிதவளப் பற்றாக்குறை அல்லது மேலதிகம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.**

**விவசாயப் பிரிவு**

*i.)* *விவசாயப் பிரிவிற்கு 2025.12.31 ஆம் திகதியன்று 2,177 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 93 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டமை உத்தியோகபூர்வ கடமைகளை வினைத்திறனாகவும் துரிதமாகவும் ஆற்றுவதற்குப் பெரும் தடையாக அமைந்துள்ளது.*

*ii.)* *இப்பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர் ஆளணி 92 ஆகும் என்பதுடன், அதன் தற்போதைய உண்மையான உத்தியோகத்தர் எண்ணிக்கை 71 ஆகும். நிலவும் 21 வெற்றிடங்களுள் 04 பதவிகளுக்குப் பதில் கடமையாற்றும் அதிகாரிகள் மூலம் கடமைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அந்தப் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்வதைச் சிரமத்திற்குள்ளாக்கியுள்ளது.*

*iii.)* *இப்பிரிவிற்கான மூன்றாம் நிலை உத்தியோகத்தர் ஆளணிக்கான அங்கீகாரம் 07 ஆகும் என்பதுடன், அதில் முழுநேர அடிப்படையில் 03 அதிகாரிகள் கடமையாற்றி வருவதுடன், பதில் கடமையாற்றும் அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர் சேவையைச் சேர்ந்த ஓர் அதிகாரியும் நிர்வாக அதிகாரியொருவரும் கடமையாற்றி வருகின்றனர். இவ்வமைச்சின் மூலம் தொடர்ச்சியாக அமைச்சரவைக் குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டு வருவதுடன், இவ்வாறான அவசர ஆவணங்களை ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கும் பணிகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால், மொழிபெயர்ப்பாளர் பதவியில் நிலவும் வெற்றிடமானது உத்தியோகபூர்வ கடமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதில் ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.*

*iv.)* *அதேபோன்று இரண்டாம் நிலை மட்டத்திலும் ஆரம்ப நிலை மட்டத்திலும் நிலவும் வெற்றிடங்கள், உத்தியோகபூர்வ கடமைகளை வினைத்திறனாகவும் உடனுக்குடன் ஆற்றுவதற்குப் பெரும் தடையாக அமைந்துள்ளன.*

**கால்நடை வளங்கள் பிரிவு**

*அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழாமில் நிலவும் வெற்றிடங்கள்:*

**சிரேஷ்ட மட்டம்**

| | | |
|---|---|---|
| *பணிப்பாளர் (திட்டமிடல்)* | *- இ.தி.சே* | *- 01* |
| *பணிப்பாளர்* | *- இ.கா.உ.சு.சே* | *- 01* |
| *உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர்* | *- இ.கா.உ.சு.சே* | *- 06* |

**இரண்டாம் நிலை மட்டம்**

| | | |
|---|---|---|
| *அபிவிருத்தி உத்தியோகத்தர்* | *- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை* | *- 11* |
| *முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்* | *- முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை* | *- 08* |

**ஆரம்ப நிலை மட்டம்**

| | | |
|---|---|---|
| *சாரதி* | *- இணைந்த சாரதிகள் சேவை* | *- 13* |
| *அலுவலகப் பணியாளர் உதவியாளர்* | *- அலுவலகப் பணியாளர் சேவை* | *- 04* |

## *6.3. மனிதவள அபிவிருத்தி*

### *உள்நாட்டுப் பயிற்சி*

*i.) விவசாயப் பிரிவு*

| அ / அ | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை | ஒட்டுமொத்த முதலீடு உள்நாட்டு (ரூபாய்) | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | வெளியீடு/ பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 100 | 1 நாள் | 19,650.00 | உள்நாட்டு | பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான அறிவு |
| 2 | அலுவலகக் கடமைகளுக்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவது சம்பந்தமான ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டம் | 140 | 1 நாள் | 64,230.00 | உள்நாட்டு | செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவு |
| 3 | ஓய்வூதியம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 160 | 2 நாட்கள் | 64,280.00 | உள்நாட்டு | மத்தியமயப்படுத்தப்பட்ட, பரவலாக்கப்பட்ட மற்றும் W&OP கணிப்பீட்டிற்குரிய அறிவு |
| 4 | தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் | 60 | 1 நாள் | 23,870.00 | உள்நாட்டு | தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றிய அறிவு |
| 5 | அலுவலக உதவியாளர் சேவையின் செயலாற்றுகை தடைதாண்டல் பரீட்சைக்கான பயிற்சிச் செயலமர்வு | 22 | 1 நாள் | 15,640.00 | உள்நாட்டு | நிறுவனக் கோவை, அலுவலக நடைமுறைகள் பற்றிய அறிவு |
| 6 | முன்பணக் கணக்கு B தயாரித்தல் | 4 | 1 நாள் | 28,000.00 | உள்நாட்டு | முன்பணக் கணக்கு B தயாரித்தல் சம்பந்தமான அறிவு |
| 7 | சம்பளப் பரிவர்த்தனை பற்றிய பயிற்சிச் செயலமர்வு | 10 | 2 நாட்கள் | 130,000.00 | உள்நாட்டு | சம்பளப் பரிவர்த்தனை செய்தல் பற்றிய அறிவு |
| 8 | நிதிப் பிரமாணங்கள் சம்பந்தமான பயிற்சிச் செயலமர்வு | 14 | 1 நாள் | 98,000.00 | உள்நாட்டு | நிதிப் பிரமாணங்கள் பற்றிய அறிவு |
| 9 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மற்றும் செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI) பற்றிய பயிற்சிச் செயலமர்வு | 75 | 1 நாள் | 19,740.00 | உள்நாட்டு | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மற்றும் செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI) பற்றிய அறிவு |
| 10 | அலுவலக நடைமுறைகள், உத்தியோகபூர்வ கடிதங்கள் எழுதுதல் மற்றும் கோப்புப்படுத்துதல் பற்றிய பயிற்சிச் செயலமர்வு | 125 | 2 நாட்கள் | 44,230.00 | உள்நாட்டு | அலுவலக நடைமுறைகள், உத்தியோகபூர்வ கடிதங்கள் எழுதுதல் மற்றும் கோப்புப்படுத்துதல் பற்றிய அறிவு |
| 11 | வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் குடும்ப வன்முறைகளைத் தடுத்தல் பற்றிய பயிற்சிச் செயலமர்வு | 103 | 1 நாள் | - | உள்நாட்டு | வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் குடும்ப வன்முறைகளை எவ்வாறு தடுத்துக் கொள்வது என்பது பற்றிய அறிவு |
| 12 | புதிய பெறுகை செயன்முறை பற்றிய பயிற்சிச் செயலமர்வு | 140 | 2 நாட்கள் | 49,730.00 | உள்நாட்டு | புதிய பெறுகை செயன்முறை பற்றிய அறிவு |
| 13 | பெறுகை விலைமனுக் கோரல் பற்றிய பயிற்சிச் செயலமர்வு | 76 | 1 நாள் | 23,580.00 | உள்நாட்டு | பெறுகை விலைமனுக் கோரல் பற்றிய அறிவு |
| 14 | நூலகத் தன்னாக்கச் சான்றிதழ் பாடநெறி | 1 | 9 மாதங்கள் | 32,000.00 | உள்நாட்டு | நூலகத் தானியக்கம் பற்றிய அறிவு |
| 15 | அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தைத் தயாரித்தல் சம்பந்தமான பயிற்சிச் செயலமர்வு | 2 | 1 நாள் | 13,000.00 | உள்நாட்டு | சம்பளத் தயாரிப்பு சம்பந்தமான அறிவு |

| அ / அ | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை | ஒட்டுமொத்த முதலீடு உள்நாட்டு (ரூபாய்) | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாட்டு/ வெளிநாட்டு) | வெளியீடு/ பெற்றுக் கொள்ளப்பட்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 16 | 2024 புதிய பெறுகை வழிகாட்டல் கோவைக்கான பயிற்சிச் செயலமர்வு | 2 | 1 நாள் | 20,000.00 | உள்நாட்டு | புதிய பெறுகை செயன்முறை பற்றிய அறிவு |
| 17 | அரசின் பெறுகை நடைமுறை சம்பந்தமான டிப்ளோமா | 1 | - | 75,000.00 | உள்நாட்டு | அரசின் பெறுகை நடைமுறை சம்பந்தமான அறிவு |
